216834

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

ஏப்ரல் 26, 1997 தொகுதி. 34

எண் 2.

©

D
V211, 31 N97
N97
216834

வெளியீடு 13-5-98

Issued 13-5-98

1372
98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஏப்ரல் 26. 1997 – தொகுதி 34 – எண் 2

Saturday the 26th April, 1997 – Volume 34 – No. 2


பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

26-04-97

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| | பக்கங்கள் |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 147-187 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| சேலம் மற்றும் இராஜாஜி மாவட்டங்களில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் போலிப் பயணச் சீட்டுகள் புழக்கம். | 187-190 |
| **3. அறிக்கைகள் அளித்தல்—** | |
| உரிமைக் குழு | 190 |
| **4. ஒழுங்குப் பிரச்சினை—** | |
| உரிமைக் குழு அறிக்கை மீது | 190-192 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 192-193 |
| (ஆ) தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவு, 1997 | 193 |
| (இ) நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1997 | 295-296 |
| **6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1986-87 மற்றும் 1987-88, அளித்தல்—** | 193-199 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 194-197 |

பக்கங்கள்


7. **அறிவிப்புகள்—**

(அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1986-87 மற்றும் 1987-88 — 199-200

(ஆ) நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1997 (ஆஇ) — 295

(இ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மேதகு ஆளுநரின் தேநீர் விருந்து — 296

8. **மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்
(ஆ) கோரிகவகை எண 42 - பல்வகை
(இ) கோரிக்கை எண் 61 - பல்வகை மூலதனச் செலவு
(ஈ) கோரிக்கை எண் 62 - மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்
(உ) கோரிக்கை எண் 7 - மாநிலச் சட்டமன்றம்
(ஊ) கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்
— 200-295

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 214-215, 274-286

திரு. கே. மணிவர்மா — 215-219

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் — 219-223

*திரு. கே. தங்கமணி — 223-226

திரு. ரெ. செல்வம் — 226-230

திரு. இ. கணேசன் — 230-235

திரு. க. துரை — 235-237


216834.



பக்கங்கள்


8. **மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

*திரு. பி. என். வல்லரசு — 237-242

திரு. சி. வேலாயுதன் — 242-244

திரு. சி. டி. தண்டபாணி — 244-249

திரு. ம. அப்துல் லத்தீப் — 249-260

திரு. சி. ஞானசேகரன் — 261

திரு. டி. மணி — 262-264

திரு. வி.கே. லட்சுமணன் — 266-273

9. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** — 296-297

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 13, ஈஸ்வர—திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997 ஏப்ரல் 26, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் முற்பகல் 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி"

வருவாய் அளவை அறிந்து அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 681, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

681—

**கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டம்**

*3130—திரு. மு. அப்பாவு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

[1997 ஏப்ரல் 26

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தமிழ்நாடு அரசு, 2000 மெகாவாட் திறன் கொண்ட கூடங்குளம் அணுமின் திட்டத்தில் முதலீடு செய்து பங்கு கொள்வதற்காக விருப்பத்தினைத் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்த முடிவினை விரைவில் மத்திய அரசுதான் தெரிவிக்க வேண்டும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் திசையன்விள்ளயில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கு நேற்று அனுமதித்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடங்குளம் அணுமின் திட்டம் அங்கே வருமென்று சொல்லி, அதற்கு 1988 ஆம் ஆண்டே ஒப்பந்தம் கையெழுத்தானது. அதற்குப் பிறகு சோவியத் யூனியன் சிதைவுற்றுப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, அதன்பின் தொடர்ந்து பல பிரச்சினைகளுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இப்போதுள்ள மிகப்பெரிய நவீன தொழில் நுட்பங்கள் இந்த அணுமின் திட்டத்தில் அவர்களிடம் இல்லை. அவர்களுடைய உதவியோடு நாம் அங்கே அணுமின் நிலையம் ஆரம்பித்தால், கடலிலிருந்து மிக எளிதாக அந்த அணுமின் நிலையத்தைத் தாக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இப்பொழுதே கடலில் மீன் பிடிக்கச் செல்லுகின்ற மீனவர்களுக்குப் போதிய பாதுகாப்பில்லாத நிலை இருக்கிறது. அவ்வாறு கடலிலிருந்து கூடங்குளம் அணுமின் நிலையம் தாக்கப்பட்டால், கிட்டத்தட்ட 150 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்திலுள்ள கேரளா, திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளோடு தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, நெல்லை, சிதம்பரனார் ஆகிய மூன்று மாவட்டங்களும் பாதிக்கக்கூடிய நிலை இருக்கின்றது. மேலும், இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் காலத்தில் எல்லாம் என்னவோ தெரியவில்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவாகக் கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, அந்தத் திட்டத்தைத் தயவுசெய்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். 17,000 கோடி ரூபாய் அளவுக்கு நீங்கள் அங்கே முதலீடு செய்ய இருக்கின்றீர்கள். இந்த 17,000 கோடி ரூபாயில் அங்கே காற்றாலைகள் மூலம் மின் தயாரிப்புச் செய்வதற்காக 17,000 மின்



1997 ஏப்ரல் 26]

காற்றாலைகள் அமைத்தால், கிட்டத்தட்ட 8500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, பாதுகாப்பில்லாத இந்த அணுமின் திட்டத்தை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவைக் கேளுங்கள் என்றால் நீங்கள் பேசிக் கொண்டேயிருக்கிறீர்களே. வினாவைக் கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே இந்தப் பாதுகாப்பில்லாத அணுமின் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கருத்தைத்தானே முதலிலே எடுத்துரைத்தீர்கள் ?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு போன்றவர்களெல்லாம் ஒரு தவறான எண்ணத்தை மக்கள் மத்தியிலே உண்டாக்க வேண்டாமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதென்பது, நம்முடைய தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது; மிகவும் தேவையானதும்கூட. ஆனால், அணுமின் நிலையத்தினாலே ஆபத்து ஏற்படும்; 150 கிலோமீட்டர் தூரத்திற்கு பூகம்பம் வந்து வெடித்து விடும் என்பதைப் போல ஒரு அபாயத்தை நாமாகக் கற்பனை செய்துகொண்டு மக்களுக்குச் சொல்லக் கூடாது. நிச்சயமாக அந்த அணுமின் நிலையம் வந்தால் யாருக்கும் ஆபத்து வராது. மத்திய அரசும் மாநில அரசும் நல்லமுறையிலே அதுபற்றிப் பரிசீலித்து, மக்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் வராத ஒரு சூழ்நிலையிலேதான் இந்த மின் திட்டத்தை அமல்படுத்துவது என்று அரசாங்கம் 1988-ஆம் ஆண்டே ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டது. இடையிலே சோவியத் அரசாங்கத்திலே ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் காரணமாக அது தடைபட்டிருந்தது. ஒரு மாத காலத்திற்கு முன்னாலே நம்முடைய இந்தியப் பிரதமராக இருந்த திரு. தேவே கௌடா அவர்கள் ரஷியா சென்றிருந்தபோது ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டும் வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை அமல்படுத்துவது தமிழ்நாட்டிற்கு நல்லது. இத்திட்டத்தினாலே அந்தப் பகுதி மக்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமா என்பது பற்றியும், அந்தச் சுற்று வட்டாரத்திலேயுள்ள மக்களுக்குப் பாதுகாப்புத் தருவது பற்றியும் நிச்சயமாகத் தமிழக அரசு எல்லாவிதமான

[1997 ஏப்ரல் 26

நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9 35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடங்குளம் அணுமின் நிலையம் மிகப் பெரிய அளவுக்கு மின்சாரத்தை . உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பாகத் தமிழகத்திற்கு அமைந்திருக்கிறது. ஆனால் இதிலிருந்து வரும் கழிவுப் பொருள்கள், கதிர் வீச்சுகள் பற்றி மக்கள் பயப்படுகிறார்கள். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவை என்ன நடவடிக்கை? எந்த ஆண்டில் இந்த மின் உற்பத்தி தொடங்கப்படும்? இதன் மூலம் கிடைக்கும் மின்சாரம் பூராவும் தமிழகத்திற்கே கிடைக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு இதனால் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்ற பிரச்சாரம்தான் முதலில் தேவைப்படுகிறது. இரண்டாவது எந்த அளவுக்கு தமிழ்நாட்டுக்கு மின்சாரம் கிடைக்கும் என்று கேட்கிறார்கள். 2,000 மெகா வாட்டில் 1,000 மெகா வாட் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். நாம் 2,000 மெகா வாட்டும் நமக்குக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்தின் காரணமாக, அதிலிருந்து வெளி வரக்கூடிய கதிர் வீச்சு காரணமாக கரு கூடக் கலைந்து விடும் என்ற அளவுக்கு இந்த நாட்டில் பல பேர் பீதி அடையக்கூடிய நிலை இருக்கிறது. இது உண்மையா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்காகத் தகுந்த விஞ்ஞானிகளை எல்லாம் கலந்தாலோசித்து மக்களுடைய ஐயத்தை எல்லாம் போக்குகிற வகையில் ஒரு வெள்ளை அறிக்கையைத் தந்து, நிச்சயமாக இதுபோன்ற விளைவுகள் எதுவும் இராது என்ற உறுதியை இங்கே அளிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 26]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் கதிர் வீச்சால் எந்தவிதமான கருவும் சிதையாது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சியின் மீது மிகுந்த அக்கறை கொண்டு அரசு செயல்படுகிற இன்றையநிலையில் தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமான மின்சார உற்பத்தி என்பதே தமிழ்நாட்டில் குறைவு நீர் மின்சாரமோ, அனல் மின்சாரமோ உற்பத்தி செய்ய வாய்ப்பு மிகக் குறைவு. எனவே, அணு மின்சாரம் தவிர வேறு மார்க்கமே இல்லையென்ற தவிர்க்கமுடியாத நிர்ப்பந்த நிலையில் தமிழ்நாடு நின்று கொண்டிருக்கிற இந்த நேரத்தில், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமான இந்த அணுமின் நிலையத்தைத் தடைபடுத்துகிற முறையில் தவறான பிரச்சாரத்தைப் பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருவது எதிர்காலத் தமிழ்நாட்டிற்கு நல்லதல்ல. எனவே, நான் தங்கள் மூலமாக மாநில அரசிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது, இந்தக் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் மூலம் எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்பதோடு, அதற்குரிய இன்றைய ஐரோப்பிய மண்ணில் ஏற்பட்டிருக்கக்கூடிய அதிநவீன நுட்பங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்ற முழு விவரங்களையும் பொது மக்களுக்குத் தெரிகிற வகையில் திரைப்படங்கள் அல்லது தொலைக் காட்சி மூலம் பிரச்சாரம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி இரண்டு தினங்களுக்கு முன்னால் மாநிலத் திட்டக் கமிஷனோடு இதுபற்றிப் பேசி இருக்கிறோம். மாநிலத் திட்டக் கமிஷனில் உள்ள உறுப்பினர்களும், இந்த டெக்னாலஜி பற்றி அறிந்தவர்களும் அதே பகுதிக்குச் சென்று மிகச் சிறந்த முறையில் பிரச்சாரம் செய்வதன் மூலம் மக்கள் மத்தியில் இருக்கிற அந்தப் பீதியைப் போக்க முடியும் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இருக்கிறது. அதுமட்டுமல்ல இந்தத் திட்டத்தை 1988 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஆனபோது அமல்படுத்தியிருந்தால் இன்றைக்கு அதனுடைய பலன் தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருக்கும். இப்போதுகூட இந்த ஆண்டு இந்தத் திட்டத்தைத்

தொடங்குவதாக இருந்தால்கூட இதை நிறைவேற்றுவதற்குக் குறைந்தது 10 ஆண்டு காலம் ஆகும். எனவே மக்களும் அதைப்பற்றி பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. இந்த 10 ஆண்டிற்குள்ளாக எத்தனையோ விஞ்ஞான வளர்ச்சிகள் நாட்டிற்குக் கிடைக்கும். அதன் மூலம் இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்த முடியும் என்று அரசு நம்புகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்திப் பெருக்கத்தில் சிறப்பாக இருந்தால் தான் ஒரு நாட்டினுடைய தொழில் உற்பத்தி பெருகும் என்பதில் எங்களுக்குக் கருத்து மாறுபாடு கிடையாது. ஆனால் இந்தக் கூடங்குளம் அணுமின் நிலையத்தால் உற்பத்தி செய்யப்பட இருக்கிற அணுமின் உற்பத்தி பற்றி ஏற்கெனவே நமக்கு ஒரு கசப்பான அனுபவம் கல்பாக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறது. இதே 17 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் வேறுவகையில் அதாவது சூரிய சக்தியின் மூலமாக மின்சாரம் தயாரிக்கிற முறைகள் மூலமாக மின்சாரம் பெற வாய்ப்பிருக்கிறது. இன்றைக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பினுடைய வேதப் புத்தகமாகக் கருதப்படுகிற '500 ways to save the planet' என்று சொல்லக்கூடிய நூலில் பல்வேறு விஞ்ஞானிகளும் அறிஞர்களும் ஆய்வு செய்து எழுதியிருக்கிற அந்தச் செய்திகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது என்னவென்று சொன்னால், இந்த வேறு ஏற்பாடுகளில், சூரிய சக்தியின் மூலமாக, காற்றாலைகள் மூலமாக இன்றைக்கு அனைத்து உலக நாடுகளும் மின்சார உற்பத்தி செய்கிறது. ஏனென்றால் இன்றைக்கு அமெரிக்காவிலேகூட அணு உலைகள் மூடப்பட்டுக் கொண்டு வருகின்றன. இதிலிருந்து வரும் வீரிய சக்தியைப் பாதியாகக் குறைப்பதற்கே 70 ஆயிரம் ஆண்டுகள் ஆகும். முழு சக்தியை இந்த அணுக் கதிர்கள் இழக்க வேண்டுமானால் 1,40,000 ஆண்டுகள் ஆகும். ஆகவே எதிர்காலத்தில் வரக்கூடிய அந்த ஆபத்தைக் கருத்தில்கொண்டு, இதிலே பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதைவிட மாற்றுத் திட்டங்களைச் செய்வது உதவிகரமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தைத் தயாரிப்பதற்கு அதிகப்படியான பணத்தைச் செலவிட அரசு முன்வருமா, அதற்கான சிறப்புத் திட்டத்தை வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 9.40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்துக்கள் அவருடைய தனிப்பட்ட எண்ணமாக இருக்கலாம். ஆனால் நிச்சயமாகச் சொல்கிறேன். இந்த அணுமின் திட்டத்தினால் தமிழகத்திற்கு எந்தவிதமான ஆபத்தும் வராது என்ற நம்பிக்கை இருக்கிறது. மிக நவீன விஞ்ஞானக் கருவிகள் மூலம் இப்போது அந்தத் திட்டத்தை மிக அருமையாக அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சூரிய ஒளியிலிருந்து கிடைக்கக்கூடிய மின்சாரத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்வது என்னுடைய கடமை. அணுமின் நிலையம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்கு நமக்கு ஒரு யூனிட்டிற்கு 2 ரூபாய்கூட ஆகாது. ஆனால் சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வது என்றால் இன்றைக்கு அந்த டெக்னாலஜி உலகத்திலே கிடைக்கவில்லை. குறைந்த அளவிலே 100 கிலோ வாட் அளவிற்குத்தான் கோவையிலே நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம். அதற்கேகூட ஒரு யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 40 ரூபாய் செலவாகும். 40 ரூபாய் கொடுத்து ஒரு யூனிட் மின்சாரம் வாங்கக்கூடிய சக்தி உலகத்திலே யாருக்குமே கிடையாது. எனவேதான் விஞ்ஞான ரீதியாக சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதைக் குறைந்த செலவிலே கொண்டு வராத சூழ்நிலையில், அணுமின் நிலையம் ஒன்றிலிருந்துதான் நம்முடைய மக்களுக்காகக் குறைந்த விலையில் மின் சக்தி உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கும். எனவே அதை இந்த அரசாங்கம் அமல்படுத்துவதற்கு முயற்சித்துக் கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழில் வளர வேண்டும். அதற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய மின்சாரத் துறையும் வளர வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து கிடையாது. அதேசமயத்தில், கூடங்குளத்திலே துவக்கக்கூடிய அணுமின் நிலையம் ஏற்கெனவே சோவியத் யூனியனைத் துண்டு துண்டாக்கிய, செர்னோபில்-இல் தோல்வியுற்ற அந்த அணு ஆலையைப் போன்றதுதான். அணு ஆலைக்கு யாரும் உத்தரவாதம் கொடுக்க முடியாது. கல்பாக்கத்திலே இருக்கக்கூடிய அணு ஆலைகூட முழுமையாக அதனுடைய உற்பத்தியைத் துவக்காமல் அது ஒரு தோல்வியுற்ற ஆலையாகவே நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்த

வேளையில்—ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த காலத்தில் இதைப் பாராளுமன்றத்தில்கூட எதிர்த்து இருக்கிறது. இந்த நிலையில்—மீண்டும் மறுபரிசீலனை செய்து தமிழகத்திலே ஒரு ஆபத்தை விளைவிக்கக்கூடிய சூழ்நிலையைத் தடுத்து நிறுத்த முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின் நிலையம் வெற்றிகரமாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்திற்கு தினந்தோறும் கல்பாக்கம் அணுமின் நிலையத்திலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். மற்ற தென் மாநிலங்களும் மின்சாரத்தை கல்பாக்கத்திலிருந்து பெற்றுக்கொண்டு இருக்கின்றன. என்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் சட்டமன்ற உறுப்பினர்களாக இந்த அவையிலே இருக்கிறோம். நாமே ஒரு பீதியை உண்டாக்கினால் சாதாரண மக்களுக்கு அதைக் கண்டு அச்சம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டாகிவிடும். எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பீதியை உண்டாக்காமல் இருப்பது நாட்டிற்கு நல்லது. என்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன். இந்தத் திட்டத்தை இன்று அமல்படுத்த ஆரம்பித்தாலும்கூட, இத்திட்டம் நிறைவேற இன்னும் 10 ஆண்டு காலம் ஆகும். இந்த 10 ஆண்டுகளுக்குள்ளாக எவ்வளவோ விஞ்ஞான வளர்ச்சி உலகத்திலே ஏற்பட்டு விடும். எனவே அப்படி விஞ்ஞான வளர்ச்சி வளர்ந்து வருகிற காலகட்டங்களில் அணுமின் நிலையத்தினாலே எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாமல் நிச்சயமாகப் பாதுகாக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 9.45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணுமின் நிலையம் பற்றிப் பேச ஆரம்பித்த நேரத்திலே, இரண்டுவிதமான கருத்துக்களைச் சொல்ல ஆரம்பித்தார்கள். இதனுடைய பின்னணி ஒன்று உண்டு. நம்முடைய இந்தியாவினுடைய தொழில் வளர்ச்சியிலே அக்கறை இல்லாத அல்லது அதை ஒத்துக்கொள்ளாத மேலை நாடுகள் பல இன்றும் உண்டு. நம்முடைய தொழில்



வளரக்கூடாது என்ற கருத்து இருக்கின்றவர்கள், இருக்கிறார்கள். அவர்களுடைய சில பிரச்சாரங்கள்கூட. இதற்குப் பின்னணியிலே இருந்தது அன்றைய காலத்திலே. ஆனால், இன்றையதினம் சோவியத் யூனியனிலே ஒரு அனுபவம் இருந்தது என்பது உண்மை. ஆனால், அதற்குப் பின்னாலே விஞ்ஞானத்தினுடைய வளர்ச்சி என்பது எவ்வளவு வேகமாக முன்னேறி வளர்ந்து வந்திருக்கிறது என்பதற்கு உதாரணமாக சோவியத் யூனியனிலே மீண்டும் இப்படிப்பட்ட அணுமின் நிலையங்களை உருவாக்கி இருக்கிறார்கள். எந்தக் கோளாறும் வரக்கூடாத அளவிலே, ஆபத்தும் வரக்கூடாத அளவிலே அதற்கு நவீன விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பின்னாலே வருகின்றபோது நம்முடைய விஞ்ஞானம் என்பது எந்த அளவிற்கு முன்னேறி வரும் என்பது எல்லோருககும் தெரிந்த விஷயம். அந்த அடிப்படையிலே தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கு எவ்வளவு வேகமாக இதைச் செயல்படுத்த முடியுமோ, அந்த அடிப்படையில் மத்திய அரசோடு நாம் இன்னும் நெருக்கமாகப் பேசி, மிக விரைவாக இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக, தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சி பெருகுவதற்கான வாய்ப்புகளை நாம் ஏற்படுத்தவேண்டும். அந்த வகையிலே நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக உருவாகக்கூடும்; ஏற்கெனவே உருவாகியது. கடந்த 8 அல்லது 9 ஆண்டுகளுக்கு முன்பு, இந்த அணுமின் நிலையத்தைத் தொடங்குவதற்கான முயற்சிகள் மத்திய அரசினாலும், மாநில அரசினாலும் எடுக்கப்பட்டபோது, இதுபோன்ற வாதப்பிரதிவாதங்கள் நாட்டில் ஏற்பட்டன. அணு என்றாலே பயப்படக்கூடிய ஒரு நிலை நாட்டு மக்களுக்கு ஏற்பட்டதற்குக் காரணம், ஹிரோஷிமா நகரத்திலே அணுகுண்டு வீசப்பட்டு, அதனால் ஏற்பட்ட விளைவுகளை மனதிலே வைத்துக்கொண்டு, அணுமின் நிலையம் என்றாலே, அச்சத்திற்கு மக்கள் ஆளாகின்ற ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. ரஷ்யாவிலோ அல்லது அமெரிக்காவிலோ ஒரு அணுமின் நிலையத்திலே ஒரு ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்பதற்காக அணுமின் நிலையங்களே கூடாது என்ற வாதத்தை வைப்பது சரியல்ல. ஒரு ரயில் கவிழ்ந்துவிட்டது என்பதற்காக யாரும் ரயிலிலே ஏறாமல் இருப்பதில்லை. ஒரு விமான விபத்து ஏற்பட்டுவிட்டது என்பதற்காக யாரும் விமானத்திலே ஏறாமல் இருப்பதில்லை. எனவே, தற்செயலாக

[1997 ஏப்ரல் 26

ஆங்காங்கே நடைபெற்ற விபத்துக்களை மாத்திரம் அடிப்படையாக வைத்து அணுமின் நிலையமே தேவையில்லை என்று கூறுவது சரியல்ல. நம்முடைய தமிழ்நாட்டில், அனல், புனல் ஆகிய அனைத்தையும் பயன்படுத்தி, மின்சாரத்தைப் பெறுகிறோம் என்றாலும்கூட, இது தமிழக தொழில் வளர்ச்சிக்குப் போதுமானதாக இல்லை எனவேதான். அணுமின் நிலையமும் நமக்குத் தேவை என்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு ஏற்கெனவே இருந்த அந்த ஒப்பந்தம் தொடர முடியாமல் இடையிலே ஏற்பட்ட தொய்வுக்குப் பிறகு, இப்போது மீண்டும் அந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே உள்ள சாதக பாதகங்களை ஆராய்வதற்கு நிபுணர்கள் இருக்கிறார்கள். இதனால் ஏற்படுகின்ற எதிர் விளைவுகளைச் சமாளிப்பதற்கும் அந்த நிபுணர்கள் தக்க வழிமுறைகளைச் சொல்வார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கின்றது. எனவே, இப்பொழுதே, ஒரு பீதியைக் கிளப்புகின்ற அளவிற்குப் பிரச்சாரத்தைச் செய்யாமல் இருப்பது நல்லது என்ற இந்த வேண்டுகோளைத் தமிழ்நாட்டிலே உள்ள அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் நான் வைக்க விரும்புகின்றேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதிலே என்ன துணைக் கேள்வி? சரி கேளுங்கள். திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலே மிக முன்னேறிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் நாட்டில் மொத்த மின் உற்பத்தியில் 70 விழுக்காடு அணுமின் உற்பத்தியின் மூலமாகத் தயாரிக்கப்படுகின்றது. ஆனால் இந்தியாவில் 3 விழுக்காடுகூட அணு மின்சாரம் தயாரிக்கப்படுவதில்லை. அந்த நாடுகள் எல்லாம், முன்னேறிய நாடுகள் எல்லாம், அறிஞர்களை, விஞ்ஞானிகளைக் கொண்ட நாடுகள் எல்லாம், அச்சம் இல்லாமல் முன்னேறிக் கொண்டிருக்கும்போது, இதுகுறித்துக் கவலைப்படத் தேவையில்லை என்ற ஓர் கருத்து இருக்கிறது. மற்றொன்று, இதனால் மீன்வளம் பாதிக்கப்படும் என்ற ஓர் அச்ச உணர்வு இருக்கின்றது. பிரான்ஸ் நாட்டில் ஆண்டுதோறும் மீன்பிடிப்பதற்கான போட்டிகளை நடத்துவார்கள். அந்தப் போட்டிக்காகத் தேர்வு செய்யக்கூடிய இடம், இந்த அணுமின் நிலையங்களிலிருந்து வெளியேறக்கூடிய கழிவு நீர்



1997 ஏப்ரல் 26]

எங்கு சென்று கடலிலே சேருகின்றதோ, அந்த இடத்தில்தான் இந்த மீன்பிடிப்பதற்கான போட்டிகளை நடத்துகிறார்கள். காரணம் என்னவென்றால், இதிலிருந்து செல்லக்கூடிய நீர் சற்று வெப்ப நிலை கூடுதலாக இருப்பதால், அங்கே மீன் குஞ்சுகள் அதிகமாக உற்பத்தியாகின்றன என்பதுதான். ஆகவே, இதுபோன்ற நிலையங்களினால், மீன் உற்பத்தி அதிகமாகுமேயொழிய குறையும் என்ற அச்ச உணர்வு தேவையில்லை. ஆகவே, இதை முழுமையாகத் தெரிந்த விஞ்ஞானிகள், அறிஞர்கள், வல்லுநர்களை வைத்து, குறைந்தபட்சம் முதல் கட்டமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்காவது, ஒரு கருத்தரங்கை நடத்த அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு ஆதரவாக, மக்களிடத்திலே எந்தப் பீதியும் ஏற்படாத சூழ்நிலையை உருவாக்க பிரச்சாரம் செய்யவேண்டும் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே இங்கே கேட்டுக் கொண்டார்கள். அப்படி ஒரு பிரச்சாரக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று நானும் விரும்புகின்றேன். அந்தக் குழுவிற்குத் தலைவராக நண்பர் திரு. சொக்கர் அவர்களே இருக்கலாம் என்றும் நான் விரும்புகின்றேன்.

*முற்பகல் 9.50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் எம். மோசஸ்.

**டாக்டர் எம். மோசஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு பேச்சிப்பாறையிலிருந்து தண்ணீர் கொண்டு செல்வதற்கு ஏதாவது திட்டம் உண்டா? அப்படியானால் அங்குள்ள விவசாயிகள் அதற்கு சம்மதிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் கொண்டு செல்வதற்கான எந்தத் திட்டமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய இத்திட்டத்தை வரவேற்கும் வாயிலாக ஒரு கமிட்டியைப் போட்டு, அதற்கு எங்கள் திரு. சொக்கரையும் போட்டதற்கு

[1997 ஏப்ரல் 26

நன்றி. எங்கள் பகுதியிலே பொங்கலூர் தொகுதியிலே ஏராளமான காற்றாலைகள் மூலமாக இப்போது மின்சாரத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் நெடுநாளைய திட்டம். இந்த அணு மூலமாக மின்சாரம் எடுப்பதற்கு நீண்டகாலமாகும் என்ற அடிப்படையிலே இந்தக் காற்றாலை மூலம் அதிகமான மின்சாரத்தைத் தயாரிப்பதை அரசு ஊக்குவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 600 மெகாவாட் அளவிற்குக் காற்றாலை மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு தனியாரும் மின் வாரியமும் முன்வந்திருக்கின்றனர். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்குத் தனியாரிடத்திலேயும் வேண்டுகோள் வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களை ஊக்குவிக்க அரசாங்கமும் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான வதந்திகளைத் தற்போது நாங்கள் பரப்பவில்லை. ஏற்கெனவே 1989 ஆம் ஆண்டு இதை ஆரம்பிக்க ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து ஒரு தவறான பிரச்சாரம் அங்கே பரவிக் கொண்டிருக்கிறது. அதேபோல் ரஷ்யாவிலே அந்த செர்னோபில்லில் ஏற்பட்ட விபத்திற்குப் பின்பு சோவியத் ரஷ்யாவில புதியதாக எந்த அணுமின் நிலையமும் ஏற்படுத்தப்படவில்லை. ஆகவேதான் அந்தப் பழைய கால, கடந்த கால டெக்னாலஜியை வைத்துக்கொண்டு, அந்தக் கடந்த கால தொழில்நுட்பங்களை வைத்துக்கொண்டு, இங்கே புதியதாக நாம் ஆரம்பிக்கின்ற அணுமின் நிலையத்திற்கு முழுமையாக ஒரு ஆபத்தும் இல்லையென்று சொல்லக்கூடிய அளவிற்கு வல்லுநர்கள் யாருமே இல்லை. ஆகவே இதைப்பற்றி முழுமையாக இந்தச் சட்டமன்றத்தில்கூட விவாதித்த பின்பு முடிவிற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அணுமின் நிலையம் ஆபத்தானது என்பதைவிட 10 ஆண்டுகாலம் இந்த மின் உற்பத்தியைத் தொடங்கக் காத்திருக்க வேண்டி இருக்கிறது. ஆனால் 3 மாத, 6 மாத காலத்திற்குள் காற்றாலைகள் மூலமாக உடனடியாக மின் உற்பத்தி பண்ணிவிடலாம். இதே ரூ. 17,000 கோடியில் 8500 மெகாவாட் மின்சாரத்தை உடனடியாக உற்பத்தி பண்ணலாம். அந்த வாய்ப்பு இருந்த போதும், ஏன் இதை நாம் மறுபரிசீலனை செய்யவேண்டும், ஏன் இந்தத் திட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய தாழ்மையான கேள்வி.



1997 ஏப்ரல் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்களுடைய என்று சொல்லாதீர்கள். என்னுடைய என்று சொல்லுங்கள். உங்கள் கட்சி கொறடா அது நல்ல திட்டம், அதை நாடு முழுவதும் பிரச்சாரம் பண்ணுகிறேன் என்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடங்குளம் அணுமின் நிலையம் வருகின்ற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே எக்காரணத்தைக் கொண்டும் காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தினுடைய அளவை நாம் குறைக்கப் போவதில்லை. இன்னும் ஒன்று. காற்றாலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற நேரத்தில், அதைக் கொள்முதல் செய்கின்ற நேரத்திலே மின்சார வாரியம் ஒரு யூனிட்டிற்கு ரூ. 2.25 முதல் ஆண்டும், இரண்டாவது ஆண்டு ரூ. 2.30 என்றும், ஐந்து ஆண்டுகளுக்கு, 5 பைசா, 5 பைசா என்று கூடுதலாகக் கொடுத்து மின்சாரத்தை வாங்குகிறது. ஆனால் அணுமின் நிலையம் வந்து மின்சாரம் உற்பத்தியானால், மின்சாரம் மலிவு விலையில் கிடைக்கக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. மின்சார வாரியத்திற்கு ரூ. 1.75-க்கு இவ்வளவு மலிவாக மின்சாரம் கொடுப்பதற்கு வேறு எந்தத் திட்டமும் இல்லாத காரணத்தினால்தான் அணுமின் நிலையத்தில் அரசு அக்கறை காட்டுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 682, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**682—**

## துணை மின் நிலையம் அமைத்தல்

***6459—திரு. மு. பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் வெள்ளக்கோவில் தொகுதியில் ஓலப்பாளையம் பகுதியில் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

[1997 ஏப்ரல் 26

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒலப்பாளையத்திலே ஒரு 33 கிலோவாட் துணை மின் நிலையத்தை நிறுவுவதற்கான திட்டத்தை உள்ளடக்கிய, பெரியார் மாவட்டத்திற்கான ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்குரிய பெருந்திட்டம் ஆய்வில் உள்ளது. இவ்வாய்வின்படி, ஒலப்பாளையத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் தேவை ஏற்படின், இத் துணை மின் நிலையம், மேற்படி பெருந்திட்டத்திலே சேர்க்கப்பட்டு நிதி வசதிக்கேற்ப, வரும் ஆண்டுகளிலே நிறைவேற்றப்படும்.

முற்பகல் 9 55

**திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வெள்ளக்கோவில் தொகுதிக்குட்பட்ட ஒலப்பாளையத்தில் மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது என்று சொன்னதற்காக என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும் அது 33 கிலோவாட் திறன் கொண்டதாக அமையும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளிலே, நூற்பாலைகளும், தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகளும் உருவாகிக்கொண்டு வருகின்றன. அதனால், அவற்றின் திறனை அதிகப்படுத்தியும்—அதுபோல 110/16 கிலோவாட் திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையமும் இப்போது வெள்ளக்கோவில் ஒன்றியத்தில் தொடங்கப்பட்டு, செயல்படாமல் உள்ளது. அதற்குக் காரணம் கேட்டால், அதற்குரிய 'பவர் டிரான்ஸ்பார்மர்' இல்லை என்று சொல்கிறார்கள். அதனால், அதையும் விரைவிலே ஏற்பாடு செய்து—அந்தத் துணை மின் நிலையம் தொடங்குவதற்கு ஆவன செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெள்ளக்கோவிலிலே 33/11 கிலோவாட் துணை மின் நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. காங்கேயத்திலே 110/33-11 கிலோவாட் துணை மின் நிலையமும் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் இங்கு தெரிவித்ததைப் போல் 16 கிலோவாட் டிரான்ஸ்பார்மர் அங்கே



1997 ஏப்ரல் 26]

உடனடியாக நிறுவுவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அநேகமாக ஜூன் மாதத்திற்குள்ளாக அந்த டிரான்ஸ்பார்மர் அங்கே பொருத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 685. டாக்டர் பத்மா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

685—

### புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குதல்

***1141—டாக்டர் பத்மா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் - கங்களாஞ்சேரி, நன்னிலம் - கும்பகோணம் வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் - கங்களாஞ்சேரி, நன்னிலம் - கும்பகோணம் தடத்தில் இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்து மீண்டும் 1-1-1997 முதல் அத்தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 686, திரு. எம். முத்துராமலிங்கம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

686—

### திருமங்கலத்தில் புறவழிச்சாலை அமைத்தல்

***2151—திரு. எம். முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை - கன்னியாகுமரி பிரதான சாலையில் திருமங்கலம் நகருக்குள் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க புறவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் இத்திட்டத்தினைச் சேர்ப்பதற்கு மைய அரசிற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**திரு. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலேயிருந்து கன்னியாகுமரிக்குச் செல்கிற இந்தத் தேசிய நெடுஞ்சாலை திருமங்கலம் நகரத்திற்குள் சென்று வருகிற காரணத்தால், பல போக்குவரத்து பாதிப்புகளும், விபத்துக்களும் ஏற்பட்டு, பல நேரங்களில் மணிக்கணக்கில் அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது மைய அரசிற்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதனைக் கொஞ்சம் விரைவுபடுத்தி உடனடியாக அந்தப் பகுதியில் இதை அமைத்துத்தர முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளில் பொதுவாக இதுபோன்ற புறவழிச் சாலைகள் அமைக்கிறபோது. மத்திய அரசு இப்போது பி.ஓ.டி. முறையின் மூலமாக அவைகளைத் தனியார்களுக்கே விட்டு, அவைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. இருந்தும், இந்த அரசு அவைகளை, தேசிய நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவே, பண உதவியினை அளித்து சுமார் 14 கோடி ரூபாய்வரை இத்திட்டத்திற்கு அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறது. நிதி அளிக்கப்பட்டால் உடனடியாக இந்த அரசு அந்தத் திட்டத்தை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். வினா நேரத்தில் பொது வினாக்கள் உண்டு; அவரவர் தொகுதியைப் பொறுத்த வினாக்களும் உண்டு. உதாரணமாக இன்று அணுமின் நிலையத்தைப் பற்றி வினா எழுந்தபோது, பொது வினா என்ற அடிப்படையிலே 25 நிமிடங்கள் துணை வினாக்களைக் கேட்க அனுமதியளிக்கப்பட்டார்கள். ஆனால், அவரவர் தொகுதியைப் பொறுத்த வினாக்களிலே மற்ற உறுப்பினர்களை நான் துணை வினா கேட்க அனுமதிக்கத் தயாராக இல்லை.





**வினா எண் 687, திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.**

**687—**

### சூரியகாந்தி எண்ணெய் ஆலையைத் திறத்தல்

***3767—திரு. வி. கே. லட்சுமணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் கூட்டுறவு மத்திய விற்பனைச் சங்கத்தின் மூலம் ஒண்டிபுதூரில் நிறுவப்பட்டுள்ள சூரியகாந்தி எண்ணெய் ஆலையைத் திறந்து நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒண்டிபுதூர் எண்ணெய் ஆலையை மீண்டும் திறப்பது குறித்து தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக (National Co-operative Development Corporation) தொழில் நுட்ப வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரியகாந்தி எண்ணெயைப் பிழிந்து எடுப்பதற்காக தர்மபுரி மாவட்டத்திலே, போச்சம்பள்ளியிலே நடத்தப்படுகிற ஆலையானது லாபகரமாக நடந்து வருகிறது. அவ்வாறு இருக்க, ஒண்டிபுதூர் ஆலை மட்டும் ஏன் நஷ்டத்தில் நடைபெறுகிறது என்பதை ஆலோசிக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியிலே நடைபெற்ற மாபெரும் தவறுகளில் இதுவும் ஒன்று. அந்தப் பண்டகசாலைக்கு சரக்குக் கொள்முதல் செய்கின்ற அளவுக்கு, அவர்களிடம் நிதி வசதி இல்லை. அந்த நிதி வசதி இல்லாத காரணத்தால், 20 சதவிகிதம்கூட அந்த ஆலையை இயக்குவதற்குரிய வசதி இல்லாதுபோய், மாதம் 3 லட்சத்து 50 ஆயிரம் வட்டி மட்டும் கட்டக்கூடிய சூழ்நிலை வந்த பிறகு, அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை நிறுத்தி, உடனடியாக ஏலத்தில்

விட்டுவிடலாம் என்று முடிவு செய்தபோது. தொழிலாளர்கள் உயர்நீதிமன்றம் சென்று தடை வாங்கியிருக்கிறார்கள். அதனால், இப்போது இந்த அரசு வந்த பிறகு அதை மீண்டும் இயக்குவதற்குரிய திட்டத்தை என்.சி.டி.சி. மூலம் இன்றைக்கு ஆய்வு செய்து. எப்படி இயக்குவது என்பதற்கான வழிகளையெல்லாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி, ஒண்டிபுதூரில் இருப்பதைப் பற்றித்தான் கேட்க வேண்டும்.

*முற்பகல் 10-00*

**திரு. சி. டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் கூட்டுறவு மத்திய விற்பனை நிலையம் சார்பில் சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் என்ற பெயரில் ஒரு சிறப்பு அங்காடி. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்பு முதல்வராக இருந்த நேரத்தில் துவக்கி வைக்கப்பட்டது. இந்திய துணைக் கண்டத்திற்கே எடுத்துக்காட்டாக அது விளங்கி செயல்பட்டு வந்தது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அது ஊழலுடைய ஊற்றுக்கண்ணாக மாறி பல கோடி ரூபாய் அதிலே நஷ்டம் ஏற்பட்டு இன்றைக்கு அது ஓரளவிற்கு செயல்படாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. 4 கோடி ரூபாய் இருந்தால் மீண்டும் அந்தக் கூட்டுறவுப் பண்டகசாலையைப் புதுப்பித்து சிறப்பாக விற்பனை செய்யலாம் என்று அங்கே நிர்வாகத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் கருதுகிறார்கள். எனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கொண்டு 4 கோடி ரூபாயை மத்திய கூட்டுறவு வங்கிக்கு வழங்கி மீண்டும் அதனுடைய சிறப்பு மக்களுக்குத் தெரிகின்ற வகையிலே செயல்பட முற்படுவாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையிலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கும் மொத்தம் 30 கூட்டுறவு விற்பனைப் பண்டகசாலைகளிலே 6-ஐத் தவிர பாக்கி 24 கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் மோசமான நிலையிலே, இயங்க முடியாத நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. 10,000-க்கு மேற்பட்ட தொழிலாள நண்பர்கள் அதில் பணிபுரிகிறார்கள். அவர்களைக் காக்க வேண்டும் என்ற பொறுப்போடு அந்த அமைப்புகள் தரவேண்டிய வட்டித் தொகையை நீக்கிவிட்டு, அவை பெற்ற குறுகிய காலக் கடனை நீண்டகாலக்





கடனாக மாற்றி இன்னும் அவற்றிடம் இருக்கின்ற அந்தப் பொருள்களை அல்லது சொத்துக்களை நமது மத்திய கூட்டுறவு வங்கியிலே எழுதி வாங்கிக் கொண்டு குறைந்த வட்டிக்குக் கடனுதவி தரவேண்டும் என்று ஒரு முடிவு செய்யப்பட்டு. முதல் கட்டமாக 6 சங்கங்கள் கோவை சிந்தாமணி. திருச்சி சிந்தாமணி, திருச்சி அமராவதி, சென்னையில் இருக்கின்ற சிந்தாமணி இன்னும் கும்பகோணம், சந்திரசேகரபுரம் கூட்டுறவுச் சங்கம் போன்ற 6 சங்கங்களுக்கு உதவிகள் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டு, முதல் கட்டமாக சென்னையில் இருக்கின்ற சிந்தாமணிக்கு பணம் வழங்கப்பட்டிருக்கிறது. விரைவிலே கோவை சிந்தாமணிக்கும் வழங்கப்படும். அது சிறப்பாக நடப்பதற்குரிய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 688, திரு. பி. வெங்கடசாமி. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**688—**

## CONFIRMATION OF LABOURERS OF THE DEPARTMENT OF COMMISSIONER OF MILK PRODUCTION

### *3037—Thiru B. Venkatasamy:

Will the Hon. the Minister for Milk be pleased to state—

Whether the Government have received any proposal from the Commissioner of Milk Production and Dairy Development requesting confirmation of labourers who have worked in that department for 480 days?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பால்வளத் துறையில் 480 நாட்கள் பணியாற்றி, பணி உறுதி செய்யப்படாதவர்கள் எவரும் இல்லை.

**Thiru B. Venkatasamy:** Hon'ble Speaker Sir, a large number of casual labourers are working in co-operative milk producers unions in the entire State. I request the Hon. Minister to see that these temporary workers who have worked for more than 480 days are made permanent. May I know from the Hon. Minister for Dairy Development whether these casual labourers working in the Milk Producers Co-operative Unions throughout the State would be given permanent employment?

[1997 ஏப்ரல் 26

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களாகவும், மாநில அளவில் அவை இணையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட அளவில் மட்டும் 239 பேர் தினக்கூலியாக 2 வருடத்தில் 480 நாட்கள் பணிபுரிந்திருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்துவது அரசுசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் தர்மபுரி யூனியனில் மட்டும் 220 தினக்கூலிப் பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் பணி நிரந்தரம் செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனை பெற்றுச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 689, திரு. பா. அருண்குமார், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**689—**

### நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

***4491—திரு. பா. அருண்குமார்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நீதிமன்றம், ரூ. 12,000 அளவுக்கு மிக அதிகமான வாடகை கொடுத்து வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டு வருகின்றது. ஆனால் அரசு அலுவலகங்களுக்கென ஆர்ஜிதம் செய்யப்பட்டு, தற்போது இயங்கிவரும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகிலே உள்ள நிலம், நீதித் துறைக்கு ஒப்படை செய்யப்பட்டால் புதிய நீதிமன்றக் கட்டடம்



1997 ஏப்ரல் 26]

கட்டலாம் எனச் சொல்லப்படுகிறது. எனவே இடம் எப்போது நீதித் துறைக்கு ஒப்படைக்கப்படும்? அதுபோக மேட்டுப்பாளையம் நகரத்திற்கும் அதன் சுற்று வட்டாரத்திற்கும் அந்த ஒரு நீதிமன்றம்தான் நீதித் துறையில் இயங்கி வருகிறது. எனவே எப்போது நீதிமன்றக் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் முதலிலே ஜுடிஷியல் மேஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் அரசுக் கட்டிடத்தில்தான் செயல்பட்டது. அதற்குப் பிறகு அந்த நீதிமன்றம் District Munsiff-cum-Judicial Magistrate நீதிமன்றம் என்று மாற்றப்பட்ட பிறகு, போதுமான இட வசதி இல்லாத காரணத்தால் வாடகைக் கட்டிடத்திலே இப்பொழுது இயங்கி வருகிறது. அதற்காக மாத வாடகை 11,800 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. புதிதாக அரசு நிலத்திலே கட்டடம் கட்டுவது பற்றி உயர்நீதிமன்றத்திலேயிருந்து எந்தச் செயற்குறிப்பும் வரவில்லை. வந்த பிறகு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 690, திரு. பெ. சு. திருவேங்கடம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**690—**

***5710—திரு. பெ. சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள உயர்நீதிமன்ற வளாகத்திலேயே மத்திய, மாநில நிருவாகத் தீர்ப்பாயங்கள் மற்றும் நுகர்வோர் நீதிமன்றங்கள் அமைக்க வேண்டுமென உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளாரா?

(ஆ) அதன் மீது, அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பெரும்பாலான தீர்ப்பாயங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டடத்திலேயே இயங்கி வருவதால், புதிதாக சென்னை உயர்நீதி மன்றத்தின் வளாகத்திலேயே அனைத்துத் தீர்ப்பாயங்களையும் அமைப்பதற்குத் தனிக் கட்டடம் அவசியமில்லை என முடிவெடுக்கப்பட்டு, 28-1-97 அன்று உயர்நீதிமன்றப் பதிவாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தீர்ப்பாயங்களுக்கு, எல்லாம் உயர்நீதிமன்றத்தினுடைய வளாகத்திலேயே இடம் போதுமானதாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் அறிவிக்கிறார்கள். ஆனால், நுகர்வோர் கோர்ட்டுக்கெல்லாம் போதிய வசதியான கட்டடங்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. தனிக் கோர்ட் கட்டடங்கள் கட்டப்படுமா அல்லது தற்காலிகமாக வாடகைக் கட்டடத்திலேயாவது அவைகள் நடைபெறுவற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற குறிப்பின் அடிப்படையில் இப்பொழுது இயங்கி வருகின்ற எல்லா நீதிமன்றங்களுக்குமே போதுமான இடம் இருப்பதாகவே தெரிய வருகிறது. ஆனால் Tribunals நுகர்வோர் நீதிமன்றம் இவைகளுக்கெல்லாம் மத்திய அரசிலேயிருந்து மானியம் இல்லை. முதலிலே 11 கோடியே 35 இலட்சத்திற்கு ஒரு ஆடிட்டோரியம் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருந்தது. ஆனால், மத்திய அரசு அதற்கு உதவி அளிக்காது என்ற நிலை வந்த பிறகுதான், இப்பொழுது இருக்கிற இடத்திலேயே இந்த நீதிமன்றங்களை நடத்துவது என்று முடிவெடுத்து, அது உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக இனி அமைக்கப்படுவதற்கான செயற்குறிப்பு எதுவும் உயர்நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்த உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை மதுரையிலே அமைப்பதற்காக ஏற்கெனவே......





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுதான் துணை வினாவா?

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை சென்னை உயர்நீதிமன்றம் தானே, அதனுடைய Part தானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த Part எல்லாம் துணை வினா அல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** மதுரையைப் பற்றிக் கேட்கிறேன். சபாநாயகர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனாலே வேண்டுமானால் அனுமதிக்கிறேன். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** சென்னையில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்த உயர்நீதிமன்றத்தினுடைய பிரிவை மதுரையிலே அமைப்பதற்காக மாண்புமிகு முதல்வரவர்கள் ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டார்கள். அதற்காக இப்பொழுது இருக்கக்கூடிய சென்னையினுடைய உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் ஏற்கெனவே நம்முடைய அமைச்சரிடம் ஏதாவது கருத்தைச் தெரிவித்திருக்கிறார்களா? மதுரையில் இப்பொழுது இருக்கக்கூடிய கட்டடமே, நல்ல வசதியான கட்டடம் உங்களுடைய காலத்தில் மிக அருமையாகக் கட்டப்பட்டிருக்கக்கூடிய இந்தக் கட்டடத்திலேயே ஒரு பிரிவை கொண்டு போய் நிச்சயமாக அமைக்க முடியும். ஆனால் அதில் இடவசதி போதவில்லை என்கிற காரணத்தையெல்லாம் சொல்லி, நீதி அரசர்கள் சென்னையிலேயே தங்கி விடக்கூடாது. அதற்காகப் பதிவாளர் அமைச்சரிடம் தொடர்பு கொண்டாரா? இதற்காக ஏதாவது ஒரு முடிவு எடுக்கப்பட்டு, எந்தத் தேதியிலே அங்கே மதுரையிலே இந்த உயர்நீதிமன்றத்தினுடைய பிரிவு துவங்கப்படும் என்று இந்த அவைக்கு அமைச்சர் தெரிவிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய கிளை அமைப்பது தொடர்பாக இந்த அரசு தீவிரமாக முயற்சி எடுத்து வருகிறது என்பதை இந்த அவையும் அறியும்; மாண்புமிகு அவைத் தலைவரவர்களும் நன்கு அறிவார்கள். இது தொடர்பாக வழக்கறிஞர்கள், இப்பொழுது நீதிமன்றப் புறக்கணிப்பு போன்ற போராட்டங்களையெல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நான்

இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக தற்போது தற்காலிகத் தலைமை நீதிபதியாக இருக்கிற பெருமதிப்பிற்குரிய தணிகாசலம் அவர்களிடத்தில் நேரடியாகவே நான் பேசினேன். அவர்கள் சர்க்கியூட் பெஞ்சை முதலில் நாம் துவக்கலாம் என்று சொல்லி, அதையும் அவர்கள் பரிந்துரைப்பதாகச் சொன்னார்கள். அதையும் ஃபுல் கோர்ட், அதாவது அவர்களுடைய மற்ற நீதிபதிகள் எல்லாம் கலந்தாலோசித்து அதனுடைய முடிவின் அடிப்படையிலேதான் செய்ய முடியும். ஆனால் அந்த முடிவை எடுப்பதற்கு தாம் ஒரு பெருமுயற்சி எடுக்கவிருப்பதாகத் தலைமை நீதிபதி அவர்கள் எனக்கு உறுதி அளித்திருக்கிறார்கள். எனவே, சாதகமான முடிவு கிடைக்கும் என்று நாங்கள் இருக்கிறோம். இதற்கு இந்த சர்க்கியூட் கோர்ட்டை இப்பொழுது இருக்கின்ற மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தில்தான் நடத்த ஆலோசிக்கிறோம். இதற்கிடையில் நிரந்தரமான ஒரு கிளையை அமைப்பதற்கான கட்டிடத்தை, அதற்கான ஆக்கப் பணிகளை உலகனேரி பகுதியில் அமைப்பதற்கும் அரசு தயாராக இருக்கிறது. அதற்கான செயற்குறிப்பில் முனைப்போடு ஈடுபடுகிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொண்டு, வழக்கறிஞர்கள் எல்லாம் தங்களுடைய போராட்டத்தைத் திரும்பப்பெற வேண்டும் என்று மீண்டும் இந்த நேரத்திலே வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை. தமிழரசன்.

*முற்பகல் 10-10*

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய முதல்வர் ஜெயலலிதா அவர்கள் மீது 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முந்தைய ஆட்சியில் ஊழல் செய்தவர்கள் மீது இதுவரை 84 முதல் தகவல் அறிக்கைகள் பதியப்பட்டுள்ளன. முந்தைய முதல்வர் அவர்களும், அ.இ.அ.தி.மு.க.-வில் ஊழல் செய்தவர்களும், உயர்நீதிமன்றத்திற்கு, வழக்குக்காகப் பெருநகர நீதிமன்றத்திற்கு வருகின்றபோது அங்கே பாதுகாப்பு என்ற பெயரில் நிறைய போலீஸ்காரர்களும், கட்சிக்காரர்களும் கூடிக்கொண்டு நெருக்கடி ஏற்படுவதால் வழக்கறிஞர்கள் அவர்கள் பணிகளுக்காக உயர்நீதிமன்றத்திற்குச் சரியாகச் செல்ல முடியவில்லை என்று பல்வேறு கட்டங்களில் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, தனி நீதிமன்றத்தை அமைக்கின்றபோது, அதை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைக்காமல், வேறு இடத்தில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புவதோடு....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு நிறுத்துங்கள்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** சரி. அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊழல் பேர்வழிகள் மீது நாம் வழக்குகளைத் தொடுத்திருக்கிறோம். அந்த வழக்குகள் தொடர்பாக தனி நீதிமன்றம் அமைக்கவிருக்கிறோம். அந்தத் தனி நீதிமன்றம் பாதுகாப்பான இடத்தில்தான் அமைக்கப்படும். எல்லோருக்கும் பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 691, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**691—**

## மாணவியர் விடுதி அமைத்தல்

***2087—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடத்தில் இந்தக் கல்வி ஆண்டிலேயே பிற்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் வாய்ப்பில்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆண்டிமடம் தொகுதியானது மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களே ஏறத்தாழ 99 சதவீத மக்கள் வசிக்கக்கூடிய பகுதி ஆகவே, அந்தப் பகுதியிலே பெரும்பாலான மாணவிகள் பல்வேறு தொலைவான தூரங்களிலிருந்து

[1997 ஏப்ரல் 26

வருகின்ற காரணத்தினால், விடுதி வசதிகள் இருந்தால பெண்கள படிக்க வாய்ப்பு ஏற்படும். பெண் கல்வியிலே நாட்டம் உள்ள அரசு நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசு. ஆகவே, அதற்கு முன்னுரிமை கொடுத்து அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து என்னுடைய அன்பான வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிக மிகப் பிற்படுத்தப்பட்டுள்ள, அதே போல குடிசைகள அதிகமாக நிறைந்த பகுதிகள் என்ற காரணத்தினால் ஆண்டிபட்டி தொகுதியிலே செந்துறையிலே ஒரு தீயணைப்பு நிலையம் வழங்கியதற்கும், தலைவாசலிலே ஒரு காவல் நிலையம் வழங்கியதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கடந்த ஆண்டு கேட்கப்பட்ட கேள்வி. துறையின் மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு தற்சமயம் வாய்ப்பு இல்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழக முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு 62 விடுதிகள் திறப்பதற்கு உத்தரவிட்டிருப்பதால் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும். அதேபோல அந்தத் தொகுதியினுடைய பொது மக்கள் மூலமாகவும் பலவேறு கோரிக்கைகள் வந்துள்ளதால், இந்தக் கோரிக்கையினைப் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 692. திரு. ஜி. கே. மணி. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**692—**

**பிற்பட்டோர் நல விடுதிகள் துவங்குதல்**

***3628—திரு. ஜி. கே. மணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில், ஏரியூர், பெரும்பாலை, நெருப்பூர், இண்டூர் ஆகிய இடங்களில் பிற்பட்டோர் நல விடுதிகள் துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா?



1997 ஏப்ரல் 26]

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்ப்பில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். எங்களுடைய பெண்ணாகரம் தொகுதி என்பது மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. காடு மலைகள் நிறைந்த பகுதி ஒரேபாதை, சென்ற பாதையிலேயே திரும்பி வரக்கூடிய நிலை. இப்படியிருக்கின்ற நிலையிலே போக்குவரத்து குறைவாக இருக்கின்ற காரணத்தினால் உயர்நிலைப் பள்ளிகளுக்கு, மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாணவ மாணவியர்கள் சென்று வருவது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே, பள்ளிகள் இருக்கக்கூடிய இடங்களில் விடுதிகள் இருக்குமென்று சொன்னால், அது படிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் கல்விக்காக முக்கியத்துவம் கொடுக்கின்ற காரணத்தினால், ஏரியூர், நெருப்பூர், செல்லக்குடி, இண்டூர், பி. அக்ரஹாரம், ஏலகிரி, பெரும்பாலை, பாளையம்புதூர், குன்னனூர் ஆகிய இடங்களில் எல்லாம் விடுதிகள் இல்லாத காரணத்தினால், அவசியம் இந்த ஆண்டு விடுதிகள் துவங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியும் கடந்த ஆண்டு கேட்கப்பட்ட கேள்வி. அதனால் தற்சமயம் தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் புதிய விடுதிகள் துவங்குவதற்கு, 62 விடுதிகள் துவங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். அதேபோல, இந்த மாவட்டத்திலே, பெண்ணாகரம் தொகுதியிலே பல்வேறு கோரிக்கைகள், விடுதிகள் திறப்பதற்காக வந்துள்ளன. அந்தக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, நிபந்தனைக்குட்பட்டு இருக்கின்ற பள்ளிகளுக்கு விடுதிகள் துவங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நடவடிக்கை எடுத்தால், ஒரு இடம்தான் அவருக்குக் கொடுக்க வேண்டும். அவர் ஆறு இடங்கள் ஒரு தொகுதியிலே கேட்கிறார். (சிரிப்பு)

[1997 ஏப்ரல் 26

வினா எண். 693, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்

**693—**

**கால்நடை மருத்துவமனையைச் செப்பனிட்டு மருத்துவரை நியமித்தல்**

***2925 திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, கோட்டூர் ஒன்றியம், செருவாணி கிராமத்தில் இயங்கி வந்த கால்நடை மருத்துவமனையைச் செப்பனிட்டு, கால்நடை மருத்துவரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம். திருத்துறைப்பூண்டி, கோட்டூர் ஒன்றியம், செருவாணி கிராமத்தில் கால்நடை கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ தோற்றுவிக்கப்படவில்லை. எனவே, அவ்விடத்தில், கால்நடை மருத்துவமனையைச் செப்பனிடவோ அல்லது கால்நடை மருத்துவரை நியமிக்கவோ இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திலே கால்நடை மருத்துவ நிலையம் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஏற்கெனவே அந்த இடத்திலே செயல்பட்டு வந்த கால்நடை மருத்துவ நிலையம் அந்த இடத்திலேயிருந்து மாற்றப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த இடத்திலே அதை அமைக்க வேண்டும் என்பதுதான் அந்தக் கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை மீண்டும் மறு பரிசீலனை செய்து, அந்தப் பகுதியிலே விவசாயிகள் நிரம்பியிருக்கிற காரணத்தினாலே அந்த இடத்திலே கால்நடை மருந்தகம் துவக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 26]

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி, கோட்டூர் ஒன்றியம், செருவாணி கிராமத்திலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் அரிச்சந்திராபுரம் என்ற ஊரில் கால்நடைக் கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அந்தச் செருவாணி கிராமத்தில் அதாவது அரிச்சந்திராபுரம் கால்நடைக் கிளை நிலையத்தினை உப நிலையமாக ஒன்றை அமைக்க இந்த அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 694, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**694—**

**தொழிற்பேட்டை உருவாக்குதல்**

***4591—திரு. பி. என். வல்லரசு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டித் தொகுதியில், சிட்கோ மூலம் தொழிற்பேட்டை உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**(அ) மற்றும் (ஆ):** உசிலம்பட்டித் தொகுதியில், சிட்கோ மூலம் தொழிற்பேட்டை உருவாக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே தொழில் ரீதியாக மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக என்னுடைய உசிலம்பட்டித் தொகுதி விளங்குகிறது. அதனால்தான் அன்றைய மற்றும் இன்றைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1990-91-ஆம் ஆண்டு உசிலம்பட்டித் தொகுதியைத் தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவித்தார்கள். எனவே, அப்படிப்பட்ட மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழுகின்ற,

[1997 ஏப்ரல் 26

தொழிற்சாலைகளே இல்லாத என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியை மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையில் தெரிவித்ததைப்போல 30 ஏக்கர் முதல் 50 ஏக்கர் வரையில் உசிலம்பட்டியில் நிலங்கள் உள்ளன என்ற கருத்துரு ஒன்றைத் தாசில்தார் அவர்கள் அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் 30 ஏக்கர் முதல் 50 ஏக்கர் வரை நிலத்தைத் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். எனவே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து 'சிட்கோ' மூலம் உசிலம்பட்டித் தொகுதியில் தொழிற்பேட்டை தொடங்க முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அரசு தரிசு நிலங்களோ, * புறம்போக்கு நிலங்களோ இல்லையென்ற கருத்துரு வருவாய்த் துறை அதிகாரிகளிடமிருந்து வந்திருக்கிறது. அப்படி அந்தப் பகுதியிலே ஏதாவது அரசு புறம்போக்கு நிலங்கள் இருந்தால் எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டைத் தொகுதியிலே தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று 1989-90-ஆம் ஆண்டே அதற்கான நிலமும் கையகப்படுத்தப்பட்டு, அந்த நிலத்தின் சொந்தக்காரர்களுக்குப் பணமும் கொடுக்கப்பட்டது. ஆனால் இதுவரையில் தொழிற்பேட்டை அமைக்க எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமலிருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆம் என்றால், அதன் மீது எடுக்கவிருக்கின்ற நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் உங்கள் மாவட்டத்து அமைச்சர். அவர்களுக்கு எப்படித் தெரியாமலிருக்கும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல நிலக்கோட்டை, பள்ளப்பட்டிக்கு அருகாமையிலே 'டாசிட்' மூலமாக 470 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு அதிலே 75 ஏக்கர் சிட்கோவிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நடவடிக்கையிலே இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.



1997 ஏப்ரல் 26]

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி, சேடப்பட்டித் தொகுதிகளெல்லாம் மிகவும் பின்தங்கிய, தொழிலில்லாத தொகுதிகளாகும். பெரிய பெரிய தொழில்களெல்லாம் உள்ளடங்கிய நகரங்களிலேதான் இன்றைக்குத் தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. எங்களுடைய தொகுதிகளைப் போன்ற பின்தங்கிய தொகுதிகளில் இதுபோன்ற தொழிற்பேட்டைகள் நிறுவுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு நான் இங்கே சொல்லியிருக்கிறேன். இங்கே குறிப்பிடப்பட்ட சேடப்பட்டி, திருமங்கலம் ஆகிய பகுதிகளைப் பொறுத்தவரையில், அவற்றுக்கு அருகிலே இருக்கக்கூடிய கப்பலூரிலே தொழில் தொடங்குவதற்கு அரசினுடைய சார்பாகப் பண்படுத்தப்பட்ட நிலங்களெல்லாம் தயாராக இருக்கின்றன. அவர்கள் வினவினால், அவர்களுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. என் வல்லரசு.

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1990-91 ஆம் ஆண்டு உசிலம்பட்டித் தொகுதியை தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவித்தார்கள். ஆனால் அதற்குப் பின்பு வந்த அரசு, உசிலம்பட்டி யூனியனைத் தொழிலில் மேம்பட்ட பகுதி என்று அறிவித்திருக்கிறது. எனவே. மீண்டும், தமிழக அரசு, இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், உசிலம்பட்டி யூனியனைத் தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கிய யூனியன் என்று அறிவிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியைப் பொறுத்தவரை. ஒரு பகுதியிலிருக்கின்ற பெரிய தொழில்கள் மற்றும் சிறிய தொழில்கள் எத்தனை சதவீதம் இருக்கின்றன என்பதைப் பொறுத்தும், அங்கிருக்கின்ற தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்தும், அந்தப் பகுதியைத் தொழிலிலே பின்தங்கிய பகுதி என்று பிளாக் லெவலிலே அறிவிக்கின்றார்கள். மேலும், உசிலம்பட்டி யூனியனில் பெரிய தொழிற்சாலைகள் எத்தனை இருக்கின்றன, அங்கே

தொழிலாளர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதைப் பொறுத்து, அந்த உசிலம்பட்டி வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டமா அல்லது பின்தங்கிய வட்டமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அறிவிக்க வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 695, திரு. கு. மனோகரன். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**695—**

**ஒலி, ஒளிக் காட்சி மூலம் காமராசர் வாழ்க்கை வரலாறு**

***4356—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, தியாகராய நகரிலுள்ள பெருந்தலைவர் காமராசர் நினைவு இல்லத்தில் அவருடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி, ஒளிக்காட்சி மூலம் விளக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு நடவடிக்கை எடுக்க இயலாது.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவனுடைய எதிர்காலம் அவனது வகுப்பறையிலேதான் நிர்ணயிக்கப்படுகிறது என்ற அறிஞர்களின் சொல்லிற்கு ஏற்ப, கிராமங்களில் எல்லாம் பள்ளிக்கூடங்களையும் திறந்து, அதேபோல கல்வி அறிவுமிக்கவர்களாக ஆக்கவேண்டும் என்று கிராமத்து மக்களை எல்லாம் எழுச்சி பெற வைத்த நாயகனான கர்ம வீரன் காமராஜர் அவர்களின் நினைவு இல்லத்தில் ஒலி ஒளிக் காட்சியை, அவருடைய எளிமையையும், அவருடைய நேர்மையையும் இக்கால இளைஞர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் ஒளிபரப்ப அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தியாகராய நகரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் இல்லத்தில், அவருடைய பேச்சுக்கள் பொதுப்பணித் துறை வானொலிப் பிரிவு டேப் ரெக்கார்டர் மூலம் ஒலிபரப்பப்பட்டு வருகிறது. ஆகையினால் தற்போது ஒலி, ஒளிக் காட்சி அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் காமராஜர் அவர்கள் இந்த நாட்டிலே 10 ஆண்டு காலம் சிறையிலே இருந்து, 10 ஆண்டு காலம் தமிழ்நாட்டிற்கு முதல்வராக இருந்து, 10 ஆண்டு காலம் அகில இந்தியத் தலைவராக உயர்ந்து, இரண்டு பிரதமர்களை உருவாக்கிய அந்தப் படிக்காத மேதையினுடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி ஒளிக்காட்சிமூலம் தெரிவிப்பதன்மூலம், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் சொன்னதைப்போல இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு புதிய உற்சாகத்தையும், எதிர்காலத்தையும் உருவாக்குகின்ற வகையில் நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய நினைவு இல்லத்தில் ஒலி, ஒளிக் காட்சி காண்பிப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதை மறுபடியும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு தியாகத் தலைவர்களை மதிக்கின்ற அரசாக இருக்கின்ற காரணத்தால்தான், பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கு நீண்ட நெடுங்காலமாக கிண்டியிலே இருக்கின்ற நினைவு இல்லத்தில் ஒரு மார்பளவுச் சிலைகூட இல்லாத நிலையை மாற்றி, இப்போது மார்பளவுச் சிலை வைப்பதற்கான நடவடிக்கை எடுத்து சிலை செய்வதற்கான நிலைமையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதைப்போல பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயரால் சாலைகள், மாவட்டம், பல்கலைக் கழகம் போன்றவை இருக்கின்ற இந்த நேரத்தில் அவருடைய பெருமையை நிலைநாட்டுகின்ற வகையில் அவருடைய இல்லங்களைச் செம்மைப்படுத்தி சிறப்பாக நடத்திக் கொண்டு இருக்கிறோம். முதலில் மக்களுடைய பிரச்சினையைக் கவனித்துவிட்டு,

[1997 ஏப்ரல் 26

ஒலி ஒளிக் காட்சியை அமைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 696, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**696—**

**வேதநாயகம்பிள்ளை இல்லத்தை நினைவகமாக்குதல்**

***6392— திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற முதல் தமிழ் நாவலை எழுதிய நாவல் தந்தை வேதநாயகம்பிள்ளை வாழ்ந்த மயிலாடுதுறை காந்தி சாலையில் உள்ள இல்லம் நினைவில்லமாக மாற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 697, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**697—**

**கலப்புத் திருமணத்தை ஊக்குவித்தல்**

***4689—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1997 ஏப்ரல் 26]

**(அ) மற்றும் (ஆ) :** கலப்புத் திருமணத்தை ஊக்குவிப்பதற்காக அரசினால் 1989-ஆம் ஆண்டு அளிக்கப்பட்டு வந்த திருமண உதவித்தொகை. ரூ. 5,000 என்பது கடந்த ஆண்டிலிருந்து ரூ. 10,000-ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான கேள்வி. தமிழகத்தின் இன்றைய சமூக வாழ்வில் கலப்புத் திருமணம் என்பது ஊக்குவிக்கப்பட வேண்டிய ஓர் அவசர அவசியமான கொள்கையாகும். சமூக நல்லிணக்கத்திற்கு மிக முக்கியமான கருவியாக இருக்கக்கூடிய இந்தக் கலப்புத் திருமணத்தை பொருத்தமான வடிவங்களில் ஊக்குவித்தால்தான் அது உண்மையிலேயே சமூக நல்லிணக்கத்திற்கு உதவும். எனவே, மாநில அரசு வேலைவாய்ப்பில், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, முன்னுரிமை கிடைக்கும் என்பதை நடைமுறையில் உறுதிபடுத்துவதற்குரிய பரிசீலனையைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், சாதி வேறுபாடுகள் களையப்பட வேண்டும் என்பதற்காகவும், இந்தத் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே, 1968-லே நடைமுறைப்படுத்தப்பட்டது. அப்போது கலப்புத் திருமணத்தை ஊக்குவிப்பதற்காக, தங்க மெடல் பரிசு வழங்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டம் மாற்றப்பட்டு, கலப்புத் திருமணம் செய்து கொள்கின்ற தம்பதியர்களுக்கு 1,000 ரூபாய் ரொக்கப் பணமும், 4,000 ரூபாய்க்குத் தேசிய சேமிப்புப் பத்திரமுமாக ஆறு ஆண்டு காலத்திற்கு முதலீடு செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வந்தன. இந்தத் திட்டத்தின்படி கடந்த ஆண்டிலிருந்து அவர்களுக்குத் திருமணச் செலவிற்காக வழங்கப்படுகின்ற 1,000 ரூபாயை 3,000 ரூபாயாக உயர்த்தியும், தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படும் 4,000 ரூபாயை 7,000 ரூபாயாக உயர்த்தியும் வழங்கப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில், தாழ்த்தப்பட்ட இனத்தவர், பழங்குடியினத்தைச் சார்ந்தவர்கள், முன்னேறிய வகுப்பைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்து கொண்டால் இந்தத் திட்டம் பயன்படும் என்ற நிலை இருந்து வந்தது. அதன் பிற்பாடு,

[1997 ஏப்ரல் 26

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்து கொண்டாலும், மிகப் பிற்பட்டோர் இனத்தைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்து கொண்டாலும் அவர்களுக்கும் இந்தத் திட்டம் மூலம் பயன்கள் வழங்கப்பட்டு வந்தன. அதற்கடுத்தாற்போல், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின வகுப்புகளைச் சார்ந்தவர்கள் முன்னேறிய வகுப்புகளைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்து கொண்டாலும் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்துகொண்டாலும், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைத் திருமணம் செய்து கொன்டாலும் பயன்கள் அளிக்கலாம் என்று இருந்ததற்கு மாறுதலாக, முன்னேறிய வகுப்பைச் சார்ந்தவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்து கொண்டாலும், இத்திட்டத்தின் மூலம் பயன் கிடைக்கும் என்ற வகையிலும் முன்னேறிய வகுப்பைச் சார்ந்தவர்கள், வேறு வேறு இனத்தைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்து கொண்டாலும், இந்தத் திட்டம் மூலம் பயன் அளிக்கப்படும் என்ற வகையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலைவாய்ப்பிலே அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஏராளமான விண்ணப்பங்கள், வேலைவாய்ப்பிலே முன்னுரிமை தர வேண்டும் என்று கேட்டு எங்களுக்கு வந்திருக்கின்றன. அதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசியபின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. என். சுப்பிரமணி.

**திரு. பி. என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணத்தில் பிறக்கும் பிள்ளைகளுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குவதில் சிக்கல் உள்ளது. உயர்ந்த சாதியில் மணமகனும், தாழ்த்தப்பட்ட வகுப்பில் மணமகளுமாக உள்ளவர்களின் பிள்ளைகளுக்கு, தாழ்த்தப்பட்டோர் என சாதிச் சான்றிதழ் வழங்கப்படுமா? அதே நேரத்தில், கடவுள்கள்கூட கலப்பு மணம் செய்துகொண்டு, எல்லோரும் ஓர் இனம் என்று நாட்டிற்கு அறிவித்துள்ளார்கள். குறிப்பாக, முருகப் பெருமானும், வெங்கடாஜலபதியும்கூட கலப்பு மணம் செய்துள்ளார்கள். அதை, நாடகத்தில், பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் மூலம் பாடல்களாகப் பாடியுள்ளார்கள். அந்த இரண்டு பாட்டுகளையும் இங்கே சொல்லி விடுகிறேன்.



1997 ஏப்ரல் 26]

"திருத்தணி மலை மீதினில் வாழும்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. என் சுப்பிரமணி, பாட்டெல்லாம் சொல்லக்கூடாது. நீங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். திரு. பி.என். சுப்பிரமணி உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முருகப் பெருமானைப் பற்றியும், வெங்கடேசப் பெருமாளைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு வாரிசு எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடுவதிலே பிரச்சினை எழவில்லை. ஆனால், இங்கே கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு வாரிசு இருக்கின்ற காரணத்தால் இந்தப் பிரச்சினை எழுகிறது. இதிலே, நீதிமன்றத்திலேகூட ஒரு வழக்குக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதையொட்டியும் பெற்றோர் எந்த இனத்தில் தன்னுடைய பிள்ளைகளுக்குச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அப்படி வழங்கலாமா என்றும் அரசு ஆலோசித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு நிதி கொடுப்பதை 4,000 ரூபாயிலிருந்து 7,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த 7,000 ரூபாய்க்குப் பதிலாக கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு 25,000 ரூபாய் கொடுத்தால், அந்தக் கலப்புத் திருமணம் புரட்சிகரமாக நடைபெறும். மேலும் அந்தப் பணத்தை ஒரு சிறுசேமிப்புக் கணக்கில் போடுவதற்கும், அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கும் முன்வந்தால் நலமாக இருக்கும். அதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முதல் தான் 4,000 ரூபாய்க்குத் தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்படுவது 7,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது. வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்குவதற்காக, நான் ஏற்கெனவே அறிவித்தபடி மாண்புமிகு

[1997 ஏப்ரல் 26

முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் பேரவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்பெறுகிறது.

வினா எண் 698, திரு. கொ. வி. நன்னன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**698—**

### மலைவாழ் மக்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்

***3158—திரு. கொ. வி. நன்னன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மலைவாழ் மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்படும் காலதாமதத்தைத் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மலைவாழ் மக்களுக்கு விரைந்து சாதிச் சான்றிதழ்கள் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில், காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு, அந்தக் காலக்கெடுவிற்குள் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டுமென்று பல்வேறு காலகட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**திரு. கொ. வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி உலகம் தெரியாமலும், உலகப் பொது அறிவு இல்லாமலும், காட்டுப் பூச்சிகளாக வாழ்கின்ற மலைவாழ் மக்களின் மாணவ மாணவியர்கள் உரிய காலத்தில் பள்ளிகளில் சேருவதற்கும், அரசு விடுதிகளில் தங்கிப் படிப்பதற்கும், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் மற்றும் வேறு தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கும் சான்றிதழ்கள் உரிய காலத்தில் கிடைக்காததால் அவர்களுக்கு மிக மிகச் சிரமமும், காலதாமதமும் ஏற்படுகின்றது. எனவே, அந்தப் பொன்னான காலமும், நேரமும் வீணாகி, விரயமாவதைத் தடுக்கவும், அவர்களுடைய பணிகள்



1997 ஏப்ரல் 26]

செவ்வனே நிறைவேறும் வகையிலும், சாதிச் சான்றிதழ்களை உடனுக்குடன் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் வெளி உலகம் தெரியாதவர்களாகவும், பொது அறிவு இல்லாதவர்களாகவும், காட்டுப் பூச்சிகளாகவும் வாழ்ந்து வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அந்த மக்கள் காட்டுப் பூச்சிகளாக இருந்தாலும் சரி, நாட்டுப் பூச்சிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் பொது அறிவு பெறுவதற்கும், வாழ்க்கையில் முன்னேறுவதற்கும், சாதிச் சான்றிதழ்களைப் பெற்று வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறுவதற்கும் இந்த அரசு பல்வேறு காலகட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிய ஆணையிட்டுள்ளது. அதே நேரத்தில் வருவாய்த் துறை ஆணையரும் அறிவுறுத்தப்பட்டுள்ளார். வருவாய் துறை நிர்வாக ஆணையர் மூலமாகவும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், சாதிச் சான்றிதழ் வழங்கும்போது, உள்ளூர் விசாரணையும் மேற்கொண்டு தீவிரமாக விசாரித்து உண்மையான சாதிச் சான்றிதழ்களை வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 699, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு சுற்றுலா துறை அமைச்சர்.

**699—**

### ஆலயங்களைச் சுற்றுலா விளக்க வரைபடங்களில் சேர்த்தல்

***3423—திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி, சூரியனார்கோவில், ராகுஸ்தலம், உப்பிலியப்பன்கோவில், பிரகத சுந்தர குஜாம்பிகை ஆகிய ஆலயங்களைச் சுற்றுலா விளக்க வரைபடத்தில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு சுற்றுலாத் துறை விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சுற்றுலாத் துறையினால் வெளியிடப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி மண்டல வரைபடத்தில் திருவிடைமருதூர், ஒப்பிலியப்பன்கோவில் சேர்க்கப்பட்டுள்ளது. இனி புதிதாகத் தயாரிக்கப்படவுள்ள வரைபடத்தில் ராகுஸ்தலம், திருநாகேசுவரத்தையும் சேர்க்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆலயங்களுக்குச் சென்று வர வசதியாக தங்கும் விடுதி, மையப் பகுதியான கும்பகோணத்தில் கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் சுற்றுலா விடுதி நடத்தப்பட்டு வருகிறது. இங்கு மேற்கொண்டு விடுதிகள் கட்டும் கருத்துரு தற்போது பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 700, திரு. இரா. மதிவாணன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**700—**

**மீனவர் அபிவிருத்தி நலத் திட்டங்களுக்கு கூடுதல் நிதி**

***1421—திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன் வளத் துறைக்கு ஒதுக்கப்படும் பெரும்பான்மையான நிதி, நிர்வாகச் செலவினங்களுக்குச் சென்றுவிடுவதால், மீனவர் அபிவிருத்தி நலத் திட்டங்கள் முழுமையான அளவில் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மீன் வளத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் பெரும்பான்மையான பகுதி மீனவர் அபிவிருத்தி நலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்துச் செலவிடப்படுகிறது. சென்ற



ஆண்டு (1995-96) வரவு-செலவு மற்றும் இதர திட்டங்களுக்காக ரூ. 29.46 கோடி ஒதுக்கப்பட்டது. கடந்த ஆண்டைக் காட்டிலும் நடப்பு நிதியாண்டில் இதற்காக 3.30 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 442 ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியில் கிராமங்களில் வாழ்கின்ற, கடல் தொழில் செய்து வரும் மீனவர்களுக்கு, மீனவர் நலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து கட்டுமரம், வலை ஆகியவைகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டைவிட இந்த நிதியாண்டில் கட்டுமரம், வலை மற்றும் வெளியேயும், உள்ளேயும் பொருத்தப்படும் இயந்திரங்களுக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் எண்கள் 683 மற்றும் 684 வேறொரு நாளில் எடுத்துக் கொள்ளப்பெறும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

**சேலம் மற்றும் இராஜாஜி மாவட்டங்களில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் போலிப் பயணச் சீட்டுகள் புழக்கம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.ஆர். சுந்தரம் மற்றும் திரு. இ. கணேசன் ஆகியோர் பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று என்னிடம் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. இ. கணேசன் அவர்களை அழைக்கிறேன். தீர்மானத்தை மட்டும் சொல்ல வேண்டும்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மற்றும் இராஜாஜி மாவட்டங்களில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் போலிப் பயணச் சீட்டுகள் புழக்கத்தில் உள்ளது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

*16-3-97* நாளிட்ட தினமலர் நாளிதழில் அண்ணா போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகளில் போலி பயணச் சீட்டுகள் புழக்கத்தில் இருப்பதாகவும் டி.என்27/எண் 0149 என்ற அண்ணா போக்குவரத்துக் கழகப பேருந்தில் (வழித்தடம் எண் 54) 12-3-97 அன்று இரவு 8 மணிக்கு அயோத்தியாப் பட்டினத்திலிருந்து சேலத்திற்கு பயணம் செய்த 10 பயணிகளுக்கு ரூ. 1.50 மதிப்புள்ள எம்.ஒய்.14502 என்ற ஒரே எண் கொண்ட 10 டிக்கட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாகச் செய்தி வெளியிடப்பட்டது. இந்தச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் பேருந்தில் நடத்துனராகப் பணிபுரிந்த திரு. ஆர். குணசேகரனிடம் விசாரித்ததில் பொய்யான ஒரு தகவலின்பேரில் தினமலர் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கக் கூடும் என்பது விசாரணையில் தெரிய வருகிறது.

மேற்கண்ட சம்பவம் தொடர்பாக 17-3-97, 18-3-97, 19-3-97 ஆகிய தினங்களில் அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. 19-3-97 அன்று குற்ற எண் 123/97-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 464, 468 மற்றும் 469-ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணை முடிவின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

*முற்பகல் 10-35*

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். விவா அறிக்கையிலே உள்ளதைப் போல, நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்



குறிப்பிடுவதைப் போல, 'வேலியே பயிரை மேய்ந்த கதையாக', முன்னாள் அ.இ.அ.தி.மு.க.வினர் போக்குவரத்துக் கழகங்களிலே கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கு மேலே ஊழல் செய்திருக்கிறார்கள். அதே வழியிலே, அண்ணா போக்குவரத்துக் கழகத்தில், உதிரி பாகங்கள் வாங்குவதிலே 2 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்திருக்கிறது. இந்த நிலையிலே ஏ.டி.சி.யிலே, ஒரே கலரில் போலி டிக்கெட் அச்சடித்து விநியோகம் செய்யப்பட்டிருப்பதாக ஒரு வதந்தியை இந்த நாட்டு மக்களுக்கு 'தினமலர்' பத்திரிகை வாயிலாகப் பரப்பியதாக அறிகிறேன். அப்படியிருந்தால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். அப்படியில்லையென்றால இந்த வதந்தியைக் கிளப்பியவர்கள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16-3-1997-ஆம் நாளிட்ட 'தினமலர்' பத்திரிகையில் 'சேலம் ஏ.டி.சி.யில் ஒரே நெம்பரில் பல டிக்கெட்டுகள்' என்ற தலைப்பிட்டு 14502 என்ற எண் கொண்ட 10 டிக்கெட்டுகள் படத்தைப் பத்திரிகையிலே அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் பத்திரிகையைப் பார்த்தவுடன் விசாரணை நடத்த வேண்டும் என்று துறைக்கு ஆணையிடப்பட்டு, அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்தப் போக்குவரத்துக் கழகத்தில் பணி செய்து கொண்டிருக்கின்ற 2 நடத்துனர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக, குணசேகரன் என்ற நடத்துனர்மீது குற்றம் சுமத்தப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு, தங்கரத்தினம் என்ற மற்றொரு பணியாளர் 'தினமலர்' பத்திரிகைக்கு இந்தப் புகாரை அனுப்பியிருக்கலாம் என்று விசாரணையில் தெரிய வந்ததாக, துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஒரே டிக்கெட்டை 10 ஜெராக்ஸ் நகல் எடுத்து அதை அப்படியே அனுப்பியிருப்பதாகத்தான் சொல்கிறார்கள். 'தினமலர்' பத்திரிகையிலே வந்த படம்கூட இங்கேயிருக்கிறது.

*('தினமலர்' பத்திரிகையைக் காண்பித்தார்)*

ஒரே நெம்பரில் இருக்கிறது. ஒரே டிக்கெட்டை 10 முறை ஜெராக்ஸ் நகல் எடுத்து, இணைத்து படம் போடப்பட்டுள்ளது. இதனுடைய நகலை வைத்து ஒரே நெம்பரில் 10 டிக்கெட் விற்கப்படுவதாகப் புகார் செய்திருக்கிறார்கள் என்று துறையினர் கூறினார்கள். அப்படியே

'தினமலர்' பத்திரிகைக்கும் அனுப்பியிருக்கிறார்கள். 'தினமலர்' பத்திரிகை நிறுவனத்திடம் விசாரித்ததில், ஒரே எண் கொண்ட 10 டிக்கெட்டுகளின் ஒரிஜினல் இருக்கிறதா என்று கேட்டபோது, அப்படியில்லை. இந்தப் படத்தைத்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே ஜெராக்ஸ் எடுத்த பிரதிகளைத்தான் கொடுத்திருக்கிறார் என்பது விசாரணையில் தெரியவந்தது. தங்கரத்தினம்மேல் காவல் துறையிலே புகாரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையும் இதை விசாரணை செய்து கொண்டிருக்கிறது. விசாரணை நடத்துவதற்கு முன்பே, தங்கரத்தினம் கோர்ட்டிலே சரணடைந்திருக்கிறார். தற்போது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டு நடத்துனர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையால் கிளப்பி விடப்பட்ட வதந்தி. இந்த அரசைப் பொறுத்தவரையில், அப்படி ஏதேனும் சிறு தவறுகள் நடந்திருக்குமென்று சொன்னால், அதற்கு யார் பொறுப்பாக இருந்தாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்கும். மேலும் இதுகுறித்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### உரிமைக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமைக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, பேரவைத் துணைத் தலைவர், அவை உரிமைக் குழுவின் தலைவர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள்மீது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள். திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. ஆர். சொக்கர் ஆகியோர் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினை மீதான உரிமைக் குழுவின் இரு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. ஒழுங்குப் பிரச்சினை

### உரிமைக் குழு அறிக்கை மீது

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களை மதுரை விமான நிலையத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கையிலே டிபேட் கிடையாது.



Poing of Order இருந்தால், அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) Point of Order இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** அது தொடர்பாக உரிமைக் குழு விசாரித்தபோது நான் ஒரு முறைகூட அழைக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும்கூட, உரிமைக் குழு 'திரு. சொக்கர் அவர்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு, திரு. தாமரைக்கனி ஆதாரமற்ற இவ்வாறான ஒரு கூற்றை, பொறுப்பற்ற முறையில் பேரவையில் தெரிவித்தார் என்று குழு கருதுகிறது. அவர்கள் வருங்காலத்திலாவது இத்தகைய தவறான நடவடிக்கைகளில்....'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் நீங்கள் படிக்கக்கூடாது. (குறுக்கீடு) You are misusing this. Your point of order is that you have not been called. Please sit-down. உங்களைக் கூப்பிடத் தேவையிருந்தால் கூப்பிட்டிருப்பார்கள். உங்களைக் கூப்பிடத் தேவையில்லாமலேயே உங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்புச் சொன்னதாக நீங்கள் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) மேலும் இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது.?

**திரு. ஆர். சொக்கர்:** ஒரு நிமிடம். ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு (குறுக்கீடு) Otherwise, I may be misunderstood.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்ல வேண்டும்.?

**திரு. ஆர். சொக்கர்:** எனக்குக் கூடுதலாக ஒரு நிமிடம் கொடுத்தால் தெளிவுபடுத்த முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திற்காகச் சொல்லவில்லை. Procedure-க்காகச் சொல்கிறேன்.

*முற்பகல் 10 -40*

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, procedure-இல்தான்: Point of order raise பண்ணிவிட்டு, எதற்காக raise பண்ணினேன், என்ன முடிக்கிறேன் என்று தெரிந்தால்தானே, I will not be misunderstood.?

[1997 ஏப்ரல் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. You kindly forget. நீங்கள் ஒரு point of order-ஐ raise பண்ணியிருக்கிறீர்கள். 'என்னை அழைக்கவில்லை' என்ற point of order-ஐ raise பண்ணியிருக்கிறீர்கள். எல்லாக் குழுக்களும் அறிக்கைகள் அளிக்கின்றன. ஒவ்வொரு குழுத் தலைவரும் அறிக்கை அளித்த பின்னர், அந்த அறிக்கையின் மீது பேச அனுமதிப்பதற்கு விதியிலே இடமில்லை. அது மரபு கிடையாது

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order-ஐச் சொல்லிவிட்டேன். குழுவிற்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 26]

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனி நீதிமன்றங்கள் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்". எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1986-87 மற்றும் 1987-88-அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1986-87 மற்றும் 1987-88-ஆம் ஆண்டுகளுக்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1986-87-ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை @ இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு, 1986-87-ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1986-87-ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப்பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாமென்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கேற்ப, 1986-87-ஆம் ஆண்டு மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், தற்போது தாக்கல் செய்யப்படுகின்றன. இம்மிகைச் செலவு, மொத்தம் 23.15 கோடி ரூபாயாகும். மேற்சொன்ன ஆண்டில், "மாவட்ட நிர்வாகம்", "மருத்துவம்", "பொதுச் சுகாதாரம்", "பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்", "பொதுப்பணிகள்-கட்டடங்கள்", "இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்" மற்றும் "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பவைகளின்கீழ் பெருமளவில் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

3. அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படியின் கூடுதல் தவணைத் தொகை வழங்கியது, கருணைத் தொகை வழங்கியது ஆகியவை "மாவட்ட நிர்வாகம்" என்பதன்கீழ் மிகைச் செலவுக்குக் காரணமாகும். கிராமப் பணியாளர்களுக்கு அதிகரித்த வீதத்தில் மதிப்பூதியம் மற்றும் அகவிலைப்படி வழங்கியது, மின்சார வாரியத்திற்கு அதிகரித்த வீதத்தில் மின்கட்டணம் வழங்கியது, உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகரித்த வீதத்தில் சொத்துவரி வழங்கியது ஆகியவையும் மிகைச் செலவுக்குக் காரணமாகும்.

---

@198 ஆம் பக்கத்தில் அச்சிட்டு வைக்கப்பட்டுள்ளது.



முற்பகல் 10-45

4. தனி நபர் குழுவின் பரிந்துரையின் பேரில் சம்பள வீதங்களை மாற்றியமைத்ததாலும் கூடுதலாக அகவிலைப்படி, கருணைத் தொகை வழங்கியதாலும், சாதனங்கள், மருந்துகள் ஆகியவற்றை வழங்கியது தொடர்பாக நிலுவையாக இருந்த பட்டிகளுக்குத் தொகை கொடுத்துத் தீர்த்ததாலும், "மருத்துவம்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

5. தடுப்பூசி மருந்துகள், கருத்தடைச் சாதனங்கள் ஆகியவற்றை வழங்கியதற்கான செலவை மாநில கணக்குத் துறைத் தலைவர் சரிக்கட்டியது, இயக்க ஊர்திகள் வாங்கியது, மருந்துகளின் விலை அதிகரித்தது, அகவிலைப்படியின் கூடுதல் தவணையும், கருணைத் தொகையும் வழங்கியது, கூடுதல் சுகாதாரத் துணை நிலையங்களின் பணியாளரமைப்புச் செலவுகள் ஆகியவை "பொதுச் சுகாதாரம்" என்பதன்கீழ் மிகைச் செலவுக்கான காரணங்களாகும்.

6. பணியாளர்களுக்குரிய சம்பளம், படிகள் ஆகியவை அதிகரித்தது, மாணவரில்லத்தில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுப் பொருள் கட்டணங்களின் வீதங்கள் அதிகரித்தது, தகுதியுள்ள இனங்கள் அனைத்திலும் படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் கொடுத்தது, மாணவர் இல்லங்களுக்கு வாடகை நிலுவை சரிக்கட்டியது ஆகியவையே "பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டதற்குக் காரணங்களாகும்.

7. செலவினங்களைத் தவறாக வகைப்படுத்தியதாலும், தொழில்நுட்பக் கல்வித் துறையின் செலவினத்தை இக்கோரிக்கையின்கீழ் வகைப்படுத்தியதாலும் "பொதுப்பணிகள்-கட்டடங்கள்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

8. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம் ஆகியவற்றின்கீழ் வருவாய் வசூல் மிகவும் அதிகரித்ததன் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட தொகைகள் அதிகரித்தது, "இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்" என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டதற்குக் காரணமாகும்.

9. தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக்கு மேல் கடன் அனுமதிக்கப்பட்டதே "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பதன்கீழ் மிகைச் செலவுக்கு முக்கிய காரணமாகும்.

10. 1986-87 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டுகிறேன்.

அடுத்து, 1987-88 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை @ இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு, 1987-88 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1987-88 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாமென்று பொதுக்கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கேற்ப, 1987-88 ஆம் ஆண்டு மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், தற்போது தாக்கல் செய்யப்படுகின்றன. இம்மிகைச் செலவு மொத்தம் 22.65 கோடி ரூபாயாகும். மேற்சொன்ன ஆண்டில், "கல்வி", "மருத்துவம்", "பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்" மற்றும் "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பவையின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

3. ஆசிரியர்கள் மற்றும் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு அகவிலைப்படியின் கூடுதல் தவணை, கருணைத் தொகை வழங்கியது, பள்ளிகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்களை வழங்கியது தொடர்பான போக்குவரத்துக் கட்டணங்கள் ஆகியவை

@ 199 ஆம் பக்கத்தில் அச்சிட்டு வைக்கப்பட்டுள்ளது.



"கல்வி" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளதற்குக் காரணங்களாகும்.

4. பணியாளர்களுக்கு அகவிலைப்படியின் கூடுதல் தொகை வழங்கியது, அதிகரித்த வீதங்களில் கருணைத் தொகை வழங்கியது, 1987-88 ஆம் ஆண்டில் சில கூடுதல் பணியாளர்களை நியமித்தது, அதிகரித்த வீதங்களில் படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் வழங்கியது, உயரிய நவீன சாதனங்களுக்கு குறிப்பிட்ட காலந்தோறும் சீர்செய்யும் பணிக்கான கட்டணங்கள் வழங்கியது ஆகியவை "மருத்துவம்" என்பதன்கீழ் மிகைச் செலவிற்கான காரணங்களாகும்.

5. அகவிலைப்படியின் கூடுதல் தவணைத் தொகை, கருணைத் தொகை ஆகியவற்றை வழங்கியது, மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்புதவித் தொகை தொடர்பான செலவு அதிகரித்தது, அனுமதிக்கப்பட்ட செலவிற்கும் சாட்டிய செலவிற்கும் இடையில் செலவைத் தவறாக வகைப்பாடு செய்தது ஆகியவையே "பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்" என்பதன்கீழ் ஏற்பட்ட மிகைச செலவிற்கான முக்கிய காரணங்களாகும்.

6. தேசிய அனல் மின் நிறுவனத்திற்கும், கோல் இந்தியா நிறுவனத்திற்கும் தமிழ்நாடு மின்வாரியம் செலுத்த வேண்டிய நிலுவைகள் தொடர்பாக, மத்திய நிதியுதவியில் மாநில அரசிற்கு ஒதுக்கப்பட்ட தொகை தொடர்பாக மைய அரசு கோரிய பற்றுத் தொகையைச் சரிக்கட்டியது, மோட்டார் வண்டிகள் வாங்குவதற்காக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் முன்பணங்களின் உச்சவரம்பு அதிகரிக்கப்பட்டதன்பேரில் செலவு அதிகரித்ததும் "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பதன்கீழ் ஏற்பட்ட மிகைச் செலவிற்கான காரணமாகும்.

7. 1987-88-ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டுகிறேன்.

வணக்கம்.

194.. ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

**1986-87-ஆம் ஆண்டிற்கான "மிகைச் செலவிற்கான" மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு- | |
| 6. பத்திரப் பதிவு | 5,43,185 |
| 11. மாவட்ட நிர்வாகம் | 89,72,218 |
| 14. சிறைச்சாலைகள் | 30,85,400 |
| 18. மருத்துவம் | 76,43,043 |
| 19. பொதுச் சுகாதாரம் | 2,10,86,338 |
| 25. சிடீயகோனா | 1,61,615 |
| 31. ஆதிதிராவிடர் - பழங்குடியினர் முதலியோர் நலன் | 1,50,06,815 |
| 32. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் | 37,90,509 |
| 33. வீட்டு வசதி | 3,26,643 |
| 37. பொதுப் பணிகள் - கட்டடங்கள் | 1,71,98,422 |
| 39. சாலைகளும் பாலங்களும் | 52,24,475 |
| 43. பல்வகை | 58,64,785 |
| 46. இழப்பீடும் ஒதுக்கீடுகளும் | 99,04,522 |
| மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | 9,88,07,970 |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்— | |
| 59. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 13,26,20,415 |
| பெரு மொத்தம் | 23,14,28,385 |



196.. ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

**1987-88-ஆம் ஆண்டிற்கான "மிகைச் செலவிற்கான" மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு— | |
| 8. தேர்தல்கள் | 30,45,860 |
| 11. மாவட்ட நிர்வாகம் | 63,70,284 |
| 17. கல்வி | 12,84,06,996 |
| 18. மருத்துவம் | 4,55,42,967 |
| 21. மீனளம் | 22,96,727 |
| 31. ஆதிதிராவிடர் - பழங்குடியினர் முதலியோர் நலன் | 1,25,81,359 |
| 37. பொதுப் பணிகள் - கட்டடங்கள் | 42,93,860 |
| மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | 20,25,38,053 |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்— | |
| 59. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 2,39,29,944 |
| பெரு மொத்தம் | 22,64,67,997 |

முற்பகல் 10-50

## 7. அறிவிப்புகள்

### (அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1986-87 மற்றும் 1987-88

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இப்பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய 1986-87 மற்றும் 1987-88-ஆம் ஆண்டுகளுக்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள்.

[பேரவைத் தலைவர்] [1997 ஏப்ரல் 26

இந்த மானியக் கோரிக்கைகள் 28-4-1997 அன்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் உரிய நிதியொதுக்கச் சட்டமுன்வடிவுகள் பேரவையில் அறிமுகம் செய்யப்படும். பின்னர் அச்சட்டமுன்வடிவுகள் 29-4-1997-ஆம் நாளன்று விவாதமின்றி ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்படும்.

## 8. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

(ஆ) கோரிக்கை எண் 42 - பல்வகை

(இ) கோரிக்கை எண் 61 - பல்வகை மூலதனச் செலவு.

(ஈ) கோரிக்கை எண் 62 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

(உ) கோரிக்கை எண் 7 - மாநிலச் சட்டமன்றம்.

(ஊ) கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்.

### (அ) கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். மாண்புமிகு அவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 1307,90,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2596, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள கோவில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற கிராம



பூசாரிகளுக்குக் குறைந்தபட்சம் ரூ. 750 ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1307,90,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2601, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1307,90,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2599, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1307,90,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2623, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "60 வயதுக்கு மேற்பட்ட நிலமற்ற விவசாயத் தொழிலாளர் ஆண், பெண் இருபாலாருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1307,90,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2604, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '12 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய கல்லூரி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1307,90,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2614, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இந்திய சுதந்திரப் போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த தியாகிகள் குடும்பத்தாருக்கு வழங்கப்படும் ஓய்வூதியங்களும் பிற சலுகைகளும் அதிகப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1307,90,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2622, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1307,90,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2608, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கூட்டுறவுத் துறையில் பணியாற்றி, பதவி நீக்கம் செய்யப்பட்டு இருந்தாலும், அவர்களுக்கும் பணிக்கால அடிப்படையில் ஓய்வு ஊதியம் கொடுக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1307,90,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

## (ஆ) கோரிக்கை எண் 42 - பல்வகை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 42 - பல்வகை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வகை பற்றிய 42-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.647,53,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2636, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ரூ. 3 கோடி சிறப்பு நிதி உடனே வழங்கி வேலூர் நகரில் உள்ள கானாறுகளைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 647,53,96,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2638, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 647,53,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2639, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 647,53,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2625, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 647,53,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத தீர்மானம் எண் 2629, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எடப்பாடி நகரிலுள்ள பஸ் நிலையத்தைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 647,53,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2627, திரு. ஜி. நிஜாமுதீன்.



**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 647,53,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

### (இ) கோரிக்கை எண் 61 - பல்வகை மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 61 - பல்வகை மூலதனச் செலவு. மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 438,50,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2792, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர், சத்துவாச்சாரி ஆகிய இடங்களிலும், மலையடிவாரத்தில் வீடுகட்டி வாழ்பவர்களுக்குக் குடிசைமாற்று வாரியத்தின் மூலம், ரோடு, கழிவுநீர்க் கால்வாய், குடிநீர், தெருவிளக்கு வசதிகளைச் செய்து கொடுத்து பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 438,50,63,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2796, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.438,50,63,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2795, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.438,50,63,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2801, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.438,50,63,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2790, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், எடப்பாடியில் அமைந்துள்ள துணை மின் நிலையம் 110 கே.வி.யாக இருப்பதை நகரில் தொழில்வளம் பெருகத் தேவையான மின் இணைப்புக் கிடைக்க வசதியாக 230 கே.வி. துணை மின்



நிலையமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து ' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.438,50,63,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

## (ஏ) கோரிக்கை எண் 62

### மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 62—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 402,42,08,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2809, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலைக்கு ரூ. 5 கோடி அரசு முன்பணம் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.402,42,08,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2808, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.402,42,08,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2816, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.402,42,08,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2802, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரத்தில் புஞ்சை நிலம் மட்டும் வைத்துள்ள சிறு விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் அதிக அளவில் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.402,42,08,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (உ) கோரிக்கை எண் — 7 மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 7, மாநிலச் சட்டமன்றம் . மாண்புமிகு அவை முன்னவர்.



முற்பகல் 10-55

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.6,69,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1715, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சில மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் ரூ. 10,000 சம்பளம் வழங்குவது போல் தமிழகத்திலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,69,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1732, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,69,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1713, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,69,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1694, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,69,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2846, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி மக்களைச் சந்திக்கவும், குறைபாடுகளை அறியவும், அரசு அலுவலகங்களுக்குச் சென்று வரவும்' வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,69,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1736, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களின் உபயோகத்திற்காக வாகனம் கொடுத்து ஒரு குறிப்பிட்ட வாடகை வசூலிப்பது போல, தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்காகச் சில வாகனங்கள் வாங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.



"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,69,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1685, திரு. ஜி. நிஜா'முதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தபால் கட்டணம் சுமார் 30 சதவிகிதம் முதல் 100 சதவிகிதம் வரை இவ்வாண்டு உயர்த்தப்பட்டுள்ளபடியால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அஞ்சல் படியை உயர்த்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,69,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1699, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநிலச் சட்டமன்றத்திற்கு ஒரு புதிய சட்டமன்றக் கட்டிடம், புத்தக சாலை, உணவு விடுதி போன்றவைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,69,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

## (ஊ) கோரிக்கை எண் 8 — தேர்தல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 8, தேர்தல்கள். மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தேர்தல்கள் பற்றிய 8-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.6,40,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1755, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் விடுபட்டுப் போனவர்களுக்கு வாக்காளர்களின் புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டை உடனே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,40,19,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1747, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,40,19,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1748, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,40,19,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத்தீர்மானம் எண் 1847, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்ட அளவில் — தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள— தேசிய/மாநிலக் கட்சிக்காரரின் பிரதிநிதிகள் உள்ளிட்ட நிலையான திட்ட அமலாக்கக் கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,40,19,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2849, திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் நடைபெறும் தேர்தலில் வேட்பாளர்களின் அதிக அளவு செலவுகளைக் கட்டுப்படுத்த தேர்தல் ஆணையத்துக்குக் குறிப்பிட்ட தொகை செலுத்தி அனைத்து வேட்பாளர்களுக்கும் வாகன, விளம்பர, பிரச்சாரச் செலவுகளை ஒரே அளவில் செய்வதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,40,19,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1766, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரத்திலுள்ள விவசாயக் கூலி ஆட்கள் வேலை தேடி அண்டை மாவட்டங்களுக்குச் சென்றுவிடுவதால் அவர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டைக்கான புகைப்படம் அறுவடைக் காலம் கடந்து தனியாக ஒரு நாளில் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,40,19,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1758, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உடல் ஊனமுற்றவர்கள் தபால் மூலம் ஓட்டுப்போட வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,40,19,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின் கடைசி நாள். பேரவை விதி 185 (3)-ன் படி விவாதமும் பதிலுரையும் பிற்பகல் 1-30 மணிக்கு முடிந்து மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இன்று விவாதத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மிகச் சுருக்கமாகப் பேசி, இந்த விவாதத்திற்குப் பதில் அளிப்பதற்கு மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், பல்வகை, பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும், மாநிலச் சட்டமன்றம், மற்றும் தேர்தல்கள் ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் @உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களைத் தெரிவித்த

@ 299 முதல் 366 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் 1 முதல் 5 ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



பின்னர் என்னுடைய பதில் உரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 மாண்புமிகு உறுப்பினர்கள் பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். கட்டாயமாக 1-00 மணி அளவில் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் உரை அளிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். இதை மனதில் கொண்டு உறுப்பினர்கள் தங்கள் பேச்சை அமைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் துவக்கி வைக்க திரு. கே. மணிவர்மா அவர்களை அழைக்கிறேன்.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைபதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வானாபுரம் புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாகத் தரம் உயர்த்தித் தந்தமைக்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், பல்வகை, மாநிலச் சட்டமன்றம், தேர்தல்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சட்டமன்றத் தொகுதிக்கு திட்டப் பணிகளை நிறைவேற்றுகின்ற வகையிலே 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்து, அதனை அடுத்த ஆண்டு 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களே, சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 40 நாட்களுக்கு மேலாக, நடைபெற்றுவருகின்ற இந்தக் கூட்டத் தொடரில் நாட்டு மக்களுக்காகப் பல்வேறு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்துள்ளோம். இன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவைப்படுகின்ற பல்வேறு கோரிக்கைகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும் நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதைப்போல மாதம் ரூ.10,000-ஐ ஊதியமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக ஒரு மாதத்திற்கு ரூ.3000/- வரையிலே டெலிபோன் பில்லுக்குப் பணத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, ரூ.10,000 கொடுத்தால்தான், நிச்சயமாகப் பணிகளை நாங்கள் முழுமையாகச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேண்டுமானால் ஒரு ஆயிரம் ரூபாயைக் குறைத்துக்கொண்டு ரூ.9000-ஆவது அவசியம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே ஒரு பெரிய ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். சட்டமன்றத் தொகுதிக்குத் தேவைப்படுகின்ற திட்டப் பணிகளையும் மக்களுக்குத் தேவைப்படுகின்ற பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றவில்லையென்றால், தொகுதிப் பக்கம் நாங்கள் செல்ல முடியாது. அதுபோன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவைப்படுகிற கோரிக்கைகளையும், சம்பளம் போன்ற அனைத்தையும் நீங்கள் கொடுக்கவில்லையென்றால், நாங்கள் வீட்டிற்குச் செல்ல முடியாத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இன்று பல்வேறு கோரிக்கைகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரயில்வே கட்டணப் படியாக ரூ.10,000 கொடுக்கிறார்கள். கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு வரவேண்டுமானால் ரூ.2,000-க்கு மேல் செலவாகின்றது. சாதாரணமாக இரயில் கட்டணமாக ரூ. 20,000/-ஐ சட்டமன்ற உறுப்பினர்கள் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரயில் கட்டணமாக ரூ. 25,000-ஐ வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தனியாக ஒரு அறை அமைத்து ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற அலுவலகத்தில், உதவியாளர்கள், டைப்பிஸ்டுகள் மற்றும் டெலிபோன் போன்ற வசதிகளுக்கும் அனுமதி கொடுத்தால்தான், மக்களுடைய பிரச்சினையையும், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற திட்டங்களையும் நாங்கள் நிறைவேற்ற முடியும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



சட்டமன்ற உறுப்பினர்கள் கார் இல்லாமல் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றத் தொகுதி சுமார் 90 கி.மீ. அளவிலே அல்லது 100 கி.மீ. அளவிலே விரிந்து இருப்பதால் சட்டமன்றத் தொகுதி முழுமையும் நல்லமுறையிலே சுற்றுப்பயணம் செய்து மக்களைச் சந்தித்து, மக்கள் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கார் வாங்குவதற்கு முழுமையான பணத்தினை நீங்கள் கொடுக்க முடியவில்லையென்றாலும், வட்டியில்லாக் கடனாக ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ரூ.5 இலட்சத்தைக் கொடுங்கள். மாதா மாதம் நாங்கள் தவணை முறையிலே திருப்பிச் செலுத்தி விடுகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களிலே இந்த அளவிற்குச் செய்து கொண்டிருக்கிறார்கள் எனபதையும் தங்கள் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், உதவியாளர்கள் வைத்துக்கொள்ளவதற்கென மாதம் ரூ.1500 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொகுதி தலைமையிடத்தில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ரூ. 5 இலட்சம் என்ற அளவிலே ஒரு கட்டடத்தைக் கட்டி அந்த அலுவலகத்திலே நிரந்தரமாக ஊழியர்களை நியமனம் செய்து சட்டமன்ற உறுப்பினர்களிடம் மக்கள் மனுக்கள் கொடுக்கவும், மற்ற பிரச்சினைகள் குறித்து அணுகவும் ஏதுவாக ஓர் அலுவலகத்தை தலைமையிடத்திலேயே ஏற்படுத்தித் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் கலந்துகொள்கிறபோது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருக்கு அருகிலேயே ஒரு இருக்கை அமைத்து, ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுடைய கேள்விகளுக்கும் பதில் அளிக்கின்ற வகையிலே வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதிப் பிரச்சினைகளை ஆரம்பத்திலிருந்து அனைத்தையும் கம்ப்யூட்டர் மூலம் feed செய்வதற்கு வசதியாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கம்ப்யூட்டர் வாங்கித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் தொகுதி மக்களைச் சந்திக்கச் செல்லுகின்றபோது, எங்களுடன் உள்ளாட்சித்துறை, பொதுப் பணித் துறை, மின்சாரத் துறை, நெடுஞ்சாலைத் துறை, மருத்துவத் துறைகளின் உயர் அதிகாரிகளும் சேர்ந்து வந்து, மக்களுடைய பிரச்சினைகளை

அவர்களும் கவனித்து, அம்மக்களுக்குத் தேவையான பணிகளைச் செய்வதற்கு ஏதுவாக, அந்த அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியுள்ள அறைகளில் தொலைக்காட்சிப் பெட்டி வைப்பதாகக் கடந்த இரண்டு, மூன்று, மாதங்களுக்கு முன்னாலேயே சொல்லப்பட்டது. ஆனால், இன்றுவரையில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படவில்லை. மாலை நேரங்களில் உறுப்பினர்கள் தங்கள் அலுவல்களை முடித்துவிட்டு ஓய்வாக இருக்கும்போது, வெளியிலே சென்று சுற்றாமல் இருப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுடைய அறையிலே தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத் தரும்படி மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும். இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

சட்டமன்ற உறுப்பினர்கள் கார் வாங்குவதற்கு நீங்கள் அவசியம் ரூபாய் 5 இலட்சம் வட்டி இல்லாத கடன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாதாமாதம ஒழுங்காக நாங்கள் தவணைத் தொகையைச் செலுத்தி விடுகின்றோம்.

சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியூர்களுக்குச் செல்லும்போது அங்கே தங்கவேண்டிய நிலை ஏற்படும்பொழுது, தமிழ்நாடு ஓட்டலில் அவர்கள் இலவசமாகத் தங்குவதற்கு நீங்கள் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிச்சயமாக இலவச வீட்டு மனை இரண்டொரு மாதத்திற்குள் கொடுக்கவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் தூய்மையாகவும், புனிதமாகவும் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இதை உங்களிடத்திலே தெரிவிக்கிறேன்.........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.



**திரு. கே. மணிவர்மா:** எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற உறுப்பினர்கள் மட்டுமல்லாது, ஆளுங்கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும் கூட இதைப் பெரிய அளவில் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதிப் பிரச்சினையை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியென்றால், சீக்கிரம் கருத்தை மட்டும் சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. கே. மணிவர்மா:** முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தண்டராம்பட்டு தொகுதியில் நாரையூர், விசுவன்தாங்கல் ஊராட்சி, கனர்பாளையம், மெய்யல் ஊராட்சி துரிஞ்சாபுரம், சதாக்குப்பம், பண்டிதப்பட்டு ஊராட்சி, தொண்டமானூர், குவந்தை, பெரியதண்டா, மேட்டுப்பாளையம், தச்சம்பட்டு ஊராட்சி, புதூர் ஆகிய கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படவில்லை. இக்கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, வி.கே. புதூர், பெரியகளப்பாடி, கோவிந்தராஜம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ஆர். ஆர். சீனிவாசன்.

**திரு. ஏ. ஆர். ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இதுவரை எத்தனையோ வரவு-செலவுத் திட்டங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டங்களிலே இதுபோன்ற ஓர் அரிய வரவு-செலவுத் திட்டத்தை, அனைத்துத் தரப்பினரும் வரவேற்கக்கூடிய, அனைத்து ஏடுகளும் போற்றக்கூடிய வரவு-செலவுத் திட்டத்தை இந்த மாமன்றம் கண்டிருக்காது எனப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

கடந்த 60 ஆண்டு காலமாய் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்ற, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் வழியிலும், பேரறிஞர் அண்ணா வழியிலும் நின்று, அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் தானைத் தலைவர், தமிழினக் காவலர் டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த வரவு-செலவுத் திட்டம் தமிழக வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஓர் அரிய பொக்கிஷமாகும். முதல்வரின் செயல், சிந்தனை இரண்டுமே தமிழக மக்களின் முன்னேற்றத்தையே சுற்றிச் சுற்றி வருகிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

ஓய்வூதியங்களும் ஏனைய சலுகைகளும் என்ற தலைப்பின்கீழ், நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்டு, அந்நிய ஆட்சியை அகற்ற அரும்பாடுபட்டு, இந்த மண்ணின் விடுதலைக்காகத் தன் இன்னுயிரை இழந்த வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுகளுக்கும் சிவகங்கைச் சீமையின் சிலர்கள் மருதுபாண்டி சகோதரர்கள் வாரிசுதாரர்களுக்கும் ஓய்வூதியத் தொகையினை ரூ. 300-லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தி, வறுமையில் வாடும் அவர்களுடைய வாரிசுதாரர்களின் வாழ்வில் ஒளியூட்டிய தலைவர் கலைஞர் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று கருதுகிறேன். அந்தச் சரித்திர நாயகர்களின் குடும்பத்திற்கு வழங்கியது போலவே, இந்த இருபதாம் நூற்றாண்டில் உலக உத்தமர் காந்தியாரோடு பழகி, அஞ்சா நெஞ்சன், வங்கத்துச் சிங்கம் என்று உலகத்தாரால அழைக்கப்படும் நேதாஜி அவர்களின் இந்திய தேசிய இராணுவத்தில் பணிபுரிந்த தியாகச் செம்மல்களுக்கும் அவர்தம் வாரிசுகளுக்கும் ஏகப்பட்ட சலுகைகளை வாரி வழங்கியுள்ளார்கள்.

முற்பகல் 11-10

குறிப்பாக ஓய்வூதியம் பெற்று வந்த தியாகிகளின் துணைவியாருக்கும் அவர்தம் வாரிசுகளுக்கும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவச போக்குவரத்து வசதி அளிக்கப்பட்டுள்ளது பெருமைக்குரிய விஷயமாகும். விடுதலைப் போராட்ட வாரிசுதாரர்களின் பிள்ளைகளுக்கும் தொழிற்கல்வியில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது எல்லோராலும் வரவேற்கக்கூடிய ஒன்று.

விடுதலைப் போராட்ட வீரர்களைக் கௌரவப்படுத்தும் வகையிலே, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலன் தான் என்பதை நிரூபிக்கும் வகையிலே நாட்டின் விடுதலைக்கு, அந்நியரின் ஆதிக்க சக்தியை எதிர்த்து வீரமரணம் எய்திய மாவீரன் சுந்தரலிங்கம் பெயரிலே



போக்குவரத்துக் கழகம் அமைத்து, 1-5-1997 முதல் அது எனது தொகுதியான விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் என்று ஆணையிட்டுள்ள கலைஞர் அவர்களுக்கு என் சார்பாகவும் என் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி கூறுகிறேன்.

அரசு ஊழியர்களுக்கு அள்ளித்தருவதில் கலைஞருக்கு நிகர் எவருமில்லை என அரசு அதிகாரிகளே மனமாரப் புகழ்வார்கள். 1970-லே இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தினார். பின் இரண்டாவது முறையாக ஆட்சிக்கட்டிலிலே அமர்ந்தபோது மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கினார்கள். தற்போது ஐந்தாவது ஊதியக் குழுவின் சிபாரிசுகளை அமல்படுத்த உள்ளார்கள்.

அரசு ஊழியர் ஓய்வுக்காலப் பணிக்கொடையாக 2 1/2 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்து, அதை 1-4-1995 முதல் வழங்கவும், முழு ஓய்வூதியம் பெற 33 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என்பதை 30 ஆண்டுகளாகக் குறைத்தும், ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது அரசு ஊழியர்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது.

பாரம்பரிய சித்த வைத்தியர்களுக்கு மாத ஓய்வூதியம் 150 ரூபாய் வழங்கப்படுவது ரூ. 500 ஆக உயர்த்தப்படும் என்று வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்குண்டான தொகையினை ஒதுக்கி முறையான அரசு ஆணை வெளியிட வேண்டும் என்று வேண்டுகிறேன்.

அரசு ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் செயல் படுவதுபோல, ஓய்வூதியதாரர்களுக்கும் அத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

அடுத்து, அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும், அரசு நிதி உதவி பெறும் பல்தொழில் பயிலகங்கள் பெரும்பாலும் நகர்ப்புறங்களில்தான் உள்ளன. பெரும்பாலும் அவற்றில் கிராமத்தில் வசிக்கும் மாணவர்களே பயில்கின்றனர். அந்த மாணவர்களுக்கு கல்வித் திறனை அதிகரிக்க அந்தப் பயிலகங்களின் வளர்ச்சிக்கு ரூ. 800 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது; மண்வளப் பாதுகாப்புப் பணிகளுக்காக ரூ. 465 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது; விவசாயிகள் மேம்பாட்டிற்காக நிலவள வங்கிகளுக்கு ரூ. 715 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை போன்றவற்றிற்கு எனது பாராட்டைத் தெரிவித்துக்கொண்டு அடுத்தபடியாக எனது தொகுதியிலுள்ள பல பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்வருகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், விருதுநகரில், கடந்த காலத் தேர்தலின்போது, பிரச்சாரத்திற்கு வரும்போது, மூன்று வாக்குறுதிகளை அளித்தார்கள். அதிலே இரண்டு வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டார்கள். ஒன்று மேம்பாலம் அமைக்கும் பணியாகும். எனது தொகுதியான விருதுநகர் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. கிழக்குப் பகுதி ஒரு பாதியாகவும், மேற்குப் பகுதி இன்னொரு பாதியாகவும் பிரிந்து நடுவில் இரயில்வே கேட் அமைந்துள்ளது. அந்த கேட் எந்த நேரமும் மூடியே கிடக்கின்றது. அதன் கிழக்குப் பகுதியிலே மாவட்டத்தினுடைய அரசுப் பொது மருத்துவமனை அமைந்துள்ளதால், சாத்தூர், சிவகாசி, இராஜபாளையம் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள், தேசிய நெடுஞ்சாலையில் ஆக்சிடன்ட்ஸ் ஏற்பட்டுவிட்டால், அவர்கள் அவசரமாக அந்த மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமானால், இரயில்வே கேட் மூடியே இருப்பதால், மரணம் அடைந்து விடுகிறார்கள். எனவே, ஒரு இரயில்வே மேம்பாலம் மிகவும் அத்தியாவசியமானது. விருதுநகரில், அந்தப் பாலத்தை அமைக்க, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில சேர்க்கப்பட்டு, அது இந்த ஆண்டே வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிநீர் வசதி மிகவும் அத்தியாவசியமானதாகும். விருதுநகர், மாவட்டத்தின் தலைநகராக இருப்பதால், அங்கே மக்கள் தொகை பெருகிக்கொண்டு வருவதால், எங்களுக்குக் குடிநீர் வசதி மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறது. எங்கள் பகுதியிலே ஆனைக்குட்டம் நீர்த்தேக்கம் என்று ஒன்று அமைந்துள்ளது. மழைக்காலங்களில் மழை நீர் பெருகி வந்தாலும், நீர் அந்த நீர்த்தேக்கத்தில் தங்குவது கிடையாது. ஏனென்றால் அதிலே உள்ள ஷட்டர்கள் பழுதடைந்துள்ளன. அதனால் தண்ணீர் வெளியே சென்றுவிடுகிறது. ஷட்டர்களைப் பழுது பார்த்து அந்த நீர்த்தேக்கத்தில் தண்ணீர் தங்கும் அளவுக்கு ஏற்பாடு செய்து, விருதுநகர் பகுதிக்குத் தேவையான குடிநீர் கிடைக்கும் அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அதைச் செப்பனிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விருதுநகர் யூனியனில் ரோசல்பட்டி என்ற ஒரு கிராமப் பஞ்சாயத்து உள்ளது. சுமார் 15,000 வாக்காளர்களையும், 45,000 பேர் என்ற மக்கள்தொகையையும் கொண்டுள்ளதாக அந்தக் கிராமப் பஞ்சாயத்து அமைந்துள்ளது. அங்கு போதுமான குடிநீர் வசதி செய்து



கொடுக்க முடியாமல் பஞ்சாயத்துத் தலைவர் கஷ்டப்படுகிறார். எனவே, அந்தப் பஞ்சாயத்திற்குக் குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

முற்பகல் 11-15

* **திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல்கள் மற்றும் மாநிலச் சட்டமன்றம் உள்ளிட்ட மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். தேர்தல்கள் என்று வருகின்றபோது இந்தியாவிலே இப்போது இருக்கக்கூடிய இந்தத் தேர்தல் முறை மாற்றப்பட்டு, தேர்தல் சீர்திருத்தம் என்ற வகையிலே, விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்ற முறையிலே தேர்தல் முறை இந்தியாவுக்கு வர வேண்டும் என்று மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று முதலிலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது சட்டமன்றத் தொகுதிகளில் 2 லட்சம் வாக்காளர்கள் இருக்கக்கூடிய தொகுதிகள்கூட இருக்கின்றன. ஒரு லட்சம் வாக்காளர்கள் இருந்தால் ஒரு சட்டமன்றத் தொகுதி என்ற முறையிலே சட்டமன்றத் தொகுதிகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். அதேபோல ஊராட்சி ஒன்றியங்கள் என்று வருகிறபோது, 50 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கக்கூடிய ஒரு பகுதியை ஊராட்சி ஒன்றியம் என்று அமைக்க வேண்டும். ஏனென்றால். மக்கள் எண்ணிக்கை கூடுவதனால் பல்வேறு சிரமங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, இந்த முறையில் தேர்தலில் மாற்றம் வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

அதேபோல இப்போது இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப் பொதுமக்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையிலே சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும். ஏனென்றால் கவுன்சில்கள் என்று வருகின்றபோது மக்கள் மத்தியிலே ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் வாக்குக் கேட்கச் செல்லாததினால் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில்களுக்கு மட்டும் அதிக வேலை ஒதுக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை வாக்காளர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையிலே அந்த

மாதிரியான ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவருவதற்கு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்; அல்லது நம்முடைய மாநில அரசே திருத்த முடியுமானால் அந்த மாதிரி திருத்தங்கள் கொண்டுவர வேண்டும்.

இதுபோக, தமிழ்நாடு சட்டப் பேரவையிலே தொடர்ந்து ஒட்டுமொத்த அலுவலக உதவியாளர்கள், தட்டச்சர்கள் இப்படிப் பணிபுரியக்கூடியவர்கள், சட்டமன்றம் நடைபெறுகிற நாட்களில் மட்டும் பணிபுரிந்துவிட்டு மற்ற நாட்களில் வேலை இல்லாமல் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதுபற்றி தொடர்ந்து ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத்திலேயும் வலியுறுத்தப்படுகிறது. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் தோழர் பழனிசாமி அவர்கள் இதை வலியுறுத்தி இருக்கிறார்கள். எனவே, அப்பேர்ப்பட்ட பணியாளர்களுக்கு நிரந்தரமான வேலை கிடைக்க வேண்டும். இந்தச் சட்டமன்ற அலுவல் நாட்கள் போக மற்ற நாட்களில் வேறு பிரிவுகளில் அவர்களுக்கு வேலை கொடுத்துவிட்டு, சட்டமன்றம் நடக்கும்போது மறுபடியும், இந்தச் சட்டமன்ற அலுவலைக் கவனிக்கக்கூடிய முறையிலே அப்பேர்ப்பட்ட வேலை முறைகள் ஒதுக்கப்பட வேண்டும். தலைமைச் செயலகத்தைப் பொறுத்தவரையிலே நிரந்தரம் இல்லாத தொழிலாளர்களே இல்லாத நிலையை உருவாக்க வேண்டும். இங்கே தலைமைச் செயலகத்திலேயே இந்த மாதிரி இருந்தால் தமிழ்நாட்டில் மற்ற பகுதிகளிலிலும் இவ்வாறு தொடரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, தலைமைச் செயலகத்தில் நிரந்தரமான தொழிலாளர்களை உருவாக்க வேண்டும்; எல்லோருக்கும் பணி நிரந்தரம் அளிக்க வேண்டும் என்ற முறையிலே உடனடியாக இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நிரந்தரம் இல்லா தொழிலாளர்களை நிரந்தரமாக்கக்கூடிய முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோக, சட்டமன்ற உறுப்பினர்கள் என்று வருகின்றபோது, எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள்; ஒவ்வொரு தொகுதியிலும் சட்டமன்ற உறுப்பினருக்கு ஓர் அலுவலகம் வேண்டும்; அலுவலகம் என்பது வெறும் கட்டடம் மட்டுமல்லாமல் அங்கே போன் வசதி, டைப்பிங் தெரிந்த கிளார்க் உள்ளிட்ட அந்த முறையிலே ஓர் அலுவலகம் வேண்டும். ஏனென்றால் ஏராளமான மக்கள், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்கள் ஒரே மனுவில் 15 அல்லது 20 கோரிக்கைகளை இணைத்துக் கொண்டுவருகிறார்கள். அதைப்



பூராவும் பிரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதுவதே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பெரிய வேலையாக இருப்பதால், அதற்காக டைப்பிங் தெரிந்த கிளார்க் உள்ளிட்ட ஓர் அலுவலகம் நல்ல முறையிலே அமைத்துத் தரப்பட வேண்டும்; அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோல டெலிபோன் கட்டணம் என்று வருகின்றபோது ரூ. 3 ஆயிரம் 4 ஆயிரத்துக்கு மேல் வந்துவிடுகிறது என்று சொன்னார்கள். அலுவலகத்திலே போன் இருக்கிறது; அதேமாதிரி வீட்டிலேயும் போன் இருக்கிறது. இதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் முறையாக அதிகாரிகளோடு தொடர்புகொள்வதற்குத்தான் பயன்படுத்துகிறார்கள். எனவே, டெலிபோன் கட்டணத்தை கண்டிப்பாக உயர்த்தி வழங்க வேண்டும்; அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையில் அறிவிக்க வேண்டும்.

அதேமாதிரி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவப்படி, பில் தந்தால்தான் கொடுக்கிறமாதிரி இருக்கிறது. ஏதாவது ஒரு தொகையை இவ்வளவுதான் மருத்துவப்படி என்று தொகையாக அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் டாக்டரிடம் போய் கையெழுத்து வாங்கி வந்து சேர்த்துக் கொடுப்பதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன; அது எங்களுக்கு மட்டும் அல்ல; அமைச்சர்களுக்கும் அந்தமாதிரிப் பிரச்சினைகள் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது). சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன். அதனால் தொகையாக அளிக்க வேண்டும்.

இப்போது இருக்கக்கூடிய விடுதி போதுமானதல்ல; புதிய விடுதி கட்டுவதாக அறிவித்து இருக்கிறீர்கள். அந்த வேலை எப்போது தொடங்கும், எப்போது முடியும் என்பதை அறிவிக்க வேண்டும்.

சட்டமன்றம் நடக்கக்கூடிய நாட்கள் போக மற்ற நாட்களிலேயும் இங்கே செயலகத்தில் டைப்பிஸ்ட்கள் இருக்க வேண்டும். மற்ற சமயங்களிலும் நாங்கள் அதிகாரிகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த முறையிலே டைப்பிஸ்ட்டுகள் வேண்டியிருக்கிறது.

அதேமாதிரி எல்லா நாள்களிலும் மினி பஸ் விடுதியிலிருந்து விடப்பட வேண்டும்.

முற்பகல் 11-20

இன்னும் ஒன்றே ஒன்றைச் சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன். முன்னாள் எம்.எல்.ஏக்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் போதுமானதல்ல. கேரளம் போன்ற மாநிலங்களில் கூடுதலாகக் கொடுக்கிறார்கள். ஓய்வூதியத்தை குறைந்தபட்சம் 3000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு மருத்துவப்படி 1000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதையும் 3000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் சென்ற ஆட்சியில் இருந்த எம்.எல்.ஏக்களுடைய வசதியை வைத்துப் பார்க்கக்கூடாது. ஏற்கெனவே தி.மு.க. ஆட்சியில் கூட எம்.எல்.ஏ.க்களாக இருந்து இன்றைக்கு எந்தவித வசதி வாய்ப்பும் இல்லாத ஏராளமான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வசதிகளை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கான ஓய்வூதியத்தை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும். முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய துணைவியாருக்கும் ஓய்வூதியத்தை நீட்டித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றம் கூடும் நாட்களில் இங்கே இருக்கக்கூடிய பணியாளர்களுக்கு ஓ.டி. அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அதைக் கொஞ்சம் கூடுதலாகக் கொடுக்க வேண்டும். மேலும் பிற்பகலில் சட்டமன்றம் கூடும் நாட்களில் பணியாளர்கள் இரவில் வீடு திரும்புவதற்கு வசதியாக இங்கேயிருந்தே பஸ் வசதி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே கிராம அலுவலர்களாக வேலை பார்த்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியிருக்கிறீர்கள். அதிலே எந்த வகையிலும் சேராமல் சுமார் 100 பேர் விடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரெ. செல்வம்.

**திரு. ரெ. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியங்கள், பல்வகை, பொதுத் தேர்தல்கள், சட்டமன்றம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்த மாமன்றத்தில் இரண்டாவது



முறையாக நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ** என்னுடைய தாய் தந்தையரை வணங்கி ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ** என்ற சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ரெ. செல்வம் :** எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையைத் தொடங்குகின்றேன். நமது மாநிலத்திலே சிறு சேமிப்புத் திட்டத்தின் வாயிலாகப் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை இன்றையதினம் அதிகமாகிக் கொண்டு வருகிறது. தனியார் நிதி நிறுவனங்களின் சுயரூபத்தையும் மோசடிகளையும் வெளிப்படுத்திய நடவடிக்கைகளின் காரணமாக, இன்றையதினம் நமது அரசின் சிறு சேமிப்புத் துறையில் சேமிக்க மக்கள் ஆர்வம் காட்டுவதால் மக்கள் அதிகப் பயன் பெறுகின்ற வகையில் பல திட்டங்கள் இன்றைக்குத் தீட்டப்பட்டிருக்கின்றன. உதாரணமாக சஞ்சாயிகா சேமிப்புத் திட்டம் என்பதை 1972-ஆம் ஆண்டு நமது அரசு அறிமுகப்படுத்தியது. மாணவ மாணவிகளுக்கு இளம் வயதில் சேமிக்கும் பழக்கத்தை வளர்க்கும் வண்ணம் இத்திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்மூலம் மாணவச் சமுதாயம் பெரிதும் பயனடைந்தது. அதேபோல் இன்றைக்கு தமிழக சஞ்சாயிகா சேமிப்புத் திட்டத்தின்கீழ் பள்ளி மாணவ மாணவிகளிடத்தில் சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில் பள்ளி ஆசிரியர்களுக்கும் தலைமையாசிரியர்களுக்கும் ஊக்கத்தொகை கொடுக்கும் பல திட்டங்களைத் தீட்டியிருப்பதால் நமது அரசை ஆசிரியப் பெருமக்களும் மற்றவர்களும் பாராட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அதேபோல், கழக அரசு காலத்திலே ஓய்வூதியம் முறையாகவும் அதிகப்படுத்தியும் கொடுத்து வருவதை மக்கள் பாராட்டுகிறார்கள். அரசுப் பணியாளர்களும் ஆசிரியர்களும் பணிக்குச் செல்லும்போது அரசுப் போக்குவரத்து வாகனங்களில் செல்வதற்கு இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். குறிப்பாகக் கிராமப்புற மக்களுக்கு இது மிகவும் பயன்படும் என்பது என் கருத்தாகும்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பணியில் இருக்கும்போது இறந்தவர்களின் குடும்பத்திற்குச் சேரவேண்டிய நன்மைகள் 30 நாட்களுக்குள் வழங்க வேண்டும். மத்திய அரசில் இதுபோல் 30 நாட்களுக்குள் வழங்கப்படுகிறது. அதைப்போல நமது அரசும் விரைவில் வழங்க வேண்டும். அவர்களுக்குச் சேரவேண்டிய அனைத்துத் தொகையும் சம்பந்தப்பட்ட குடும்பத்தாருக்குச் சேரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பணிக்காலத்தில் ஒருவர் இறந்தால் அவர்மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லாத போதும் கூட அவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வருடம், ஒன்றரை வருடம் என்று ஆகிறது. அரசு இதை விரைவுபடுத்தி அந்தக் குடும்பத்திற்கு ஓய்வூதியம் கொடுக்க முனைப்புடன் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் இறந்துவிட்டால், அதற்கான இறப்புச் சான்றுகள், வாரிசுச் சான்றிதழ் வாங்க மிகவும் காலதாமதம் ஆகிறது. மத்திய அரசுப் பணியாளர்களுக்கு Family Declaration Certificate-ஐ வைத்து வழங்குவதைப் போல அந்தக் கடிதத்தை வைத்தே அவர்களின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும். இப்படிச்செய்தால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். நமது ஆட்சிக்காலத்தில்தான் இதைச் செய்யமுடியும் என்று அவர்கள் எல்லாம் நம்புகிறார்கள்.

அதேபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விடுதியில் உள்ள அறைகளில் இரண்டு தினசரிப் பத்திரிகைகள் வழங்கப்படுகின்றன. அது நமது ஆட்சிக் காலத்தில்தான் வழங்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-25

அதைப்போல சட்டமன்ற விடுதியில் ஒவ்வொரு எம்.எல்.ஏ. க்கும் இரண்டு நாற்காலிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர் ஒருவரை நியமனம் செய்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும்படி நமது அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற விடுதியில் அறைகளில் கலர் டி.வி.யோ அல்லது சாதா டி.வி.யோ கொடுக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பென்ஷன் வாங்குகிறபோது அவர்கள் இறந்துவிட்டால் அவருடைய மனைவிக்கு, மற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப் போல அவர்கள் அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் இறந்தால் அவர்கள் மனைவிக்கோ, திருமணமாகாத 22 வயதுள்ள ஆண்களுக்கோ கொடுப்பதைப்போல இல்லாவிட்டாலும் கூட—முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பென்ஷன் பெறுகிறவர்கள் இறந்தால், அவருடைய சட்டமன்றப் பணியை சிறப்பாகச் செய்வதற்கு பாடுபட்ட, அவருக்கு உறுதுணையாக இருந்த அவரின் மனைவிக்கு பென்ஷன் கொடுக்க நமது அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று சீரும் சிறப்புமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய எல்லாத் தரப்பு மக்களும் சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிற விதத்தில் எந்தவிதமான தவறும் செய்யாது நல்லமுறையில் பணியாற்றுகிறார்கள் என்று பெருமிதத்தோடு பாராட்டுகிறார்கள். அவர்கள் பாராட்டை மேலும் பெறுவதற்கும், அவர்களுக்கு ஒத்துழைப்புகொடுப்பதற்கும் எங்களுக்குச் சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, இராஜஸ்தானில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் மாதத்திற்கு 12,000 ரூபாயும், இமாச்சல பிரதேசத்தில் 11,000 ரூபாயும், ஹரியானாவில் 10,000 ரூபாயும் வழங்குகிறார்கள். இதையெல்லாம் மனதில் கொண்டு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சம்பளத்தை உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தொலைபேசியில் பேசுகிற கட்டணமாக மாதத்திற்குக் குறைந்தபட்சம் 4,000 ரூபாய்க்குக் குறையாமல் வருகிறது. அதைத் தாங்கள் பரிசீலனை செய்து, அந்தக் கட்டணத்தையும் உயர்த்தித் தருமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் வாகன வசதி இல்லாத காரணத்தால் சட்டமன்றத் தொகுதிக்குச் சென்று மக்களுடையக் கோரிக்கைகளையும் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க இயலவில்லை. இதற்கு உதவியாக கார் வாங்கித் தருவதற்கு தமிழக அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது)

வருடம் ஒருமுறை ட்ரெயின் படியாக 10 ஆயிரம் ரூபாய் — 6 மாதத்திற்கு ஒரு முறை 5 ஆயிரம் ரூபாய் — என்று வழங்குவதை அதிகப்படுத்தி, 25 ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மணப்பாறைக்கு, பால் மானியக் கோரிக்கையில் பால் குளிரூட்டும் நிலையம் வரும் என்று அறிவித்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குளித்தலைத் தொகுதியில் குளித்தலையிலிருந்து முசிறி செல்லும் வழியில் உள்ள பாலத்திற்குச் சுங்க வரி வசூல் செய்கிறார்கள். அதிலே முறைகேடுகள் நடந்து, இன்றையதினம் உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர், உள்ளாட்சி மன்றம் அதை ஏலம் விடுவதா, நகராட்சி ஏலம் விடுவதா என்பது சர்ச்சைக்குரியப் பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு, பாலத்திற்கு வருடம் ஒருமுறை ஏலம் விட்டு வசூல் செய்யும் முறையை ரத்து செய்தால் குளித்தலையிலிருந்து முசிறி செல்லக்கூடிய பொது மக்கள், அரசு அலுவலர்கள், வாகன ஓட்டுநர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதால் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேச என்னை அழைத்த தங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடந்து முடிந்த உள்ளாட்சிமன்றத் தேர்தலைப் பற்றி நான் 1996-ஆம் ஆண்டு இந்த அவையில் பேசியபோது குறிப்பிட்டு இருந்தேன். விலைகொடுத்து வாங்குகிற, சோரம் போகிற, ஆள்தூக்கி தேர்தல் முறை இது என்று குறிப்பிட்டிருந்தேன்.

அடுக்கடுக்காக ஊழல் செய்வதற்கு அடுக்கு முறைத் தேர்தல் உதவுமே தவிர உப்புக்கும் மிளகாய்க்கும் இந்தத் தேர்தல் உதவாது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் பல ஊர்களில் இந்தத் தேர்தல் முறையற்றது என்று பேசியே இருக்கிறார்கள். அப்படியிருந்தும் இந்தத் தேர்தல், காலத்தின் கட்டாயத்தால் நடைபெற்றது. 5,000 வாக்குகளைப் பெற்று ஒன்றிய கவுன்சிலராக இருக்கக் கூடியவர்களுக்கு,



50,000 வாக்குகளைப் பெற்று மாவட்ட கவுன்சிலராக இருக்கக் கூடியவர்களுக்கு இன்னும் என்ன பதவி, என்ன அதிகாரம் என்று தெரியாமல் தள்ளாடிக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. தேவையற்ற, அவசியமற்ற, இந்தத் தேர்தல் முறையை மாற்றி, முன்பிருந்த முறையிலே தலைவரை, சேர்மனை மக்களே தேர்ந்தெடுக்க இந்த அரசு முழு முயற்சியோடு தகுந்த திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அதேபோல், வாக்குச் சாவடிகளுக்கு மூன்று கிலோமீட்டருக்கு மேலேயிருந்து வரக்கூடிய வாக்காளர்களை அரசு வாகனத்திலேயே அழைத்து வரவேண்டும். என்னுடைய தொகுதியான எடப்பாடியில் இருக்கக்கூடிய பொத்தாப்பாளையம் என்ற கிராமத்திலேயிருந்து வாக்களிக்க வேண்டுமானால் வாக்காளர்கள் ஐந்து கிலோமீட்டருக்கும் மேலே வரவேண்டியிருக்கிறது. அதேபோல, சித்தூர் பஞ்சாயத்திலே இருக்கக்கூடிய வாக்காளர்கள், முரசுப்பட்டி என்ற இடத்திற்கு ஏழு கிலோமீட்டர் தூரத்தைத் தாண்டி வரவேண்டியிருக்கிறது. அதேபோல முஸ்லீம் சமுதாயத்தினர் நிறைந்த ஆவணியூர்கோட்டை என்ற பகுதியிலே இருக்கக்கூடிய வாக்காளர்கள் அங்கிருக்கக்கூடிய பள்ளிக் கட்டடத்தில் வாக்களிக்காமல், ஆவணிப்பேரூருக்குக் கிட்டத்தட்ட ஐந்து கிலோமீட்டர் வரைக்கும் சென்று வாக்களிக்க வேண்டிய நிலை இருக்கிறது. வாக்காளர்கள் சுயமாக வாக்களிக்கக்கூடிய ஒரு நல்ல நிலையைக் கொண்டுவரவும், அந்தந்தப் பகுதிகளிலேயே வாக்களிப்பதற்கும் நம்முடைய அரசு முழு முயற்சியோடு பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிப் பேச விழைகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஊருக்குச் செல்வதற்கு ரயிலிலே பயணம் செய்ய வேண்டும். ஒரு ரயிலிலே இரண்டேயிரண்டு டிக்கெட்டுகள்தான் இருக்கின்றன. ஏன் இந்த முறை? இதுபற்றி நான் சென்ற ஆண்டே இந்த அவையிலே பேசியிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே ரயிலுக்குண்டான பதிவு அலுவலகம் இருக்கிறது. இரண்டேயிரண்டு டிக்கெட்டுகள்தான் என்றால், எங்கள் மாவட்டத்திலேயே கிட்டத்தட்ட 17 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதேபோல கோவை மாவட்டச் சட்டமன்ற

உறுப்பினர்கள், தருமபுரி மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய நாங்களெல்லாம் முந்தியடித்துக் கொண்டு டிக்கெட் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. சென்ற விடுமுறையின்போது நான் ஊருக்குச் செல்வதற்குப் பட்டபாடு இருக்கிறதே, அப்பப்பா! அது சொல்ல முடியாத அளவுக்குத் துயரமானது. இரண்டு டிக்கெட்டுகளையும் சகோதரி சுப்புலெட்சுமி அவர்களுடைய வீட்டுக்காரர் வாங்கிவிட்டார்கள். எங்களுக்கு டிக்கெட்டே கிடைக்கவில்லை. தொங்கிக் கொண்டு போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தப்பித்தால் போதும் என்பது மாதிரியான அவலநிலை ஏற்பட்டுவிட்டது. தயவு செய்து, சட்டமன்ற விடுதியிலே இருக்கின்ற அந்த அலுவலகம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு பெரிய உருவத்தை வைத்துக் கொண்டு எப்படி தொங்கிக் கொண்டு போனீர்கள்?

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுதான் விதி என்பது. (சிரிப்பு) ஆகையினாலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடமும், ரயில்வே இலாகாவிடமும் பேசி, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மனைவியையோ அல்லது ஒரு உதவியாளரையோ அழைத்துச் செல்ல முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). எத்தனை டிக்கெட்டுகள் கேட்டாலும், பகல் 12 மணிக்குள்ளாகவே கேட்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் டிக்கெட்டுகள் வழங்க நமது தமிழக அரசு முழு முயற்சியோடு மத்திய அரசிடம் பேசி, வாதாடி, வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கலைஞர் அவர்கள் 11 சட்டமன்றங்களிலே, ஒன்பது முறை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பழுத்த அரசியல்வாதி. அவர்களுக்குத் தெரியாமல் இந்தச் சட்ட திட்டங்களில் ஒரு இம்மியளவுகூட விடுபட்டிருக்காது. அவ்வளவு பழுத்த அரசியல்வாதி. அனைத்திலும் முன்னோடியாக இருக்கக்கூடிய தமிழகம், எம்.எல்.ஏ.-க்கள் சம்பளத்தில் மட்டும் 7-வது, 8-வது இடத்திலே இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதன் மீது சற்று கவனம் செலுத்த வேண்டும். இதைப்பற்றி சென்றக் கூட்டத் தொடரிலேகூட நான் பேசியிருக்கிறேன்.

மகாராஷ்டிராவிலே இருக்கக்கூடிய எம்.எல்.ஏ.-க்களின் சம்பளம்: ஊதியம் 1,500 ரூபாய், தொலைபேசிக் கட்டணம் 4,000 ரூபாய்,





உதவியாளர்படி 2,000 ரூபாய், இப்படி தபால்படி 1,000 ரூபாய், மொத்தம் 10,000 ரூபாய். அதேபோல அசாமிலே கிட்டத்தட்ட இருக்கக்கூடிய எம்.எல்.ஏ.-க்களுக்கு ஊதியம் 1,000 ரூபாய், தொலைபேசிப்படி 2,500 ரூபாய், தபால்படி 500 ரூபாய், தபால் கட்டணம் மற்றும் உதவியாளர்படி 2,000 ரூபாய். அதேபோல, இராஜஸ்தானில் இருக்கக்கூடிய எம்.எல்.ஏ.-க்களுக்கு ஊதியம் 2,000 ரூபாய், தொலைபேசிப்படி 1,800 ரூபாய், தொகுதிப்படி 5,000 ரூபாய், தபால்படி 625 ரூபாய். மத்தியப் பிரதேசத்தில், ஊதியம் 1,000 ரூபாய், தொலைபேசிப்படி 2,500 ரூபாய், தொகுதிப்படி 3,000 ரூபாய், மருத்துவப்படி 1,000 ரூபாய். ஆக மொத்தம் ரூ. 7,500 அதேபோல் நம்முடைய அண்டை மாநிலமான ஆந்திராவிலே மொத்தம் 7,500 ரூபாயும், கர்நாடகத்திலே 7,500 ரூபாயும் அளிக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் 6 ஆயிரம் ரூபாயை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். நேற்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுடையக் கருணையை இந்த அவை கண்டது; நாடு கண்டது. அத்தனைக் குறைபாடுகளையும் போக்க, வாரி வழங்கிய வள்ளலாகத் திகழ்ந்தார்கள். அந்த வகையிலே, நியாயமாகச் செயல்படக்கூடிய முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய குறைபாடுகளைத் தீர்த்து வைத்தால், இன்னும் சிறப்பாக தொகுதி மக்களுடைய தேவைகளை உற்சாகத்தோடு எடுத்துச்சொல்ல உதவியாக இருக்கும். இதைவிட்டால், நாங்கள் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலைக்குச் சென்று விடுவோம் என்பதைமட்டும் தங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11.35

சென்ற ஆண்டே கலர் டி.வி. ஒன்று விடுதியிலே வைக்கவேண்டும் என்று கேட்டு இருந்தேன். நிச்சயமாக வைத்து விடுவார்கள் என்று மிக ஆனந்தத்தோடு சென்றேன். ஓராண்டு ஆகிவிட்டது, இன்னும் வரவில்லை. இந்த மாதத்திலேயே எங்களுக்கு ஒரு கலர் டி.வி.யை உடனடியாக வழங்க வேண்டும்.

அடுத்தது, எங்களுக்குக் கொடுக்கக்கூடிய இந்த தினப்படி என்பது, இப்போது ஏறியிருக்கிற விலைவாசியிலே கட்டுப்படியாகவில்லை. ஆகையினாலே, நீங்கள் 150 ரூபாயை 200 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வெளி மாநிலங்களுக்குச் செல்லும்போது — நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் — சென்ற முறை எல்லாம் வெளி மாநிலத்திற்குச் சென்றால் நம்முடைய படியிலே 1½ மடங்கு கொடுப்பார்கள். ஆனால், இப்போது என்ன காரணத்தாலோ, வெளி மாநிலங்களுக்கு, டெல்லிக்குச் சென்றாலோ அல்லது அலுவல்கள் காரணமாக மற்ற மாநிலங்களுக்குச் சென்றாலோ இங்கு என்ன படியோ, அதேபடிதான் அங்கேயும்கூட வழங்கப்படுகிறது. அங்கு தங்குவதற்கு அதிகமான செலவு ஏற்படுகிறது. சாப்பாட்டுச் செலவு மிக அதிகமாக இருக்கின்றது. ஏன் இந்த முறையை மாற்றினீர்கள்? ஆகையினாலே, ஒரு மடங்காக இருக்கக்கூடிய இந்தப் படியை 2 மடங்காக வெளி மாநிலங்களுக்குச் செல்லும்போது மாற்றிக் கொடுக்கவேண்டும். இது நியாயமான கோரிக்கை என்பது நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

அதேபோல் கர்நாடக அரசு, சட்டமன்றம் கூடக்கூடிய நேரத்திலே அங்கே பணியாற்றக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 50 கார்களுக்கு மேலாக வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கார்களிலே பயணம் செய்துவிட்டு, கட்டணத்தைச் செலுத்தக்கூடிய ஒரு முறை அங்கே இருக்கிறது. அதேபோல், தமிழ்நாட்டிலும் செய்யவேண்டும். இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் மிகச் சிறப்பாகப் பேசி இருக்கிறார்கள். கார் வாங்குவதற்கு 5 லட்சம் ரூபாய் வரை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த அரசு கடனாக வழங்கவேண்டும்; வட்டியில்லாத கடனாக வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. துரை. (குறுக்கீடு) 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. உட்காருங்கள். (குறுக்கீடு) முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி ஏகெனவே பேசிவிட்டார்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இ. கணேசன்:** முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு வருடத்திலிருந்து 5 வருடம் வரை பணியாற்றினால், 800 ரூபாய் என்று இருக்கிறது. அதை மாற்றி, குறைந்தது 3 ஆயிரம் ரூபாயாவது அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 5 ஆண்டுகளுக்கு மேலே ஆகக்கூடிய ஒவ்வொரு ஆண்டுக்கும் 100 ரூபாய் என்று இருப்பதை மாற்றி 200 ரூபாயாகக் கொடுக்கவேண்டும். ஃபுல் பென்ஷன் என்பது 1500 ரூபாய் என்று இருக்கிறது. இது போதுமானதாக இல்லை. எனவே, தயவுசெய்து இதை 3 ஆயிரம் அல்லது 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தவேண்டும். கேரளாவிலே ஒரு சட்ட மசோதா தாக்கல் செய்திருக்கிறார்கள். ரூ. 5 ஆயிரம் வழங்கவேண்டும் என்று தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்த மசோதாவை நம்முடைய அரசு வாங்கி பரிசீலனை செய்து, அந்த அளவிற்கு வழங்க வேண்டும்.



முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களில், வயதானவர்களின் மருத்துவச் செலவிற்காக அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை, 2500 ரூபாய் அல்லது 3 ஆயிரம் ரூபாய் வரை வருடத்திற்கு வழங்க நீங்கள் ஆவன செய்யவேண்டும் என்று அன்போடு உங்களைக் கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. துரை.

**திரு. க. துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது தானைத் தலைவர், தமிழினத் தலைவர் முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவு, உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்றும் திருவெறும்பூர் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடையத் தொகுதிப் பிரச்சினையைக் கன்னிப் பேச்சாகப் பேசுகிறேன்.

ஊராட்சித் தத்துவம் உயிர் பெற்று எழுந்து ஊர்தோறும் உலவச் செய்த மக்கள் ஆட்சியின் மாண்புமிகு முதல்வர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலேயே மிகப் பெரிய தொகுதி திருவெறும்பூர் தொகுதி. இதில் 24 ஊராட்சிகளும், 3 பேரூராட்சிகளும் மற்றும் 12 மாநகராட்சி வார்டுகளும் அடங்கியுள்ளன.

அதுமட்டுமல்ல, ஆலைத் தொழிலாளர்கள் அதிகம்பேர் வசிக்கின்ற பகுதியும் இதுவாகும். "பெல்" தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை, பொன்மலை இரெயில்வே தொழிற்சாலை போன்ற மிகப் பெரிய, முக்கியமான தொழிற்சாலைகள் அமைந்துள்ளதும் என் தொகுதியில்தான். இத்தொகுதியில், பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, விரைவில் சாலைச் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறும், இதற்கு அரசு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்

[திரு. க. துரை] [1997 ஏப்ரல் 26

மிகவும் நலிந்த மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் வாழும் பகுதிகளில் சாக்கடை வசதிகள் குறைவாக உள்ளன. இப்பகுதி மக்களின் நலமான வாழ்வுக்கு உதவும் வகையில் சாக்கடை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை அரசு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக அரியமங்கலம் 7-வது மற்றும் 28-வது வார்டுகளில் வசிக்கும் அனைவரும் பீடி சுற்றும் ஏழைத் தொழிலாளர்கள். இவர்களுக்குப் பயன்படும் வகையில் பொதுக் கழிவறைகள் கட்டித் தரவேண்டும். இதற்கு அரசு ஆவன செய்து முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி - தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் வாகனங்களின் போக்குவரத்து அதிகமாக உள்ளது. குறிப்பாக, அரியமங்கலம் பால் பண்ணையிலிருந்து துவாக்குடி வரை செல்லும் சாலையில் மின் விளக்கு வசதி இல்லாததால் அடிக்கடி விபத்துக்கள் நிகழ்கின்றன. இதனால் மக்களின் உயிர்கள் பறிக்கப்படுவதுடன், விபத்து நேரத்தில் போக்குவரத்தும் பாதிக்கப்படுகின்றது. இந்த 7 கிலோ மீட்டர் தூரத்துக்கு நெடுஞ்சாலையின் மையத்தில் சோடியம் ஆவி விளக்கு வசதியை அரசு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இதே துவாக்குடியில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் 30 ஆயிரம் பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களோடு பேரூராட்சியைச் சேர்ந்த 20 ஆயிரம் பேர், ஆக மொத்தம் 50 ஆயிரம் பேர் சரியான குடிநீர் வசதி இல்லாமல் இருக்கிறார்கள். இவர்கள் 1 அல்லது 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து, 'சிட்கோ', 'பெல்' போன்ற தொழிற்சாலை எல்லைக்குள் நுழைந்து ஒரு குடம் தண்ணீருக்காக அல்லாட வேண்டியுள்ளது. சில நேரங்களில் இதுவும் கிடைப்பதில்லை. இக்குடிநீர்ப் பிரச்சினை கடந்த 15 ஆண்டுகாலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இப்போது இக்குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தீட்டி அதற்கான எஸ்டிமேட் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசு இத்திட்டத்திற்கு உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும். அப்போதுதான், இப்பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும். மின்னல் வேகத்தில் நடவடிக்கை எடுத்து இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தால் கல் உடைக்கும் ஏழைத் தொழிலாளர்களின் நெஞ்சம் குளிரும், மேலும் அவர்கள் மிக்க நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள்.



1997 ஏப்ரல் 26] [திரு. க. துரை]

திருவெறும்பூர் தொகுதியில் பாசனக் குளங்கள் உள்ளன. 15, 20 ஆண்டுகளாக இவைகள் தூர் வாரப்படாமல் கிடக்கின்றன. இவைகளைத் தூர் எடுத்துப் பராமரிக்கும் பணியையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் 25 ஆயிரம் பேர் வசிக்கிறார்கள். இங்கு ஒரு புறக்காவல் நிலையத்தை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதேபோன்று, 20 ஆயிரம் பேர் மக்கள்தொகை கொண்ட பாப்பாங்குறிச்சி காட்டூர் பகுதியில் ஒரு புறக்காவல் நிலையம் அமைக்கவும் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.45

அடுத்து 'பெல்' நிறுவனத்தில் பணிபுரியும் சொசைட்டி மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் (எல்.சி.எஸ்.) பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். இப்பகுதியில் அமைந்துள்ள சிறு தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதியை விரிவுபடுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன். 'பெல்' நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் காலம் சென்றவர்கள், பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுடைய வாரிசுக்கு 'பெல்' நிறுவனத்திலே வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். 'பெல்' நிறுவனத்தை நம்பி சுற்றியுள்ள சிறுதொழில் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கவும், 25,000 பேர் குடும்பங்கள் பயன்பெறும் வகையிலேயும் 'பெல்' நிறுவனத்தில் மின் உற்பத்திச் சாதனங்கள் தயார் செய்ய தமிழக அரசு முயற்சி எடுத்து, நலிவுற்ற குடும்பங்கள் நலம் பெற உதவ வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் ஒரு பகுதி 1½ லட்சம் மக்கட்தொகை அடங்கியது. எனது தொகுதி மக்கள் திருச்சியில் உள்ள தாலுக்கா அலுவலகத்திற்கு 30 கிலோ மீட்டர் தூரம் சென்றுவர வேண்டியிருப்பதால் மிகவும் அவதிப்படுகிறார்கள். எங்கள் பகுதியில், திருவெறும்பூரில் தாலுக்கா அலுவலகம் அமைத்துத்தர ஆவன செய்யும்படி அரசைக் கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. என். வல்லரசு.

***திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நாம் வீற்றிருக்கின்ற இந்த

[திரு. பி. என். வல்லரசு] [1997 ஏப்ரல் 26

தமிழக சட்டப் பேரவையானது ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இன்று வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மத்திய இராணுவத்திற்குச் சொந்தமான செயின்ட் ஜார்ஜ் கோட்டையில்தான் இந்தத்தமிழக சட்டசபை தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே தமிழக அரசுக்கு என்று தமிழக அரசுக்குச் சொந்தமான இடத்தில ஒரு புதிய கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் இந்தச் சட்டப் பேரவை என்று உருவானதோ, அன்றிலிருந்து இன்று வரை இந்தச் சட்டப் பேரவையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே மத்திய அரசுக்குச் சொந்தமான செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அமைந்திருக்கின்ற இந்தச் சட்டசபைக்குப் பதிலாக தமிழக அரசுக்குச் சொந்தமான ஒரு கட்டடத்தை - மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிய சட்டமன்றத்தை — உருவாக்க வேண்டுமென்று, சாதனை படைக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர், புதிய சாதனை படைக்கவேண்டும், புதிய வரலாறு படைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொது நிறுவனங்கள் குழுவின் சார்பில் நானும் சக சட்டமன்ற உறுப்பினர்களும் மும்பை, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களின் சட்டமன்றங்களைச் சுற்றிப் பார்வையிட்டபோது, அங்கே மும்பையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 10,000 மாதச் சம்பளமும், ராஜஸ்தானில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 12,000 மாதச் சம்பளமும் வழங்கப்படுவதைக் கண்டு நாங்கள் ஆச்சரியப்பட்டோம். எனவே தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் மும்பையில் வழங்கப்படுகின்ற அளவிற்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 10,000 மாதச் சம்பளம் வழங்க முற்பட வேண்டுமென்று நான் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அமைச்சர்களுக்கு சம்பளங்கள் யார் கேட்பது என்ற நிலை இருக்கின்றது. எனவே இன்றையதினம் இங்கே அமைச்சர்களாக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு ரூ. 15,000 மாதச் சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் மாதம் ஒரு ரூபாய் சம்பளம் வாங்குவதாக அறிவித்துவிட்டு, கோடி கோடியாக ஊழல் செய்துவிட்டார்கள். எனவே



1997 ஏப்ரல் 26] [திரு. பி. என். வல்லரசு]

நமது அமைச்சர்கள், மக்களுக்காகப் பாடுபடுகின்ற அமைச்சர்கள், மக்களுடைய பிரதிநிதிகள், பல இடங்கள் சென்று சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றவர்கள். எனவே தமிழக அமைச்சர் பெருமக்களுக்கு மாதம் ரூ. 15,000, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 10,000, மாதச் சம்பளம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர்கள், நான் உட்பட, ஏராளமான சட்டமன்ற உறுப்பினர்கள் பஸ்களில் சென்று கொண்டிருக்கிறோம். பலருக்குக் கார் இல்லாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே கார் வழங்கும் திட்டம் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 5 லட்சம் கடனாக, வட்டியில்லாக் கடனாக வழங்கி, அவர்கள் கார் வாங்குகின்ற அளவிற்கு வசதி வாய்ப்புக்களை உருவாக்கித் தரவேண்டும். வேண்டுமென்றால் மாதச் சம்பளத்திலிருந்து மாதத்திற்கு ரூ. 3,000 வரை பிடித்துக்கொள்ளலாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். எனவே அவர்களுக்குக் கார் அவசியம். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மக்களை அடிக்கடி சென்று பார்க்க வேண்டுமென்ற நிலை இருக்கின்ற காரணத்தாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்கு வரவில்லை என்று குறை சொல்லுகின்ற காரணம் இருப்பதாலும், கார் அவசியமாகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவைப்படுகின்ற காரணத்தினாலும், ரூ. 5 லட்சம் வட்டியில்லாக் கடனாக அரசு வழங்கி, மாதச் சம்பளத்தில் பிடித்துக்கொள்ள வேண்டுமாய் மீண்டும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

இன்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற மருத்துவப் படியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பல்வேறு சட்ட விதிகளைப் போடுகின்றார்கள். எனவே, மருத்துவப்படி நிரந்தரமாக அவர்களுக்குக் கிடைக்கின்ற அளவுக்கு அங்கே வசதி, வாய்ப்புகள் செய்து தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். தொகுதியினுடைய தலைநகரிலே - சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிரந்தர அலுவலகம் கட்டிக் கொடுக்க வேண்டும்-யார் சட்டமன்ற உறுப்பினராக வந்தாலும் பரவாயில்லை; தொகுதியினுடைய தலைநகரிலே-ஒரு நிரந்தரக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு,

பக்கத்திலே இருக்கிற கேரள மாநிலத்திலே ஓய்வூதியம் ரூ. 5,000 என்று வழங்கப்படுகிறது. எனவே, நமது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஓய்வூதியமாக ரூபாய் 5,000 வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எனில் அவர் ஒருவர் மட்டுமே பஸ் பாசில் செல்லலாம் என்ற நிலையிருக்கிறது. ஆனால், ஓய்வு பெற்ற பிறகுதான், வயதான காலத்திலேதான் அவர்களுக்கு உதவிக்கு ஆள் தேவைப்படுகிறது. எனவே, ஓய்வு பெற்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவரோடுகூட உதவி செய்வதற்கு அவரோடுகூட ஒருவர் செல்வதற்கும் ஆக மொத்தம் இரண்டு பேர் செல்வதற்கு பஸ் பாஸ்களைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சட்டமன்றம் சிலநேரம் கலைக்கப்படுவதால், ஒருசில காலகட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பதவி பறிபோய்விடுகிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்றாலே, அவர்கள் 5 வருட காலம் இருந்ததாக எண்ணி, அவர்களுக்கு வேண்டிய அனைத்துச் சலுகைகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உலகத் தலைவர் நேதாஜியால் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய இராணுவத்திலே பணியாற்றியவர்களுக்கும், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் ஓய்வூதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அன்றையதினம், பிரிட்டிஷ் பிரதமராக இருந்த அட்லி பிரபு அவர்கள் இந்தியாவிற்கு ஏன் சுதந்திரம் கொடுத்தோம் என்று அவருடைய வாழ்க்கை வரலாற்றில் எழுதி வைத்திருக்கிறார்கள். "இந்தியாவிற்கு ஏன் சுதந்திரம் கொடுத்தோம் என்றால் உலகத் தலைவர் நேதாஜியால் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய இராணுவம் 'டெல்லி சலோ' என்று கோஷமிட்டு, அன்றையதினம் படையெடுத்துவிட்ட காரணத்தினாலும், அதன் எதிரொலியாக சிப்பாய்க் கலகம் ஏற்பட்டுவிட்ட காரணத்தினாலும்தான் இந்தியாவிற்கு நாங்கள் சுதந்திரத்தைக் கொடுத்தோம்" என்று தன்னுடைய வாழ்க்கை வரலாற்றில் எழுதி வைத்திருக்கிறார். எனவே, இந்தியாவிற்குச் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த இந்திய தேசிய இராணுவத்திலே பணியாற்றியவர்களுக்கும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் மாதம் ரூ. 2,000 ஓய்வூதியமாக வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மருது சகோதரர்களுடைய வாரிசுகளுக்கும், கட்டபொம்மன் வாரிசுகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசு ஊழியர்கள் 3 லட்சத்து 70 ஆயிரம்



பேர் இன்று ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். கடைசி மாதம் அவர்கள் பெறுகின்ற சம்பளத்தில் 50 சதவிகிதத்தை ஓய்வூதியமாக அவர்களுக்கு வழங்குகின்ற நிலை இருக்கிறது. அதை 70 சதவிகிதமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் வாலண்டரி ரிடையர்மெண்ட், விருப்பு ஓய்வு பெற அவர்களுக்கு வசதியாக இருக்கும். எனவே, அவற்றை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, ஊராட்சி மன்றத்திலே இன்றையதினம் 4 அடுக்குத் தேர்தல் முறை இருக்கின்றது. அதை 3 அடுக்குத் தேர்தல் முறையாக மாற்றித்தர வேண்டும். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு நிலையைக் கொண்டுவர சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் கூட்டுகின்ற அந்த ஊராட்சி ஒன்றியக் கூட்டத்திலும், மாவட்ட ஊராட்சிக் கூட்டங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் அமரலாம் என்கின்ற நிலை இருக்கின்றதே தவிர, அவர்களுக்கு ஓட்டுப் போடுகின்ற உரிமையில்லை. ஆகவே, அவர்களுக்கு ஓட்டுப் போடுகின்ற நிலைமையை உருவாக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலே தனித் தொகுதி முறை இருக்கிறது. ஏழை, ஆதிதிராவிட, தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை உயர வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்டிருக்கிற தனித் தொகுதியை வரவேற்கிறேன். ஆனால் அந்தத் தனித் தொகுதிகளில் ஒரு தொகுதியே 10, 20, 25 வருடம் என்று தொடர்ந்து இருந்து வருகிறது. 5 வருடத்திற்கு ஒருமுறை, மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நமது மூத்த சட்டமன்ற உறுப்பினர், நிலக்கோட்டை தொகுதி உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் தன்னுடைய தொகுதியும் தனித் தொகுதி, தன்னுடைய தொகுதியில் இருக்கிற இரண்டு யூனியன்களும் தனித் தொகுதிகள். எனவே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்பே இல்லாமல் போய் விடுகிறது என்று அவர்களே தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 4 பேர் பேச இருக்கின்றார்கள். அவர்கள் பேசிக் கொள்வார்கள்.

**திரு. பி. என். வல்லரசு:** எனவே, தனித் தொகுதியை மாற்றியமைக்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வாய்ப்பு அளிக்கின்ற வகையிலே தனித் தொகுதியை 5 வருடத்திற்கு ஒருமுறை, மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனவே, அதற்குரிய வாய்ப்பை அரசு உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே ஒட்டுமொத்தப் பணியாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற அவர்களுடைய பணியை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியம் மற்றும் சட்டமன்றம், குறித்த மானியத்தில் பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல இடங்களில் அதிகாரிகள் செய்யக்கூடிய தவறுகளின் காரணமாக, அந்த ஓய்வூதியம் பெற வேண்டிய பயனாளிகள், ஓய்வூதியம் பெறாமல் துன்பப்படுகிறார்கள். உதாரணத்திற்கு என்.எல்.சி. மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த அம்புஜம் நரசிம்மன் அவர்கள், அவர்களுடைய ஆவணத்ினுடைய கடைசிப் பகுதி காணாமல் போய்விட்டது என்ற காரணத்தினால், வெறும் 375 ரூபாயை ஓய்வூதியமாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பிராவிடனட் பண்ட் போன்றவைகள்கூட இன்னும் கிடைக்கவில்லை. எனவே, அரசாங்கம் என்.எல்.சி. நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதியம் மற்றும் படிகள் எல்லாம் விரைவில் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

மேலும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் மிகக் குறைவாக இருக்கிறது. அதை 3,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதோடு, அவர்களுடைய மருத்துவப் படியையும் ஆயிரம் ரூபாய் என்று உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுடைய காலத்திற்குப் பிறகு, அவர்களுடைய மனைவிக்கு, மனைவி இல்லை என்று சொன்னால் வாரிசுக்கு, ஏழையாக இருந்தால் ஓய்வூதியம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர்களுடைய தொகுதியில் தாலுக்கா அலுவலகத்திலேயோ அல்லது ஆர்.டி.ஓ. அலுவலகத்திலேயோ அல்லது பி.டி.ஓ. அலுவலகத்திலேயோ வாய்ப்பு உள்ள இடங்களில், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு இருக்கக்கூடிய ஒரு அலுவலகம் போன்று ஒரு அலுவலகத்தைக் கொடுக்க வேண்டும். அதைவிட அதி முக்கியமான காரியம் என்னவென்றால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிச்சயமாக ஓர் உதவியாளர் வேண்டும். உதவியாளர் இல்லாமல் மிகவும் அவஸ்தைப் படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மற்ற அனைத்தையும்விட இதுதான் அவசியம் என்று நான் கருதுகிறேன். எனவே ஓர் உதவியாளர் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நேற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விருந்து அளித்தார்கள். இதையே சற்று விரிவாக்கி 'சட்டமன்ற உறுப்பினர்கள் தினம்' என்று ஒரு நாளை அறிவித்து அவர்களுக்கு விளையாட்டுப் போட்டி, நல்ல தேசிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக்கூடிய வகையில் தேசிய ஒருமைப்பாடு, பாரதப் பண்பாடு, நம்முடைய கலாச்சாரம் இதுபோன்ற தலைப்புகளில் கருத்தரங்கம் நடத்தி, ஒரு நாள் நிகழ்ச்சியாக அவைகளை அமைத்து அந்த நிகழ்ச்சிக்கு நல்ல மண்டபத்தை ஏற்பாடு செய்து, அங்கே விருந்து கொடுத்து, முடிந்தால் அவர்களுடைய குடும்பத்தினரையும்கூட அழைத்து வரக்கூடிய வகையில் 5 பேர்களை அழைத்து வரலாம் என்று சொல்லக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இதைச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தினமாக அறிவிக்க வேண்டும். எல்லோரும் எல்லா இடங்களிலும் 'Day' என்று கொண்டாடுகிறார்கள். அதுபோன்று 'M.L.A. Day' என்று இந்த நிகழ்ச்சியை அமைக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற இணையான ஊதியத்தை மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நமது சட்டமன்றத்தில் பணியாற்றக்கூடிய நிருபர்கள் மற்றும் நிருபர் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும்கூட பாராளுமன்றச் செயலகத்தில் பணிபுரியும் நிருபர்கள் மற்றும் நிருபர் பிரிவு அதிகாரிகளுக்கொத்த ஊதிய விகிதம் அளிக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

'வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு
வந்தே மாதரம்!
வந்தே மாதரம்!'

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. டி. தண்டபாணி.

**திரு. சி. டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சைத் துவக்குமுன் மானியக் கோரிக்கை 42-ல் சிறு சேமிப்பு என்ற தலைப்பில் போடப்பட்டு இருக்கக்கூடியவை பற்றி சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகின்றேன். சிறுசேமிப்பு அமைப்பு என்பது மத்திய சர்க்காரால் நிறுவப்பட்டு மாநில அரசு சிறுசேமிப்பு நிதிகளைத் திரட்டி மத்திய சர்க்கார் கையிலே கொடுக்கிறது. மத்திய சர்க்கார், திரட்டிய நிதியைப் பூராவும் மாநிலங்களுக்குக் கொடுக்காமல் 75% கடனாகக் கொடுக்கின்றது. இது எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும், அதேபோல ஒரு சிறப்பான எந்த ஒரு நாட்டிலேயும், ஒரு Federal set up இருக்கக்கூடிய எந்த ஒரு நாட்டிலேயும் இல்லாத முறை. எனவே இதை உடனடியாக மாற்றுவதற்கான முறையில் நம்முடைய தலைவர் அவர்கள் ராஜமன்னார் குழு அறிக்கையின் மூலமாகக் கேட்டுக் கொண்டிருந்தாலும்கூட, மீண்டும் இதை வலியுறுத்தி இங்கே வசூல் செய்யக்கூடிய சிறுசேமிப்புத் தொகை அத்தனையையும் மாநிலமே வைத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு முடிவை மத்திய சர்க்கார் எடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாமன்றத்தைப் பொறுத்தவரையில், இந்தியத் துணைக் கண்டத்தில் பணியாற்றக்கூடிய சிறப்பான மாமன்றங்களில் தமிழ்நாடு சட்டசபையும் ஒன்று என்பதை நாம் எல்லாம் அறிவோம். அதுவும் இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் ஒருசில காலம் தவிர, மிகவும் கண்ணியத்தோடும் கடமை உணர்வோடும் பணியாற்றி வந்து இருக்கிறார்கள் என்பதை நாம் எல்லாம் அறிவோம். இங்கே இருக்கக்கூடிய மன்ற உறுப்பினர்கள் மீண்டும் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு அவர்களுக்கு என்று சில வசதிகளைத் தந்தாக வேண்டும். இங்கேகூட அமைச்சர்கள் மீது சில குற்றச்சாட்டுக்கள் சொல்லப்பட்டன. முதல்வர் அவர்கள் மீதுகூட குற்றச்சாட்டு



சொல்லப்பட்டது. சொல்லப்படுகின்ற நேரத்தில் குற்றச்சாட்டுக்குரிய ஆதாரங்களை வைத்துத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச வேண்டுமே தவிர, ஆதாரங்களே இல்லாத நிலையில் பேசுவதை நாம் பார்க்கின்றோம். அதற்கு முக்கிய காரணம் இங்கே தேவைப்படுகின்ற விவரங்கள் நம்முடைய நூலகத்திலே கிடைப்பது இல்லை என்றுதான் எனக்குத் தெரிகின்றது. குறிப்பாக, சட்டமன்ற நூலகத்தைப் பொறுத்தவரையில், 20 ஆண்டுகளுக்கு முன்னாலே எவ்வளவு ஊழியர்கள் இருந்தார்களோ அதே ஊழியர்கள்தான் நம்முடைய தமிழ்நாடு சட்டமன்ற நூலகத்திலே இருக்கின்றார்கள். எனவே, ஊழியர்களை அங்கே அதிகமாக நியமித்து, அங்கே புத்தகங்கள் முறையாக அடுக்கப்பட்டு, Bibligraphy முறையாக அடிக்கப்பட்டு, அதை ஆசிரியருடைய பெயரிலோ அல்லது புத்தகங்களினுடைய தலைப்பின் பெயரிலோ வைத்திருந்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் அதைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

நண்பகல் 12-00

அதுமட்டுமல்லாமல், இங்கே வரக்கூடிய பத்திரிகைகள் முறையாக அங்கே வைக்கப்படவில்லை. அதற்கு ஆள் இல்லை. ஒரு 6 மாதத்திற்கு முன்னால், ஒரு வருடத்திற்கு முன்னாலே ஒரு செய்தி வந்தது. அதைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால் முடியவில்லை. அதற்கு நாடாளுமன்றத்திலே என்ன செய்கிறார்கள் என்றால், ஒரு கிளிப்பிங் சிஸ்டம் வைத்திருக்கிறார்கள். இந்த இந்தப் பொருள் என்று, அதிலே ஹோம் என்றாலும், எஜுகேஷன் என்றாலும், சயன்ஸ் என்றாலும், ஹெல்த் என்றாலும் தனித்தனியாக ஒரு முறை வைத்து, கிட்டத்தட்ட 60, 70 கிளிப்பிங்க்ஸ் வைத்திருக்கிறார்கள். 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம் பத்திரிகையிலே வந்த செய்திகள் பூராவுமே அதிலே இருக்கின்றது. அங்கே உறுப்பினர் பேச விரும்புகின்ற நேரத்தில், அவைகளைப் புரட்டிப் பார்த்துப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

இன்னொன்று. ஒரு உறுப்பினர் ஒரு விவாதத்திலே அவசரமாகப் பேச வேண்டும் என்று சொன்னால், நாளை அவர் பேசுகிறார் என்றால், நாடாளுமன்றத்திலே என்ன செய்யப்படுகிறது என்றால், இந்தப் பொருள் மீது நான் பேச விரும்புகிறேன், எனக்குச் சில விவரங்கள் தேவை, என்று சொன்னவுடனேயே அந்த விவரங்களையெல்லாம் — ரிசர்ச் செக்ஷன் என்ற ஒன்று இருக்கின்றது; ஆராய்ச்சிக் குழுவினர் — தொகுத்து இரவு 8 மணிக்குள்ளாக அந்த

[திரு. சி. டி. தண்டபாணி] [1997 ஏப்ரல் 26

உறுப்பினருடைய வீட்டிற்கு அனுப்பி விடுகிறார்கள். இதனால், அடுத்த நாள் காலையிலே அங்கே உறுப்பினர் சிறப்பாகப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலையை இங்கே உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கே பேசப்படுகின்ற பேச்சுக்கள் எப்பொழுது அச்சடிக்கப்பட்டு வருகிறது என்று யாருக்கும் தெரியாது. நாட்கள் அதிகம் ஆகிறது. நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்குப் பேசினால் இரவோடு இரவாக அந்தப் பேச்சுக்கள் அத்தனையும் அச்சடிக்கப்பட்டு, அடுத்த நாள் காலையிலே அதனுடைய சுருக்கம், 'சினாப்சிஸ்' ஒவ்வொரு உறுப்பினருக்கும் தரப்படுகிறது. எனவே, அந்த முறையை இங்கே உருவாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தச் சட்டமன்றத்தின் மூலமாகச் சில ஜர்னல்ஸ், நீங்கள் வெளியிட வேண்டும். இங்கே நம்முடைய உறுப்பினர்கள், அதேபோல் நம்முடைய முதல்வரவர்கள், நம்முடைய கல்வியமைச்சரவர்கள் சிறப்பான கருத்துக்களை இந்த மன்றத்திலே வழங்குகிறார்கள். இது தமிழ்நாட்டோடு, மீறிப் போனால் இந்தியாவோடு நின்று விடுகிறது. உலகம் பூராவும் தெரிய வேண்டுமென்று சொன்னால், நாம் தனியாகப் புத்தகங்கள் வெளியிட வேண்டும். ஜர்னல்ஸ் வெளியீடுகள் செய்ய வேண்டும். ஏனென்று கேட்டால், இந்த மாமன்றத்திலுள்ள நாம் இன்டர்நேஷனல் பார்லிமெண்ட்ரி குரூப் என்ற அதிலே உறுப்பினராக இருக்கக் கூடியவர்கள். எனவே, நம்முடைய புத்தகங்களையும் ஆங்கிலத்திலே அச்சடித்து நாம் வெளியிடுவதற்கு வகை இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கேயிருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, தமிழகத்திலே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேறு மாநில உறுப்பினர்களைவிட கோரிக்கைகள் நிரம்ப வருகின்றன. இந்தக் கோரிக்கைகளையெல்லாம் அமைச்சரிடத்தில், அதேநேரத்திலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே நேரடியாகக் கொண்டு போய்க் கொடுப்பது என்பது உள்ளபடியே சிரமமாக இருக்கிறது. அதற்குப் பதிலாக Notice Office என்ற அளவில் ஒன்று அமைக்கப்பட வேண்டும். நாடாளுமன்றத்திலே அதுபோன்று உண்டு. ஓர் அறை இருக்கிறது. எந்தவொரு கடிதமானாலும் அந்த அறையிலே கொண்டுபோய் அந்த அதிகாரியிடத்திலே கொடுத்தால், அந்த அதிகாரி சம்பந்தப்பட்ட



1997 ஏப்ரல் 26] [திரு. சி. டி. தண்டபாணி]

அமைச்சருக்குக் கொண்டு போய்க் கொடுத்து விடுகிறார். அல்லது நகரத்திலே இருக்கக்கூடிய எந்த அதிகாரியாக இருந்தாலும் அவரிடத்திலே கொண்டு போய்க் கொடுத்து விடுகிறார். எனவே, உறுப்பினருக்கும் சிரமம் தீர்கிறது; அமைச்சர்களுக்கும் சிரமம் குறைகிறது. நேரடியாக அமைச்சரிடத்திலே பார்த்துக் கொடுக்க வேண்டுமென்ற நிலை இல்லாமல் அது நேரடியாக வந்து விடுகிறது. எனவே, தயவு செய்து அதையும் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே இருக்கக்கூடிய கேன்டீன், பற்றிச் சொல்ல வேண்டுமானால் அது கேன்டீனா என்று எனக்கே தெரியவில்லை. கிராமத்திலே இருக்கக்கூடிய சாதாரண டீக்கடை கூட கொஞ்சம் சிறப்பாக இருக்கும். இங்கே இருக்கக்கூடிய நம்முடைய அன்பிற்குரிய நண்பர்கள், பத்திரிகை நிருபர்கள், அவர்கள் படக்கூடிய கஷ்டத்தையும் நான் பார்க்கிறேன். வழக்கமாகப் பத்திரிகை நிருபர்களும், அரசியல்வாதிகளும் ஒன்றாகச் சேரக் கூடாது என்பது உண்மை. ஆனாலும்கூட அப்படி அவர்களிடத்திலே சில கருத்துக்களைக் கேட்டுக் கொள்ளவும், சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்குமான ஒரு பெரிய இடமாக தயவுசெய்து ஒரு கேன்டீனை, ஒரு சிற்றுண்டி விடுதியை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்தில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கம்ப்யூட்டர் வழங்கப்பட்டு இருக்கின்றது. ஆகவே, தமிழிலே ஒரு கம்ப்யூட்டர், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் வழங்கப்பட வேண்டும். அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய சிரமங்களை நிச்சயமாகக் குறைக்கும் என்று நான் நினைக்கிறேன். அதுமட்டுமல்ல, நம்முடைய சட்டமன்றத்தில் பேசுவதற்குரிய வாய்ப்புக்கள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைவு. அப்படிச் சந்தர்ப்பம் கிடைத்தாலும், 5 நிமிடம், 10 நிமிடம் இருக்கிறபோது, தொகுதிப் பிரச்சினைகளையும் சொல்ல முடியவில்லை, பொதுப் பிரச்சினைகளையும் பேச முடியவில்லை. ஆகவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஒரு Consultative Committee என்கிற அளவுக்கு ஒவ்வொரு துறைக்கும் ஒரு குழு அமைக்க வேண்டும். டெல்லியிலே Consultative Committee என்று இருக்கிறது. ஒரு 20, 25

உறுப்பினர்கள் இருக்கிறார்கள். தங்களுடைய தொகுதிப் பிரச்சினையைச் சொல்ல முடியும். இங்கே போல் அல்லாமல், அமைச்சருடைய தலைமையிலே கூடுகிற அந்தக் Consultative Committeeக்கு அத்தனை அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் வருகிறார்கள். நேருக்குநேர் பேசி பிரச்சினைகளை முடித்துக் கொள்கிறார்கள். எனவே, அதையும் அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, Standing Committee என்று ஒரு கமிட்டி வேண்டும். இங்கே மூன்று, நான்கு கமிட்டிகள் இருக்கின்றன. அதுவல்லாமல், ஒவ்வொரு துறைக்கும் ஒரு கமிட்டி வேண்டும். இங்கிலாந்து நாட்டிலே நீண்ட நாட்களாக அந்த Standing Committee இருக்கிறது. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரையில் 1985-லே நாடாளுமன்றத்திலே அதைக் கொண்டு வந்தார்கள். எனவே, Standing Committee ஒன்று வேண்டும். ஒவ்வொரு இலாக்காவிலும் போடக்கூடிய திட்டங்கள், அதற்கு ஆகக்கூடிய செலவுகள் என்று 7, 8 உறுப்பினர்களே அதை முடிவு செய்து. பிறகு அமைச்சருக்குச் சொல்லி, பிறகு அந்த அமைச்சர் நிதியமைச்சரிடத்திலே, பிரதமர் அவர்களிடத்திலே சொல்லி, அவைகள் அனைத்துமே நிறைவேற்றப்படுகின்றன. எனவே, அதையும் தயவுசெய்து நீங்கள் கருத்திலே கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உலகம் சுற்றக்கூடிய ஒரு வாய்ப்பு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வர வேண்டும். நான் உலகம் சுற்றக்கூடிய வாலிபன் அல்ல. இருந்தாலும்கூட, பல நாடுகளுக்குச் சென்று, பிரச்சினைகளைக் கவனிப்பதற்கு அது வாய்ப்பாக இருக்கும். அப்படி வாய்ப்பு இருக்கின்றபோது, பல நாடுகளுடைய நடைமுறைகளை, நடவடிக்கைகளை நாம் காண முடியும். சர்க்காரிடத்திலே பணம் இல்லையென்றாலும்கூட, உறுப்பினர்கள், சர்க்கார் இரண்டு பேரும் அந்தச் செலவை ஏற்றுக்கொள்கிற அளவுக்குச் செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) கடைசியாக ஒரே ஒரு கருத்து. இங்கே நம்முடைய நண்பர்களெல்லாம் குறிப்பிட்டதைப் போல எல்லோருக்குமே உதவியாளர், டைப்பிஸ்ட் மிக மிக அவசியம். அதைத் தயவுசெய்து நிரந்தரமாகவோ அல்லது இடைக்காலமாக அப்போதைக்கப்போதோ நீங்கள் ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருக்கக்கூடிய இடங்களில் வாடகைக்காவது அரசாங்கத்தினுடைய ஓர் இருப்பிடம், Quarters வழங்கி அவர்கள் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் தருணத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். இந்த மானியத்தில் நான் தொடர்ந்து பேசி வருகிறேன். நாங்களெல்லாம் இந்தச் சட்டமன்றத்திற்கு வந்தபோது இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கிறார்கள், பேராசிரியர் உள்ளிட்டு, திரு. துரைமுருகன் உள்ளிட்டு, அப்போது 250 ரூபாய் மாதச் சம்பளம். ஆனால். அன்றைக்கு இருந்த நிம்மதி இன்றைக்கு இல்லை. ஏனென்றால். அன்றைக்கு நாம் ஒருவேளை சாப்பாடு சாப்பிட வேண்டுமென்றால், நான் பெரியமேட்டில் தங்கியிருக்கும்போது, நல்ல சாப்பாடு ஒருவேளை சாப்பாடு பத்தணா. அன்றைக்கு அணா இருந்தது. பத்தணாவுக்கு நல்ல சாப்பாடு கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால், இன்றைக்கு, குறிப்பாக விடுதியில் தங்குகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை விளக்கத் தேவையில்லை. 10 பேர் அங்கே வந்து விடுகிறார்கள் என்றால், விடுதியிலே தங்கியிருக்கக்கூடிய உறுப்பினர்களைப் பார்க்க வருகின்ற சில பேர்களையாவது அவர்கள் உணவுக்கு அழைத்துச் சென்றுதான் தங்களுடைய உணவை முடித்துக்கொள்ள வேண்டுமென்ற நிலையிலே, மாதத்திற்கு அவர்கள் வாங்குகின்ற சம்பளத்தைவிட பன்மடங்கு அதிகமாகச் செலவு செய்யக்கூடிய சூழ்நிலையில், சில உறுப்பினர்கள் கடன் வாங்கி செலவு செய்யக்கூடிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே இல்லாமல் இருந்தார்கள். ஆனால், இப்போது வந்து விட்டார்கள். எனக்கு நிறைவு ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் நம்முடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். கலைஞர் அவர்களின் தலையிலே நான் ஐஸை வைக்க மாட்டேன். ஏனென்றால், ஐஸிலேயெல்லாம் உருகக்கூடிய தலை அல்ல அந்தத் தலை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். (சிரிப்பு).

பிற்பகல் 12-10

இந்த அவை என்பது இறையாண்மை பெற்ற ஓர் அவை. A Constitutional Organisation, எல்லாவிதமான அரசமைப்புச் சட்ட அதிகாரங்களையும் பெற்றிருக்கக்கூடிய, சட்டங்களை இயற்றி நாட்டை ஆளுகிற, ஆளுகின்றவர்களையே கேள்வி கேட்கக்கூடிய அதிகாரம் பெற்ற ஓர் அவை இந்தப் பேரவை. ஆனால், இந்தப் பேரவையினுடைய உறுப்பினர்களுக்கு, அவர்கள் பெற்றிருக்கக்கூடிய அரசமைப்பு அந்தஸ்திற்கு ஏற்ப மரியாதை இருக்கிறதா, நிம்மதி இருக்கிறதா என்று கேட்டால், மிகுந்த வேதனையோடு நான் சொல்லிக் கொள்வது. இல்லை என்ற பதிலைத்தான். எனவே, தயவுசெய்து இதைப் பற்றியும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கிருக்கிற சில பேர் அஞ்சுகிறார்கள், நம்மைப் பற்றி, நாம் நமக்காகவே எப்படிக் கேட்டுக்கொள்வது என்று. இது கடைசி நாள். இங்கு நடந்த இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே, இந்த ஒரு நாள் மட்டும்தான். அதுவும் ஒருசில மணித்துளிகள்தான் நம்மைப் பற்றி நாம் பேசுகிறோம். அப்படிப் பேசுவதுகூட, மிக உயர்ந்த அந்தஸ்து பெற்றிருக்கக்கூடிய இந்த அரசமைப்புச் சட்டத்தினுடைய உருவாக்கமான இந்தச் சட்டமன்றத்தினுடைய மாண்பு, அதனுடைய மரியாதை, அந்தஸ்து காக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலேதான் பேசுகிறோம். அதைத்தவிர வேறு நோக்கமல்ல. பெறுகிற சம்பளம் பெரிதல்ல. வாங்குகிற தினப்படி பெரிதல்ல. ஆனால், சட்டமன்ற உறுப்பினருடைய அந்தஸ்து காக்கப்பட வேண்டும் என்பதுதான் முக்கியமானது என்ற அடிப்படையில்தான் இங்கே நாம் பேசுகிறோம். நான்கூட வழக்கறிஞராகத் தொழில் செய்து கொண்டிருந்தேன். இங்கே வரும்போது, இதையும் செய்து கொள்ளலாம், அதையும் செய்து கொள்ளலாம் என்றுதான் நாங்கள் நினைத்து வந்தோம். ஆனால், இங்கே வந்த பிறகுதான், இங்கே வந்தவர்கள் மீண்டும் திரும்பிச் செல்லமுடியாது, முழுக்க முழுக்க அவர்கள் இந்த நீரிலே மூழ்கிப்போக வேண்டும் என்ற நிலையை நான் உணர்ந்தேன். எனவேதான் நமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்குத் தேவையான வருமானம் இந்த அளவிற்கு இருந்து கொண்டிருக்குமானால், எப்படி அந்த அந்தஸ்தைக் காப்பாற்றுவது என்று தெரியவில்லை. பல சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். கிராமப்புறங்களிலேயிருந்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உலக அறிவு வேண்டும் என்றுகூட நாம் விரும்புகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்கிறார்கள், இந்தத் தகவல் தொழில் நுட்பத்தைக் குறித்து, அந்த Information Technology - அதிலே



மிக அழகுறக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது மாநிலத்தின் விரிவான வளர்ச்சிக்குத் திறவுகோல் என்று கருதப்படுகிறது இந்த Information Technology. மாற்றங்கள் ஏற்பட்டு வரும் இந்தக் காலத்தில் ஒரு Global ideology-ஆக ஒரு Global village-ஆக இதை நாம் கருதவேண்டும். ஏனென்றால் உலகம் இன்றைக்குச் சுருங்கிக் கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையிலே இங்கே வந்திருக்கக்கூடிய நம்முடைய உறுப்பினர்கள், கிராமப்புறங்களிலேயிருந்து வந்திருக்கக்கூடிய நம்முடைய உறுப்பினர்கள், ஏன் இங்கேயே இருந்து கொண்டிருக்கக்கூடிய உறுப்பினர்கள்கூட, இந்த நாட்டைத் தவிர எந்த நாட்டைப் பார்த்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. கேட்டால் சொல்வார்கள். எந்த நாட்டைப் பார்த்தாய் என்றால், ஓரத்தநாட்டைப் பார்த்திருக்கிறேன் என்று வேண்டுமானால் சொல்வார்கள். என்னுடைய பழைய தொகுதியில் இருக்கிற பகுதிகள் - இப்போது திருப்பத்தூர் தொகுதியிலே இருக்கின்றன - ஜவ்வாது மலையில் ஒரு சின்னபகுதி, அதிலே மூன்று நாடுகள் இருக்கின்றன. புதூர்நாடு, புங்கப்பட்டுநாடு, நெல்லிவாசல்நாடு. நெல்லிவாசல் நாட்டுக்காரனை புதூர் நாட்டுக்காரன் பார்க்காதவன் போலவே இருந்து கொண்டிருக்கின்றான். நீ எந்த நாடு என்று கேட்டால், நான் புதூர்நாடு என்றுதான் சொல்வான். ஒரே கிராமத்திலேயே மூன்று பகுதிகள். எனவே இந்த நிலையிலே, இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில் குறைந்தபட்சம் மக்கள் பிரதிநிதிகளுக்காவது ஒரு Global idea வழங்க வேண்டும். இந்தக் Global Technology-ஐ அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். குளோபல் வாழ்க்கை முறை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம் விருப்பத்திற்குச் சாதகமாக அதை ஆதரித்து, அவர்கள் சரியான நேரத்தில் சரியான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, ஒரு Global Outlook ஏற்பட வேண்டும் என்று சொன்னால் இந்த புங்கப்பட்டுநாடு, நெல்லிவாசல் நாட்டிலே இருக்கக் கூடியவனைக்கூட ஆங்கில நாடு, அமெரிக்க நாடு என்று இருக்கக்கூடிய நாடுகளுக்கு அனுப்புவதற்கு உண்டான வாய்ப்பைச் சில நேரங்களிலாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோதுகூட, இரண்டு முறை Commonwealth Parliamentary Association சார்பாக ஒரு குழு பல முறை வெளிநாடுகளுக்குச் சென்று வந்தது. Outlook விரிவானது, புதிய எண்ணங்கள் அவர்களுக்கு ஏற்பட்டன. அதனால் அது நாட்டுக்குப் பயன்பட்டது. இங்கே இருக்கின்ற நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உட்பட பலபேர் [illegible] வந்திருக்கிறார்கள். அந்த

216834.
3/1/97
N97.342
600 008

Parliamentary Association எங்கே இருக்கிறது என்றுகூட எனக்குத் தெரியாது. நான்கூட அதிலே life member-தான். ஆனால் இந்த ஒரு வருட காலத்திலே Parliamentary Association - இங்கே கூடவே இல்லை. எனவே, அதனைக் கூட்டி, எந்த நாடுகளைச் சென்று பார்க்க வேண்டுமென்று முடிவு செய்து, எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கும் வகையிலே, அவர்களைக் குழுக்களாக அனுப்புவதற்கு அரசு முன்வரவேண்டும். அதற்காகக் கடந்த முறை நாம் கடைப்பிடித்த முறையைக் கையாண்டாலும் பரவாயில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-15*

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்களின் மரியாதை பற்றி இங்கே பேசப்பட்டது. ஆனால், அமைச்சர்களுக்கேகூட, அவர்களுக்குரிய அந்தஸ்து கொடுக்கப்படவில்லை என்பது என்னுடைய கருத்தாகும். ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்களெல்லாம் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். வீட்டு வாடகைப்படி என்று ஒன்றைக் கொடுக்கிறார்கள். எனக்கு முன்னாலே அமர்ந்திருக்கக் கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் இவர்களெல்லாம் சொந்த வீட்டில் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வீட்டு வாடகைப்படி எவ்வளவு தெரியுமா? மாண்புமிகு முதலமைச்சருடைய வீட்டுக்கே எவ்வளவு தெரியுமா? வெறும் 3000 ரூபாய்தான். கேட்பதற்கே வெட்கமாக இருக்கிறது. முதலமைச்சருடைய வீட்டுக்கே எவ்வளவு என்று சொன்னால் 3000 ரூபாய்தான். நான் பொதுப்பணித் துறை அமைச்சரிடத்திலேகூடக் கேட்டேன், "எல்லோருக்கும் சொந்த வீடு இருக்கிறதா, அல்லது நீங்கள் அவர்களுக்கு வீடு கொடுத்து இருந்தால், என்ன வாடகை" என்று கேட்டபோது, தனியாரிடத்திலே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, அதை உயர்நீதிமன்ற நீதிபதிக்கோ அல்லது ஒரு அமைச்சருக்கோ கொடுக்க வேண்டுமென்று சொன்னால், மாதம் ஒன்றுக்கு 30,000 ரூபாய் வாடகை கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுக்கிறோம் என்ற ஒரு அபிப்ராயத்தை அமைச்சர் சொன்னார். அது எந்த அளவுக்கு உண்மை என்பதை அவர்தான் சொல்லவேண்டும். தனியாரிடத்திலே வாடகைக்கு அமர்த்தினால் 30,000 ரூபாய் வாடகை என்று சொலகிறார்கள். ஆனால் சொந்த வீட்டில் இருக்கக்கூடிய அமைச்சர்களுக்கு வீட்டு வாடகைப்படி எவ்வளவு என்று சொன்னால்,



3000 ரூபாய். மற்ற அமைச்சர்களுக்கு எவ்வளவோ எனக்குத் தெரியாது. அதை அவர்களிடம்தான் கேட்கவேண்டும். ஆனால் முதலமைச்சருடைய வீட்டுக்கேகூட 3000 ரூபாய்தான் வீட்டு வாடகைப்படி என்று சொன்னால் அதைக் கேட்பதற்கே ஒரு மாதிரியாக இருக்கிறது. எனவே, 30,000 ரூபாய் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. 15,000 ரூபாய்க்குக் குறைவில்லாமல் வீட்டு வாடகைப்படி கொடுத்தால்தான் ஒரு மாநிலத்தினுடைய அமைச்சருடைய அந்தஸ்து காப்பாற்றப்படும் என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதலமைச்சருடைய வீட்டுக்கு 3000 ரூபாய் வீட்டு வாடகைப்படி என்ற நிலை நீடிப்பது சரியில்லை. வெளியே தனியாரிடத்தில் 30,000 ரூபாய் கொடுக்கும்போது, இங்கே முதலமைச்சராக, அமைச்சர் பெருமக்களாக இருக்கக் கூடியவர்களுக்கு உள்ள வீட்டு வாடகைப்படியை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, உறுப்பினர்களுடைய சம்பளத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கும்போது, இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களின் சம்பள விகிதங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் மிகவும் குறைவாக இருக்கின்ற நிலை இருக்கிறது. உதாரணமாக, மகாராஷ்டிராவில் 10,000 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள், இராஜஸ்தானில் 9425 ரூபாய் கொடுக்கிறார்கள், அஸ்ஸாமில் 8200 ரூபாய் கொடுக்கிறார்கள், கர்நாடக மாநிலத்தில் 7500 ரூபாய் கொடுக்கிறார்கள், மத்தியப் பிரதேசத்தில் 7500 ரூபாய் கொடுக்கிறார்கள், ஆந்திராவில் 7450 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் இப்பொழுது திருத்தப்பட்டிருக்கிற சட்டத்தின் அடிப்படையில் பார்த்தால் - இன்னும் நாம் பெறவில்லை, ஆனால் பெற இருக்கிறோம் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன் - 6000 ரூபாய் என்று இருக்கிறது. எனவே, அதைத் திருத்தி அமைத்து ஓரளவுக்கு உயர்த்த முடிந்தால் உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 10,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கேட்டார்கள். அதை நான் பெரிதும் ஆதரிக்கிறேன். இதில் எனக்கு ஒன்றும் தயக்கம் இல்லை. எனவே. தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை உயர்த்தித் தரவேண்டும்.

பஞ்சாப் மாநிலத்தில் அவர்கள் உண்மைக்கேற்ப நடந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு எவ்வளவு

[திரு. ம. அப்துல் லத்திப்] [1997 ஏப்ரல் 26

தேவையோ அதை அவர்கள் உணர்ந்து நிர்ணயித்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) தொலைபேசிக்கு ஒரு வருடத்திற்கு 30 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். போக்குவரத்துக்கு அவர்கள் வருடத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். வீடு கட்டுவதற்கு ஒரு 5 லட்ச ரூபாய், 20 வருட தவணையில், 6 சதவீத வட்டி போட்டுக் கொடுக்கிறார்கள். கார் வாங்க குறைந்த வட்டியாக 6 சதவீதத்தை நிர்ணயித்து, 2.5 லட்ச ரூபாய் வரையில் அவர்கள் வழங்குகிறார்கள்.

பிற்பகல் 12-20

அடுத்து பாண்டிச்சேரியிலேகூட—சின்ன பிரதேசம் அது—உறுப்பினர்கள் பயன்படுத்திக் கொள்வதற்காக ரூ. 10 லட்சம் வழங்குகிறார்கள். நம்முடைய வார்டு போன்ற ஒரு தொகுதிக்கு அங்கே 10 லட்ச ரூபாய் வழங்குகிறார்கள். விரிந்து, பரந்து கிடக்கின்ற நம்முடைய பெரிய தொகுதிகளுக்கு 25 லட்ச ரூபாயை என்றும் இல்லாத அளவுக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். எப்போதுமே யாரும் செய்யாததைச் செய்யக் கூடிய திறமை வாய்ந்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக நன்றி சொல்லுகின்ற அதே நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும். எங்களுக்கு இதைச் செய்யுங்கள், எங்கள் பகுதிக்கு இதைச் செய்யுங்கள் என்று சொல்லி மனுக்கள் வந்திருப்பதைக் கணக்குப் பார்த்தால் 10 கோடி ரூபாய்க்கு மேல் வருகிறது. செய்தால் சரியாகச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் செய்யாமல் இருந்துவிடலாம். செய்து பொல்லாப்பு அடைவதைவிட, செய்யாமல் பொல்லாப்பு, அடைவது நல்லது என்று பெரியவர்கள் சொல்வார்கள். எனவே அதைத் தயவுசெய்து உயர்த்தி அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறைந்தபட்சம் 50 லட்ச ரூபாய் கொடுக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே 50 லட்ச ரூபாயை ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

· இப்போது மனுக்கள் எல்லாம் ஏராளமாக வருகின்றன. காலையிலும், மாலையிலும், இரவிலும் வருகின்ற மனுக்கள் ஏராளமாக இருக்கின்றன. அதை அப்படியே வாங்கி வைத்துக் கொண்டு. படித்துப் பார்த்து, ஆவன செய்ய இயலாமல் இருக்கிறது. எனவே, அதைப் படித்துப் பார்த்து, பிராசஸ் செய்ய, உரிய அமைச்சர்களுக்கு சேர்ப்பிக்க ஓர்



[1997 ஏப்ரல் 26] [திரு. ம. அப்துல் லத்திப்]

உதவியாளர் தேவை. இதைப் பல்லாண்டு காலமாகக் கேட்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் உதவியாளர் தேவை. உறுப்பினர்கள் பெறுகின்ற மனுக்களைப் பார்த்து அமைச்சர்களுக்கு அனுப்ப ஓர் உதவியாளர் தேவையாக இருக்கிறது என்பதை வலியுறுத்தி இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, எக்ஸ். எம்.எல்.ஏக்கள் பற்றி. பாவம் அவர்கள். இந்நாள் என்பது முன்னாள் ஆவதும், முன்னாள் என்பது இந்நாள் ஆவதும், இந்நாள் என்பது முன்னாளாகி, முன்னாளாகவே போய்விடுவதையும் பார்க்கிறோம். மிகுந்த வயோதிக காலத்திலே—உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு தெரிந்திருக்குமோ இல்லையோ, எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும் — பழனியிலே ஒரு எம்.எல்.ஏ. இருந்தார். பழனிசாமி என்று அவருக்குப் பெயர். கடைசி காலத்திலே தெரு வீதியிலே கிடந்தது அவருடைய பிணம். வறுமையிலே போராடிய அவர், தெரு வீதியிலே மரணித்தார் என்ற செய்தி வந்தபோது உள்ளமெல்லாம் கலங்கியது. இதில் வந்தவர்கள் மறுபடியும் மீள முடியாது. வேறு எந்தத் தொழிலுக்கும் போக முடியாது. எக்ஸ். எம்.எல் ஏக்களுக்கு, ஒருமுறை எம்.எல்.ஏ. ஆக இருந்தால் 800 ரூபாய் ஓய்வூதியம் தரப்படுகிறது. அது என்ன 800 ரூபாய்? என்ன கணக்கு என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே அதை உயர்த்த வேண்டும். கேரளாவிலேகூட ஒரு பில்லைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு தடவை இருந்தால் 2,000 ரூபாய் ஓய்வூதியம் என்ற அளவில் அந்த பில்லை கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய விதிகளில் உள்ள, ஒரு வருடம் நிறைந்திருந்தால்தான் ஓய்வூதியம் என்ற கண்டிஷன் எல்லாம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். இங்கே வந்தால், அவர்கள் வேறு வேலைக்கு லாயக்கில்லை என்று நாட்டு மக்களால் சொல்லப்படுகிறது. ஆகவே தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ரூ. 150 தினப்படியாகத் தருகிறார்கள். மனதிலே கையை வைத்துச் சொல்லுங்கள், 150 ரூபாய் போதுமென்று. ஒரு ஆட்டோவிலே போனால் அதற்கே ஆகிவிடுகிறது. அவர்கள் சொல்வதுதான் கட்டணம். மீட்டர்படி கட்டணம் என்பதெல்லாம் கிடையாது. இவ்வளவு கட்டணம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதைக் கொடுக்க வேண்டும்.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1997 ஏப்ரல் 26

எம்.எல்.ஏ. விடுதியிலிருந்து சென்ட்ரல் ஸ்டேஷன் செல்ல 20 ரூபாய் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நாம் பல்வேறு அமைச்சர்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. தலைமைச் செயலகத்திற்கு வர வேண்டியிருக்கிறது. அதிகாரிகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது. வருகின்ற தொகுதி மக்களை அழைத்துக் கொண்டு ஆட்டோவிலே செல்ல வேண்டுமென்றால் 150 ரூபாய் போதுமா? தயவுசெய்து கனிவுள்ளம் கொண்ட, நம்முடைய கருணையுள்ளம் கொண்ட (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து, 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' (மேசையைத் தட்டும் ஒலி) கலங்கிய இலங்கை வேந்தனாக ஆக்கி விடாதீர்கள். இப்போது நாங்களெல்லாம் கலங்கி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வது, இதை உயர்த்தித் தர வேண்டுமென்பதுதான்.

இப்போது மருத்துவப்படி கொடுக்கிறீர்கள். மருத்துவப்படி வாங்குவதற்கு நாம் படிவங்களைப் பூர்த்தி செய்து கொடுப்பதற்கே இரண்டு வருடங்கள் டிரெயினிங் எடுக்க வேண்டும். (சிரிப்பு) அதனால் நான் வாங்குவதேயில்லை. யாருமே வாங்குவதில்லை. அந்த நிலை எதற்கு? ஒரு 'ஆர்னமெண்ட்'லாக, பெயருக்கு ஏன் இருக்க வேண்டும்? இவ்வளவு 'அலவன்ஸ்' என்று உறுப்பினர்களுக்குக் கொடுத்து விடுங்கள். நான் வாங்குகின்ற அந்த 'அலவன்ஸ்'-ஐ வைத்து மட்டுமா என்னுடைய நிலை இருக்கின்றது, தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். சிலருக்குச் சில நேரங்களில் எதிர்பாராமல் சில கடுமையான நோய் வந்து விடுகின்றபோது, மிக அதிகச் செலவு ஏற்படுகிறது. ஆகவே, சிலருக்கு அதிகச் செலவு ஏற்படுகின்றபோது, ஒரு படி போல, ஒரு மாதத்திற்கு 1,000 ரூபாய் 2,000 ரூபாய் என்று வழங்கிவிட்டால், அதிகச் செலவிற்கான தொகையைப் பெறும் உரிமையை அவர்கள் இழந்து விடுகிறார்கள். அதிகமாகச் செலவாகின்றபோது, ரூ.50,000, ரூ. 70,000 என்று செலவாகின்றபோது, உரிய முறையில் விண்ணப்பித்து அந்த நிதியைப் பெற வாய்ப்பு இருக்கிறது.



1997 ஏப்ரல் 26]

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் Special Category யிலே வருகிறார்கள். நான் பொது மருத்துவமனைக்கே போய் பழக்கப்பட்டவன். எதுவாக இருந்தாலும் பொது மருத்துவமனைக்குத்தான் செல்கிறேன். அங்கேதான் தங்குகிறேன். ஆனால், சில நோய்களுக்கு, தனியார் மருத்துவமனைகளுக்கு, அப்பலோ போன்ற தனியார் மருத்துமனைகளுக்குத்தான் போயாக வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகையினால், அவர்களுக்கு அந்த Reimbursement ஐ அரசே கொடுத்துவிடலாமே? நான் எனக்காகக் கேட்கவில்லை. எனக்கு பொது மருத்துவமனை போதும். ஆனால், மற்றவர்களுக்கு, ஒருசில நோய்களுக்காக அங்கேதான் போக வேண்டுமென்ற நிலையிலே இருப்பவர்களுக்கு, அவர்கள் அங்கே சேர்ப்பிக்கப்பட்ட பிறகு, அவர்களுக்கு ஆகின்ற செலவை அரசாங்கமே Reimbursement செய்து—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு நிலை வருமானால், அவர்களுக்கு ஆகின்ற முழுச் செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது. அப்பலோ மருத்துவமனையாக இருந்தாலும் சரி, விஜயா மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஆகின்ற முழுச் செலவையும் ஏற்கெனவே அரசே ஏற்றுவருகிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரியும், Reimbursement செய்வது தெரியும். இப்படி Reimbursement செய்யப்படுவது அவர்களுக்கு நேரடியாகப் போய்ச் சேருகிறது என்பதும் எனக்குத் தெரியும். எனவே, அதை உறுதி செய்து, மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அதை உறுதி செய்து, அந்த ஆஸ்பத்திரிக்கும் உறுதி செய்தால், அவர்கள் கொஞ்சம் நன்றாகவே கவனிப்பார்கள். இல்லாவிட்டால்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. 1-00 மணிக்குள் உறுப்பினர்கள் பேசி முடிக்க வேண்டும். நீங்கள் 20 நிமிடம் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். இந்த, Guest house இருக்கின்றதே, அங்கே எம்.எல்.ஏ.-க்கள் போனால், Present எம்.எல்.ஏ.-வாக இருந்தால், கொஞ்சம் பயந்து கொடுத்து விடுகிறார்கள். ஆனால், எக்ஸ் எம்.எல்.ஏ.-க்கள் படுகின்ற பாடு, ஒரு சாதாரண ஆஃபீசருக்குக் கொடுக்கப்படுகின்ற மரியாதைகூட எக்ஸ் எம்.எல்.ஏ.-க்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவ்வளவு கேவலமாக நடத்துகிறார்கள். அறைகள் இருந்தாலும் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். மிக மோசமாக இது நடந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வர விரும்புகிறேன். இந்த Guest houses-இல் நம்முடைய முன்னாள் எம்.எல்.ஏ.-க்களுக்கும், அவர்களுக்குரிய மரியாதையைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சர்க்கார்...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள், Private Hospitals-இல் வசதிகள் செய்து கொடுக்கிறார்கள் என்று சொன்னதைத் தெரிந்து கொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், Guest house கொடுப்பது பி.டபிள்யூ.டி.-யினுடைய வேலை அல்ல. கலெக்டர்தான் அதைக் கொடுக்கிறார்கள். எனவே, Guest house கொடுப்பது எங்களுடைய வேலை அல்ல.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் என்பது முக்கியம் அல்ல; கோரிக்கைதான் முக்கியம் என்று ஓர் உறுப்பினர் சொல்கிறார். ஆனால், Guest house நடத்துவது பி.டபிள்யூ.டி. என்ற காரணத்திற்காக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். வேறொன்றும் அல்ல. எனவே, அங்கே இருப்பவர்கள் கொஞ்சம் கண்ணியத்தோடு, இந்த எக்ஸ்-எம்.எல்.ஏ.-க்களையும் நடத்த வேண்டும் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



ஒன்றை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதியிலே ஓர் அலுவலகம் வேண்டும். இல்லாவிட்டால், செம்மையாகவும், செழுமையாகவும் சட்டமன்ற உறுப்பினரால் பணி செய்ய முடியாது. இது அவர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாக இன்றைக்கு ஆகிக் கொண்டிருக்கிறது. எதையெடுத்தாலும், எம்.எல்.ஏ. விடம் போனால் காரியம் நடக்கும் என்ற எண்ணம் இன்று பொது மக்களிடத்தில் வந்திருக்கிறது. 'என்னிடத்தில் ஒருவர் வந்தார். "தேர்விலே 8 பேப்பர் எழுத வேண்டும். அந்த 8 பேப்பரிலே 2 பேப்பர்தான் எழுதியிருக்கிறான், 6 பேப்பரை எழுதவேயில்லை என் பையன். நீங்கள் மனது வைத்தால் எனது பையன் பாஸாகி விடுவான்" என்று அந்தப் பையனுடைய...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட காரியத்தில் மனது வைக்காமல் இருக்கும்படி திரு. லத்தீப் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி மனது வைக்காதவன் என்ற காரணத்திலேதான், 'எவனடா அவன், சந்நியாசிகளை, துறவிகளை எல்லாம்கூட எம்.எல்.ஏ-ஆக ஆக்கி எங்களை வந்து உயிரை வாங்குகிறான்' என்று கேட்கிறார்கள். நான் அதில் மனது வைக்கிறேன் என்பதற்காகச் சொல்லவில்லை. மக்களுடைய எதிர்பார்ப்பைப் பற்றி, அவர்களுடைய எல்லையைப் பற்றி நான் சொல்கிறேன்; வேறல்ல. இவ்வளவு எதிர்பார்ப்புகளைத் தேடி, மக்கள் எங்களிடம் வருகிறார்கள். எனவே, தொகுதியிலே, ஓர் உதவியாளர் உள்ளிட்ட, தொலைபேசியோடு, உறுப்பினர்கள் செம்மையாகச் செயல்பட ஓர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேனே தவிர, வேறல்ல. எனவே, மற்ற தலைப்புகளிலே பேசுவதற்கு வாய்ப்பில்லை; ஏனென்றால், 1-00 மணிக்குள் பேசி முடித்து விட வேண்டும்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பிலே, எதுவுமே பேசாமல், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தேவையான சலுகைகளைப் பற்றி மாத்திரம் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசுகிறார்கள். இதிலே, முக்கியமாக, 'சமூகப் பாதுகாப்பு

நலன்' என்ற தலைப்பிலே, "முஸ்லீம் கோஷா மகளிருக்கு நிதியுதவி சங்கத்திற்கு உதவி, 41 இலட்சம் ரூபாய்" என்றிருக்கிறது; அதை உயர்த்த வேண்டுமென்றுகூட திரு. லத்தீப் அவர்கள் பேசவில்லை. "தாயகம் திரும்பியோர் துயர் தணிப்பு நடவடிக்கைக்கான மானியம், 16 கோடி ரூபாய்" என்றிருக்கிறது; அதையும் உயர்த்தித் தரவேண்டுமென்று எந்த உறுப்பினரும் பேசவில்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அடுத்து, ஒருவர் பேச இருக்கிறார்; மறுபடியும் நான் சொன்ன பிறகு, இதுகுறித்துப் பேசக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'டைம்' அதிகம் ஆகிவிட்டது; நேரம் இல்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்தடுத்து நான் வந்து கொண்டிருக்கிறேன். முதலிலே, எங்களைச் சுற்றி உட்கார்ந்து இருப்பவர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், 3 நிமிடங்களில் பேசி முடித்துக் கொள்ளுங்கள் (குறுக்கீடு) இல்லை, நேரமாகிவிட்டது; 1-00 மணிக்குள் எல்லாவற்றையும் முடிக்க வேண்டும். நீங்கள் 25 நிமிடங்களுக்கு மேல் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கன்க்ளூஷன்' மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்க்ளூஷனை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முஸ்லீம்களுக்குப் பேச வேண்டும்; மற்றவர்களுக்குப் பேச வேண்டும் என்ற நிலையிலே நினைத்துப் பார்க்கவில்லை. நேற்றைய தினம் நிறைய நான் பேசினேன். முதலமைச்சர் அவர்கள் அதில் சூழ்நிலை சரியில்லை என்ற அடிப்படையிலே, அதற்கு ஒரு வார்த்தையும் பதில் சொல்லவில்லை. எனவே, அது சூழ்நிலை சரியில்லையோ, அதை ஒருவேளை பேசக் கூடாதோ என்ற எண்ணத்தில், அவருடைய உணர்வை அறிந்து, சூழ்நிலையை அறிந்து, நான் பேசவில்லையே தவிர, வேறு காரணம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், 3 நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதிகமாகப் பேச நினைத்தாலுங்கூட, 3 நிமிடங்களுக்குள் என்னுடைய உரையை நான் முடித்துக் கொள்கிறேன். காரணம், நான் சொல்லுகிற கருத்தை, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும் என்கிற கோரிக்கையோடு நான் துவக்க இருக்கிறேன். எங்களுக்குச் சம்பளமே வேண்டாம். சம்பளத்தை இழக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

ஆனால் மற்ற மாநிலங்களிலே கொடுக்கக்கூடிய படிகளை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். தொலைபேசிப்படி, தொகுதிப்படி, தபால்படி, உதவியாளர் படி, எதிர்பாராத செலவினப்படி, செயலகப் படி, அதேபோல போக்குவரத்துப் படி, மருத்துவப்படி என்று இதையே கணக்குப் போட்டால், மகாராஷ்டிராவிலே, அதிகமாக இருக்கக்கூடிய அதாவது தொலைபேசிப் படியே 5,000 ரூபாய் கொடுக்கிறார்கள்; அதைக் கொடுங்கள்; எங்களுக்குச் சம்பளம் வேண்டாம். அதேபோல், இராஜஸ்தானிலே தொகுதிப் படி 5 ஆயிரம் ரூபாய் தருகிறார்கள். ஒரிசாவிலே, தபால்படி 2 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். மகாராஷ்டிராவிலே உதவியாளர்படி 2 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். அஸ்ஸாமிலே எதிர்பாராத செலவினப்படி 1,500 ரூபாய் கொடுக்கிறார்கள். செயலகப்படி என்று 1,200 ரூபாய் கொடுக்கிறார்கள். அதேபோல், உத்தரப்பிரதேசத்திலே, போக்குவரத்துப்படி 50,000 ரூபாய்; அதாவது சட்டமன்ற உறுப்பினர்கள், விமானத்திலாவது போய்க் கொள்ளட்டும்; அல்லது, இரயிலிலாவது போய்க் கொள்ளட்டும் என்று அங்கே 50 ஆயிரம் ரூபாய் தருகிறார்கள். மத்தியப்பிரதேசத்திலே, மருத்துவத்திற்கென்று 1,000 ரூபாய் படி தருகிறார்கள். 'M.L.As. are equal to the Chief Secretary' என்று ஏற்கெனவே அரசாணை இருக்கிறது. அவர்கள் ரூ. 19,800 சம்பளம் வாங்குகிறார்கள். நாங்கள் கோருவது, எங்களுக்குச் சம்பளமே வேண்டாம். இந்தப் படிகளை மட்டும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே, 'எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்'; அவருக்கு நாங்கள் சுமையை அதிகமாக வைக்கத் தயாராக இல்லை; இந்தப் படிகள் மட்டும் ரூ.22,700/- மாதத்திற்கு வருகிறது; அதை மட்டும் நீங்கள் தரவேண்டுமென்று நான் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் தாங்கும் இதயம் உண்டே தவிர, கேட்கின்ற எதையும் கொடுக்கின்ற இதயம் இல்லை. *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி, 3 நிமிடத்திற்குள் பேசி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே இந்த மானியத்தின் மீது நிறைய விவரங்களைச் சொல்ல வேண்டுமென்றுதான் விரும்பினேன். குறிப்பாக, 3 நிமிடங்களைத் தந்திருக்கிறீர்கள்.

என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே, குறிப்பாக, விளவங்கோடு தொகுதியில், கடையாங்கோட்டையிலே ஒரு காவல் நிலையத்தையும், கொல்லங்கோட்டிலே ஒரு தீயணைப்பு நிலையத்தையும் நேற்றையதினம் தந்துதவிய தங்களுக்கு, என்னைச் சார்ந்த இயக்கம், மற்றும் அந்தப் பிராந்திய மக்களின் சார்பிலே என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

அடுத்தபடியாக நம்முடைய முன்னாள் எம்.எல்.சிக்கள். அந்த எம்.எல்.சிக்-களுக்கு ஓய்வூதியம் வழங்குவதைப் பொறுத்தவரையில் சில வரையறைகள் இருப்பதாகத் தெரிகிறது. மேலவையைக் கலைத்துவிட்டார்கள். கடைசி 3 மாதம், 4 மாதம் எம்.எல்.சி.க்களாக இருந்தவர்களுக்கு ஓய்வூதியம் சரிவர கிடைக்கவில்லை. அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகை சற்று உயர்த்தப்பட வேண்டும். முன்னாள் எம்.எல்.ஏக்களுடைய ஓய்வூதியத்தையும் சற்று உயர்த்த வேண்டும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையை நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் துறையில் 17-4-97 அன்று லஞ்ச ஒழிப்புத் துறையினர் ஒரு சோதனை செய்திருக்கிறார்கள். அந்தத் துறையிலிருந்து கிடைத்திருக்கிற விவரங்களைக் கொண்டு பார்த்தால் அங்கே வருகிற பரிசுச் சீட்டில் அதிகப்படியான தொகை விழுகிற பரிசுச் சீட்டுகள் எல்லாம் பிற மாநிலங்களுக்குச்



சென்றுவிடுகின்றன. அதிலே சில கோளாறுகள் இருப்பதுபோலத் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல், அந்தச் சோதனை செய்த துறையைச் சேர்ந்த காவலர்களிடம் கேட்டத்தில் அவர்கள் அங்கே ஆவணங்கள் இல்லை என்றுகூடப் பதில் சொல்லியிருக்கிறார்கள். மேலும் இதுபோன்ற காரியங்களுக்காக யாரைப் பழிவாங்குகிறார்கள் என்று சொன்னால், அந்தப் பரிசுச் சீட்டுத் துறையில் இருக்கும் சாதாரண ஊழியர்களைப் பழி வாங்குகிறார்கள். அது தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய சட்டமன்றப் பேரவை நிருபர்கள். ஏற்கெனவே பாராளுமன்றத்தில் பணிபுரியும் நிருபர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 3000 ரூபாயும், 400 ரூபாய் அலவன்சும் கொடுக்கப்படுகிறது. அதைப்போலவே நம்முடைய சட்டமன்ற நிருபர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தையும், அலவன்சையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய மாவட்டம் சம்பந்தமாக சில கோரிக்கைகள் வைக்க விரும்புகிறேன். கடந்த நிதிநிலை அறிக்கையின் போது நான் 11 திட்டங்களைப் பற்றிச் சொல்லி இருந்தேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அவை பின்னர் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லியிருந்தார்கள். இதுவரை எடுத்துக் கொள்ளப்படவில்லை. மீண்டும் நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, அந்த மாவட்டம் சம்பந்தமாக நான் சொல்லியிருக்கிற பெரிய திட்டங்களில் ஏதாவது ஒரு திட்டத்தையாவது எடுத்துக் கொள்ள முடியுமானால், இந்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தபடியாக, நம்முடைய போக்குவரத்துத் துறையைப் பொறுத்தமட்டிலே, கடந்த சட்டமன்ற நிகழ்ச்சியின்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். குறுகிய காலத்திலே போக்குவரத்துத் துறையைச் சீரமைத்துவிடுவோம் என்று சொன்னார்கள். அதேபோல, எங்களுடைய மாவட்டத்தில், அந்தத் துறையில் ஏறத்தாழ 60% வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மேலும் கவனம் செலுத்தி அந்தத் துறையை விரிவாக்கி மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவில் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. டி. மணி] [1997 ஏப்ரல் 26

அதுபோன்று பாலங்களுடைய மிகப் பெரிய பட்டியல் என்னிடம் இருக்கிறது. 1980-ஆம் ஆண்டிற்கு முன்னால் இந்த மாமன்றத்தில் இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்து வைத்திருக்கிற மிகப் பெரிய கோரிக்கைகள் இருக்கின்றன. ஆக, அதையும்கூட கணக்கில் எடுத்துக் கொண்டு நீங்கள் செயலாற்ற வேண்டும். பாலங்களும், சாலைகளும் என்று வருகிறபோது எங்கள் மாவட்டத்தில் நாங்கள் மிகவும் பின்னால் இருக்கிறோம். அணைமுகப் பாலமாக இருந்தாலும் சரி, வல்லவளைப் பாலமாக இருந்தாலும் சரி, குழித்துறைப் பாலமாக இருந்தாலும் சரி, அவைகள் அனைத்தும் மிகவும் மோசமான நிலைமையில் உள்ளன. தேசிய நெடுஞ்சாலையிலுள்ள குழித்துறை ஆற்றுப் பாலம் 100 வருடங்களுக்கு முன்பிருந்து இருக்கிறது. தொடர்ந்து அடியிலிருந்து மணலை எடுத்துச் செல்வதால் எந்த நேரத்திலும் ஆபத்து வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அங்கு எல்லா நடவடிக்கைகளும் முடிந்து விட்டன. இருந்தாலும்கூட மத்திய அரசினுடைய பல்வேறு துறைகள் அதில் ஈடுபடுகிற காரணத்தினால் அதை விரைவிலே செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பாலங்களுடைய பட்டியல் வரிசையிலே வருகிறபோது மலைப்பாங்கான பகுதியிலே இருக்கிற அணைமுகப் பாலம் 7 ஆண்டுகளுக்கு முன்னால் பெய்த மழையின் காரணமாக அடித்துச் செல்லப்பட்டது. இன்னும் அது கட்டப்படவில்லை. அதுபோன்று அந்த மாவட்டத்திலே நீர்ப்பாசனம் சம்பந்தமாக இருக்கிற பிரச்சினைகள் குறித்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றை இங்கே உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள். ரப்பர் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில் இந்த ஆண்டிலே, அது வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம் என்ற நல்ல கருத்தை நல்ல உணர்வோடு சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுக்கு அந்த ரப்பர் தொழிற்சாலை வருவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை கேட்டு, இதோடு அமைகிறேன்.



1997 ஏப்ரல் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மானியக் கோரிக்கையிலே 'மாநிலச் சட்டமன்றம்' என்ற ஒரு மானியக் கோரிக்கை இருக்கிற காரணத்தினால் பேரவைத் தலைவர் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்காக ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே ஊதியங்களைப் பற்றி ஏராளமான உறுப்பினர்கள் பேசினார்கள். உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதாகவே நான் இல்லை. ஆனால் எல்லா கட்சிகளைச் சார்ந்தவர்களும் அவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கூறும் வகையில் அவர் பரிந்துரைகளை வாங்கிக் கொண்டு வந்தார். இதை முதலிலே சொல்ல வேண்டும்.

*பிற்பகல் 12-40*

ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். பிரிட்டிஷ் பாராளுமன்றம்தான் தாய் பாராளுமன்றம். அங்கே இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் என்பது மிகக் குறைவு. ஆனால் அங்கே அரசாங்க ஊழியர்களுக்கு எப்படி அகவிலைப்படி கொடுக்கின்றார்களோ, அதே அகவிலைப்படியை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு முறையும் அகவிலைப்படியை அரசாங்கம் ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற நேரத்திலே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த உயர்வு கிடைக்கின்றது. இந்த ஒரு கருத்தை யாரேனும் ஓர் உறுப்பினர் சொல்லுவாரா என்று கவனித்தேன். இதுவரை யாரும் சொல்லவில்லை. ஆகவே இதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட மாநில அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு பற்றி அறிவித்தார்கள். சம்பளம் 100 சதவீதம் என்றால் அகவிலைப்படி 170 சதவீதம் என்ற அளவுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அதிகப் பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. ஊதியம் குறைவாக இருந்தாலும் அகவிலைப்படி என்ற தலைப்பிலே உறுப்பினர்களுக்கு அந்தப் பணத்தை வழங்கலாம் என்ற ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய பொது மருத்துவமனைகளைப் பற்றிப் பேசினார்கள். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஏன் குறுக்கிடவில்லை என்று எனக்கே தெரியவில்லை. இங்கே நகரத்தில்

இருக்கின்ற பெரிய ஆஸ்பத்திரிகள் எல்லாம் 'பைவ் ஸ்டார் ஓட்டல்' போன்றவை. அவை கோடீஸ்வரர்கள் போய் வைத்தியம் பெறக்கூடிய இடங்கள். சாதாரண மக்களுக்கு அருமையான வைத்தியம் நம்முடைய பொது மருத்துவமனைகளில் கிடைக்கின்றது என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. குறிப்பாக நம்முடைய சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்த அதியமான் என்ற உறுப்பினர் அவர்கள் சிறுநீரகம் வைப்பதற்கு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு பொது மருத்துவமனையில்தான் அறுவை சிகிச்சை செய்து கொண்டார்கள். அங்கே இருந்த மருத்துவர்கள் ஒரே ஒரு கோரிக்கையை வைத்தார்கள். சில மருந்துகள் அங்கே கிடைக்கவில்லை. தையல் செய்யக்கூடிய நூல் கிடைக்கவில்லை, அவற்றையெல்லாம் 20 ஆயிரம் ரூபாய்க்கு நீங்கள் வெளியே வாங்கிக் கொடுத்தால், நீங்கள் ஒரு பைசா கூட அரசாங்கத்திறகுப் பணம் கட்டவேண்டாம் என்று சொன்னார்கள். அதன்படி அவர்கள் செய்தார்கள். அவர் இன்று நல்ல உடல் நலத்தோடு இருக்கின்றார். ஆகவே, நம்முடைய பொது மருத்துவமனைகளைப் பற்றி யாரும் குறைவாகப் பேசுவது எனக்கு உடன்பாடான கருத்து அல்ல என்பதை மட்டும் சொல்லி, அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. லட்சுமணன் அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத்திற்காக ஒரு நிகர் நிலை பல்கலைக்கழகத்தையே துவங்குவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறபோது, ஏற்கெனவே, மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னது போல, ஆந்திர மாநிலத்திலே வழங்கப்படுவதுபோல் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கணிப்பொறி வழங்க வேண்டுமென்ற கருத்தை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது தவிர, இங்கே ஏனைய உறுப்பினர்கள் சொன்னதுபோல, தட்டச்சுப் பயிற்சி பெற்ற உதவியாளர், சட்டமன்றத் தொகுதியிலே ஓர் அலுவலகம், வாகனங்கள் வாங்குவதற்கு வட்டி இல்லாத கடன் ஆகியவற்றை எல்லாம் வழங்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், எம்.எல்.ஏ-க்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற அந்த 25 லட்ச ரூபாய் பணத்தை 50 லட்ச ரூபாயாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையைச் சிலபேர் சொன்னபோது நான் நினைத்தேன். அதிலே 5 லட்ச ரூபாயை வீடு கட்டுவதற்கு ஒதுக்கினால், கண்டிப்பாக



ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அவருடைய தொகுதியிலே ஓர் அலுவலகத்தைக் கட்டிக் கொடுக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேரள மாநிலத்திலே, அம்மாநிலத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே விரிவான ஒரு பட்டியலைக் கொடுத்திருக்கிறேன். சான்றாகச் சொன்னால் ரயில்வே கட்டணம் 35 ஆயிரம் ரூபாய். அது தவிர, 'டிராவலிங் அலவன்ஸ்' ஒரு கி.மீ.க்கு ரூ. 2.50 கொடுக்கப்படுகிறது. 'அன்-லிமிடெட்டாக' எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பிரயாணம் செய்யலாம்.

பிற்பகல் 12-45

அது தவிர ஒரு முக்கியமான செய்தி. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நிலை. இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்கூட பல பேர் மருத்துவர்களாக, வழக்குரைஞர்களாக இருந்து இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். அவர்களும் கூட, அவர்களுடைய தொழிலைச் செய்ய முடியாத நிலையிருப்பதை நாம் பார்க்கிறோம். அப்படி இருக்கின்ற போது அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களாக மாறிவிடுகின்றபோது கண்டிப்பாக அவர்கள் தங்களுடைய டாக்டர் தொழிலையோ அல்லது வழக்குரைஞர் தொழிலையோ செய்ய முடியாத நிலையிருக்கின்றது என்பதை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். ஆனால், கேரள மாநிலத்திலே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் குறைந்த தொகையாக ரூ.2000, அதிகமான தொகையாக ரூ.5000 வழங்கப்படுகிறது. ஆகவே, அதுபோல நம்முடைய அரசும் இதனைப் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நம்முடைய சட்டமன்ற நூலகம். சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சையெல்லாம் இன்றைக்கு நாம் புத்தகமாக வெளியிடுகிறோம். ஆனால், அதே பேச்சுக்களை நாம் கம்ப்யூட்டரிலே பதிவு செய்வோம் என்று சொன்னால், என்றைக்கும் நாம் பார்த்துக் கொள்ளலாம். சில ஆண்டுகளுக்குப் பின்னால், யார், யார் என்ன பேசினார்கள் என்பதை விவரமாக நாம் தெரிந்து கொள்வதற்கு அது வசதியாக இருக்கும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பேச்சுக்களையெல்லாம் கணிப்பொறியிலே பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. வி. கே. லட்சுமணன்] [1997 ஏப்ரல் 26

அது மட்டுமல்லாமல், இங்கே சட்டமன்ற விடுதியிலே கலர் டி.வி. வைக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையினை வைத்தார்கள். நான் கொஞ்சம் கூடுதலாகச் சென்று, ஒரு டிஷ் ஆன்டனாகூட வைத்து அதிலே மற்ற காட்சிகளையும் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு இங்கே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். (சிரிப்பு) (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of Order?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிஷ் ஆன்டனா வைத்து மற்ற காட்சிகளும் பார்க்க வேண்டுமென்று கேட்கிறார்கள். 'மற்ற காட்சிகள்' என்றால் என்ன என்று அவர்கள் விளக்க வேண்டும்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** நிறைய காட்சிகள் இருக்கின்றன. இயற்கைக் காட்சிகள் இருக்கின்றன. 'சன் டி.வி.' பார்க்கலாம், பல படக்காட்சிகளைப் பார்ப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இப்படிப் அவரவர்களுடைய மனதைப் பொறுத்த சமாச்சாரம் (சிரிப்பு) நான் ஏற்கெனவே, முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கின்ற பட்டியலிலே, கேரள மாநிலத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, உள்ளாட்சித் துறையிலே இருக்கின்ற மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர், கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் என்று எல்லோருக்கும் எவ்வளவு தொகை வழங்கப்படுகின்றது என்கின்ற விவரத்தையெல்லாம் கொடுத்திருக்கின்றேன். அதேபோன்று நம்முடைய மாநிலத்திலேயும் வழங்குவதற்கு அரசு முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதுதவிர, டெல்லியிலே இருக்கிற தமிழ்நாடு இல்லம் இந்தத் தமிழ்நாடு இல்லத்திலே வசதிகள் கொஞ்சம் குறைவாக இருக்கின்றன. அங்கு செல்கின்றவர்களுக்கு எஸ்.டி.டி. வசதி கிடையாது. எஸ்.டி.டி. செய்ய வேண்டும் என்று சொன்னால் ஒரு கி.மீ.க்கு மேல் நடந்து செல்ல வேண்டிய நிலை இருக்கின்றது. மேலும் அங்கே 'Fax' வசதி கிடையாது, அறைகளிலே டி.வி. வசதி இல்லை. எனவே, அவற்றையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



[திரு. வி. கே. லட்சுமணன்]

997 ஏப்ரல் 26]

இந்தச் சட்டமன்ற வளாகத்திற்குள்ளே, இங்கே எல்லா உறுப்பினர்களும் கூறியிருப்பதைப் போல, நல்ல உணவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். சட்டமன்ற உறுப்பினர் பல பேருக்கு அதிகமாக இந்தக் கூட்டத் தொடரிலே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்கிற ஒரு கவலை இருப்பதை நான் அறிகிறேன். முதலமைச்சர் அவர்கள் மனது வைத்தால், இந்தச் சட்டமன்றத்தை இரண்டு நேரமும் நடத்தலாம், எல்லோருக்கும் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கலாம், கருத்தைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தலைப் பொறுத்தமட்டிலே. திரு. டி.என். சேஷன்—

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். அவர் என்னுடைய அறையிலே வந்து பார்த்தால், 1952-லே இருந்து இந்த ஆண்டு வரை எந்தக் காலத்திலே அதிக நாட்கள் சட்டமன்றம் நடந்திருக்கிறது என்பது நன்றாகத் தெரியவரும். (குறுக்கீடு) நாட்கள் வந்தால்தானே நேரம் என்பது வரும்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** பாராளுமன்றத்திலே இரு நேரமும் நடக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்லக்குமார், தயவுசெய்து சத்தம் போடாமல் இருங்கள். மாலையிலும் பேரவை நடத்தும் சூழ்நிலை இப்போதுதான் வந்திருக்கிறது. காரணம், அப்போது மேலவை இருந்தது. அப்போது பேரவை நடக்கின்ற நேரங்களிலே பெரும்பாலும் மாலையிலே மேலவை நடந்தது. ஆனால், விடுதலை கிடைத்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1971-76 ஆம் ஆண்டுகளிலே அப்போது முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் சட்டமன்றமே அதிக நாட்கள் இதுவரையில் நடந்திருக்கிறது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய அறையிலே வந்து அங்கிருக்கும் அறிக்கைப் பலகையைப் பார்த்தால் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** தேர்தலைப் பொறுத்தவரையில் 1996-ஆம் ஆண்டு நாம் தேர்தலைச் சந்தித்தபோது மிகவும் அச்சத்தோடு திரு. டி.என். சேஷன் அவர்கள் என்ன செய்வாரோ என்று

பயந்துகொண்டு, அந்தத் தேர்தல் நேரத்தின்போது அதிக விளம்பரம் செய்யாமல் நடந்து கொண்டோம். ஆனால், அதற்குப் பின்னாலே, எனக்குத் தெரிந்த அளவிலே, புதுக்கோட்டை தேர்தலின்போது சுவற்றிலே எழுதுகின்ற பணி ஓரளவுக்கு இருந்தது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே, அவ்வாறு இல்லாமல், அதே கண்டிப்போடு, விளம்பரத்தைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை இன்னும் பல மாவட்டங்களிலே வழங்கப்படாமல் இருக்கிறது. அதையும் விரைவாக வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழக அரசிலே பல்வேறு துறைகளிலே பணியாளர்கள் நீண்டகாலமாக கிளார்க்குகளாக, தட்டெழுத்தர்களாக, எழுத்தர்களாக, தோட்டக்காரர்களாக, துப்புரவுப் பணி செய்பவர்களாக தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுடைய நிலைமையை அரசு பரிவோடு பரிசீலித்து, அவர்களது பணியை நிரந்தரமாக்குவதற்கு வகை செய்ய வேணடுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கருத்துக்களைச் சொல்வதற்கு, குறிப்பாக, விற்பனை வரி போன்ற விஷயங்களைச் சொல்வதற்கு, இது கடைசி வாய்ப்பாக இருக்கிற காரணத்தால், முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால் பல்வேறு பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து சலுகை அளித்திருக்கிற அதே சமயத்தில், அழுகும் பொருளான வெண்ணெய்க்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டா இல்லாத வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவது பற்றி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அப்படி மின்சாரம் வழங்குவதற்கு நீங்கள் உத்தரவிடுகிறபோது வருவாய்த் துறையிலிருந்து தடையின்மைச் சான்றிதழை விரைவாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால்தான், அவர்களுக்கு மின்சாரத்தைக் கொடுக்க முடியும். இல்லையென்று சொன்னால், அந்தப் புறம்போக்கு நிலத்தை நத்தமாக ரீ-கிளாஸிஃபை செய்தால்தான் கொடுக்க முடியும் என்ற நிலைமை வருகிறது. எனவே, தடையின்மைச் சான்றிதழை விரைவாக வழங்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





அதுமட்டுமல்ல, கோவை மாவட்டத்திலே பல்வேறு ஆலைகள் மூடப்படுவதும், ஏற்கெனவே மூடப்பட்டிருந்த ஆலைகள் திறக்கப்படாமல் இருப்பதும் ஆகிய நிகழ்ச்சிகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, மூடிக்கிடக்கின்ற ஆலைகளை உடனடியாகத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, தென்னிந்திய விஸ்கோஸ் தொழிற்சாலை பிரச்சினை. இந்தப் பிரச்சினை பற்றிப் பேசுகிறபோது, அது வழக்கு மன்றத்திலே இருக்கிறது என்று சொல்லலாம். இருந்தாலும்கூட, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுடைய நிலைமையினைக் கருத்திலே கொண்டு, அவர்களுடைய பிரச்சினையைப் பரிவோடு கவனித்து, விரைவாகத் தீர்வு காண்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோவை மாநகரிலே ராதாகிருஷ்ணா மில் என்று ஒரு மில் இருக்கிறது. அந்த மில் மூடப்பட்டு, கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. அந்த மில்லில் பணியாற்றிய தொழிலாளர்கள் 500 பேர்களுக்கு மேல் இறந்தே போய்விட்டார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்கள் மிகவும் கேவலமான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கக்கூடிய நிலைமையில் இன்று இருக்கின்றன. அதையும் பரிவோடு கவனித்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு சிறிய, நெருடலான செய்தியை நான் இங்கே சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அதாவது இன்று காலையிலே கேள்வி நேரத்திலே பிரதாப முதலியார் சரித்திரம்தான், முதல்முதலாக எழுதப்பட்ட நாவல் என்ற கருத்தை இங்கே வெளியிட்டார்கள். எனக்குத் தெரிந்த அளவிலே, அண்மையில் சென்னையிலிருந்து இங்கிலாந்து போனவர்கள், அங்குள்ள ஒரு நூல் நிலையத்திலே ஒரு புத்தகத்தைப் பார்த்திருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தின் பெயர் 'ஆதியூர் அவதான சரித்திரம்'. அந்தப் புத்தகம் எழுதப்பட்ட ஆண்டு 1875. தமிழ்நாட்டிலே முதன்முதலாக வித்வான் சேஷையா என்பவரால் எழுதப்பட்ட அந்த நாவல் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, கோவை, விஜயா பதிப்பகத்தாரால் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் பரிசீலித்து, நல்ல முறையில் ஆய்ந்து, அதை எழுதிய அவர் குடும்பத்தாருக்கு,

வாரிசுதாரர்களுக்கு அரசு ஏதேனும் உதவி செய்ய முடியும் என்று சொன்னால் அதைச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

அடுத்து சட்டமன்றத்திலே பணியாற்றுகிற நிருபர்கள். பொதுவாக தமிழகத்திலே பணியாற்றுகிற அனைத்து அரசு ஊழியர்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களைப்போல இணையான ஊதியம் வழங்க வேண்டுமென்று அரசு முனைந்து இருக்கிறபோது, இங்கே பணியாற்றுகிற நிருபர்களுக்கு அத்தகைய ஊதியம் வழங்கப்படவில்லை என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே தமிழக சட்டமன்ற நிருபர்களுக்கு, மத்திய அரசில், பாராளுமன்றத்தில் பணியாற்றக்கூடிய நிருபர்களுக்கு வழங்குவதைப்போல, இணையான ஊதியத்தை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் இருக்கிற மிகப் பெரிய நூல் நிலையங்களிலே கூட.. கன்னிமாரா லைப்ரரி உட்பட, நான் பலமுறை சென்று பார்த்தேன். எந்த நூல்நிலையங்களிலும், எந்த் நூலை எடுக்கவேண்டும் என்று சொன்னாலும், எல்லா அலமாரிகளையும் தேடி, கடைசியில் தான் எடுக்கமுடியும். காரணம் அங்கே, நூல்களை யார் யார் எழுதினார்கள் என்று, அவர்களுடைய பெயர்ப் பட்டியல் இல்லை: அதேபோல புத்தகங்களின் பெயர்ப் பட்டியலும் இல்லை; இப்படி இருக்கிறது என்று சொன்னால், யாரும் எந்த ஒரு நூலையும் எளிதாக எடுத்திட முடியாது. எனவே, நான் அன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த நூல்நிலையங்களைக் கணினி மயமாக்க வேண்டுமென்று தெரிவித்து, அவ்வாறு செய்தால் எந்த ஒரு புத்தகத்தையும் எளிதில் எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதைச் செய்வதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புத்தகங்களுடைய பெயர்ப் பட்டியல் (Catalogue) போன்றவை எல்லாம் நூலகங்களில் கொடுக்கிறார்கள்.



**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய சொந்த அனுபவம். குமரேச சதகம் என்ற ஒரு நூலை எடுப்பதற்கு ஒரு நாள் போனேன்: அவர்களும் நாள் முழுவதும் தேடி, மறுநாள் அவர்களாகவே எடுத்து என்னுடைய அறைக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த நிலைமையிலே நூல் நிலையங்கள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொரு செய்தி. கோவை நகரில் திருவிழாக் காலங்களில் அல்லது சமய நிகழ்ச்சிகள் நடக்கின்றபோது, யானை ஊர்வலம் நடக்கிறது. எனக்கு ஒரே ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு காவல்துறை அதிகாரி யானை ஊர்வலத்திற்கு அனுமதி கொடுக்கலாம் என்று சொல்கிறார்; இன்னொரு அதிகாரி கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார். ஆகவே இதற்கு எந்தச் சட்டம் வகை செய்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதிகாரிகள் விருப்பத்தைப் பொறுத்துதான் இருக்கிறது. ஆகையினால் சமய நிகழ்ச்சிகளிலே, யானையை அழைத்துச் செல்வதற்கு என்ன சட்டம் இருக்கிறது என்பதைப் பரிசீலித்து அரசு முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தக் கூட்டத் தொடரிலே பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிக்கு அரசு மகளிர் கல்லூரி வேண்டும், அரசுக் கல்லூரி வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்தார்கள். அரசைப் பொறுத்தவரையில், புதிதாக கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அரசிடம் பணம் இல்லை. அதே சமயத்தில் அரசு உதவி பெறாத தனியார் கல்லூரிகளைத் தொடங்குவற்கு அனுமதி அளிக்கின்றபோது, நிறைய நன்கொடை வாங்குகின்ற ஓர் எண்ணம் ஏற்படுகிறது. நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம், அரசே முன்வந்து, அரசுக் கல்லூரிகளில் ஷிப்ட் சிஸ்டத்தைக் கொண்டுவர முடியும் என்று சொன்னால், இந்த நிலைமையைச் சமாளிக்க முடியும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தனியாருக்கும் விடாமல், அரசே புதிதாகத் தொடங்காமல் இந்த நடைமுறையை அமல்படுத்தினால் நன்றாக இருக்கும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர்.

[1997 ஏப்ரல் 26

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட இந்த மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து இருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கையில் 'பல்வகை' என்ற தலைப்பிலேயும், 'பல்வகை மூலதனச் செலவு' என்ற தலைப்பிலேயும், Miscellaneous என்று கருதப்படக்கூடிய முறையில் 'பல்வேறு' வகையான நிதிச் செலவு இடம் பெற்று இருப்பதன் காரணமாக, மூலதனக் கடன் செலவு—இவை எல்லாம் இடம் பெற்று இருப்பதன் காரணமாக பல்வகை என்ற அடிப்படையைப் பயன்படுத்திக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில், அவர்கள் பலகாலமாக வலியுறுத்தி வருகிற பல்வேறு பிரச்சினைகளை, பாலம் கட்டுவதிலே இருந்து சாலை போடுவது, குடிநீர்த் தேவை முதலான இவற்றையெல்லாம் அவர்கள் வலியுறுத்தித் தெரிவித்து இருக்கிறார்கள். இவை குறித்து அந்தந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்கள் உரிய கவனம் செலுத்துவார்கள என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக 6 மானியக் கோரிக்கைகள் அடங்கிய இந்த விவாதத்தில் சட்டப் பேரவைதான் அதிகம் இடம் பெற்றது. அதிலேயும் குறிப்பாக திரு. ஞானசேகரன் அவர்கள் ஏறத்தாழ 25 ஆயிரம் ரூபாய் அளவுக்குப் பிற மாநிலங்களிலே படி வழங்குவதாகவும், இங்கே நம்முடைய மாநிலத்திலே மிகக் குறைவாக வழங்கப்படுவதாகவும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், சட்டமன்றத்திற்கே கிடைத்திருக்கிற பிற மாநிலச் சட்டமன்றங்களினுடைய விவரப் பட்டியல் அடிப்படையில், அங்கே தரப்படுகிற ஊதியமும் படிகளும் சேர்த்து, மகாராஷ்டிராவில் ஊதியமும் சேர்த்து ரூ. 10 ஆயிரம்தான்; ராஜஸ்தானில் ரூ. 9,425; அசாமில் ரூ. 8,200; கர்நாடகாவில் ரூ. 7,500; மத்தியப் பிரதேசத்தில் ரூ. 7,500; உத்தரப்பிரதேசத்தில் ரூ. 7,000; ஆந்திரப் பிரதேசத்தில் ரூ. 7,450; தமிழ்நாட்டில் இதுவரையில் ரூ. 6,000; மிசோரமில் ரூ. 5,500; அரியானாவில் ரூ. 5,500; கோவாவில் ரூ. 4,700; எனவே, அந்த வகையில் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் படியோ ஊதியமோ எந்த மாநிலத்திலும் இல்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்



1997 ஏப்ரல் 26]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே மிசோரமின் சபாநாயகர் அவர்கள் சி.எம்.சி. மருத்துவமனைக்கு வந்து இருந்தபோது அவரைச் சந்தித்தபோது, அப்போதே அவர்கள் ரூ. 10 ஆயிரம் ஆகிவிட்டது; You are equal to Chief Secretary, why are you keeping quiet? என்று என்னை அப்போதே கேட்டார்கள். ஆகவே, நான் சொல்வது எல்லாம், எல்லா மாநிலத்திலேயும் வழங்கக்கூடிய படிகள், அதாவது தொலைபேசிப்படி, போக்குவரத்துப்படி— இந்தப் படிகள் மற்ற மாநிலங்களில் எது எது அதிகமாக இருக்கிறதோ அதை நான் கணக்குப் போட்டு உங்களுக்குக் காட்டினேன். நான் ஒன்றும் இல்லாததைக் காட்டவில்லை. ஆகவே, அதையெல்லாம் கணக்குப் போட்டுச் சொன்னேன். எங்களுக்குச் சம்பளமே வேண்டாம் என்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசாங்கத்தின் துறை மூலமாக வந்த பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படிக்கிறார்கள். நீங்கள் இதைத் திருப்பியும் வலியுறுத்திச் சொன்னீர்கள் என்றால், நான் உரிமைப் பிரச்சினையாக எடுத்துக் கொள்வேன். நீங்கள் தவறான தகவல் சொன்னீர்கள் என்று. உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அண்மையில் நம்முடைய பேரவைச் செயலகத்துக்கு அந்தந்த மாநிலங்களைப்பற்றிக் கிடைத்து இருக்கிற விவரம். ஒருவேளை, அதிகம் இருந்தால்கூட, அதை ஒரு குற்றமாக இங்கே நான் சொல்லவில்லை. அங்கே அதிகமாக இருக்கிறது என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாத வகையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர் அதை வலியுறுத்திச் சொன்னபோது, அது இங்கே ஏற்கப்படக்கூடிய நிலையிலே இல்லை என்ற சூழ்நிலை காரணமாக நான் இந்த விளக்கத்தைச் சொல்ல வேண்டியவனாக இருந்தேன்.

குறிப்பாக இன்று, பேரவைத் தலைவர் அவர்களே சட்டப் பேரவையினுடைய மிகப் பெரிய பொறுப்பான கடமையிலே ஈடுபட்டவர் என்ற முறையில், மாண்புமிகு உறுப்பினர் உரையாற்றிய அடிப்படையில், ஒரு ஆலோசனையை இங்கே வழங்கினார்கள். அந்த ஆலோசனை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அந்த உறுப்பினருக்குத் தரப்படுகிற மாத ஊதியத்தோடு ஈட்டுப்படி என்பது அங்கே Dearness Allowance-ஆக விலைவாசி ஏற்றத்திற்கு ஈடாக வழங்கப்படுகிற படியாக

வழங்கப்படுகிறது. அந்த முறையை இங்கே ஏற்றுக் கொள்ளலாம் என்ற ஓர் ஆலோசனையை வழங்கினார்கள். அதுபற்றி எண்ணிப்பார்த்தபோது ஏற்கெனவே ஈட்டுப்படியாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு 1500 ரூபாய் வழங்கப்படுகிறது. அவர்கள் சொன்ன முறையில் இன்றைக்கு ஈட்டுப்படிக்குப் பதிலாக விலைவாசி ஏற்றப்படி வழங்குவதாக இருந்தால் ஊதியத்திற்கு 175 விழுக்காடு அந்தப் படி வழங்கப்படவேண்டும். அப்படி வழங்குவதாக இருந்தால் ரூ. 1500 என்பது ஏறத்தாழ ரூ. 3500 ஆகும். எனவே பேரவைத் தலைவர் அவர்களே ஓர் ஆலோசனை சொல்லி, அதுவும் பாராளுமன்ற முறையாக இருக்கிறது என்ற அடிப்படையில் அதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்றுக் கொண்டு, ஈட்டுப்படியாக Deamess Allowance என்ற அகவிலைப்படியை ஏற்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் பெறுகின்ற 6000 ரூபாய் என்பது ஏறத்தாழ ரூ.8000 ஆக உயரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் ரயில் பயணப்படியாக 10,000 ரூபாய் வழங்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டார்கள். இது சில மாநிலங்களில் ரூ, 25,000 ஆக வழங்கப்படுகிறது என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். சட்டமன்றக் கூட்டத்துக்கான நம்முடைய ஒவ்வொரு பயணத்திற்கும் பயணப்படியைச் சட்டமன்றச் செயலகத்தின் மூலமாக நாம் பெறுகிறோம். இந்தப் பத்தாயிரம் ரூபாய் என்பது இந்தச் சட்டமன்றத்திற்கு வந்துபோகிற கடமை இல்லாமல் வேறு வகைகளில் அவர்கள் பயணம் செய்ய நேரிட்டால் அப்போது பயன்படுத்திக் கொள்வதற்காக வழங்கப்படுகிறது. எனவே ஒவ்வொரு முறையும் சட்டமன்றத்திற்கு வருகிறபோதும் உரிய விகிதத்தில் படி வழங்கப்படுகிறது என்பதையும் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிலை குறித்துச் சொல்லும்போது அது மறுபரிசிலனை செய்யப்படவேண்டுமென்று பல உறுப்பினர்கள் வலியுறுத்தித் தெரிவித்தார்கள். 1995-வது ஆண்டு திருத்தச் சட்டப்படி குறைந்த அளவாக இருந்தது ரூ.800. ஒரு ஐந்தாண்டுக் காலம் கூட அல்ல. இன்னும் குறைவாக ஓராண்டாக



இருந்தாலும் கூடத் தரப்படுகிறது. இந்த 800 ரூபாய் குறைந்த அளவை ரூ.1250 ஆக உயர்த்துவது என்றும், அவர்கள் 20 ஆண்டு, 25 ஆண்டு வரையில் இருந்தாலும் அதிகபட்சமாக இப்போது ரூ. 1500 என்று இருப்பதை ரூ.2500-ஆக ஒரு ஆண்டுக்கு 100 ரூபாய் வீதம் அதிகப்படியாக இடம்பெற்றிருந்த காலத்திற்கு— உச்சகட்டமாக ரூ. 2500 என்ற அளவில் அந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அகவிலைப்படியை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அறிவித்தார்கள். இது அமைச்சர்களுக்கும் பொருந்துமா என்று விளக்கிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அமைச்சர்களுடைய சம்பளம் குறைவு என்று அமைச்சரவையிலிருந்து இன்னும் ஒரு கருத்து தெரிவிக்கப்படவில்லை. அப்படி தெரிவிக்கப்படுகிற காலத்தில்தான் அது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த உணர்வு உண்டு. முதலமைச்சருக்கு பயந்து யாரும் தெரிவிப்பதில்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய மருத்துவச் செலவுக்காக அவர்கள் வாங்குகின்ற மருந்துகளுக்காகத் தரப்படுகிற தொகை ரூ. 1000 என்பது இப்போது ரூ.2000- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** முன்னாள் உறுப்பினர்களுக்கோ, இன்னாள் உறுப்பினர்களுக்கோ மருத்துவப்படி வழங்குவதை நேரடியாகக் கொடுத்துவிட்டால் நல்லது. அவர்கள் இதற்காக கஷ்டப்படத் தேவையிருக்காது. அதில் உள்ள நடைமுறைகளால் பல பேர் அதைக் கேட்பதேயில்லை. தயவுசெய்து நேரடியாகக் கொடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். Consolidate-ஆக அதைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அதற்கு பில்கள் கொடுக்க வேண்டும்: அதற்கான படிவம் நிரப்ப வேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. படிவம் தேவையில்லை என்று சொல்லி,

பணத்தை நேரடியாகக் கொடுத்துவிடுவதுதான் உறுப்பினர்களுக்குப் பயன் அளிக்கும். பலரால் அந்தப் படிவத்தைக் கொடுக்க முடிவதில்லை. தயவு செய்து அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். . . .படிவமே தேவையில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வது, மேலும் பரிசீலிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. டி. மணி.

*பிற்பகல் 1-10*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகின்ற விடுதியில், சர்க்யூட் ஹவுசில் ஒரு முன்னுரிமை கொடுக்க இதிலே அனுமதிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மணி அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்து ஆலோசிக்கப்படும். ஏனென்றால் ஏற்கெனவே முன்னுரிமைப் பட்டியல் பெரிய பட்டியலாக இருக்கிறது. அதன் காரணமாக பல்வேறு நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கேகூட, வாய்ப்பு குறைவாக உள்ளது. அங்கே அவர்களை விட முன்னுரிமை உள்ளவர்கள் ஏற்கெனவே அந்த இடத்திற்கு வந்து தங்குவதற்குத் தெரிவித்து இருப்பார்களானால், உறுப்பினர்களுக்கேகூட சில நேரங்களில் இடம் கிடைப்பதில்லை. இருந்தாலும் அந்த வரிசையில் எப்படி இடம் பெறச் செய்வது என்பது ஆலோசிக்கப்படும் என்பதை திரு. மணி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'சட்டமன்ற உறுப்பினர்கள் நாள்' கொண்டாடப்பட வேண்டுமென்று ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு அப்படியொரு தனி நாள் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு, சுதந்திர நாள் பொன்விழா ஆண்டு கொண்டாடப்பட இருக்கிறது. அது சுதந்திரதின 50-வது ஆண்டு நிறைவுக்காக, ஆகஸ்ட் 15ஆம் நாள் கொண்டாட வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அதுபற்றித் தகுந்த விளக்கங்கள் பின்னர் தரப்படும்.

அதைப்போல சட்டமன்றத்தினுடைய வைர விழா நாள் கொண்டாட உள்ளோம் - இப்போது 60 ஆண்டாகிறது. இது



1937 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பேரவை. எனவே அந்த அடிப்படையிலே அந்த வைர விழா 14-7-1997 அன்று நிறைவடைய இருக்கிறது. எனவே வைர விழா நாளும் வர இருக்கிறது. அதையும் எப்படி கொண்டாடுவது என்று ஆலோசித்து அதற்குப் பின்னர் தெரிவிக்கப்படும். எனவே, இந்த சட்டமன்றத்திற்குரிய சிறப்பு, விழாக்கள் வருகிற காரணத்தால், உறுப்பினர்களுக்குரிய விழா நிகழ்ச்சியாக அவை அமைய இருக்கின்றன என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போல சட்டமன்றம், அதனுடைய பல்வேறு கடமைகளை நிறைவாகச் செய்வதற்காக, கணினி மயமாக்குவது, கம்ப்யூட்டர் கருவிகளைப் பயன்படுத்துவது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு, 61 லட்சம் ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கி அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இங்கே எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்ததுபோல அதிலே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பேச்சு பதிவு செய்யப்படுவதற்கும் ஒரு ஏற்பாடு இருக்கிறது. அது கணினி மூலமாகப் பதிவு செய்யப்பட்டு, உறுப்பினர்கட்கும் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

இங்கேயுள்ள நூலகம், மழை பெய்தபோது, மழைநீர் பெருமளவு ஒழுகிய காரணத்தால் பாதிக்கப்பட்டு, பல நூல்கள் பாதிக்கப்பட்டன, சட்டமன்ற நூலக வளாகத்தில். அந்த நூலகம் பழுதுபார்க்கப்படவும் அதைப்போல அங்கேயிருக்கிற பழைய ரெக்கார்டுகள் பழுதுபடாமல் அப்படியே பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் சீதள வசதி செய்யப்பட வேண்டுமென்றும் கேட்கப்பட்டு, 23 லட்சம் ரூபாய் செலவில் அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, நூலகம் மேலும் சிறந்த முறையில் பயன்படுவதற்கு வழிவகை காணப்படும். திரு. தண்டபாணி அவர்கள் பேசுகிறபோது, பாராளுமன்ற நூலகத்தில் கிடைக்கிற வசதிகள் எல்லாம் இங்கே கிடைக்கவேண்டும் என்றார்கள். அது எந்த அளவுக்கு இடவசதி கிடைக்கிறது என்பதையும், எந்த அளவுக்கு அலுவலர்களை அதற்காக ஒதுக்க முடிகிறது என்பதையும் பொறுத்து அவை கருதப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே சட்டமன்றத்திலே தற்காலிகமாகப் பணியாற்றுகிறவர்களுக்கு சட்டமன்றம் நடைபெறுகிற நாட்களில் இங்கே பணியுண்டு. மற்ற காலங்களில் இல்லையென்பதற்காக பல உறுப்பினர்கள் அவர்களுக்கு நிரந்தரப் பணி வழங்க வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். இதுகாறும் பேரவை கூடும் நாட்களில் உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் ஒட்டுமொத்தப் பணியின்கீழ் பணியமர்த்தப்பட்டு

வருகிறார்கள். இவர்களுக்கு வயது வரம்போ அல்லது கல்வித் தகுதியோ
நிர்ணயம் செய்யப்படவில்லை. மேலும் இவர்கள் வேலை வாயபபு
அலுவலகத்தின் மூலமாகவும் பணியில். அமர்த்தப்படுவதில்லை. போவை
உறுப்பினர்கள் பரிந்துரைகளின் பேரிலும், விண்ணப்பதாரர்களுடைய
மனுக்களைப் பரிசிலித்தும் இவர்கள் பேரவை கூடும் நாட்களில்
பணியமர்த்தப்படுகிறார்கள். அரசு விடுமுறை நாட்களிலும் மற்றும்
பேரவை கூடாத நாட்களிலும் இவர்களுக்குச் சம்பளம்
வழங்கப்படுவதில்லை. இவர்களுடைய அடிப்படைச் சம்பள விகிதம்
ரூ. 750 என்று கணக்கிடப்பட்டு, இதர படிகளுடன் சேர்த்து, இவர்கள்
பணிபுரிந்த நாட்களுக்கு மட்டும் ஊதியம் வழங்கப்படுகிறது. இவர்களது
பணியை நிரந்தரம் செய்யும் பொருட்டு பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்தத் துறையிடம் கருத்துக் கேட்ட போது, ஆலோசித்த போது,
அத்துறை இவர்களது பணியை நிரந்தரம் செய்ய, இருக்கிற சட்ட
விதிமுறைகள்படி இயலாது என்று கூறியுள்ளது. சட்டமன்றப் பேரவை
வருடத்திற்குத் தோராயமாக 90 நாட்கள் மட்டுமே கூடுகிறது. இந்த 90
நாட்களுக்கு மட்டும்தான் இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க
இயலும். மீதமுள்ள நாட்களில் சட்டமன்றப் பேரவை கூடாததால்,
இவர்களுக்கு ஆண்டு முழுவதும் பணி அளிக்கும் வாய்ப்பு இல்லை.
இருந்தாலும், இவர்களில் இப்போது உதவியாளர்கள் ஒரு நாளைக்கு
ஏறத்தாழ 104 ரூபாய் பெறுகிறார்கள். இந்த 104 ரூபாயோடு மேலும் 15
ரூபாய் சேர்த்து 119 ரூபாயாக உதவியாளர்களுக்கு அந்த ஊதியம்
இனி வழங்கப்படும். இப்போது அலுவலக உதவியாளர்கள் 72 ரூபாய்
பெறுகிறார்கள். அது, மேலும் 10 ரூபாய் அதிகப்படுத்தி 82 ரூபாயாக
வழங்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-15

இங்கே நான் முன்னர் அறிவித்தபோது எம்.எல்.ஏக்கள் பெற
இருப்பது 8 ஆயிரம் ரூபாய் என்று சொன்னேன். அமைச்சர்களுடைய
ஊதியம் 7 ஆயிரம் ரூபாய் என்று இருக்கிறது. இப்போது
உறுப்பினர்களுக்கு 8 ஆயிரம் ரூபாய் கிடைக்கவிருப்பதால்,
அமைச்சர்களுக்கு 9 ஆயிரம் ரூபாய் கிடைக்கிற வகையில் வகை
செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கச்
சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற
உறுப்பினர்களுக்கு 8 ஆயிரம் ரூபாய் என்பதால், அமைச்சர்களுக்கு
ரூ. 9 ஆயிரம். இந்த 9 ஆயிரம் என்பது மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களுக்கும் பொருந்தும். இதை ஊதியம் என்று



வழங்குவதா அல்லது எப்படி மாற்றி வழங்குவது என்பது கருத்திலே இருக்கிறது. அது ஆலோசிக்கப்பட்டு தெரிவிக்கப்படும். துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், கொறடா ஆகியோர்களுக்கு 8,500 ரூபாய் ஊதியம் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாகத் தேர்தலைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். கடந்த சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் சீரிய முறையிலே நடைபெறக்கூடிய நல்ல சூழ்நிலை இருந்தது என்பதும், அதைத் தொடர்ந்து இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னர், உள்ளாட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, நாடெல்லாம் மிகப் பெரிய அளவில் இதுவரையில் இந்த மாநிலம் அப்படி ஒரு பெரிய தேர்தலைச் சந்திக்கவில்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு, மிகப் பெரிய அளவில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் பெரிதும் குறைபாடுகளுக்கு இடம் இல்லாத வகையில், நிறைவாக நடைபெற்றது. இருந்தாலும், ஒன்றிரண்டு இடங்களில் உள்ளாட்சி மன்றப் பொறுப்புகளுக்கு இடைத் தேர்தல் நடைபெற வேண்டி இருக்கிறது. ஏறத்தாழ ஜூன் திங்களுக்குள்ளாக இந்தத் தேர்தல் நடத்தப்படும் என்று அந்தத் துறை சார்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அவையில் அமைதி காக்க வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மத்திய அரசு கொண்டு வந்த சட்டப்படி உள்ளாட்சி மன்றத் தேர்தலில் அதனுடைய மூன்று 'டயர்' அடுக்குகளுக்கான தேர்தல் நடைபெற்றது. அதேபோல் நேர்முகத் தேர்தல் இல்லாமல் சில இடங்களுக்கு மறைமுகத் தேர்தல் - நேர்முகத் தேர்தல் இருந்தாலும் கூட - அவர்கள் எல்லாம் கூடி ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியாத நிலைமை, இப்படிப் பல சிக்கல்கள் இருப்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். தமிழக அரசு ஏற்கெனவே இருந்த முறையிலே உள்ள நன்மைகளை உணர்ந்திருக்கிறது. எந்த ஆட்சி மன்றமாக இருந்தாலும், தேர்ந்தெடுக்கிற ஒரு தலைவர் அங்கே இருக்கிறபோது, அந்த ஆட்சி மன்றத்திலே அமர்கிற உறுப்பினர்கள் சிறப்பாக, பயன்பாடு உடையவர்களாகச் செயல்பட முடியும் என்ற கருத்து அரசுக்கு உண்டு. இருந்தாலும் மத்திய அரசினுடைய சட்டத்தைப் பின்பற்றித்தான் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதன் காரணமாக இந்தத் தேர்தல், சட்டத்திலே திருத்தம் கொண்டு வருவதற்கான ஆலோசனை செய்வதற்கான வாய்ப்பு இல்லாத வகையில் நிறைவேறியிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன இந்தக் கருத்துக்கள்

அரசால் எண்ணிப் பார்க்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிழற்படம் எடுத்து அடையாள அட்டை வழங்குவது என்பது அம்பேத்கர் மாவட்டம், வள்ளலார் மாவட்டம், சேலம் மாவட்டம ஆகியவற்றில் ஒருமுறை நிழற்படம் எடுத்த நிலையிலேயும், இரண்டாவது முறை நிழற்படம் எடுத்த நிலையிலேயும், அதாவது 2 சுற்று எடுத்த நிலையிலே இருக்கிறது. எந்தெந்தப் பகுதியிலே விடுபட்டுப்போன வாக்காளர்கள் இருந்தாலும் அங்கே 3-வது சுற்று நிழற்படம எடுக்கப்பட்டு, அதன் மூலமாக வாக்காளர் பட்டியல் சீர் செய்யப்படும். செம்மை செய்யப்படும். நிறைவான வாக்காளர் பட்டியல் வெளியிடுகிறபோது, அப்போது வருகிற திருத்தங்களும் கருதப்படும். ஆனால் சட்டத்திலே ஒரு நிலையான பாதுகாப்பு இருக்கிறது. நிழற்படம எடுக்க வேண்டும். எடுத்து, அதை அடையாள அட்டையாகப் பயன்படுத்த வேண்டும் என்ற முறை இந்தியத் தேர்தல் ஆணைக் குழு மூலமாக அறிவிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டாலும்கூட வாக்களிப்பவர்கள் இந்த அடையாள அட்டை இருந்தால்தான வாக்களிக்கலாம் என்ற கட்டாயம் இல்லை. பட்டியலில் பெயர் இருக்குமானால், எண் இருக்குமானால், முகவரி இருக்குமானால. வாக்களித்திட உரிமையுண்டு. இருந்தாலும்கூட, அடையான அட்டை வழங்குவதைப் பொறுத்தவரையில், குறிப்பாக நிழற்படம் எடுப்பது என்பது இன்னும் 6 மாத காலத்திலே நிறைவடையும். இப்படி இடையிலே வந்த தேர்தல் காரணமாக, வேறு பல நிலைமைகள் காரணமாக, இடையிடையிலே நிறுத்தப்பட்டாலும்கூட, தொடர்ந்து இந்தப் பணி ஒப்பந்த அடிப்படையிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அது தொடர்ந்து நடைபெற்று இந்த வாக்காளர் பட்டியல் நிழற்படத்தோடு ஒழுங்கு செய்யப்படுகிற முறை காப்பாற்றப்படும். நிலைநாட்டப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

இங்கே திரு. கணேசன் அவர்களும், அதேபோன்று திரு. ஞானசேகரன் அவர்களும் பேசுகிறபோது இங்கே குறிப்பிடாவிட்டாலும்கூட, வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுகிற இடத்திற்கும், வாக்காளர்கள் குடியிருப்பிற்கும் இடையில் அதிகத் தொலைவு இருக்கிற இடங்களை எடுத்துக்காட்டி, அந்த இடங்கள் 3 கல் தொலைவு அல்லது 5



கிலோமீட்டர் தொலைவு இருக்கிறது என்பதால் அவைகள் மாற்றப்பட வேண்டும், வாக்காளர்கள் உடனடியாகச் சென்று வாக்களிக்க வசதியாக அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். அது ஏற்கெனவே தேர்தல் குழுவினால், தேர்தலுக்காக இருக்கின்ற அந்த அலுவலகத்தால் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் பொது மக்களுக்கு வசதியாக அவர்கள் அதிகத் தொலைவு செல்லாமல் பக்கத்திலேயே வாக்களிக்கக் கூடிய முறையில் வாக்குச்சாவடிகள் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு பொதுத் தேர்தலோ, இடைத் தேர்தலோ மறுபடியும் வருகிறபோது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக எந்தெந்த இடங்களில் வாக்குச்சாவடிகள் இல்லை என்ற குறை ஏற்பட்டிருக்கிறதோ, அங்கே வாக்குச்சாவடிகள் அமைப்பதற்கு இன்றுள்ளவற்றிலே சில தேவையான சீர்திருத்தங்கள் செய்து, வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கு அந்தத் துறை தயாராக இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல அகதிகளாக உள்ளவர்களைப் பற்றி இங்கே அதிகம் எடுத்துச் சொல்லாவிட்டாலும்கூட, நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்லாயிரக்கணக்கான அகதிகள் இங்கே வந்து தங்கியிருக்கிற இடங்களில், ஆறு ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் தங்கியிருக்கின்றார்கள். ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் அந்த வீடுகள் கட்டப்பட்டு, அதிலே தங்கியிருக்கிற காரணத்தால் மிகவும் பழுதுபட்ட நிலையில் அகதிகள் முகாம்களில் உள்ள வீடுகள் இருக்கின்றன. ஏறத்தாழ 8,000 வீடுகளைச் சீர்செய்ய வேண்டும், மறுபடியும் புதுப்பிக்க வேண்டுமென்ற முறையில் அதற்காக ஒரு நிதி கேட்கப்பட்டு, மைய அரசு ரூ. 4.65 கோடி ஒதுக்க ஒப்புக்கொண்டிருக்கிறது. நிதி முழுவதும் வரவில்லை என்று சொன்னாலும்கூட, அந்தப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. அந்த ஒதுக்கப்பட்ட நிதியில் 8,000 வீடுகளும், குடிசைகளும், ஓலை மாற்று வேலை செய்து அவர்களுக்கு வழங்கப்படும் என்று நான் அகதிகளின் நிலை குறித்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல் இங்கே கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை மாவட்டப் பிரிவினை காரணமாக தனித்து இயங்குவதிலே உள்ள இடர்ப்பாடு குறித்து திரு. கணேசன் சுட்டிக்காட்டியிருக்கிறார். அந்த கொங்கணாபுரம் பண்டகசாலையும், அந்தப் பண்டகசாலை மூலமாகப் பொருட்கள் பெற்று வினியோகிக்க இருக்கிற நியாய விலைக் கடைகளும்,

சேலம் மையத்திலே இருக்கிற அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக பொருட்களைப் பெற்று வழங்குவதற்கு இப்போது அரசு ஆணையிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது தொடர்ந்து நடைபெறும் மாவட்டப் பிரிவினை காரணமாக இடையூறு ஏற்படாது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல் வேலூரில் தூர்வாரலைப் பற்றி மிக வலியுறுத்தியுள்ளார் திரு. ஞானசேகரன். அது மிகப் பெரும் செலவாகிற திட்டமாக இருந்து, ரூ. 2.8 கோடி தேவைப்படுகிற ஒரு நிலையில் உடனடியாக மேற்கொள்ள முடியாத காரணத்தினாலேயும், அதற்கான உதவித் தொகையை வழங்க வேண்டுமென்ற நிலையிலேயும் உடனடித் தேவைக்காக ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட பணியாக ரூ. 5 லட்சம் செலவிட்டு சில பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதற்கு மேலும் இந்தப் பணி நடைபெறுவதற்கு வேலூர் நகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. உரிய வகையில் நிதி கிடைத்ததும், அந்தப் பெரும் பணி நிறைவேற்றப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் பரிசுச் சீட்டைப் பற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் தந்திருக்கிறார்கள். இதிலே அழிக்கிற சீட்டு (குலுக்கீடு) சுரண்டல் முறை பரிசுச் சீட்டா, எனக்குப் பழக்கமில்லாதது. (சிரிப்பு) சுரண்டல் முறை பரிசுச் சீட்டு என்று வழங்குகின்ற அந்தச் சீட்டு தடை செய்யப்பட்டது. அப்படித் தடை செய்யப்பட்டது தவறு என்று உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து, அந்தச் சீட்டுக்கான தடை நீக்கப்பட்டுவிட்டது. மறுபடியும், உச்சநீதிமன்றத்திலே ஒரு வழக்கு அரசின் சார்பாகப் போடப்பட்டது. உச்சநீதிமன்றமும் அரசாங்கத்தினுடைய நியாயத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது. எனவே, மறுபடியும் எந்த முறையைக் கையாண்டாவது அந்தச் சுரண்டல் முறை பரிசுச் சீட்டு தடை செய்யக் கருதப்படும். தொடர்ந்து முயற்சிக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதேபோல, வெளி மாநிலங்களிலிருந்து இங்கே வந்து விற்கப்படுகின்ற சீட்டுகள் பல வகைகளில், பல ஏமாற்றங்களுக்குக் காரணமாக இருக்கிறது என்ற ஒரு கருத்து இருக்கிறது. அதைப் பற்றிப் புகார்கள் வருமானால், எந்தப் புகாராக இருந்தாலும் இந்த அரசு அதிலே தலையிட்டு, விசாரித்து உண்மைகளை அறியும். எனவே, இந்தப் பரிசுச் சீட்டுகளைப் பற்றிய புகார்கள் எவையாக இருந்தாலும், அவற்றை உடனடியாக



அரசு பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுத்து, அதன் மூலமாக அந்தக் குறைபாடுகளைப் போக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு புதிய விடுதி கட்ட வேண்டும் என்ற ஒரு கருத்தும், புதிய சட்டமன்றமே கட்ட வேண்டும் என்ற ஒரு கருத்தும் சேர்ந்து இரண்டு கருத்துக்கள் இங்கே இடம் பெற்றன. பாராளுமன்றம், சட்டமன்றம் என்று எவையாக இருந்தாலும் அந்தச் சட்டமன்றத்திற்கு இருக்கிற வரலாற்றுச் சிறப்பு அந்த சட்டமன்ற இடத்திற்கும் சேர்ந்து அமைந்துவிடுகிறது. இங்கிலாந்து நாட்டிலே இருக்கின்ற பாராளுமன்றம் ஏறத்தாழ அந்தப் பாராளுமன்றத்தினுடைய உள் இடம், இந்தச் சட்டமன்றத்தின் அளவுக்கு அல்லது இதைவிடச் சற்றுதான் பெரியதாக இருக்கும். பல உறுப்பினர்கள் அமர்வதற்கே இடம் கிடையாது. மொத்தம் 500 உறுப்பினர்கள் இருப்பார்களேயானால், எல்லோருமே வந்திருப்பார்களேயானால், அதில் 300 பேர் அமர்ந்து இருப்பார்கள், 200 பேர் நின்று கொண்டு இருப்பார்கள். அந்த அளவுக்கு, அங்கே இன்ன இடம் இன்னாருக்கு என்று குறிப்பிட்டு வரையறுக்கப்பட முடியாத அளவுக்கு அந்தப் பாராளுமன்றம் ஒரு பாரம்பரிய வரலாற்றோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒருவேளை இன்னும் ஒரு 34 அல்லது 40 உறுப்பினர்கள் அதிகமானாலும்கூட இங்கே வழிகாண முடியும். சில உறுப்பினர்கள், ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு 7 உறுப்பினர் என்பதற்கு பதிலாக 8 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்றுகூட ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள். அப்படியெல்லாம் 8 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று கருதினாலும்கூட, இந்த மன்றத்தையே அதற்கு ஏற்றதாக உருவாக்கிக் கொள்ள முடியுமானால், நமக்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு, ஒரு வரலாற்றுப் பின்னணி. இன்னும் சொல்லப்போனால், அதிலே ஒரு பெருமை இருக்கும் என்று நான் கருதுகிறேன். இருந்தாலும், பாராளுமன்றத்திலே ஏற்கெனவே ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு கி.பி. 2000 வரையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதியினுடைய எண்ணிக்கையையோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதியினுடைய எண்ணிக்கையையோ உயர்த்தக் கூடாது என்று ஒரு தடை விதிக்கப்பட்டுவிட்டது. அதனாலேதான், தொகுதியை மாற்றி அமைக்கிற குழுகூட இவ்வளவு நாளும் அமைக்கப் பெறவில்லை. கடந்த 15, 20 வருடங்களாக அக்குழு அமைக்கப் பெறவில்லை. இதிலே திருமதி பொன்னம்மாள் அவர்கள் சொன்னதாக

ஒரு கருத்தை திரு. வல்லரசு அவர்கள் தெரிவித்ததைப் போல, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு தொகுதி ஒதுக்கியிருந்தால் அவர்களுக்கே தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறது. அதே தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பக்கத்துத் தொகுதியிலே, அவர்கள் தனித் தொகுதி என்ற உரிமையைப் பெற முடியாத நிலைமை. இவையெல்லாம் இப்பொழுது அண்மையிலே பாராளுமன்றத்திலே கொண்டு வந்த ஒரு சட்டத்தின்படி, பரிசீலிப்பதற்கான ஒரு வாய்ப்பாக, தொகுதிகளை எல்லாம் ஆய்வு செய்து தீர்மானிக்க குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது. அப்படி நியமிக்கப்படுமேயானால், வருகிற 2001 ஆம் ஆண்டில் தேர்தல் வருகிறபோது, இந்தப் புதிய தொகுதிகள் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். நல்லவேளையாக மத்தியிலே புதியதொரு அரசு வந்து அந்தப் பாராளுமன்றமும் நீடிக்கப்படுகிற காரணத்தால், இந்தத் தேர்தல் தொகுதி குறைபாடுகள் நீங்குவதற்கு வாய்ப்பு கிடைக்குமென்று நம்புகிறேன்.

வாக்காளர்களை, வாகனங்களில் அழைத்துப்போக, எந்தச் சட்டத்திலேயும் இடம் கிடையாது. அதை அரசாங்கமும் செய்ய முடியாது. எனவே, இப்படிப்பட்ட பல ஆலோசனைகள் இங்கே வழங்கப்பட்டிருந்தாலும், இவைகளையெல்லாம் அரசு கருத்திலே கொள்ளும் என்று கூறி. இந்த மானியங்களை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நானும் இந்த வகையிலே பதில் சொல்வதற்கு எனக்கு ஒரு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்து நிறைவு செய்கின்றேன்: வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இப்பொழுது நேரம் 1.30 கில்லட்டின் நேரம்.

பிற்பகல் 1-30

## (அ) கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 1307,90,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 42 - பல்வகை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42 - பல்வகை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.



**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 647,53,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 61 - பல்வகை மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 61 - பல்வகை மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 438,50,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



## (ஈ) கோரிக்கை எண் 62 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 62 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 402,42,08,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (உ) கோரிக்கை எண் 7 - மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7 - மாநிலச் சட்டமன்றம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.



**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை. திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 6,69,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஊ) கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8 - தேர்தல்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி இருக்கையில் இல்லை. திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 6,40,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

### (இ) நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு. அறிமுகம் செய்தல். 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

[பேரவைத் தலைவர்] [1997 ஏப்ரல் 26

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மேதகு ஆளுநரின் தேநீர் விருந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாலை 5.30 மணியளவில் மேதகு ஆளுநர் அவர்கள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தேநீர் விருந்து வழங்குகின்றார்கள் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (28-4-97) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

- ஏதுமில்லை -



1997 ஏப்ரல் 26]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

175. மானியக் கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

176. மானியக் கோரிக்கை எண் 41 - விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய சலுகைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

177. மானியக் கோரிக்கை எண் 42 - பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

178. மானியக் கோரிக்கை எண் 61 - பல்வகை மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

179. மானியக் கோரிக்கை எண் 62 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

180. மானியக் கோரிக்கை எண் 8 - பொதுத் தேர்தல்கள் பற்றிய வரைவு உரை மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

181. மானியக் கோரிக்கை எண் 8 - ஊராட்சி தேர்தல்களுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

182. சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் மீது சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.

183. சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் மீது சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. ஆர். சொக்கர் அவர்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.

## இணைப்பு-1

*(214 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### கோரிக்கை எண் 41

### ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்க குறிப்பு - 1997-98

இக்கோரிக்கையில் அரசுப் பணியாளர்கள், மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோரைப் பொறுத்தமட்டிலான ஓய்வூதியங்கள், குடும்ப ஓய்வூதியம், பணிக்கொடை வழங்குதல், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்கி வழங்குதல், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் கீழ் அரசு அளிக்கும் பங்குத் தொகைகள் முதலான வகையில் ஏற்படும் செலவினங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மாநிலத்தில் 31-12-1996-ஆம் நாள் நிலவரப்படி 3,70,218 பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். அதன் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியம் பெறும் பணியாளர்கள். | 1,51,042 |
| 2. | ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 53,252 |
| 3. | அரசுப் பணியாளர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 79,077 |
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள். | 26,346 |
| 5. | ஏனைய வகையில் ஓய்வூதியம் பெறுபவர்கள்* | 60,501 |
| | மொத்தம் .. | **3,70,218** |

2. ஓய்வு கால நன்மைகளைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு, அதன் பணியாளர்களுக்குப் பின்பற்றும் அதே நடைமுறைகளையே

(* இதில் சுதந்திரப் போராட்ட ஓய்வூதியர்களும் அடங்குவர்.)

மாநில அரசும் பின்பற்றுகிறது. ஓய்வூதியம் ஆற்றிய பணிக்கான பணிக் கொடை, இறப்பு பணிக்கொடை, பணிக்கொடைக்கான உச்ச வரம்பை உயர்த்துதல் ஆகியவற்றைக் கணக்கிடும் நடைமுறை போன்று பல்வேறு ஓய்வுகால நன்மைகளை மாநில அரசு மத்திய அரசைப் பின்பற்றி திருத்தியமைத்துள்ளது.

3. இக்கோரிக்கையில் கீழ்காணும் இரு பெருந் தலைப்புகள் அடங்கியுள்ளன:-

| | (ரூபாய்) |
|---|---|
| 2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் (அனுமதித்தது). | 13,00,17,79,000 |
| 2235. சமூக பாதுகாப்பும் நலனும்- 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் (அனுமதித்து). | 7,72,46,000 |
| மொத்தம் - | **13,07,90,25,000** |

## 4. ஓய்வூதியம்:

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப்
பணிபுரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர். 30-6-1996
வரை ஓய்வு பெறும் நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத கால
அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு என்ற ஒரே
சீரான வீதத்தில் ஓய்வூதியம் கணக்கிடப்பட்டது. உயரளவாக 33
ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம்
அனுமதிக்கப்பட்டது. 33 ஆண்டுகளுக்கு குறைவான தகுதிப்பணி
உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம்
குறைக்கப்படும். குறைந்த அளவு ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ரூ.375/-
ஆகும். உயரளவு ஓய்வூதியத்திற்கு உச்சவரம்பு ஏதுமில்லை. 1-7-1996
முதற்கொண்டு முழு ஓய்வூதியம் பெறும் தகுதி பணிக்கால வரம்பினை
33 ஆண்டுகள் என்று உள்ளதை 30 ஆண்டுகள் என இவ்வரசு
குறைத்துள்ளது. ஓய்வுபெறும் பொழுது கடைசியாக பெறும் மாத
ஊதியத்தில் 50 விழுக்காடு அல்லது ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர்
கடைசி 10 மாத கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50
விழுக்காடு இதில் எது அதிகமோ அந்தத் தொகையையே ஓய்வூதியமாக
நிர்ணயித்தும் மேலும் இச்சலுகையினையும் 1-7-1996 முதல்
கொடுக்குமாறும் இவ்வரசு ஆணையிட்டுள்ளது.





### (i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை:

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவு பெற்ற ஒவ்வொரு ஆறுமாதப் பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்கான ஒரே நேரத்தில் வழங்குகிற ஒட்டு மொத்தத் தொகையாகும். அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடைக்கும் கூடுதலாக இத்தொகை வழங்கப்படுகிறது.

இதற்குக் குறைந்த அளவு அல்லது உயரளவு வரம்பு ஏதுமில்லை.

### (ii) இறப்புப் பணிக்கொடை:

பணியில் இருக்கும்போது மரணமடைகின்றவர்கள் நேர்வில் பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:-

| பணிக்காலம். | பணிக்கொடையின் அளவு. |
|---|---|
| 1. ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இருமடங்கு |
| 2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |
| 3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு. |
| 4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் 33 மடங்கு மாத ஊதியத்திற்குட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறுமாதத்தின் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்பு பணிக்கொடை எந்த இனத்திலும் ரூ. 2.50 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது. |

(iii) ஓய்வுகாலப் பணிக்கொடை:

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் ஓய்வு ஊதியத் தகுதி பெறும் பணியை முடித்திருந்தால் அவர் ஓய்வு பெறும்போது மாத ஊதியத்தில், 16 1/2 மடங்கு என்ற அதிக அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத் தொகை ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. உயரளவு ஓய்வுக்காலப் பணிக்கொடையின் உச்ச வரம்பு ரூ.1 இலட்சமாக இருந்தது. இதனை மைய அரசு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக 1-4-1995 முதல் உயர்த்தியுள்ளது. முந்தைய அரசு இச்சலுகையை 1-10-1995 முதல்தான் வழங்க ஆணையிட்டுள்ளது. ஆனால், இவ்வரசு பதவியேற்ற பிறகு இச்சலுகையை மைய அரசு அலுவலர்களுக்கு அளித்துள்ளதுபோல் 1-4-1995 முதல் முன் தேதியிட்டு வழங்க ஆணையிட்டுள்ளது.

## 5. குடும்ப ஓய்வூதியம்:

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வு பெற்ற பின்னரோ இறந்து விட்டால் அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்தால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம பெறுவதற்குத் தகுதி பெற அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டுக்காலம் பணியாற்றி இருக்க வேண்டும். மேலும் அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும் போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும், குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதிபெற அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும் 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் இறந்து விட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு ஒரே வீதத்தில் அதாவது அவ்வப்போது அனுமதிக்கப்படும் குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.



குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.375/-

அதிகபட்ச குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,250/-

குடும்ப ஓய்வூதியம் விதவைக்கு/மனைவியை இழந்த கணவனுக்கு, அவர்கள் மறுமணம் செய்து கொள்ளும் வரை அல்லது இறக்கும்வரை இதில் எது முந்தியதோ அதுவரை வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு இந்த குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய குழந்தைகளுக்கு 25 வயது வரை அளிக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மன நலக்குறைவு அல்லது மனநலமின்மையுடைவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது இயலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டும்.

## 6. கருணைத் தொகை வழங்குதல்:

1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்ற/பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட, உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பை சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட கழகப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு (இவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்) 31-12-1990 முதற்கொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ.150/- கருணைத் தொகை அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசு அவ்வப்பொழுது அளிக்கும் அகவிலைப்படியும் அவர்கள் பெறத் தகுதியுடைவர்கள்.

## 7. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக அளித்தல்:

ஓய்வூதியத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை ஒட்டு மொத்தமாகப் பெற ஓய்வூதியம் பெறுபவர்கள் தகுதியுடையவர் ஆவர். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவ பரிசோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெறும் நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக் கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற

[1997 ஏப்ரல் 26

நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதமோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு முழுப்பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் வழங்கிட அரசு அனுமதியளித்துள்ளது.

## 8. ஏனைய ஓய்வுக்கால நன்மைகள்:

(i) மத்திய அரசு பின்பற்றும் நடைமுறைக்கேற்ப ஆண்டிற்கு இருமுறை (அதாவது ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய நாட்களிலிருந்து) அகவிலைப்படி வழங்கப்படுகிறது. பணிபுரியும் பணியாளர்கள் பெறுவது போலவே, ஓய்வூதியம் பெறுபவர்களும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி தவணைத் தொகை பெறுகிறார்கள்.

(ii) ஓய்வூதியம் பெறுவோருக்கு/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு திங்களொன்றுக்கு ரூ.30/- மருந்துவப்படி அனுமதிக்கப்பட்டது. இவ்வரசு, மருத்துவப்படி வீதத்தை, 1-12-1995 முதல் முன்தேதியிட்டு திங்களொன்றுக்கு ரூ.30/-லிருந்து ரூ.50/- ஆக அதிகரித்துள்ளது.

(iii) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக அதிகப்பட்சமாக 240 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து விடுப்புக் காலச் சம்பளம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் 180 நாட்களுக்கு மட்டும் விடுப்புக் காலச் சம்பளத்தில் வீட்டு வாடகைப்படியும் நகர ஈட்டுப்படியும் இதுவரை வழங்கப்பட்டு வந்துள்ளது. மீதி 60 நாட்களுக்குண்டான விடுப்புக் காலச் சம்பளத்தில் வீட்டு வாடகைப்படியும், நகர ஈட்டுப்படியும் வழங்கப்படமாட்டாது. ஆனால் இவ்வரசு 240 நாட்கள் ஈட்டிய விடுப்பிற்கும் வீட்டு வாடகைப்படியும் நகர ஈட்டுப்படியும் 1-7-1996 முதல் வழங்க ஆணையிட்டுள்ளது. மேலும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பில் (Half Pay Leave on Private Affairs) 90 நாட்களுக்கு மிகைப்படாமல், 50 விழுக்காடு விடுப்பினை ஒப்படைப்பு செய்து விடுப்பு கால முழுச் சம்பளம் வழங்கும் ஒரு புதிய சலுகையை 1-7-1996 முதல் வழங்க இவ்வரசு ஆணையிட்டுள்ளது. மாநில அரசில் பணிபுரியும் அனைத்திந்திய பணிகளைச் (All India Services) சார்ந்த அலுவலர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்தும்.

(iv) ஓய்வு பெறும் பணியாளர் ஓய்வு பெற்ற பின்னர் தங்களுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க



1997 ஏப்ரல் 26]

விழையும் ஊருக்கு செல்வதற்கான பணிமாற்ற பயணப்படி பெற அனுமதிக்கப்படுவர்.

(v) 1-6-1988-ஆம் நாளில் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வு காலப் பயன்களைக் கணக்கிடும்போது, சம்பள வீதத்தைப் பொறுத்து அடிப்படை சம்பளத்தில் 13 விழுக்காடு / 9 விழுக்காடு / 8 விழுக்காடு அகவிலைச் சம்பளமாக கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்ற சலுகையை அரசு வழங்கியுள்ளது. 1-10-1995-ஆம் நாளில் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்களுக்கு இறப்பு-ஓய்வுகாலப் பணிக்கொடையைக் கணக்கிடும் போது 97 விழுக்காடு / 73 விழுக்காடு அகவிலைப்படியை அகவிலைச் சம்பளமாக சம்பளத்துடன் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்ற சலுகையை அரசு வழங்கியுள்ளது. மேற்கூறிய சலுகையை மத்திய அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கப்படுவது போன்று 1-4-1995 முதற்கொண்டு முன் தேதியிட்டு வழங்க இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

(vi) அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களும் ஒரு திங்களுக்கான ஓய்வூதியத் தொகை அல்லது ரூ.500/-இவற்றுள் எது குறைவானதோ அத்தொகையை பண்டிகை முன்பணமாகப் பெறத் தகுதியுடையவராவர்.

(vii) திங்களொன்றுக்கு ரூ.400-க்கு மிகாமல் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அத்தொகை அரசு செலவில் பணவிடை மூலமாக அனுப்பி வைக்கப்படுகிறது.

(viii) ரூ.400/-க்கும் அதிகமாக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர் ஓய்வூதிய முன்னோடித் திட்டத்தின்படி தனியார் வங்கிகள் உட்பட ஏதேனும் ஒரு வங்கியின் மூலமாக அல்லது பொதுத்துறை வங்கித் திட்டத்தின்படி ஏதேனும் ஒரு பொதுத்துறை வங்கியின் மூலமாக அத்தொகையைப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(ix) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகை மற்றும் அகவிலைப்படியுடன் மாநில அரசின் அகவிலைப்படியும் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(x) அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் ஏனைய ஓய்வூதியம் பெறுவர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் பொங்கல் பரிசாக ரூ.100 வழங்கப்பட்டுள்ளது.

(xi) தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெறவும் அனுமதிக்கப்படுகிறது.

[1997 ஏப்ரல் 26

**9. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்:**

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்குக் கிடைப்பது போன்ற ஓய்வு காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

**10. ஓய்வூதியம் பெறுவோரின் குறை தீர்ப்பு பிரிவு:**

ஓய்வூதியம் பெறுவோரின் குறை தீர்ப்புப் பிரிவு ஒன்று நிதித் துறையில் செயல்பட்டு வருகிறது.

**11. ஓய்வூதிய இயக்ககம்:**

ஓய்வூதியம் பெறுவோரின் நலனைக் கவனிக்க ஓய்வூதிய இயக்ககம் என்னும் துறை ஒன்று *1-9-1994* முதல் செயல்பட்டு வருகிறது.

**12. தமிழ்நாடு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் பணியாளர்கள் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்துவதன் மூலம், சிறப்பு மருத்துவச் சிகிச்சை/அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக ஓய்வூதியம் பெறுவோருக்கு நிதியுதவி அளிக்கும்பொருட்டு, *1-7-1995*-ஆம் நாள் முதற்கொண்டு தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை இவ்வரசு *1-4-1997* முதல் மாநில அரசில் பணிபுரியும் அனைத்திந்திய பணிகளை (All India Service) சார்ந்த ஓய்வூதியதாரர்களுக்கும் விரிவுப்படுத்தியுள்ளது.

**13. இடைக்கால நிவாரணம்:**

உள்ளாட்சி மன்றங்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் ஓய்வூதியம் பெறுவோர்/குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் உட்பட மாநில அரசு ஓய்வூதியம் பெறுவோருக்கும்/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கும் பங்குத் தொகை செலுத்தும் வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் கீழ் வருகின்ற மாதமொன்றுக்கு ரூ.150/-கருணைத் தொகை பெறுகின்ற இறந்துபோன பணியாளரின் குடும்பங்களுக்கும்/ ஓய்வூதியம் இல்லாத மாநில அரசு முன்னாள் மாவட்ட வாரிய பணியாளர்களுக்கும் இதுவரையிலும் அரசு மூன்று தவணைகள் இடைக்கால நிவாரணம் அனுமதித்துள்ளது.



1997 ஏப்ரல் 26]

**14. தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்:**

இவ்வரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை *1-1-1997* முதல் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம்வரை ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் ஒரே சீராக ரூ.20 வீதம் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்கு பிடித்தம் செய்யப்படும். இந்த நிதி *1-1-1997*-லிருந்து 12 மாதங்கள் கழித்து செயல்படுத்தப்படும். இந்த நிதிக்கு ஓர் ஆண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூ.25,000/- வழங்கப்படும்.

**15. ஓய்வு காலப் பயன் குறித்த செலவு:**

கடந்த மூன்றாண்டுகளில் இக்கோரிக்கையின் கீழ் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை ஓய்வு காலப் பயன் குறித்த செலவு ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு | ஓய்வூதியம் பெறுவோரின் மொத்த எண்ணிக்கை* | ஓய்வூதியம் பெறுவோர் குறித்த மொத்தச் செலவு (ரூ. கோடியில்) | அதிகரிப்பு விழுக்காடு |
|---|---|---|---|
| *1995-96* | *3,46,007* | *792.96* | *23.62%* |
| *1996-97* | *3,62,072* | *1078.51* (திருத்த மதிப்பீடு) | *36.01%* |
| *1997-98* | *3,70,218* | *1,307.90*** (வரவு-செலவு திட்ட மதிப்பீடு) | *21.27%* |

* ஏனைய வகையில் ஓய்வூதியம் பெறுபவர்களையும் சேர்த்து.

** மத்திய சம்பளக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஓய்வூதியத்தைத் திருத்தியமைப்பதற்கான நிதி ஒதுக்கம் இதில் அடங்காது.

[1997 ஏப்ரல் 26

## விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் உரிய ஒய்வூதியங்களும் ஏனைய சலுகைகளும்

**மானியக் கோரிக்கை எண் 41.**

## 1997-98

*"2235 — சமூகப் பாதுகாப்புநலன் — 60. ஏனைய சமூகப் பாதுகாப்புநலத் திட்டம் — 102 சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் - I. திட்டத்தில் சேராதது — ஏ.எப். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கும் ஓய்வூதியம் முதலியவை.*

### கொள்கை விளக்கக் குறிப்பு

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிவர்களுக்கும், அவர்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கும், மாநில அரசாலும், மத்திய அரசாலும் ஓய்வூதியங்கள் வழங்கப்படுகின்றன.

விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட நாட்டின் பெருமக்களுக்கு நிதி உதவி வழங்குவது குறித்து மாநில அரசு பரிசிலனை செய்தது. 1942-ஆம் ஆண்டு முதல் 1944-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் நடைபெற்ற விடுதலை தொடர்பான பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கும், சிறைதுன்பம் அடைந்தவர்களுக்கும், சிறையில் அடைபட்டவர்களுக்கும், கொல்லப் பட்டவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை பொதுத் (பொது-இ) துறையின் 28-9-1966-ஆம் நாளிட்ட 2064-ஆம் எண் அரசாணையில், மாநில அரசு அறிவித்தது. இந்த ஓய்வூதியத் திட்டம் 1-10-1966 முதல் செயலுக்கு வந்தது.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்களும் அல்லது காவல் கைதியாக இருந்தவர்களும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது கொலை செய்யப்பட்டவர்களும், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும்,



1997 ஏப்ரல் 26]

காவலர் தடி அடியிலும் கை, கால் இழந்து நிரந்தரமாக இயலாமை உற்றவர்களும் அரசியல் ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர்களாக இருந்தனர். பிறகு, இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியோரும், 1946-ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித் திட்ட வழக்கில் சிறைத்தண்டனை பெற்றவர்களும், அரசியல் ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர்கள் என அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட சிறை தண்டனைக் கால அளவான மூன்று மாதகால அளவு 1-4-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. அரசியல் ஓய்வூதியம் பெறுவதற்கு ஆரம்ப காலத்தில் வருமான வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. அந்த வருமான வரம்பு 11-3-1983 முதல் நீக்கப்பட்டது.

அரசியல் ஓய்வூதியம் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் நீதிமன்ற ஆணையின் (அல்லது) சிறைத்துறை ஆவணத்தின் பகுதி நகல் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். பின்னர் முன்னாள் நாடாளுமன்ற (அல்லது) சட்டமன்ற உறுப்பினர் வழங்கும் சக-கைதி சான்றிதழ்கள் சிறைத்தண்டனை பெற்றதற்கான ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இருப்பினும் பொதுத்துறையின் (அரசியல் ஓய்வூதியம்-2) 16-11-1988-ஆம் நாளிட்ட அரசு (நிலை) எண் 2015-ன் படி இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. அதன்படி 15-10-1988 அன்றிலிருந்தவாறு விண்ணப்பதாரரின் வயது 70 அல்லது அதற்கு மேற்பட்டு இருக்க வேண்டும். சிறைச்சான்றிதழ் இல்லாத நிலையில், மேற்படி அரசாணைப்படி, சககைதிச் சான்றிதழ் அளிக்க அரசால் அங்கீகரிக்கப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்களில் எவரேனும் இருவரிடமிருந்து, சக கைதிச் சான்றிதழ்களைப் பெற்று அனுப்ப வேண்டும். விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்றவர்கள் அனைவரும் ஒரே சிறையில் அடைக்கப்படுவதில்லை. ஆகையால், சக கைதிச் சான்றிதழ் பெறுவதில் விடுதலைப் போராட்ட வீரர்கள் அடைந்த இடர்பாடுகள் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஆகவே, அரசு பொதுத் (அரசியல் ஓய்வூதியம்-2) துறையின் 7-2-1996 ஆம் நாளிட்ட 30-ஆம் எண் அரசாணைப்படி சககைதிகள் சான்றிதழை ஏற்கும் நடைமுறையில் சில மாற்றங்களைச் செய்தது. அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரியைத் துணைத் தலைவராகவும், சில பிரபல தியாகிகளை உறுப்பினர்களாகவும், இரண்டு பிரபல தியாகிகளைச் சான்றுரையாளர்களாகவும் கொண்டு, மாவட்ட

[1997 ஏப்ரல் 26

அளவிலான சீராய்வுக் குழு அமைக்கப்பட்டது. மேற்படி குழு செயல்படுவது குறித்து வழிகாட்டிக் குறிப்புகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, விடுதலைப் போராட்ட வீரர் தன்னுடன் சிறைத் தண்டனை அனுபவித்த சக கைதி சிறையில் அடைபட்டிருந்த கால அளவைக் குறிப்பிட்டு, அந்த மாவட்டத்திலுள்ள சான்றுரை அளிக்க அதிகாரம் பெற்ற ஒருவரிடமிருந்து சக கைதிச் சான்றிதழ் பெற வேண்டும்.

வரையறுக்கப்பட்ட படிவத்தில் அமைந்த விண்ணப்பம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும். அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப் பரிசீலிக்கப்படும்.

அரசியல் ஓய்வூதியதாரர், தமது மரணத்திற்குப் பின் தனது மனைவியை/கணவனை தொடர்ந்து ஓய்வூதியம் பெற வாரிசாக நியமனம் செய்யலாம்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியம் அவ்வப்போது கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டு வந்துள்ளது :—

| | கால அளவு. | ஓய்வூதியத் தொகை. ரூபாய். |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 04-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 1000/- |
| 9. | 01-09-1995 முதல் | 1500/- |



1997 ஏப்ரல் 26]

இதனைத் தவிர, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோர்க்குப் பின்வருமாறு மாநில அரசு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது :—

| | | ரூபாய் |
|---|---|---|
| 1. | 15-08-1972 முதல் | 75/- |
| 2. | 25-01-1981 முதல் | 100/- |
| 3. | 01-08-1992 முதல் | 250/- |

மத்திய அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் நீண்ட நாளைய கோரிக்கையைக் கருதிப் பார்த்த பின்னர், அவர்களுக்கு வழங்கப்படும் மாநில அரசு ஓய்வூதியத் தொகையை 1-4-1997-ஆம் நாள் முதல் 250 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசின் ஓய்வூதியம் பெற்றுவருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்தால் இந்த ஓய்வூதியத் தொகையானது, அவரது மனைவிக்கு/கணவருக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:—

| | கால அளவு. | ஓய்வூதியத் தொகை. (மாதமொன்றுக்கு ரூ.) |
|---|---|---|
| 1. | 01-10-1966 ஆம் நாளிலிருந்து | 50/- |
| 2. | 15-08-1972 „ | 75/- |
| 3. | 01-04-1979 „ | 100/- |
| 4. | 25-01-1981 „ | 150/- |
| 5. | 10-06-1986 „ | 250/- |
| 6. | 01-08-1989 „ | 350/- |
| 7. | 01-01-1991 „ | 400/- |
| 8. | 01-08-1992 „ | 500/- |
| 9. | 01-09-1995 „ | 750/- |

[1997 ஏப்ரல் 26

நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு, குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி, அவர்களுக்கு அல்லது அவர்களது வாரிசுகளுக்கு சிறப்பு மொத்த மானியங்களும், ஓய்வூதியமும் அரசு வழங்கியது. 29-8-1996 வரையில் சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் சுமார் 202 பேருக்கு ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 150/- ஓய்வூதியமும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான மற்றும் முதுநிலை வாரிசுதாரர்கள் 9 பேருக்கும் மாதமொன்றுக்கு 300 ரூபாயும் வழங்கப்பட்டது. இவ்வரசு ஆட்சிக்கு வந்தபிறகு சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்கள் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோரது வாரிசுகளுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையானது, 30-8-1996-ஆம் நாளிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

## (அ) மருத்துவ வசதிகள்:

மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது இவ்விரு அரசின் ஓய்வூதியங்களையும் பெற்றுவருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு/விதவைகளுக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்கு 1-8-1990-ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 15/- மருத்துவப் படி வழங்கப்படுகிறது.

மத்திய/மாநில அரசு ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள், அரசு மருத்துவமனைகளில் 'பி' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவ சிகிச்சை பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மன வளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்கும் நேர்வில், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழக்கமாக அனுமதிக்கப்படுகின்ற இலவச மருத்துவ சிகிச்சை வசதியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 26]

## (ஆ) கல்விச் சலுகை:

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயின்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன் பேத்திகளுக்கு கல்விக் கட்டணச் சலுகையும் படிப்புதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

மேலும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/ பேரன் பேத்திகளுக்கு தொழில்/தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; அதாவது—

(1) குழந்தைகளுக்கு 1980-81-ஆம் ஆண்டிலிருந்து பொறியியல் பட்டப்படிப்பில் (முதலாவதாண்டு) ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) பின்வரும் முன்னுரிமை அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன:-

(அ) விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள்;

(ஆ) விடுதலைப் போராட்ட வீரர்களின் பேரன், பேத்திகள்.

(3) விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்திகளுக்கு பி.எஸ்.எம்.எஸ். படிப்பில் ஓரிடமும் பி.ஹெச்.எம்.எஸ். படிப்பில் ஓரிடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(4) விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு பேரன், பேத்திகளுக்கு பல்தொழில் நுட்ப பயிலகத்திலும் (பாலிடெக்னிக்) சிறப்புக் கல்வி நிறுவனங்களிலும் ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## (இ) வீட்டு வசதிகள்:

தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரியம் ஒதுக்கீடு செய்த வீடுகளில்/ மனைகளில்/அடுக்குமாடி வீடுகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 3 சதவீதத்திலும், சலவையாளர்/ நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவீதத்திலும் மற்றும் பொது மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவீதத்திலும், ஒரு சதவீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 26

**(ஈ) போக்குவரத்து வசதிகள்:**

1996-ஆம் ஆண்டு நவம்பர் திங்களுக்கு முன்னர் மத்திய/மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத்தைப் பெற்று வந்தவர்களுக்கு மட்டுமே மாநில அரசின் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிகள் வழங்கப்பட்டன. இவ்வரசு, மேற்குறிப்பிட்ட சலுகையை விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களின் விதவைகளுக்கும் மற்றும் அவர்களுடைய சட்டப்படி வாரிசுகளுக்கும் போக்குவரத்துத் துறையின் 5-11-96-ஆம் நாளிட்ட 240-ஆம் எண் அரசாணையில் நீட்டித்து ஆணை வெளியிட்டுள்ளது.

**(உ) ஈமச்சடங்குகளுக்குச் செலவுகள்:**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்து போவதையடுத்து, ஈமச்செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய சட்டப்படியான வாரிசுதாரருக்கு ரூ. 1000 (ரூபாய் ஓராயிரம் மட்டும்) உடனடியாக வழங்கப்படுகிறது. மாநில அரசின்/மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தத்தக்கதாகும். இத்தொகை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மூலமாக ரொக்கமாக வழங்கப்படும். இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரருக்கு மரியாதை செலுத்தும்வகையில் வட்ட ஆட்சியர் அல்லது அவரது பதவித் தரத்திற்குக் குறையாத அலுவலர் ஒருவர், இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரரின் உடல்மீது அரசு சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செய்யவேண்டும்.

## மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்

மத்திய அரசு செயல்படுத்தும் இத்திட்டம் 15-8-1972 முதல் செயலில் இருந்தது. மத்திய அரசு பின்வரும் சலுகைகளுடன் இத்திட்டத்தை மாற்றியமைத்தது. 1-8-1980 முதல் "சுதந்திரத்தா சைனிக் சம்மன் பென்ஷன் திட்டம்'' என்று இத்திட்டம் மறுபெயரிட்டு அழைக்கப்பட்டது.

(அ) ஓய்வூதியதாரர்களின் ஆண்டு உச்ச வருமான வரம்பான ரூ. 5,000/- 1-8-1980 முதல் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 26]

(ஆ) ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில், சிறைத் தண்டனை அனுபவித்த காலம் 6 மாதங்களிலிருந்து 3 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(இ) தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால் அரசு ஆவணங்கள் கிடைக்கப் பெறாதவர்கள், 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர்கள் இருவரிடமிருந்து சான்றிதழ்களைப் பெற்று தக்க ஆதாரமாகச் சமர்ப்பிக்கலாம். சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும் என்று ஆணையிடப்பட்டு உள்ளது.

(ஈ) சிறையில் இருந்ததற்கான சான்றிதழ்களை/சிறையில் உடனிருந்தவரின் சான்றிதழ்களை முன்னாள் அல்லது தற்போதைய சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினரிடமிருந்து பெற வேண்டுமென்ற நிபந்தனை தளர்த்தப்பட்டது. சிறைத்தண்டனை அனுபவித்ததாக உரிமை கோருபவர்களைப் பொறுத்தமட்டில், தளர்த்தப்பட்ட விதிகளின்கீழ், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு ஓராண்டுக் கால அளவிற்குக் குறையாமல் சிறைத்தண்டனை அனுபவித்தவர்களும் மற்றும் தாமிரப்பத்திரம் பெற்றவர்களும், மத்திய வருவாய்த் துறையிடமிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களும், மனுதாரருடன் குறிப்பிடக்கூடிய கால அளவிற்குச் சிறையில் இருந்தவர்களுமான பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர்கள் இருவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழை சிறையில் உடனிருந்தவர் சான்றிதழாக அரசு ஏற்றுக்கொள்ளும்.

(உ) 10 சவுக்கடிகள்/கசையடி அல்லது பிரம்படி பட்டு ஒருவர் துன்பப்பட்டிருந்தால் அது ஆறு மாதத்திற்குச் சிறைத் தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

(ஊ) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கத்தக்க மாதாந்திர ஓய்வூதியம் பின்வரும் வகையில் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது:

| | |
|---|---|
| 15-08-1972 முதற்கொண்டு | ரூ. 200/- |
| 01-08-1980 „ | ரூ. 300/- |
| 01-06-1985 „ | ரூ. 500/- |

[1997 ஏப்ரல் 26

| | |
|---|---|
| 14-11-1988 „ | ரூ. 750/- |
| 12-08-1992 „ | ரூ. 1000/- |
| 02-10-1994 „ | ரூ. 1500/- |

31-3-1997 அன்றைய நிலவரப்படி மாநில, மத்திய அல்லது இரு ஓய்வூதியங்களையும் பெறும் தமிழ்நாட்டிலுள்ள பல்வகை விடுதலைப் போராட்ட வீரர்கள் குறித்த விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | விடுதலைப் போராட்ட வீரர் மாநில ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை (ரூ. 1500+15 மருத்துவப்படி) | 5068 |
| 2. | விடுதலைப் போராட்ட வீரர் மாநில தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ. 750+15 மருத்துவப்படி) | 1892 |
| 3. | விடுதலைப் போராட்ட வீரர் மைய அரசு ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை (ரூ. 1500+15 மருத்துவப்படி) | 2239 |
| 4. | மைய அரசின் விடுதலைப் போராட்ட ஓய்வூதியமும், மாநில அரசின் விடுதலைப் போராட்ட ஓய்வூதியமும் பெறுவோர்களின் எண்ணிக்கை (31-03-1997 வரை ரூ. 250+15 மருத்துவப்படி; 1-4-97 முதல் ரூ. 500+15 மருத்துவப்படி) | 2507 |
| 5. | மைய அரசின் தொடர் ஓய்வூதியம் பெறும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ. 1500+15 மருத்துவப்படி) | 929 |
| 6. | வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித் தோன்றல்கள் (ரூ. 500) | 9 |
| 7. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (ரூ. 500) | 202 |

இத்திட்டத்திற்காக 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 7,72,46,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 26]

# இணைப்பு - 2

*(214-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை 42 பல்வகை

## 1997-98-ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு

இது கூட்டு மானியக் கோரிக்கையாகும். இந்த மானியக் கோரிக்கையில் பொதுவாக, முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்படும் மானியம், உள்ளாட்சி மன்றங்கள், சிறு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி ஆகியவை தொடர்பான செலவு சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்பட்டோருக்குப் புது வாழ்வு அளிப்பதற்கான செலவும், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம் தொடர்பான செலவும், இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. வேறு எந்தக் குறிப்பிட்ட ஒரு மானியக் கோரிக்கையிலும் சேர்க்க இயலாத ஏனைய பல்வகை இனங்களும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள், பெருந்தலைப்பு வாரியாக வருமாறு :-

| கணக்குத் தலைப்புகள் (1) | 1996-97 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (2) | 1996-97 திருத்த மதிப்பீடு (3) | 1997-98 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (4) |
|---|---|---|---|
| | | | (மொத்த செலவு ரூபாய் இலட்சத்தில்) |
| 2047. ஏனைய வரிவிதிப்புப் பணிகள் | 4325 | 3769 | 3775 |
| 2049. வட்டித் தொகை கொடுத்தல் | 1 | 1 | 1 |
| 2059. பொதுப் பணிகள் | 6 | 6 | 6 |

[1997 ஏப்ரல் 26

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2070. ஏனைய நிருவாகப் பணிகள் | 312 | 97 | 20 |
| 2075. பல்வகைப் பொதுவான பணிகள் | 4253 | 2754 | 52643 |
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் | 6799 | 7906 | 8227 |
| 2250. ஏனைய சமூகப் பணிகள் | 74 | 64 | 66 |
| 3053. பொது மக்கள் விமானப் போக்குவரத்து | 9 | 9 | 9 |
| 3425. ஏனைய அறிவியல் ஆராய்ச்சி | 84 | 84 | ... |

இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு :-

## சிறுசேமிப்பு

**முன்னுரை :**

மைய அரசால் வகுக்கப்பட்டு, அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் வங்கிகள் மூலம் செயல்படுத்தப்படுகின்ற பல்வேறு சிறு சேமிப்புத் திட்டங்களை மேம்படுத்துவதே சிறு சேமிப்புத் துறையின் முக்கிய பணியாகும். சிறு சேமிப்புத் திட்டம் மைய அரசு, நிதி அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் தேசிய சேமிப்பு நிறுவனத்தால் நிருவகிக்கப்படுகிறது. நாக்பூரைத் தலைமையகமாகக் கொண்ட இந்நிறுவனம், இந்தியா முழுவதிலுமுள்ள தனது கிளை அலுவலகங்கள்மூலம் சிறு சேமிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

சிறுசேமிப்புத் திட்டத்தின்கீழ் ஓர் ஆண்டு காலத்தில், அதாவது டிசம்பர் மாத இறுதியில் மாநிலத்தில் திரட்டப்படும் சிறு சேமிப்பு நிகர வசூலில் 75 சதவீதத்தை, நீண்ட காலக் கடனாக மைய அரசு மாநில அரசுக்கு வழங்கி வருகிறது. இவ்வாறு கிடைக்கும் பணம் வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இக்கடன் தொகையை 14.5 சதவீத வட்டியுடன் மாநில அசரால் திருப்பிச் செலுத்த 25



1997 ஏப்ரல் 26]

ஆண்டு கால அவகாசம் அளிக்கப்படுகிறது. கடன் பெற்ற முதல் ஐந்தாண்டுக் காலத்திற்குக் கடனை காலம் தாழ்த்திச் செலுத்தும் சலுகை (Moratorium) அளிக்கப்படுகிறது.

சிறுசேமிப்புத் திட்டங்களைப் பிரபலப்படுத்தும் பணியில் மத்திய அரசின் தேசிய சேமிப்பு நிறுவனமும். சென்னை சிறுசேமிப்பு இயக்ககமும் ஈடுபட்டுள்ளன. ஆண்டுதோறும் அரசால் சிறு சேமிப்பு வசூலுக்கென நிகர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள். தத்தம் மாவட்டங்களில் சிறு சேமிப்பு வசூல் பணிகளுக்கு பொறுப்பு வகித்துவருகின்றனர். சென்னை நகரின் சிறு சேமிப்பு வசூல் ஊக்குவிப்புப் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பதிலாக, சென்னை மாநகராட்சியின் ஆணையர் கவனித்து வருகிறார்.

### சிறுசேமிப்புத் திட்டங்கள் ஒரு கண்ணோட்டம்

அனைத்துப் பிரிவு மக்களும் தங்களால் இயன்ற அளவு பணத்தைச் சேமிக்க உகந்தவாறு பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் :

### (அ) வருமான வரிச் சலுகை உள்ள திட்டங்கள்

**(1) பொதுமக்கள் வருங்கால வைப்புத் திட்டம் :**

இது 1-7-1968 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 15 ஆண்டு சேமிப்புத் திட்டமாகும். இத்திட்ட முதலீடுகளுக்கு 12 சதவீதம் கூட்டு வட்டி கிடைக்கிறது. குறைந்தபட்ச முதலீடு ரூ.100/-. இது வருமான வரிச் சட்டம் 88-ஆம் பிரிவின்கீழ் 20 சதவீத வரித் தள்ளுபடியை அளிப்பதோடு, வட்டி முழுவதற்கும் வரியில்லாமல் செய்கிறது.

**(2) தேசிய சேமிப்புப் பத்திரம் (8-வது வெளியீடு) 1989 :**

இது 8-5-1989 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 6 ஆண்டு சேமிப்புத் திட்டம். இத்திட்ட முதலீடுகளுக்கு 12 சதவீதம் கூட்டு வட்டி அளிக்கப்படுகிறது. குறைந்த பட்ச முதலீடு ரூ.100/-. இது 20 சதவீத வரித் தள்ளுபடியை அளிக்கிறது.

[1997 ஏப்ரல் 26

**(3) தேசிய சேமிப்புத் திட்டம், 1992 :**

இது 1-10-1992 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 4 ஆண்டு சேமிப்புத் திட்டமாகும். இத்திட்ட முதலீடுகளுக்கு 11 சதவீதம் கூட்டு வட்டி அளிக்கப்படுகிறது. குறைந்தபட்ச முதலீடு ரூ. 100/-. இது 20 சதவீத வரித் தள்ளுபடியை அளிக்கிறது.

**(ஆ) உயர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்**

**(4) இந்திர விகாஸ் பத்திரம் :**

இது 19-11-1986 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்தரை ஆண்டு சேமிப்புத் திட்டமாகும். ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது. குறைந்தபட்ச முதலீடு ரூ.100/-. இத்திட்ட முதலீடுகளுக்கு 18.18 சதவீதம் தனி வட்டி கிடைக்கிறது.

**(5) கிஸான் விகாஸ் பத்திரம் :**

இது 1-4-1988 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்தரை ஆண்டு சேமிப்புத் திட்டமாகும். ஐந்தரை ஆண்டுகளில் இதில் செய்யப்படும் முதலீடு இரட்டிப்பாகிறது. குறைந்தபட்ச முதலீடு ரூ.100/-. இத்திட்ட முதலீடுகளுக்கு 18.18 சதவீதம் தனி வட்டி கிடைக்கிறது. இந்திர விகாஸ் பத்திரம் போல் அல்லாது வைப்புத் தொகை முதிர்வு அடையும் முன்னரே பணத்தைத் திரும்ப பெறும் வசதி இதில் உண்டு.

**(இ) தொடர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்**

**(6) அஞ்சலக கால வைப்புத் திட்டம், 1981 :**

இது 1-4-1982 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட வைப்புத் திட்டமாகும். ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு மற்றும் ஐந்து ஆண்டு வைப்புகளாக முதலீடு செய்யலாம். குறைந்தபட்ச முதலீடு ரூ.50/-. இத்திட்ட முதலீடுகளுக்கு 10.5 சதவீதம் முதல் 12.5 சதவீதம் வரை வட்டி கிடைக்கிறது.

**(7) அஞ்சலக மாத வருவாய்த் திட்டம், 1987 :**

இது 15-8-1987 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 6 ஆண்டு சேமிப்புத் திட்டமாகும். குறைந்தபட்ச முதலீடு ரூ.6,000/- இத்திட்ட முதலீடுகளுக்கு ஆண்டொன்றுக்கு 13 சதவீதம் வட்டி கிடைக்கிறது. வட்டியினை மாத வருவாயாக அளிக்கப்படுகிறது. இது தவிர ஆறாவது ஆண்டு முடிவில் முதலீட்டை திரும்பப் பெறும் போது 10 சதவீதம் மிகைத் தொகை (bonus) கிடைக்கிறது.





**(8) ஓய்வு பெறும் அரசு ஊழியருக்கான வைப்புத் திட்டம், 1989 :**

இது 1-7-1989 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 3 ஆண்டு வைப்புத் திட்டமாகும். குறைந்தபட்ச முதலீடு ரூ.1,000/-. இத்திட்ட முதலீடுகளுக்கு 10 சதவீதம் வட்டி கிடைக்கிறது.

**(9) ஓய்வு பெறும் பொதுத் துறை நிறுவன ஊழியருக்கான வைப்புத் திட்டம், 1991 :**

இது 1-1-1991 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 3 ஆண்டு வைப்புத் திட்டமாகும். குறைந்த பட்ச முதலீடு ரூ.1000/-. இத்திட்ட முதலீடுகளுக்கு 10 சதவீதம் வட்டி கிடைக்கிறது.

**(ஈ) பிற திட்டங்கள்**

**(10) அஞ்சலக தொடர்வைப்புத் திட்டம் :**

இது 1-4-1982 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 5 ஆண்டு சேமிப்புத் திட்டமாகும். குறைந்தபட்ச மாதாந்திர முதலீடு ரூ.10/-. இத்திட்ட முதலீடுகளுக்கு 12.5 சதவீதம் வட்டி கிடைக்கிறது. இத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ.50 வரை 2 ஆண்டுகள் செலுத்திய பிறகு கணக்கு துவக்கியவர் இறக்க நேரிட்டால், 5 ஆண்டுகளுக்கு பிறகு கிடைக்கும் முதிர்ச்சி தொகையை கணக்கு துவக்கியவரின் வாரிசுதாரர் அல்லது நியமனதாரர் உடனே பெறும் வசதி உள்ளது. அவர்கள் மீதியுள்ள மாதங்களுக்கு தொடர் வைப்புத் திட்டத்தின் கீழ் பணம் செலுத்தத் தேவையில்லை.

**(11) அஞ்சலக சேமிப்புத் திட்டம் :**

இது 1-4-1982 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்புத் திட்டமாகும். குறைந்தபட்ச முதலீடு ரூ.20/-. இத்திட்ட முதலீடுகளுக்கு 5.5 சதவீதம் வட்டி கிடைக்கிறது.

[1997 ஏப்ரல் 26

**(12) சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டம் :**

மாத வருமானம் பெறுவோரிடமிருந்து சிறுசேமிப்பு முதலீட்டைத் திரட்டும் வண்ணம் இத்திட்டம் 1958-ஆம் ஆண்டு தனியார் துறை நிறுவனங்களில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இது அரசு அலுவலகங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மாத வருவாய் பெறும் ஒருவர் தனது சம்பளத்தில் இருந்து மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பிடித்தம் செய்து அலுவலக தொடர் வைப்புத் திட்டம், அஞ்சலக கால வைப்புத் திட்டம், தேசிய சேமிப்பு சான்றிதழ், பொது வருங்கால வைப்புத் திட்டம் போன்ற ஏதாவதொரு சிறுசேமிப்புத் திட்டங்களில் செலுத்த தானாக முன்வந்து தனது மேலதிகாரி அல்லது முதலாளிக்கு அதிகாரம் வழங்கலாம். ஆனால் அஞ்சலக தொடர் வைப்புத் திட்டங்களில் அதிகமாக முதலீடு திரட்டப்படுகிறது.

**(13) சஞ்சாயிகா சேமிப்புத் திட்டம் :**

பள்ளி மாணவ மாணவியரிடையே சேமிக்கும் பழக்கத்தை வளர்க்கும் பொருட்டு 1-4-1972 முதல் சஞ்சாயிகா என்ற சேமிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பப்பள்ளி முதல் மேல்நிலைப்பள்ளி வரை உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணவ மாணவியர் இத்திட்டத்தில் பங்குபெற ஊக்குவிக்கப்படுகிறார்கள். மாணவ மாணவியரின் இளமைக் காலத்திலேயே சேமிக்கும் பழக்கத்தை வளர்க்கும் வண்ணம் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதால் இது ஒரு முக்கியமான திட்டமாகக் கருதப்படுகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் சிறு சேமிப்பு வசூலுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் பற்றிய விவரங்கள் கீழ் வருமாறு :-

| ஆண்டு | இலக்கு | மொத்த வசூல் | நிகர வசூல் | மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1991-92 | 550.00 | 1381.41 | 579.71 | 349.75 |
| 1992-93 | 550.00 | 1710.70 | 614.89 | 401.58 |



1997 ஏப்ரல் 26]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1993-94 | 590.00 | 2211.66 | 621.47 | 331.36 |
| 1994-95 | 800.00 | 2650.38 | 710.00 | 569.91 |
| 1995-96 | 700.00 | 1956.36 | 490.70 | 291.40 |
| 1996-97 (1997 பிப்ரவரி வரை) | 625.00 | 1620.73 | 123.33 | — |

சிறு சேமிப்பு வசூலில் தேக்கம் ஏற்பட்டதற்கு காரணங்களை கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்.

**நிறுவனங்களின் முதலீடுகள் மீது விதிக்கப்பட்ட தடை :**

1994-95-ஆம் ஆண்டு வரை சிறு சேமிப்பு இலக்கினை எய்துவதற்கு நிறுவனங்களின் பெருமளவு முதலீடுகள் பெரிதும் துணை புரிந்தன. 1-4-1995 முதல் நிறுவனங்கள், தேசிய சேமிப்பு சான்றிதழ், கிஸான் விகாஸ் பத்திரம் மற்றும் அஞ்சலக கால வைப்புத் திட்டம் ஆகிய சிறு சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு மைய அரசு தடை விதித்தது. பெருவாரியான நிறுவனங்கள் தங்கள் நிதியினை கிஸான் விகாஸ் பத்திரத்தில் அதிக அளவில் முதலீடு செய்து வந்தன. தற்போதைய தடை ஆணையினால் நிறுவனங்களின் முதலீடுகள் சிறுசேமிப்புக்குக் கிடைக்கவில்லை.

**திரும்பப் பெறப்பட்ட முதிர்வடைந்த முதலீடுகள் :**

1995-96-ஆம் ஆண்டு முதிர்வடைந்த முதலீடுகள் அதிக அளவில் திரும்பப் பெறப்பட்டன. மேற்கூறப்பட்ட நிறுவனங்களின் முதலீடுகளின் தடை ஆணையால் பல்வேறு சிறு சேமிப்புத் திட்டங்களில் முதிர்வடைந்த முதலீடுகளை மறுமுதலீடாகப் பெற முடியவில்லை.

**வங்கியில்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் போட்டிகள் :**

சிறு சேமிப்புப் பத்திரங்களின்கீழ் வழங்கப்படும் வட்டிவிகிதங்களைவிட, அட்டவணையிடப்பட்ட வங்கிகளும் (Scheduled Banks), கூட்டுறவு வங்கிகளும் அதிக அளவில் வட்டி

[1997 ஏப்ரல் 26

அளிக்கின்றன. இது சிறு சேமிப்புத் திட்டங்களில் கிடைக்கும் வட்டிவிகிதத்தைவிட அதிகமாக இருந்ததால் முதலீட்டாளர்கள் வங்கிகளில் முதலீடு செய்வதையே அதிகம் விரும்பினர். இது தவிர வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள் (Non-Banking Finance Companies) அதிக அளவில் வட்டி விகிதங்கள் மற்றும் ஊக்கத் தொகைகளை அறிவித்து பொதுமக்களிடமிருந்து அதிக அளவு முதலீடுகளை ஈர்த்து விட்டன. இதனால் சிறுசேமிப்பு முதலீடு வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

1997 பிப்ரவரி வரையிலான வசூல் புள்ளி விவரங்கள். 1996 பிப்ரவரி வரையிலான புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில், சாதனையில் முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

அவை வருமாறு :-

ரூபாய் கோடியில்

| 1996 பிப்ரவரி | | 1997 பிப்ரவரி | |
|---|---|---|---|
| மொத்தம் | நிகரம் | மொத்தம் | நிகரம் |
| 1535.82 | 88.38 | 1620.73 | 123.33 |

## சிறுசேமிப்பு முகவரமைப்பு

சிறுசேமிப்பு வசூலின் பெரும்பாலான பகுதி சிறுசேமிப்பு முகவர்கள் மூலம்தான் நடைபெற்று வருகிறது. இவர்கள் சிறுசேமிப்பு வசூல் பணிகளில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

தற்போது மூன்று வகையான முகவரமைப்புகள் நடைமுறையில் இருந்து வருகின்றன. அவையாவன :-

### 1. நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு : (Standardised Agency System)

1-10-1960 அன்று முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இம்முகவரமைப்பின் கீழ் செயல்படும் முகவர்கள் கிஸான் விகாஸ் பத்திரம், தேசிய சேமிப்பு சான்றிதழ், கால வைப்புக் கணக்கு, தேசிய சேமிப்புத் திட்டம் மற்றும் மாத வருமான திட்டம் ஆகிய சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடுகளைத் திரட்டும் பணியில் ஈடுபடலாம். தற்போது மாநிலத்தில் 9,339 முகவர்கள் இம்முகவரமைப்பின்கீழ் செயல்படுகிறார்கள்.



1997 ஏப்ரல் 26]

### அங்கீகரிக்கப்பட்ட (பொது மக்கள் வருங்கால வைப்பு நிதி) முகவரமைப்பு : [Authorised (Public Provident Fund) Agency Scheme]

இம்முகவரமைப்பு 1-7-1968 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முகவரமைப்பில் செயல்படும் முகவர்கள் பொது வருங்கால வைப்பு நிதி முதலீடுகளை மட்டுமே திரட்ட முடியும். தற்போது மாநிலத்தில் 1,110 முகவர்கள் இம்முகவரமைப்பின்கீழ் செயல்படுகிறார்கள்.

### மகளிர் முகவரமைப்பு : (Mahila Pradhan Kshetriya Bachat Yojana)

1-4-1972 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இம்முகவரமைப்பின்கீழ் பெண்கள் மட்டுமே முகவர்களாக நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் ஐந்து ஆண்டு அஞ்சலக தொடர் வைப்புத் திட்ட முதலீடுகளை மட்டுமே திரட்ட இயலும். தற்போது மாநிலம் முழுவதிலும் 10,247 முகவர்கள் இவ்வமைப்பின்கீழ் செயல்படுகின்றனர்.

சிறு சேமிப்பு முகவர்கள் மைய அரசு வகுத்துள்ள முகவரமைப்பு விதிமுறைகளின்படி நியமிக்கப்படுகின்றனர். முகவர்கள் திரட்டும் சிறு சேமிப்பு முதலீடுகளுக்கு மைய அரசு தரகுத் தொகை வழங்குகிறது. அவ்வாறு அளிக்கும் தரகுத் தொகையின் அடிப்படையில் மாநில அரசும் ஊக்கத் தொகை வழங்குகிறது.

பின்வரும் பரிசுகள் சிறுசேமிப்பு முகவர்களுக்கு அளிக்கப்படுகின்றன :

மாநில அளவிலான பரிசுகள் :

1. நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு/அங்கீகரிக்கப்பட்ட (பொதுமக்கள் வருங்கால வைப்பு நிதி) முகவரமைப்பு முகவர்கள்-

ரூ.10,000/- சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற மாநகரங்களில் ஆண்டு ஒன்றுக்கு குறைந்த அளவு ரூ.50 இலட்சமும் பிற இடங்களில் ரூ. 25 இலட்சமும் முதலீடு திரட்டுவதற்கு.

[1997 ஏப்ரல் 26

**2. மகளிர் முகவரமைப்பு முகவர்கள்-**

| | |
|---|---|
| முதல் சிறந்த மகளிர் முகவரமைப்பு முகவருக்கு ரூ.10000/, இரண்டாவதாகச் சிறந்த மகளிர் முகவரமைப்பு முகவருக்கு ரூ.5000/- | மிக அதிக எண்ணிக்கையில் கணக்குகள் சேர்த்ததற்கும், அதற்கு அடுத்த நிலையில் அதிக எண்ணிக்கையில் கணக்குகள் சேர்த்ததற்கும் ஆண்டு ஒன்றில் மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 2000 புதிய கணக்குகளும், ரூபாய் 1 இலட்சம் சேர்ப்பதற்கு உட்பட்டு. |

*3. மாவட்ட அளவிலான பரிசுகள் :*

| | |
|---|---|
| அ) ரூ.1000/-, ரூ.500/-, ரூ.300/- என்ற அளவில் மூன்று நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட (பொது மக்கள் வருங்கால வைப்பு நிதி) முகவரமைப்பு முகவர்களுக்கு | ஆண்டு ஒன்றில் ரூ. 10 இலட்சம் குறைந்த அளவு முதலீடுக்கு உட்பட்டு, மாவட்டத்தில் அதிக அளவு முதலீடு திரட்டுவதற்கு. |
| ஆ) ரூ.1000/-, ரூ.500/- என்ற அளவில் சிறந்த 2 மகளிர் முகவரமைப்பு முகவர்களுக்கு | ஒரு ஆண்டில் குறைந்தது 500 கணக்குகளும், மாதம் ஒன்றுக்கு ரூ.10000 தொடங்குவதற்கு உட்பட்டு அதிக அளவில் சேமிப்புக் கணக்குகளையும் அதிக வசூலையும் திரட்டுவதற்கு. |

## சிறு சேமிப்பு முதலீட்டாளர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டங்கள்

### முதலீட்டாளர் ஊக்கத் தொகைத் திட்டம் -

சிறு சேமிப்பு வசூலை அதிகரிக்கும்பொருட்டு முதலீட்டாளர் ஊக்கத் தொகைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பக் காலங்களில் சில குறிப்பிட்ட சிறு சேமிப்புத் திட்டங்களுக்கு



1997 ஏப்ரல் 26]

வரையறுக்கப்பட்ட காலங்களுக்கு மட்டுமே ஊக்கத் தொகை அனுமதிக்கப்பட்டது. பின்னர் ஆண்டு முழுவதும் ஊக்கத் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் ஒவ்வோராண்டும் தொடரப்பட்டு 1996-97 நிதியாண்டுவரை செயல்படுத்தப்பட்டது. 1996-97-ஆம் ஆண்டு முதலீட்டாளர் ஊக்கத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டது.

| | ஊக்கத் தொகைக்கான குறைந்தபட்ச முதலீடு |
|---|---|
| **ஊக்கத் தொகை வீதம் 2 சதவீதம்-** | |
| இந்திர விகாஸ் பத்திரம் | ரூ.1,00,000 |
| மாத வருவாய் திட்டம் | ரூ.6,000 |
| கிஸான் விகாஸ் பத்திரம் | ரூ.1,000 |
| தேசிய சேமிப்பு சான்றிதழ் 8-வது வெளியீடு | ரூ.1,000 |
| பொது மக்கள் வருங்கால வைப்புத் திட்டம் | ரூ.1,000 |
| ஓய்வு பெறும் அரசு ஊழியருக்கான வைப்புத் திட்டம் | ரூ.1,000 |
| ஓய்வு பெறும் பொதுத் துறை நிறுவன ஊழியருக்கான வைப்புத் திட்டம் | ரூ.1,000 |
| 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு கால வைப்புத் திட்டம் | ரூ.1,000 |
| தேசிய சேமிப்புத் திட்டம் 1992 | ரூ.1,000 |
| **ஊக்கத் தொகை 1 சதவீதம்-** | |
| ஒரு ஆண்டு மற்றும் 2 ஆண்டு கால வைப்புத் திட்டம் | ரூ.1,000 |
| மாதம் ஒன்றுக்கு ரூ. 100-ம் அதற்கு மேலும் முதலீடு செய்யும் 5 ஆண்டு அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் | ரூ.1,000 |

[1997 ஏப்ரல் 26

## முதலீட்டாளர் பரிசுத் திட்டம்.

முதலீட்டாளர்களைக் கவரும் நோக்கத்துடன் ஊக்கத் தொகைத் திட்டத்தைப் போன்று முதலீட்டாளர்களுக்கு இலவச பரிசுக் கூப்பன் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 33 பரிசுகளுடன் 1-12-1989 முதல் மாநில அளவில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பக் காலத்தில் மாநில அளவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 1-6-1990 முதல் 262 பரிசுகளுடன் மாவட்ட அளவிலான திட்டமாக மாற்றப்பட்டது. 1996-97-ஆம் ஆண்டுக்கு இந்த இலவச பரிசுக் கூப்பன் திட்டம், 250 பரிசுகளுடன் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இதில் மாருதி ஆம்னி கூண்டு வண்டி, கிஸான் விகாஸ் பத்திரம் அல்லது மாத வருவாய்த் திட்டம், (ரூ.60,000 மதிப்பு), வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, டி.வி.எஸ் மொபட், எச்.எம்.டி. கைகடிகாரம், ரூ.500-க்கான காசோலை ஆகியவை அடங்கும். இந்த பரிசுப்பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.6.10 இலட்சம்.

## சஞ்சாயிகா சேமிப்புத் திட்டத்தின்கீழ் ஊக்கத் தொகை பரிசு வழங்கும் திட்டம்.

தமிழ்நாட்டில் பள்ளி மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதில் சஞ்சாயிகா திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இதில் பங்கு கொள்ளும் பள்ளிகள் மற்றும் மாணவ, மாணவியருக்கு/ஆசிரியர்களுக்கு/தலைமை ஆசிரியர்களுக்குப் பின்வரும் ஊக்கத் தொகைகள் / பரிசுகள் 1996-97-ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டன.

### ரூ. 3 மதிப்புள்ள பேனா.

ஒரு கல்வியாண்டில் (ஜூன் முதல் மார்ச் வரை) சஞ்சாயிகா கணக்கில் குறைந்தது ரூ.100/- முதலீடு செய்யும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும்.

### ரூ. 150 ரொக்க ஊக்கத் தொகை.

கல்வியாண்டின் இறுதியில் (ஜூன் முதல் மார்ச் வரை) குறைந்தது ரூ.5000/- வசூலிக்கும் பள்ளியின் ஆசிரியருக்கு/தலைமை ஆசிரியருக்கு வழங்கப்படும்.



1997 ஏப்ரல் 26]

### மேற்கூறையில் பொருத்தப்படும் மின் விசிறி ஒன்று (48").

சஞ்சாயிகா திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மாணவ - மாணவியரின் எண்ணிக்கை எவ்வாறாயிருப்பினும் ஒவ்வொரு ரூ.10000/- வசூலுக்கு ஒரு மின்விசிறி வீதம் சஞ்சாயிகா பள்ளிக்கு வழங்கப்படும்.

### மாநில அளவிலான பரிசு ரூ.2000 ரொக்கப் பரிசு-

பள்ளியில் உள்ள மொத்த மாணவர்களில் 90 சதவீத மாணவர்களை சஞ்சாயிகாத் திட்டத்தில் சேர்த்து (ஆண்டொன்றுக்கு ரூ. 2 இலட்சத்திற்குக் குறையாமல்) அதிகத் தொகையை வசூல் செய்யும் சிறந்த சஞ்சாயிகா பள்ளிக்கு வழங்கப்படும்.

### மாவட்ட அளவிலான பரிசு ரூ.1000 ரொக்கப் பரிசு-

பள்ளியில் உள்ள மொத்த மாணவர்களில் 90 சதவீத மாணவர்களை சேர்ப்பதற்குட்பட்டு, அதிக அளவு வசூல் செய்யும் சிறந்த சஞ்சாயிகா பள்ளிக்கு வழங்கப்படும்.

## மாவட்ட ஊக்கத் தொகைத் திட்டம்.

சிறுசேமிப்பு வசூல் முனைப்புப் பணியில் மாவட்டங்களின் செயல்பாட்டைப் பாராட்டி மேலும் செம்மையாக செயல்பட ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்டங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி அளிக்கப்படும் ஊக்கத் தொகையினை பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்ட ஊக்கத் தொகைத் திட்டம் பின்னர் 1994-95-ஆம் ஆண்டுக்கான பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டத்துடன் (Decentralised District Plan) இணைக்கப்பட்டது. சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களுக்கும், 1993-94 ஆம் ஆண்டில் சிறுசேமிப்புப் பணியில் மாவட்டங்களின் சாதனையைக் கருதிப் பார்த்து ரூ.10 கோடி அளவிற்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தில் சென்னை மாவட்டம் சேர்க்கப்படாததால் சென்னை மாநகராட்சிக்கு மாவட்ட ஊக்கத் தொகை திட்டத்தின்கீழ் ரூ.75 இலட்சம் வழங்கப்பட்டது. இது போன்று 1995-96-ஆம் ஆண்டு சாதனையின் அடிப்படையில்,

[1997 ஏப்ரல் 26

1996-97-ஆம் ஆண்டு பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்ட உதவியாக ரூ. 15 கோடி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது.

## விளம்பரம்

சிறுசேமிப்பு வசூலை ஊக்குவிக்கும் பணியில் விளம்பரம் முக்கிய பங்கு வகிக்கிறது. பொதுமக்களிடையே சிறுசேமிப்பு குறித்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த பல்வேறு நவீன விளம்பர முறைகள் கையாளப்படுகின்றன. 1991-92-ஆம் ஆண்டு ரூ.53 இலட்சம் சிறுசேமிப்பு விளம்பரத்திற்காகச் செலவு செய்யப்பட்டது. சிறுசேமிப்பு விளம்பரத்தை விரிவுபடுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கப்பட்டு 1996-97-ஆம் நிதியாண்டிற்கு ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுசேமிப்பு விளம்பரத்திற்காக தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், இல்லந்தோறும் பிரச்சாரம் செய்தல், பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் போன்ற விளம்பரச் சாதனங்கள் 1996-97-ல் பின்பற்றப்பட்டு வருகின்றன.

## முடிவுரை

மைய அரசிடமிருந்து நீண்ட காலக் கடன் பெறுவதற்கு சிறுசேமிப்புத் திட்டம் வகை செய்வதால், சிறுசேமிப்பு வசூலை அதிகரிக்க முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். சிறுசேமிப்புத் திட்ட வரம்பிற்குள் அனைத்து குடும்பங்களையும் கொண்டு வந்து அதன் மூலம் சிறுசேமிப்புப் பழக்கத்தை வளர்ப்பது என்பதுதான் சிறுசேமிப்புத் துறையின் நோக்கமாகும்.

## பரிசுச் சீட்டு

### முன்னுரை :

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், முன்னாள் முதலமைச்சர், பேரறிஞர் அண்ணா அவர்களால் 15-8-1968 அன்று முதன் முதலில் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம், 1975 செப்டம்பர் முதல் 1976 ஆகஸ்டு வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குதல், கிராமப்பகுதிகளில் குடிநீர் வழங்குதல், கிராம சுகாதார வசதிகள் முதலியவை போன்ற நலத் திட்டங்களைச்



1997 ஏப்ரல் 26]

செயல்படுத்துவதற்குரிய நிதிவாயில்களைத் திரட்டுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

### பரிசுத் தொகை அமைப்பும் பரிசுச் சீட்டுகளை அச்சிடுதலும் :

குலுக்கல் ஒன்றுக்கு அச்சிடப்பட்ட பரிசுச் சீட்டுகளின் (Tickets) எண்ணிக்கை, பரிசுச் சீட்டின் விலை, பல்வேறு பரிசுச் சீட்டு குலுக்கல்களுக்கான பரிசுத் தொகை ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | அச்சிடப்பட்ட பரிசுச் சீட்டுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | பரிசுச் சீட்டின் விலை (ரூபாயில்) | முதல் பரிசுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | பரிசுகளின் மொத்த எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | காவேரி | 9 | 2 | 3.00 | 19,900 | 881800 |
| 2. | மகாலெட்சுமி | 12 | 5 | 10.00 | 73,351 | 2222000 |
| 3. | சிறப்புக் குலுக்கல் | 15 | 10 | 50.00 | 18,171 | 7150000 |
| 4. | மிகுசிறப்புக் குலுக்கல் | 15 | 20 | 100.00 | 31,681 | 1410000 |
| 5. | புதையல் | 9 | 1 | 1.00 | 10,840 | 524000 |
| 6. | பொன்மாரி | 9 | 1 | 1.00 | 10,851 | 527000 |
| 7. | வைகை | 15 | 2 | 6.00 | 48,152 | 1795000 |
| 8. | பொன்னி | 15 | 2 | 5.00 | 63,158 | 1796000 |

### தள்ளுபடி (Discount):

தமிழ்நாடு பரிசுச் சீட்டுகளை அதிக அளவில் வாங்க இயலும் வகையில், முகவர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கும் நோக்கத்துடன், அவர்கள் வாங்கிய பரிசுச் சீட்டுகளின் எண்ணிக்கை, குலுக்கல் கால

அளவு, பரிசுச் சீட்டுத் திட்டத்தின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், 22 முதல் 25 சதவீதம் வரையில், முகவர்களுக்குத் தள்ளுபடி தொகை வழங்கப்படுகிறது. பரிசு பெறும் சீட்டுகளுக்கு மறுபாதிச் சீட்டுக்கான போனஸ் தொகை பெற முகவர்களும், விற்பனையாளர்களும் தகுதியுடையவர்களாவர்.

முகவர்களும், விற்பனையாளர்களும் பரிசுச் சீட்டுகளுக்குரிய கொள்முதல் தள்ளுபடித் தொகையைக் கழித்து, முழுத் தொகையையும் செலுத்துவதன் பேரில் இயக்ககத்திலிருந்து பரிசுச் சீட்டுகளை வாங்கலாம். சீட்டுகளைத் தொகை கொடுத்து வாங்குவதற்குப் பதிலாக, பரிசு பெறும் சீட்டுக்களைக் கொடுத்தும்/சீட்டுக்கள் விற்பனைக்குரிய போனஸ் கோரிக்கை கைசாத்துக்களைக் கொடுத்தும் வாங்குவதற்கு முகவர்கள் தகுதியுடையவர்கள் ஆவர்.

**பரிசுக் கூப்பன் திட்டம் :**

சிறப்புக் குலுக்கல்களின்கீழ் வாங்கப்பட்ட ஒவ்வொரு 250 பரிசுச் சீட்டுகளுக்கும் முகவர்கள் ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்திட்டத்தின்கீழ் பல்வேறு பரிசுகள் முகவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**பரிசுத் தொகைகள் மற்றும் போனஸ் தொகைகளைக் கொடுத்துத் தீர்ப்பது குறித்த நடைமுறை :**

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் கோரப்படும் பரிசுத் தொகையின் மதிப்பு ரூ.5000-க்கு மேற்பட்டிருப்பின் அத்தொகையிலேயே வரித் தொகை பிடித்தம் செய்யப்படுவதற்கு உட்பட்டதாகும். வரிப் பிடித்தம் செய்வதற்கு உட்படுத்தப்படுகிற பரிசுத் தொகைகள், வங்கி ஒன்றின் மூலமாகத்தான் இயக்ககத்தில் பெறப்பட வேண்டும். பரிசுத் தொகைகளை பொது மக்களுக்கு எளிதாக வழங்க இயலும் பொருட்டு, பரிசுச் சீட்டு முகவர்கள், ரூ.5,000/- வரை பரிசு பெறுபவர்களுக்குத் தொகையை வழங்கிவிட்டு, அத்தொகையை ரொக்கமாகவோ, பரிசு விழுந்த சீட்டைக் கொடுத்து விட்டு அதன் பரிசு மதிப்புக்குச் சமமாக புதிய பரிசுச் சீட்டுகளாகவோ, இயக்ககத்திலிருந்து பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பரிசுகளை தமிழ்நாடு பரிசுச் சீட்டு இயக்ககத்திலிருந்து நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



தமிழ்நாடு 1976-ஆம் ஆண்டு பரிசுச் சீட்டு விதிகளின்படி, பரிசு பெற்றவர்கள் சம்மந்தப்பட்ட பரிசுச் சீட்டு குலுக்கல் நடைபெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பரிசுத் தொகைக்கான தங்கள் கோரிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும். இக்கோரிக்கைகள் அவை உண்மையானதுதானா என்பதை உறுதி செய்வதற்காகப் பரிசீலிக்கப்படும். கோரிக்கைகள் முறையாக உள்ளன என்றும், இப்பரிசுத் தொகைக்கு போட்டி கோரிக்கை ஏதும் இல்லையென்றும் கண்டறிந்தால், அடுத்த 30 நாட்களுக்குள் பரிசுத் தொகை பொதுவாக வழங்கப்பட்டுவிடும். போலி பரிசுச் சீட்டுகளைக் கட்டுப்படுத்தவும், பரிசுகள் யாருக்கு விழுந்ததோ, அவர்களைச் சென்று அடைவதை உறுதி செய்யவும், பரிசுத் தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதில் அரசுக்கு பண இழப்பு ஏற்படாதிருக்கவும், பரிசு பெறும் பரிசுச் சீட்டுகளைப் பரிசீலனை செய்து பரிசு வழங்கும் முறை பின்பற்றப்பட்டு வந்துள்ளது. தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டமும், குலுக்கல் முடிவுகளும் மாநிலத்தில் பிரபலமான பத்திரிகைகளில் விரிவாக விளம்பரம் செய்யப்படுகிறது.

**தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் நிகர வருவாயை நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தல் :**

பரிசுச் சீட்டுகளின் விற்பனை மூலம் கிடைக்கும் நிகர வருவாய் பல்வேறு நலப்பணித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. டிசம்பர் மாதத்தின் முதல் குலுக்கல் மூலம் கிடைக்கின்ற வருவாய் முன்னாள் படைவீரர் நலனுக்காக வழங்கப்படுகிறது.

**நலத் திட்டப் பணிகளுக்கு ஒதுக்கீடு விவரம் :**

| ஆண்டு (1) | நிகர வருவாய் (2) | நலத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1992-93 | 255 | 189 |
| 1993-94 | 403 | 297 |
| 1994-95 | 939 | 580 |
| 1995-96 | 458 | 245 |

**தனியார் பரிசுச் சீட்டுகளுக்குத் தடை :**

தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் பரிசுச் சீட்டுகளிலும், தனியாரால் நடத்தப்படுகின்ற ஏனைய மாநில அரசுகள் சிலவற்றின் பரிசுச் சீட்டுகளிலும் முறைகேடுகள் நடைபெறுவதாகக் கூறப்பட்டதை முன்னிட்டு, அரசு ஏனைய மாநில அரசுகளால் அனுமதிக்கப்பட்டு. ஆனால் அவற்றால் ஏற்பாடு செய்யப்படாத பரிசுச் சீட்டுகளின் விற்பனைக்கு அரசு, நிதித் (பரிசுச் சீட்டு) துறையின் 6-10-1989-ஆம் நாளிட்ட 1101-ஆம் எண் அரசாணையில் தடைவிதித்து ஆணை பிறப்பித்தது.

ஆனால், குறிப்பிட்ட சில மாநில அரசுகளும், தனியார் பரிசுச் சீட்டு அமைப்பாளர்களும் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்து அத்தகைய பரிசுச் சீட்டுகளுக்கெதிரான தடையைச் செயல்படுத்துவதற்கு இடைக்கால தடையாணை பெற்றனர். எனினும் உச்ச நீதிமன்றம் நிலைமையை ஆய்வு செய்து பரிசுச் சீட்டு ஒன்றை மாநில அரசு நடத்தும் பரிசுச் சீட்டாக அங்கீகரிப்பதற்குச் சில வரையறைகளை நிர்ணயித்தும். தமிழ்நாடு அரசு பிறப்பித்த மேற்சொன்ன ஆணைகளின் செயல்திறனை உறுதி செய்தும், 21-4-1994 அன்று இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. உச்ச நீதிமன்றத்தின் ஆணையை அடிப்படையாகக் கொண்டும், உள் துறை (நீதிமன்றங்கள்-II)-யின் 8-6-1994-ஆம் நாளிட்ட, 634-ஆம் எண் அரசாணையினாலும், தமிழ்நாடு மாநிலத்திற்குள் விற்பனை செய்ய ஏற்கெனவே அனுமதியளிக்கப்பட்டிருந்த தமிழ்நாடு, கருநாடகம், கேரளம், மேற்கு வங்காளம், உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநில பரிசுச் சீட்டுகளுடன் தற்போது அருணாசலப் பிரதேசம், சிக்கிம், மணிப்பூர், நாகாலாந்து, மிசோரம் ஆகிய மாநிலங்களின் பரிசுச் சீட்டுகளையும் விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு அரசு உள்துறை (நீதிமன்றம்-II)-ன் 2-6-1995-ஆம் நாளிட்ட 819-ஆம் எண் அரசாணையில் ஒரு எண் மற்றும் உடனடி சீட்டுகளைத் தமிழ்நாட்டில் விற்கத் தடை விதித்து ஆணை பிறப்பித்தது. இவ்வாணையை எதிர்த்து பிற மாநில பரிசுச் சீட்டு விற்பனையாளர்கள் உயர்நீதிமன்றத்தில் முறையிட்டனர். உயர்நீதிமன்றம் அளித்த 15-10-1996-ஆம் நாளிட்ட தீர்ப்பில் தமிழக அரசின் ஆணையைத் தள்ளுபடி செய்தது. உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பினை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்தது. உச்சநீதிமன்றம் தனது 20-2-1997-ஆம் நாளிட்ட தீர்ப்பில் தமிழக





அரசால் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி மனுவைத் தள்ளுபடி செய்தது. எனினும் உள் துறை சட்டத் துறையுடன் கலந்தாலோசித்து இதன் மீது தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

**பல்வேறு அயல் நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய இந்தியர்கள் மற்றும் இலங்கை அகதிகள் / இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் :**

**தாயகம் திரும்பியோர்கள்**

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், பர்மா, இலங்கை, வியட்நாம் ஆகிய நாடுகளில் வாழ்ந்துவந்த இந்திய வம்சா வழியினர் இந்தியாவிற்குத் திரும்பி வரத் தொடங்கினர். பர்மாவிலிருந்து 1,44,445 நபர்களும், இலங்கையிலிருந்து 4,61,470 நபர்களும், வியட்நாமிலிருந்து 2,055 நபர்களும் இதுவரையில் இந்தியாவிற்குத் திரும்பியுள்ளனர். தற்போது, பர்மாவிலிருந்தும் வியட்நாமிலிருந்தும் அகதிகள் எவரும் வருவதில்லை. அவ்வாறு வந்தவர்கள், மண்டபம் (இராமநாதபுரம் மாவட்டம்) கோட்டப்பட்டு (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஆகிய இடங்களில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். அதனையடுத்து அவர்கள் மலைத் தோட்டம், வேளாண்மை, தொழில்கள், தொழில் கடன், சுய வேலை வாய்ப்புத் திட்ட உதவி, தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கித் திட்டங்கள் போன்ற மறுவாழ்வு உதவிகள் நடைமுறைப்படுத்தும் இடங்களில் குடியமர்த்தப்படுவதன் பேரில், முகாம்களிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர்.

**இலங்கை அகதிகள்**

இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டதையடுத்து, 24-7-1983-ஆம் நாள் முதற்கொண்டு பெருமளவில் அகதிகள் இந்தியாவிற்கு வரத்தொடங்கினர். இந்நிலை 29-7-1987 வரை தொடர்ந்து நீடித்தது. இக்கால அளவில் 1,34,053 இலங்கை அகதிகள் இந்தியாவிற்கு வந்தனர். இலங்கையில் நிலைமை சீரடைந்தபோது 24-12-1987 முதல் 31-3-1989 வரையிலான கால அளவில் 25,585 அகதிகள் தனி கப்பல்கள் மூலம் திருப்பி அனுப்பப்பட்டனர். எஞ்சியிருந்த அகதிகள். அரசின் உதவியின்றி இலங்கைக்குத் திரும்பிச் சென்றனர் ; அல்லது, இந்தியாவில் அவர்களின் உறவினர்களுடன் தங்கிவிட்டனர்.

[1997 ஏப்ரல் 26

இலங்கையில் மீண்டும் போராட்டம் தீவிரமடைந்ததால் இலங்கையிலிருந்து 25-8-1989 முதற்கொண்டு புதிதாக அகதிகள் மீண்டும் வரத் தொடங்கினர். 1,22,078 அகதிகள் இந்தியாவிற்கு வந்துள்ளனர். இந்த அகதிகளில் 1,15,680 பேர் ஆதரவற்றவர்களாக இருந்ததால் சென்னை, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக, தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் நிலைமை மீண்டும் சீரடைந்தபோது, இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விருப்பமுடைய 54,188 அகதிகள் 20-1-1992 முதல் 20-3-1995 வரையிலான கால அளவில் தனி கப்பல்கள், தனி விமானங்கள் ஆகியவற்றின் மூலம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தற்போது (31-3-1997) அகதிகள் முகாம்கள் 133 உள்ளன. அவற்றில் 63,336 அகதிகள் தங்கியுள்ளனர்.

முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்குக் கீழ்க்காணும் நிவாரண உதவிகள் அளிக்கப்படுகின்றன:—

1. இலவசமாகத் தங்கும் வசதி
2. மத்திய அரசு நிர்ணயிக்கும் வீதத்தில் ரொக்கக் கருணைத் தொகை
3. குறைந்த விலை வீதத்தில் "சிறப்பு உணவுப்பொருள் வழங்கல் அட்டை" மூலமாக அரிசி வழங்குதல்
4. குடிநீர் வசதி
5. இலவசமாக மின்சாரம் வழங்குதல்
6. பொதுச் சுகாதார வசதிகள்
7. இலவச மருத்துவ வசதி
8. அகதிகளின் குழந்தைகளுக்கு பிளஸ் 2 வரை இலவசக் கல்வி
9. சீருடை, புத்தகங்கள் வழங்குதல்.
10. இலவச வேட்டி, சேலை வழங்குதல்

அகதிகளின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தும் பொருட்டு, முகாமைவிட்டு அவர்கள் வெளியே சென்று ஊதியம் ஈட்ட அனுமதிக்கப்படுகின்றனர்.



1997 ஏப்ரல் 26]

1990-91-ஆம் ஆண்டு வரை, இலங்கை அகதி மாணவர்கள் தொழிற் கல்லூரிகள் உட்பட அனைத்துக் கல்லூரிகளிலும் தங்கள் கல்வியினைத் தொடர அனுமதிக்கப்பட்டிருந்தனர். தொழிற் கல்லூரிகள் உட்பட அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் அவர்களுக்கென 1990-91-ஆம் ஆண்டு வரை இட ஒதுக்கீடு வசதி இருந்தது. ஆனால் பின்னர் 1991-ல் இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்கு கலைக் கல்லூரிகள், மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் முறைக் கல்லூரிகளிலும் செய்யப்பட்டிருந்த இட ஒதுக்கீடு முறையினை ரத்து செய்திடவும், பிளஸ் 2 அளவிற்கு மேலான படிப்புகளில் அனுமதிப்பதை ரத்து செய்திடவும் முந்தைய அரசு கொள்கை அளவிலான முடிவை மேற்கொண்டது. தற்போது பல்வேறு கோரிக்கைகளையும், முறையீடுகளையும் பரிசீலித்து, இலங்கைத் தமிழ் அகதி மாணவர்கள் மற்றும் இலங்கைத் தமிழ் மாணவர்களைப் பிளஸ் 2 அளவிற்கு மேலான படிப்புகளில் அனுமதித்து, அவர்களின் கல்வியினை 1996-97-ஆம் கல்வியாண்டு முதல் கலைக் கல்லூரிகள் மற்றும் தொழில் முறைக் கல்லூரிகளில் தொடர்ந்து பயிலவும், அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த இட ஒதுக்கீடு முறையினை மீண்டும் வழங்கியும் அரசு ஜூன் 1996-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு மற்றும் இலங்கை அகதிகளின் தனிநபர் விவரம், பெயர், வயது, கல்வித் தகுதி, இலங்கையில் உள்ள பதவி, சம்பளம் போன்ற நிர்வாக விவரங்கள் அனைத்தும் கணிப்பொறிமயமாக்கத் தீர்மானிக்கப்பட்டு மத்திய அரசினால் மறுவாழ்வுத் துறை ஆணையர் அலுவலகத்திற்கு கணிப்பொறி வாங்க கொள்கை அளவில் ஒப்பளிக்கப்பட்டு அதற்காக கணிப்பொறி வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது அகதிகள் குடியமர்த்தப்பட்டிருக்கும் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு, ஆறு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டமையால், அதைப் பழுது பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது. 8,000 குடிசைகளை மீண்டும் கட்டுவதற்கு மத்திய அரசு ரூ.4.65 கோடி அனுமதித்துள்ளது. இப்பணி 1998-99-ல் முடிக்கக் கருதப்பட்டுள்ளது.

அகதிகள் குறித்த செலவு முழுவதையும் முதற்கண் மாநில அரசு ஏற்கிறது. பின்னர் மாநில அரசு முழுத் தொகையையும் மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெறுகிறது. அகதிகளுக்காக 1993-94 முதல் 1995-96 வரையிலான நிதி ஆண்டுகளில் மாநில அரசு (உத்தேசமாக)

538/121—13a

[1997 ஏப்ரல் 26

மொத்தம் ரூ.51.72 கோடி செலவிட்டுள்ளது. அத்தொகையில் மத்திய அரசு, மாநில அரசுக்கு ரூ.46.53 கோடி திருப்பிக் கொடுத்துள்ளது.

## ஏனைய பொதுவான பணிகளும் நிருவாகப் பணிகளும்

இந்தியக் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர், அமைச்சர் பெருமக்கள், ஏனைய சீர்மக்கள் போன்ற மிக முக்கியமான பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்போது ஆகும் செலவு, இந்த மானியக் கோரிக்கையில் காட்டப்படுகிறது. ஆளுநர், அமைச்சர்கள் ஆகியோரின் பதவியேற்பு விழாத் தொடர்பான செலவும், அரசின் ஏனைய விழாக்கள் தொடர்பான செலவும், இந்த மானியக் கோரிக்கையில் பற்று எழுதப்படுகிறது. தேசிய அளவிலும், உலக அளவிலுமான விழாக் கொண்டாட்டங்கள், சிறப்பு நாட்களில் கொண்டாட்டங்கள் தொடர்பான செலவும், இந்த மானியக் கோரிக்கையில் காட்டப்படுகிறது. மக்களுக்குப் பணிபுரிகின்ற வகையில் திட்டப் பணிகளைச் செயற்படுத்திவரும் பொதுத் துறை நிறுவனங்கள் இந்த ஆண்டில், விலைவாசி உயர்வு காரணமாக முன்கூட்டி அறிந்துகொள்ள இயலாத இடையூறுகளுக்கு உள்ளாக நேரிடலாம். அந்தகைய நிறுவனங்களுக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## சமூகப் பாதுகாப்பும் நல்னும்

இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ள முக்கிய செலவினங்கள் வருமாறு :

1. முஸ்லீம் கோஷா மகளிர் நிதியுதவிச் சங்கத்திற்கு உதவி (ரூபாய் 0.41 இலட்சம்)

2. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்திற்கு நிதி உதவி (ரூபாய் 54.91 இலட்சம்)

3. மாவட்ட முப்படை வீரர் நலவாரியம் (ரூபாய் 210.16 இலட்சம்)

4. போர்க்களத்தில் பெரும் வீரச் செயல்கள் புரிந்த வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மானியம் (ரூபாய் 3.84 இலட்சம்)



1997 ஏப்ரல் 26]

5. முன்னாள் படைவீரர்கள் நல நிதி (ரூபாய் 1 இலட்சம்)

6. இறந்துவிட்ட அரசுப் பணியாளர்களின் குடும்பத்திற்கு கருணைத் தொகை (ரூபாய் 35 கோடி)

7. தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி-பணிக்கொடைத் திட்டம் (ரூபாய் 8 கோடி)

8. மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கான சிறப்பு வருங்கால வைப்பு நிதி-பணிக்கொடைத் திட்டம் (ரூபாய் 60 இலட்சம்)

9. தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு வீடுகட்ட முன்பணம் சிறப்பு நலத் திட்டங்கள் (ரூபாய் 35 இலட்சம்)

10. கிராம அலுவலர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதி (ரூபாய் 9 இலட்சம்)

11. ஏழைத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம் (ரூபாய் 1.90 கோடி)

12. தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்கு பிரிமியத் தொகைச் செலுத்துதல் (ரூபாய் 12.18 கோடி)

13. தமிழ்நாடு அரசுப் பணியாளர் சுகாதார நல நிதி (ரூபாய் 40 இலட்சம்)

14. தாயகம் திரும்பியோர் துயர் தணிப்பு நடவடிக்கைக்கான மானியம் (ரூபாய் 16.52 கோடி)

## இணைப்பு-3

*(214-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 61**

**பல்வகை மூலதனச் செலவு**

**1997-98-ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு**

எழுதுபொருள்-அச்சுத் துறை, கல்வி, விளையாட்டுகள், கலை, பண்பாடு, வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி, செய்தி-விளம்பரம், பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலன், ஏனைய சமூகப் பணிகள், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை வளர்ச்சி, மீன்வளம் உணவுப் பொருள் சேமிப்பு-கிடங்கு வசதி, கூட்டுறவு, மலைப்பகுதிகள் வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், மின்சக்தி, சாலைகள்-பாலங்கள், சுற்றுலா ஆகியவை குறித்த மூலதனச் செலவு இந்த மானியக் கோரிக்கையில் அடங்கும்.

இக்குறிப்பு, இந்த மானியக் கோரிக்கையில் இடம் பெற்றுள்ள முக்கியமான நிதி ஒதுக்கங்களில் சிலவற்றைக் குறிப்பாகக் கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த நிதி ஒதுக்கங்கள் தொடர்பாக, முக்கியமான பெருந்தலைப்பு வாரியான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கணக்குத் தலைப்புகள் | 1996-97 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1996-97 திருத்த-மதிப்பீடு | 1997-98 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (மொத்தச் செலவு ரூபாய் இலட்சத்தில்) |
| 4058. எழுதுபொருள் அச்சுத் துறை குறித்த மூலதனச் செலவு | 307.31 | 340.56 | 328.37 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4070. ஏனைய நிருவாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 2000.00 | 9.67 | 2000.00 |
| 4202. கல்வி விளையாட்டுக்கள், கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 0.01 | 21.52 | 0.01 |
| 4216. வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு | 1586.80 | 1592.99 | 1369.01 |
| 4217. நகர்ப்பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு | 10200.01 | 5300.01 | 10200.01 |
| 4220. செய்தி-விளம்பரம் குறித்த மூலதனச் செலவு | 2.40 | 2.40 | 23.27 |
| 4225. பட்டியல் சாதியினர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் குறித்த மூலதனச் செலவு | 1786.02 | 1864.74 | 1814.76 |
| 4236. சத்துணவு குறித்த மூலதனச் செலவு | 240.00 | 240.00 | .. |
| 4250. ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 1076.18 | 625.13 | 671.75 |
| 4403. கால்நடை வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | .. | 5.00 | .. |
| 4404. பால்பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 20.41 | 20.41 | 17.59 |
| 4405. மீன்வளம் குறித்த மூலதனச் செலவு | 133.27 | 33.90 | 60.36 |
| 4408. உணவு சேமிப்புக் கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு | 140.00 | 140.00 | 151.00 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4425. கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 2162.26 | 2163.19 | 2058.56 |
| 4551. மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 40.01 | 100.01 | 119.51 |
| 4711. வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 100.03 | 194.44 | 62.05 |
| 4801. மின்சக்தி திட்டங்கள் மூலதனச் செலவு | .. | .. | 25000.00 |
| 4860. நுகர்வோர் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 0.01 | 0.01 | 2.81 |
| 5452. சுற்றுலா குறித்த மூலதனச் செலவு | 47.17 | 183.13 | 71.55 |
| 5465. பொது நிதி-வர்த்தக நிறுவனங்களில் முதலீடு | 0.01 | 40.96 | 0.01 |
| 5475. ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 1.30 | 1.30 | 1.30 |

இம்மானியக் கோரிக்கையின் கீழ் வரும் சில முக்கிய திட்டங்களும் அவற்றிற்குச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களும் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

## எழுதுபொருள் அச்சுத் துறை

சென்னை, அரசு மைய அச்சகத்தை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் இயந்திரங்களை வாங்குவதற்கு ரூ.300 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இயந்திரங்கள் வாங்குவதற்காக சேலத்தில் உள்ள அரசு கிளை அச்சகத்திற்கு ரூ.21.85 இலட்சமும் மதுரையிலுள்ள அரசு

[1997 ஏப்ரல் 26

வட்டார அச்சகத்திற்கு ரூ.5.50 இலட்சமும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### வீட்டுவசதி

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம், காவல் துறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக, 1997-98-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.13.68 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### நகர்ப் பகுதி வளர்ச்சி

பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு (மகாநகர்) ரூ.50 கோடியும், விரைவு இரயில் போக்குவரத்துக்காக (நிலை-II) ரூ.50 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்

**பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்:**

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்ட 1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.208.69 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**மாணவியர் இல்லங்கள் மற்றும் மனையகப் பள்ளிகள் கட்டுதல்:**

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.850.00 இலட்சம் மாணவியரில்லங்களைக் கட்டுவதற்காகவும், ரூ.101.51 இலட்சம் பழங்குடியினர் மனையகப் பள்ளிகளையும் மாணவர் இல்லங்களையும் கட்டுவதற்காகவும் 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தில் பங்கு மூலதன முதலீடு

வங்கிகள், ஏனைய நிதியுதவி நிறுவனங்கள் அளிக்கும் கடன் வசதிகளைப் பயன்படுத்தி ஆதி திராவிடர்கள் தங்கள் பொருளாதார



1997 ஏப்ரல் 26]

நிலைமையை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில் தொகையை வழங்கும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் செயற்படுத்தி வருகிறது. இச்செயல் நோக்கத்திற்காக, 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.6.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### உலக வங்கியின் நிதி உதவி பெறும் தொழில் திறமை மேம்பாட்டுத் திட்டம்:

1997-98-ஆம் ஆண்டில் தொழில் பயிற்சி நிறுவனங்களில் உள்ள வசதிகளை மேம்படுத்த ரூ.6.56 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### மீனளம்

**உள்நாட்டு மீனளம்:**

மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளுக்காக ரூ.10.01 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**மீன்பிடித் துறைமுகம், மீனளப் பயிற்சி மைய மேம்பாடு**

மீன்பிடித் துறைமுகங்களின் மேம்பாட்டுக்காகவும், சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவும், ரூ.38.51 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்பிடி கிராமங்களில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூ. 1.67 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீனளப் பயிற்சி மையத்தின் கட்டடங்களுக்குச் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### உணவுப் பொருள் சேமிப்பும் கிடங்கு வசதியும்

நேரடிக் கொள்முதல் நிலையங்களையும், கிடங்குகளையும் கட்டுவதற்காகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ.51.00 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### கூட்டுறவு

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் ஆகியவற்றின் பங்கு மூலதனத்தை

வலுப்படுத்த ரூ.1657.90 இலட்சமும், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்திற்காக ரூ. 337.16 இலட்சமும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவியாக ரூ.10.00 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலைகளுக்கு தொடக்க நிதியுதவியாக ரூ.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### மலைப் பகுதிகள்

1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் துப்புரவு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.55 இலட்சமும், ஊட்டி ஏரியைத் தூர்வாரும் பணிக்காக ரூ.58.99 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள்

கடல் அரிப்பைத் தடுக்கும் வண்ணம் பாறாங்கற்களைக் கொண்டு கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்காக 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.46.67 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### மின்சக்தி

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு பங்கு மூலதன நிதியுதவியாக 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.250 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### சுற்றுலா

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலா மேம்பாட்டிற்காக ரூ.71.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



## இணைப்பு-4

*(214-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### மானியக் கோரிக்கை எண் 62

### மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

### கொள்கை விளக்கக் குறிப்பு 1997-98

இந்த மானியக் கோரிக்கையில் மாநில அரசு, பல்வேறு நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கும் கடன்கள், முன்பணம் ஆகியவை குறித்த நிதியொதுக்கங்கள் அடங்கும். இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள முக்கிய நிதி ஒதுக்கங்கள் பற்றி இக்குறிப்பில் விளக்கப்பட்டுள்ளன. துறைவாரியான தனித்தனி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வளர்ச்சித் துறை (1) | 1996-97 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (2) | 1996-97 திருத்த மதிப்பீடு (3) | 1997-98 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. பயிர் வளர்ப்பு, மண்வள நீர்வளப்பாதுகாப்பு, வேளாண்மை நிதியுதவி நிறுவனங்கள், பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், பால்பண்ணை வளர்ச்சி, கால்நடை வளர்ப்பு | 2010.72 | 1971.53 | 1979.30 |
| 2. மலைப்பகுதி மேம்பாடு | 465.01 | 508.31 | 443.34 |
| 3. கூட்டுறவு | 1010.04 | 1795.73 | 1.32 |

[1997 ஏப்ரல் 26

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 4. தொழில்கள் | 3038.46 | 4119.03 | 3035.10 |
| 5. வீட்டுவசதி | 4220.72 | 4220.72 | 2709.59 |
| 6. நகர்ப்பகுதி வளர்ச்சி | 12418.03 | 12418.02 | 6307.06 |
| 7. மின்சக்தி | 23500.00 | 13500.00 | .. |
| 8. மருத்துவம் பொதுச் சுகாதாரம் | 7.75 | 12.00 | 12.00 |
| 9. குடிநீர் வழங்கல்-துப்புரவு | 12281.30 | 11516.48 | 14673.46 |
| 10. கல்வி, விளையாட்டு, கலை, பண்பாடு | 525.07 | 625.02 | 825.02 |
| 11. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 195.51 | 135.51 | 130.51 |
| 12. சமூகப் பாதுகாப்பு-நலன் குறித்த கடன்கள் (புதுவாழ்வு, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் போன்றவை) | 115.36 | 115.07 | 115.05 |
| 13. ஏனைய போக்குவரத்துப் பணிகளுக்கான கடன்கள் (சாலைகளும் பாலங்களும்) | 100.01 | 100.00 | 100.00 |
| 14. சாலைப் போக்குவரத்து | .. | 8852.00 | .. |
| 15. அரசுப் பணியாளர்கள் முதலியோருக்குக் கடன்கள் | 12042.75 | 12087.26 | 9842.26 |
| 16. ஏனைய கடன்கள் | 68.82 | 122.57 | 68.07 |
| மொத்தம் | 71999.55 | 72029.25 | 48342.08 |



1997 ஏப்ரல் 26]

## குடிநீர் வழங்கல்-துப்புரவு

2. குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டங்களுக்காக 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டமதிப்பீட்டில் ரூ.146.73 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கிய நிதியொதுக்கங்கள் வருமாறு:

| | | 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் செயற்படுத்தும் திட்டங்கள்: | |
| (i) | குடிநீர் வழங்குத் திட்டங்கள் | 1460.46 |
| (ii) | வடிகால் திட்டங்கள் | 128.98 |
| 2. | சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்: | |
| (i) | கிருஷ்ணா குடிநீர் வழங்குத் திட்டம் | 1600.00 |
| (ii) | குடிநீர் வழங்கும் பணி நிலை உயர்த்துதல் | 6990.00 |
| (iii) | கழிவு நீரகற்று திட்டங்கள் | 1900.00 |

3. குடிநீர் வழங்கல். கழிவு நீரகற்றுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பெருமளவு மூலதன முதலீடுகள் செய்யப்பட உள்ளன. பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு வழங்கும் வரவு-செலவுத் திட்ட நிதி ஆதாரங்களுடன் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் நிதியுதவி பெறப்படுகிறது.

4. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம், அரசிடமிருந்து கடன் தொகையைப் பெற்று பல்வேறு மூலதனத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின் மூலம் சென்னையில் குடிநீர் அனுப்புகை மற்றும் பங்கீட்டு முறை நிலை உயர்த்துதல், கழிவு நீரகற்று முறையைப் புதுப்பித்தல் மேலும் சென்னை கழிவு நீரகற்று முறையில் நடைமுறை மேம்பாடுகள்

செய்தல் ஆகியவை வாரியத்தால் செயல்படுத்தப்படுகிற சில முக்கிய திட்டப்பணிகள் ஆகும். இதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## தொழில்கள்

5. மானியக் கோரிக்கையில் தொழில் துறைக்கு மொத்தம் ரூ.30.35 கோடி ஒதுக்கீடாக சேர்க்கப்பட்டுள்ளது. இத்துறையில் செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகள் வருமாறு:

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு ரூ. 3 கோடி.

(ஆ) ஹூண்டாய் கார் தயாரிப்புத் திட்டம் தொடர்பாக அடிப்படை வசதிக்காக தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ. 10 கோடி.

(இ) பெரியார் மாவட்டம் பெருந்துறையிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டானிலும் வளர்ச்சி மையங்களை அமைக்க ஒவ்வொன்றுக்கும் ரூ.5 கோடி வீதம். தமிழ்நாடு தொழில் அடிப்படை கட்டமைப்பு வளர்ச்சி கழகத்திற்கு ரூ.10 கோடி.

(ஈ) புதிய தொழில் பேட்டைகளை உருவாக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு ரூ.3.30 கோடி.

## வீட்டுவசதி—நகர்ப் பகுதி வளர்ச்சி

6. வீட்டுவசதி—நகர்ப் பகுதி வளர்ச்சிக்கான கடனாக 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.90.16 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் அரசுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடும், குறைந்த வருமானப் பிரிவினருக்குரிய வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ரூ.5.50 கோடியும், தமிழ்நாடு வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 8.76 கோடியும், புறவழிச் சாலை அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு ரூ. 10.00 கோடி நிதி ஒதுக்கீடும் மொத்தமாக நிலங்கள் கையகப்படுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ரூ.15 கோடியும், அடிப்படை வசதி மேம்பாட்டுத்



தேவைகளை நிறைவு செய்வதற்கு சென்னை தவிர ஏனைய மாநகராட்சிகளுக்கு ரூ.12.50 கோடியும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.37.57 கோடி நிதி ஒதுக்கீடும் இதில் அடங்கும்.

## அரசுப் பணியாளர்களும், ஏனைய பணியாளர்களும்

7. அரசுப் பணியாளர்களுக்கு பல்வேறு வகைப்பட்ட முன் பணங்கள் வழங்குவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 98.42 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு முன்பணம் வழங்குவதற்காக நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி அதாவது ரூ.50.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இயக்க ஊர்திகள் வாங்குவதற்காக ரூ.25.25 கோடியும், கைத்தறி மற்றும் கதர் துணிகள் வாங்க முன்பணமாக ரூ.11 கோடியும், அரசுப் பணியாளர்களின் குழந்தைகள் மேற்படிப்பிற்காக ரூ.3.20 கோடியும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

8. அரசுப் பணியாளர்கள் கணினிகள் வாங்குவதற்கு முன்பணம் வழங்க ரூ.25 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

9. அரசுப் பணியாளர்கள் அரசு இயக்க ஊர்திகளை பயன்படுத்துவதற்குப் பதிலாக தனியாக இயக்க ஊர்தி வசதிக்கு முன்பணம் வழங்குவதற்கு ரூ.1 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10. நகராட்சிப் பணியாளர்கள் வீடுகள் கட்டுவதற்கு முன் பணம் அனுமதிப்பதற்காகவும். 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.60 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. முக்கியமான ஏனைய நிதியொதுக்கீடுகள் குறித்த பட்டியல் இத்துடன்† இணைக்கப்பட்டுள்ளது.

## கடன்களைத் திருப்பி வசூலித்தல்

12. முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்டு 1997-98-ஆம் ஆண்டில் வசூலாகும் கடன் தொகை ரூ.15,864.55 இலட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

---

† பக்கம் 206-ல் அச்சிடப்பெற்றுள்ளது.

## இணைப்பு

(பக்கம் 351-ல் உள்ள பத்தி II-க்கு தொடர்புடையது.)

(செலவினங்கள்)

1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏனைய முக்கிய நிதி ஒதுக்கங்கள் வருமாறு:

| | 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| **I. கல்வி** | |
| தொழில் நுட்பக் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக அரசு நிதியுதவி பெறும் பல்தொழில் பயிலகங்களுக்குக் கடன்கள் | 800.00 |
| **II. வேளாண்மை** | |
| மண், நீர் வளப் பாதுகாப்பு | 105.00 |
| **III. ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்** | |
| தொழிற்கல்வி, பட்டப்படிப்பு பயில பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்குக் கடன்கள் | 101.35 |
| **IV. புதுவாழ்வுத் திட்டங்கள்** | |
| இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வீட்டுவசதிக் கடன்கள் | 100.00 |
| **V. உள்ளாட்சி மன்றங்கள் (குடிநீர் வழங்கல்-வடிகால் திட்டங்கள் தவிர).** | |
| நகராட்சிகள்— | |
| நகராட்சி சாலைகள் | 50.00 |
| சாலைகள், பாலங்கள் அமைத்தல் | 50.00 |
| **VI. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள்** | |
| தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகளுக்குக் கடன்கள் | 715.00 |



## இணைப்பு - 5

(214-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க)

### கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்

மானியக் கோரிக்கை எண் 8-தேர்தல்கள் என்பதன்கீழ் 1997-98-ஆம் ஆண்டு நிதியாண்டின் செலவுகளுக்காக ரூபாய் ஆறு கோடியே நாற்பது இலட்சத்து பத்தொன்பதாயிரம் (ரூ.6,40,19,000) அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம்மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்படும் நிதி ரூ. 5,78,00,000 பெரும்பாலும் முறையான தேர்தல் அமைப்பில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம், பயணப்படி செலவுகளுக்கும், தேர்தல் நிர்வாகத்தில், சீரான நடைமுறைக்காகவும், 1997-ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் வாக்காளர் பட்டியல் சுருக்கத் திருத்தத்திற்கும் மற்றும் தமிழ்நாட்டில் அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளிலும் உள்ள எல்லா வாக்காளர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை தயாரித்து வழங்குவதற்கும் மற்றும் ரூ.62,19,000 மாநில தேர்தல் ஆணையத்தின் ஏனைய நிருவாகப் பணிகளுக்கும் ஊராட்சிகளுக்கும், நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் செலவினத்திற்கும் தேவைப்படுகிறது.

2. நாடாளுமன்றத்திற்கும், தமிழக சட்டமன்றப் பேரவைக்குமான பொதுத் தேர்தல் 1996-ஆம் ஆண்டு ஏப்ரல் 27 மற்றும் மே 2 ஆகிய நாட்களில் செவ்வனே நடைபெற்றன. எனவே இவ்விரு அவைகளுக்கும் 2001-ஆம் ஆண்டு வாக்கில்தான் அடுத்த பொதுத்தேர்தல்கள் நடைபெறவேண்டும்.

[1997 ஏப்ரல் 26

3. தற்சமயம் நம் மாநிலத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கும், மாநிலங்களவைக்கும் தேர்ந்தெடுப்பதற்கு காலியிடம் ஏதும் இல்லை. அவ்வாறே சட்டமன்றப் பேரவையிலும் காலியிடம் ஏதும் இல்லை. சட்டமன்ற மேலவையை மீண்டும் அமைப்பதற்கான தீர்மானம் சட்டமன்றப் பேரவையில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.

4. மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்

### கோரிக்கை எண் 8

### கொள்கை விளக்கக் குறிப்பு - தேர்தல்கள்

"மானியக் கோரிக்கை எண் 8-தேர்தல்கள்" என்பதன்கீழ் 1997-98-ஆம் ஆண்டில் கீழ்குறித்த இனங்களுக்குச் செலவிட தேவைப்படும் தொகை ரூ. 6,40,19,000 (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

| | |
|---|---|
| **2015 தேர்தல்கள் (திட்டத்தில் சேராதது) :—** | ரூபாய் |
| 102. தேர்தல் அதிகாரிகள் | |
| எஎ. சட்டப்பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் | 2,75,16,000 |
| 103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் | |
| எஎ. சட்டப்பேரவைத் தொகுதிகள் | 1,74,51,000 |
| 104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் | |
| எஎ. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப்பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள் | 7,80,000 |
| 105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் | |
| எஎ. இடைத்தேர்தல்கள் | 18,000 |
| | (அடையாள ஒதுக்கீடு) |



1997 ஏப்ரல் 26]

| | |
|---|---|
| | ரூபாய் |
| எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல் | 13,000 |
| | (அடையாள ஒதுக்கீடு) |
| 106. மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் | |
| எஎ. மாநிலச்சட்டப்பேரவை | 81,000 |
| 108. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல் | |
| எஎ. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம் | 1,16,51,000 |
| 2070. ஏனைய நிருவாகப் பணிகள் | |
| எபி. மாநிலத் தேர்தல் ஆணையம் | 61,08,000 |
| 2515. ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | |
| எஎப். ஊராட்சிகளுக்குத் தேர்தல் | 17,000 |
| 800. ஏனைய செலவு | |
| எசி. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் | 19,000 |
| கூட்டுக திருப்பி வசூலிப்பவை | 3,56,000 |
| **மொத்தம்** | **6,40,19,000** |

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது :-

**102- தேர்தல் அதிகாரிகள் :**

**எஎ. சட்டப்பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் :**

**மதிப்பீடு** : ரூ.2,75,16,000

மாநிலத் தலைமையகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியும், உதவித் தலைமைத் தேர்தல் அதிகாரியும், சிறப்பு அலுவலர் (அடையாள அட்டை வழங்குதல்) அவர்களும் அலுவலகப் பணியில் உதவி புரிகின்றனர். மேலும் தலைமைச் செயலகத்தில் பொதுத் (தேர்தல்) துறையில் நிலையான ஆறு பிரிவுகள் உள்ளன.

வெளியூர் பகுதிகளில், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள் (சென்னை நீங்கலாக), வருவாய் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாநகராட்சிகளின் ஆணையர்களின் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிப்பதற்கென நிலையான அடிப்படையில் ஓர் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் மூவர், இளநிலை உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர், பதிவேடு எழுத்தர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட நிலையான அலுவலர்கள் ஊழியர்களின் ஊதியச் செலவுகள் தவிர, தேர்தல் சம்பந்தப்பட்ட பயணச் செலவுகளும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். தேர்தல் தொடர்புடைய அலுவலகச் செலவுகள், எதிர்பாராத செலவினங்கள் தபால், தந்தி, தொலைபேசிக் கட்டணங்கள், தேர்தல் சார்பாக சிறப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவையும் இக்கணக்குத் தலைப்பின்கீழ் அடங்கும். இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

## 103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் :

### எ. சட்டப்பேரவைத் தொகுதிகள் :

மதிப்பீடு : ரூ.1,74,54,000

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப்பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும்.



இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்களின் ஊதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைக் காப்பதற்காக நிலையாக நியமிக்கப்பட்டுள்ள ஓர் உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் சம்பளச் செலவுகளுக்காகவும் இத்தலைப்பின்கீழ் ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

புதுடெல்லியில், 14-1-1997 அன்று நடைபெற்ற அனைத்துத் தலைமைத் தேர்தல் அதிகாரிகளின் மாநாட்டில், வாக்காளர் பட்டியல்களை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தீவிர திருத்தம் செய்யலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல்களை 1-1-1997-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு சுருக்க முறையில் திருத்துவதற்கான அறிவுரைகள், இந்திய தேர்தல் ஆணையத்திடமிருந்து இதுவரை வரவில்லை. எனினும், கருக்கமுறைத் திருத்தம் மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் இவ்வாண்டு ஆணையிடின் அதற்கான செலவுகளை மேற்கொள்ள, 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ.1,74,54,000 (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தி நாலு இலட்சத்து ஐம்பத்தி நாலாயிரம் மட்டும்) ஒதுக்கப்பட்டுள்ளது. இச்செலவினங்களை மாநில அரசும் மைய அரசும் சரிபாதியாக பகிர்ந்து கொள்கின்றன.

## 104. நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் :

### எ. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டபேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள் :

மதிப்பீடு ரூ.7,80,000

நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன்கீழ் அடங்கும். 1996-ஆம் ஆண்டு ஏப்ரல் 27 மற்றும் மே 2 ஆகிய நாட்களில் சட்டமன்றப் பேரவைக்கும், நாடாளுமன்றத்திற்கும் பொதுத் தேர்தல்கள் ஒரே சமயத்தில், செவ்வனே நடைபெற்றன. எனவே இவ்விரு அவைகளுக்கும் 2001-ஆம் ஆண்டு வாக்கில்தான்

[1997 ஏப்ரல் 26

அடுத்த பொதுத் தேர்தல்கள் நடைபெறவேண்டும். இவைதவிர மாவட்டங்களில் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டிடங்களுக்கான வாடகை, அதற்கான காவலர்களின் சம்பளம், வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள் மற்றும் இத்துறையில் உள்ள மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு, பெட்ரோல் செலவுகள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்களும் இதன்கீழ் அடங்கும். மேற்கூறிய செலவினங்களுக்காக இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இச்செலவினங்களில் ஐம்பது விழுக்காட்டினை மைய அரசு பகிர்ந்து கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் :**

**எஎ. இடைத்தேர்தல்கள் :**

மதிப்பீடு ரூ. 18,000

(அடையாள ஒதுக்கீடு)

நாடாளுமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். இம்மாநிலத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்க காலியிடம் ஏதுமில்லை. எனவே இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் :**

**எபி. நாடாளுமன்ற மக்களவைக்கு தேர்தல் :**

மதிப்பீடு ரூ. 18,000

(அடையாள ஒதுக்கீடு)

நாடாளுமன்றத்திற்கு தனியே பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று பின்னர் மைய அரசினால் திரும்பப் பெறப்படும்.

நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தலுடன் சேர்ந்து 1996-ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெற்றன. எனவே நாடாளுமன்றத்திற்கான அடுத்த பொதுத் தேர்தல் 2001-ஆம்



1997 ஏப்ரல் 26]

ஆண்டுவாக்கில்தான் நடைபெற வேண்டும். எனவே இத்தலைப்பின் கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசு ஏற்றுக் கொள்கிறது.

**106. மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் :**

**எஎ. மாநிலச் சட்டப்பேரவை :**

மதிப்பீடு : ரூ. 81,000

தனியாக மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தலோ அல்லது இடைத்தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் அடங்கும்.

நாடாளுமன்றத்திற்கும், தமிழக சட்டமன்றத்திற்கும் பொதுத் தேர்தல் 1996-ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஒருங்கிணைந்து நடைபெற்றன. எனவே சட்டமன்றப் பேரவைக்கு அடுத்த பொதுத்தேர்தல் 2001-ஆம் ஆண்டுவாக்கில்தான் நடைபெற வேண்டும். பொதுத் (தேர்தல்கள்) துறையில் உள்ள போட்டோ நகல் எடுக்கும் கருவி, மூன்று மின் தட்டச்சுகள் மற்றும் ஒரு மின் படிப்பெருக்கி ஆகியவற்றின் பராமரிப்புக்காகவும் இதர செலவினங்களுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசு மேற்கொள்கிறது.

**108. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல் :**

**எஎ. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்:**

மதிப்பீடு : ரூ. 1,16,54,000

தமிழ்நாட்டில் அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளிலும் உள்ள எல்லா வாக்காளர்களுக்கும் புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டை தயாரித்து வழங்குவது என முடிவெடுத்து இப்பணியைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 234 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளிலும் முதற்சுற்றுப் புகைப்படமெடுக்கும் பணி கடந்த 16-2-1997-ம் தேதியுடன் முடிவடைந்தது. 1997-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் தேதிய நிலவரப்படி தமிழ்நாட்டிலுள்ள மொத்தம்

[1997 ஏப்ரல் 26

4,38,74,094 வாக்காளர்களில், இதுவரை 2,65,29,623 வாக்காளர்கள் புகைப்படமெடுக்கப்பட்டுள்ளனர். மொத்த வாக்காளர்களில் இது 62.44 சதவீதமாகும். இதுவரை பத்து மாவட்டங்களில் இரண்டாவது சுற்றுப் புகைப்படமெடுக்கும் பணியும் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள இதர மாவட்டங்களில் இந்த ஆண்டு ஏப்ரல்/மே மாதங்களில் இரண்டாவது சுற்றுப் 'புகைப்படம்' எடுக்கும் பணி மேற்கொள்ளப்படும். இதற்கான கால அட்டவணையை தமிழ்நாடு மின்னணு நிறுவனம், சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அதிகாரிகளைக் கலந்தாய்ந்து முடிவு செய்து வருகிறது. இத்திட்டத்திற்காக ரூ. 1,16,54,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு பகிர்ந்து கொள்கிறது.

## 2070. ஏனைய நிருவாகப் பணிகள் :

### எபி. மாநிலத் தேர்தல் ஆணையம் :

மதிப்பீடு : ரூ. 61,08,000

மாநிலத் தேர்தல் ஆணையத்தின் நிருவாகப் பணிகளுக்கு இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2515. ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் :

மதிப்பீடு : ரூ. 36,000

ஊராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துவதற்காக அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுக திருப்பி வசூலிப்பவை : ரூ. 3,56,000

இத்துறையில் பணிபுரியும் அரசு பணியாளர்கட்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் போன்ற இனங்களிலிருந்து திரும்பப் பெறப்படும் தொகையை திருப்பி வசூலித்தல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,56,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# கோரிக்கை எண் 8 தேர்தல்கள்

## ஊராட்சி தேர்தல்களுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு

ஊராட்சி அமைப்புகளின் வாயிலாக வலுவான பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தை நிறுவுவதிலும், பொருளாதார வளர்ச்சியையும் சமூக



1997 ஏப்ரல் 26]

நீதியையும் உறுதி செய்யவும், மக்களிடமே நிர்வாகத்தை எடுத்துச் செல்லும் பணியிலும், புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட 73-வது அரசியல் திருத்தச் சட்டம் ஒரு மைல் கல்லும் பெரிய சாதனையும் ஆகும். அந்த அரசியல் திருத்தத்தின் கட்டமைப்பிற்கு இணங்க, 1994-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் என்ற புதிய சட்டம் மாநிலச் சட்டசபையில் இயற்றப்பட்டது. இச்சட்டம் கீழ்க்கண்ட பல புதிய சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது:-

1. சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என்ற மூன்று அடுக்கு முறையை உருவாக்கி ஆளுதல் குறித்து இச்சட்டத்தில் விரிவாக வரையறுக்கப்படுதல்.
2. தங்கள் சுய வளர்ச்சிக்காக மக்கள் அதிகமாக பங்கேற்பதற்கு ஏதுவாக கிராம சபைகளை நிறுவுதல்.
3. ஊராட்சி அமைப்புகளுக்கு திட்டக்குழுக்களை நிறுவுதல்.
4. ஊராட்சி அமைப்புகள் மேற்கொள்வதற்கென பணிகளை ஒதுக்குவதை உறுதி செய்தல்.
5. மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகளின் எல்லா பதவிகளிலும் மூன்றில் ஒரு பங்கை சுழற்சி முறையில் பெண்களுக்கு ஒதுக்கிடுதல்.
6. மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகளிலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கென இவ்வின மக்கள் தொகையின் விகிதாச்சாரத்திற்கேற்ப இடஒதுக்கீடுகள் செய்தல்.
7. ஊராட்சி அமைப்புகளில் வார்டு பிரிவினைகள் செய்ய வழி வகுத்தல்.
8. ஊராட்சி அமைப்புகளுக்கு தேர்தல்கள் குறித்த காலங்களில் தொடர்ச்சியாக சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்தல். ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் நிலையாக தொடர்ந்து செயல்படுதல். ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் கால வரையறை 5 வருடங்கள் ஆகும். ஆனால், அரசுக்கு உள்ள ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விளைவாக இந்த 5 ஆண்டு காலத்திற்குள்

[1997 ஏப்ரல் 26

கூட கலைக்கப்படலாம். ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் கலைக்கப்பட்ட தேதியில் இருந்து 6 மாதம் முடிவடைவதற்குள் புதிய உள்ளாட்சி அமைப்பு தேர்ந்தெடுக்கப்படவேண்டும் எனவே. உள்ளாட்சி அமைப்பின் நிலையான தொடர்ச்சியை உறுதி செய்வதற்கு புதிய அமைப்புகளை உடனுக்குடன் ஏற்படுத்துவதற்கு தேர்தல்களை நடத்தி முடிக்க வேண்டியது சட்ட பூர்வமான கடமை ஆகும்.

9. சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் மாவட்ட ஊராட்சியில் பதவி வழி உறுப்பினர்களாக வாக்களிக்கும் உரிமை இன்றி பங்கு பெறச் செய்தல்.

10. கிராமப்புற உள்ளாட்சி அமைப்பின் ஆட்சி எல்லையிலிருந்து பேரூராட்சிகள் நீக்கப்பெறல்.

## தேர்தல்கள்:

'சாதாரண தேர்தல்கள்' என்பது ஒரு உறுப்பினருக்கென நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவுறும்போது அதனை நிரப்ப நடத்தப்படும் தேர்தலைக் குறிக்கும். அதாவது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் பொதுத் தேர்தல்களை இது குறிக்கும். 'தற்செயல் தேர்தல்கள்' என்பது கீழ்க்கண்ட காரணங்களின் விளைவாக நடத்தப்படும் இடைத் தேர்தல்களை குறிக்கும்:-

ஒரு உறுப்பினரின் மரணம்; உறுப்பினர் தனது பதவியை ராஜினாமா செய்தல்; தேர்தல் மனுவினால் உறுப்பினர் பதவியை இழத்தல்; சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தகுதியின்மைகளுக்கு ஆளாகி பதவியை இழத்தல்.

## மாநிலத் தேர்தல் ஆணையம்:

மாநிலத் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல்கள் தயாரித்தலையும், ஊராட்சி அமைப்புகளுக்கு அனைத்துத் தேர்தல்களை நடத்துவதையும் மேற்பார்வையிட, இயக்க, கட்டுப்படுத்த அரசியலமைப்பின் 243-K பிரிவின்படியும் 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 239 பிரிவின்படியும் தோற்றுவிக்கப்பட்டதாகும். எனவே, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து தேர்தல்களையும் நடத்தும் பொறுப்பு, மாநிலத் தேர்தல் ஆணையாளரின்



7 ஏப்ரல் 26]

லைமையில் இயங்கும் மாநிலத் தேர்தல் ஆணையத்தின் வசம் படைக்கப்பட்டுள்ளது. மாநிலத் தேர்தல் ஆணையாளரின் பணி ரையறைகள் மற்றும் பதவிக்காலம் ஆளுநரால் நிர்ணயிக்கப்படுகிறது. ர்நீதிமன்ற நீதிபதி எம்முறையில், எவ்வடிப்படையில் பணியிலிருந்து நீக்கப்படுகிறாரோ அதேபோன்றுதான் மாநிலத் தேர்தல் விக்கப்படுகிறாரோ ணையரையும் பணியிலிருந்து விடுவிக்கச் செய்ய வேண்டும். மாநிலத் ர்தல் ஆணையரின் பணி வரையறைகள் அவரது நியமனத்திற்குப் ன்பு அவருக்குப் பாதகமாக மாற்றப்படக்கூடாது. 1994-ஆம் ஆண்டு ழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் மாநிலத் தேர்தல் ஆணையர் ரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கலாம். மொத்தத்தில் ஆறு ண்டுகளுக்கு மிகைப்படாமல் மாநிலத் தேர்தல் ஆணையர் ற்கொண்டு இருமுறை தொடர்ந்து மறு நியமனம் செய்யப்படலாம். ாநிலத் தேர்தல் ஆணையாாக நியமிக்கப்பட்டவர் தனது பவிக்காலத்தில் 62 வயதை நிறைவு செய்தால் பதவியிலிருந்து ஓய்வு பறுவார்.

தமிழ்நாட்டில் தற்போதைய மாநிலத் தேர்தல் ஆணையர் 1994-ஆம் ண்டு ஜூலை மாதம் நியமிக்கப்பட்டார். அவர் 15-7-1994 அன்று ாநிலத் தேர்தல் ஆணையாாக பொறுப்பேற்றுக் கொண்டார். மாநிலத் தேர்தல் ஆணையருக்கு உதவியாக ஒரு முதுநிலை இந்திய ஆட்சிப் ணி அதிகாரி செயலராகவும் மற்றும் ஊரக வளர்ச்சி, நகராட்சி ர்வாகம், வருவாய், நிதி, சட்டம் முதலிய துறைகளிலிருந்து யமிக்கப்பட்ட மூத்த அதிகாரிகளும் இதர பணியாளர்களும் செயல் ரிகின்றனர். தேவையான உள் அமைப்புகளுடனும் போதிய சதிகளுடனும் மாநிலத் தேர்தல் ஆணைய அலுவலகம் நிறுவப்பட்டு, ந.6, ரேவதி தெரு (உள்வட்டச் சாலை) வடபழனி, சென்னை-26 ன்ற முகவரியில் தனியார் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. ாநிலத் தேர்தல் ஆணையத்தின் நிர்வாகச் செலவுகளுக்கு நடப்பு ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.61.08 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 996-ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகள் தேர்தல்:

ஊராட்சி அமைப்புகளுக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு தமிழ்நாட்டிற்கு நெடுங்காலமாக கிடைக்காமலே இருந்தது. ஏனெனில் தமிழ்நாட்டில் ஊராட்சித் தேர்தல்கள் நீண்ட நாட்களாக நடத்தப்படாமலே போய்விட்டது. தற்போதைய அரசு 1996-ஆம் ஆண்டு

[1997 ஏப்ரல் 26

மே மாதம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்துவதென்ற கொள்கை முடிவை திட்டவட்டமாக அறிவித்தது. எந்நேரமும் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்களை நடத்துவதற்கு துடிப்புடன் இருந்த மாநிலத் தேர்தல் ஆணையம், தேர்தல்களை நடத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் விரைந்து மேற்கொண்டது. உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதென்பது எளிதான செயலல்ல. அது பிரமாண்டமானதும் பொறுப்பு நிறைந்தது மட்டுமன்றி சிக்கலானதும் எளிதில் கையாள முடியாததுமான ஒரு செயலாகும். சட்டம், விதிகள், அறிவுரைகள், செயல்முறைகள் யாவும் புதியன. மேலும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவதென்பது இந்தியாவில் வேறெந்த மாநிலங்களும் அனுபவித்திராத ஒரு கூடுதல் சுமையாகும். சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற பொதுத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் உள்ளாட்சி அமைப்பு தேர்தல்கள் அளவிலும் தரத்திலும் மிகப்பிரமாண்டமானதும் கடுமையானதுமாகும். வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை, வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை, தேர்தல் பணியாளர்கள் மற்றும் காவல் துறையினரின் எண்ணிக்கை, வாங்கப்படும் வாக்குப்பதிவு பொருட்களின் அளவு, வாக்காளிப்போரின் எண்ணிக்கை, போட்டியின் தீவிரம் முதலியன இக்கூற்றினை நிருபிக்கும் சான்றாகும். சட்டசபை மற்றும் நாடாளுமன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பூடும் 273 பதவிகளுக்கெதிராக (234 + 39 = 273) கிராமப்புற உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் ஏறக்குறைய 1,16,745 பதவிகளுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டசபை மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களுக்காக அச்சிடப்படும் 273 வகையான வாக்குச்சீட்டுகளுக்குப் பதிலாக ஊராட்சி அமைப்பு தேர்தல்களில் 22,301 வகையான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டன.

தமிழ்நாட்டில் 12,584 சிற்றூராட்சிகளும், 384 ஊராட்சி ஒன்றியங்களும் மற்றும் 28 மாவட்ட ஊராட்சிகளும் உள்ளன. இம்மூன்று வகை அமைப்புகளிலும் உள்ள வார்டுகளின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| சிற்றூராட்சி வார்டுகள் | - | 40734 |
| ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | - | 6499 |
| மாவட்ட ஊராட்சி வார்டுகள் | - | 648 |



997 ஏப்ரல் 26].

நேரடியாகத் தேர்தெடுக்கப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் | - | 97014 |
| சிற்றூராட்சி தலைவர்கள் | - | 12584 |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | - | 6499 |
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | - | 648 |

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் இரண்டு கட்டங்களில் நடந்தது. முதல் கட்டத் தேர்தல்கள் 9-10-1996 அன்றும். இரண்டாம் கட்டத் தேர்தல்கள் 12-10-1996 அன்றும் நடந்தன. நேரடித் தேர்தல்கள் யாவும் 17-10-1996 அன்றுடன் முடிக்கப்பட்டது.

நேரடித் தேர்தல்களை நடத்திய பின்னர், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் மற்றும் சிற்றூராட்சிகளின் துணைத் தலைவர்கள் ஆகிய பதவிகளுக்கான மறைமுகத் தேர்தல்களையும் மாநிலத் தேர்தல் ஆணையம் நடத்தியது. இம்மறைமுகத் தேர்தல்கள் 25-10-1996 அன்று நடைபெற்றன.

1996-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த ஊராட்சித் தேர்தல்களின் போது வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படாமை, வேட்பாளர்களின் மரணம் போன்ற இன்னபிற காரணங்களினால் கிராமப்புற உள்ளாட்சிகளின் சில வார்டுகளுக்கு தேர்தல் நடத்த இயலவில்லை. அவ்வாறு விடுபட்டுபோன 22 ஊராட்சித் தலைவர் பதவிகளுக்கும் 1460 சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் பதவிகளுக்கும் 28-12-1996 அன்று இடைத்தேர்தல்களும் மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நடத்தி முடிக்கப்பட்டது. இடைத்தேர்தல்களை நடத்துவதென்பது ஒரு தொடர் நிகழ்வென்பதால் அவ்வப்பொழுது ஏற்படும் காலியிடங்களை நிரப்புவதற்கான இடைத்தேர்தல்களை தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப ஆண்டிற்கு 3 அல்லது 4 தொகுப்புகளாகச் சேர்த்து நடத்த மாநிலத் தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது. கிராமப்புற உள்ளாட்சி அமைப்புத் தேர்தல் செலவினங்களுக்காக அரசால் ரூ.31.60 கோடி அனுமதி அளிக்கப்பட்டது.

[1997 ஏப்ரல் 26

மாநில அரசின் திடமான கணிசமான ஆதரவினாலும் அதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் முழு ஈடுபாடு மற்றும் செயலாக்கத்தினாலுமே அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த வேண்டிய இம்மாபெரும் கடமைப்பொறுப்பை மாநிலத் தேர்தல் ஆணையத்தால் வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்தது.

216834
சென்னை-600 078
V24,31'N97
N97.36.2